# சோவியத் ருஷ்யா

வெ. சாமிநாத சர்மா
எழுதியது

சக்தி காரியாலயம்

சென்னை — மதுரை
கோயமுத்தூர் — திருநெல்வேலி

முதற் பதிப்பு : டிசம்பர் 1942
இரண்டாம் பதிப்பு : டிசம்பர் 1945
உரிமை பதிவு செய்யப் பெற்றது

விலை ரூ. 4—8—0

அச்சிட்டோர் :
சக்தி பிரஸ் லிமிடெட்
'சாந்தி பிரஸ்'
ராயப்பேட்டை, சென்னை

## முதற் பதிப்பின் பதிப்புரை

உலகத்துக்கே புதுமையான ஒரு புரட்சி ருஷ்யாவில் நடந்தது; உலகத்துக்கே புதுமையான ஒரு வாழ்வை அது வாழத் தொடங்கியது. உலகமெல்லாம் ஒரு நாள் அதைச் சந்தேகக் கண்களுடன் நோக்கியது; உலகமெல்லாம் இன்று அதை — அதன் வெற்றியை—எதிர்நோக்கி நிற்கிறது. ஏனெனில், இந்த யுத்தத்தில், இந்நாள், ஜனநாயக சக்திகளின் தனிப்பிரதிநிதியாக, யுத்தத்தின் பெரும் பாரத்தையும் தாங்கி நிற்பது ருஷ்யாதான். அஃது அற்புதமாய்ப் போர் புரிவதன் காரணமும் இதுவே.

இந்த ருஷ்யாவின் புரட்சிச் சரித்திரம், புதுமை வாழ்க்கை, யுத்தத் தலையீடு முதலிய சகல விவரங்களையும் விரிவாகவும் அருமையாகவும் நல்ல ஆராய்ச்சியோடு நண்பர் ஸ்ரீ. வெ. சாமிநாத சர்மா அவர்கள் இந்நூலை எழுதியிருக்கிறார்கள்.

காரைக்குடி 30-12-42

## இரண்டாம் பதிப்பின் பதிப்புரை

'சோவியத் ருஷ்யா' முதல் பதிப்பு வெளிவந்த சில மாதங்களில் விற்றுத் தீர்ந்தது. புது உலகமான சோவியத் ருஷ்யாவைப் பற்றித் தெரிந்து கொள்வதில் தமிழ் மக்களுக்கு எவ்வளவு ஆர்வமிருக்கிறதென்பது இதனால் நன்கு தெரிகிறது. அந்தப் பேரார்வத்தை அதிகப்படுத்துவதற்கு உடனே இரண்டாம் பதிப்பு வெளியிட எண்ணினோம். காகிதக் கட்டுப்பாடுத் தொல்லைகளால் எண்ணம் பூர்த்தியாகாமலிருந்தது. இப்பொழுது காகிதக் கட்டுப்பாடு பெரிதளவு தளர்ந்ததால் வெளியிட முடிந்தது. இந்த இரண்டாம் பதிப்பில் இரண்டாவது உலக யுத்தம் சமாதான மடைந்ததுவரை உள்ள விஷயங்களும் இன்னும் சில புதிய விஷயங்களும் புதிய படங்களும் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

சென்னை 31-12-45

## முதற் பதிப்பின் முகவுரை

இந்த நூலை நான் எழுதிமுடித்த தினம், ருஷ்ய-ஜெர்மானிய யுத்தத்தின் ஐந்நூருவது நாள். ஜெர்மனியின் பூரண படை பலத்தையும் தனியாக எதிர்த்து நிற்கிற ருஷ்யர்களின் வீரம், உலகத்தில் ஆண்களின் இருதயத்திலே ஈரம் இருக்கிறவரையில், பெண்களின் இசையிலே இனிமை இருக்கிற வரையில் போற்றப்படும். தவிர, ருஷ்ய மகாஜனங்களின் இந்த மகத்தான தியாகத்தின் பரிணமமாக, உலகத்தில் ஒரு பெரிய மாறுதல் ஏற்படப் போகிறதென்பது நிச்சயம். அந்த மாற்றம், ஒரு சிலர் அநுபவித்து வரும் சலுகைகளைப் பாதிப்பதாயிருப்பினும், அநேகருடைய உரிமைகளுக்கு அரணுகவும், அநேகருக்கு நல் வாழ்வை நல்குவதாகவும் இருக்கும்.

சமதர்ம சித்தாந்தமானது, உலகத்திற்குப் புதிதன்று. முற்காலத்து அறிஞர்கள் பலர் இதைப்பற்றி வெகு சூட்சுமமாக, ஆனல் நிரம்ப அழகாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிருர்கள். உதாரணமாக, கிரேக்க அறிஞனுகிய பிளேட்டோ, ஸாக்ரடீஸ் வாயிலாக, ஒரு சமதர்ம ராஜ்யத்தை ஸ்தாபித்திருக்கிருன். அவனுடைய அரசியல் அல்லது நீதியைப்பற்றிய ஆராய்ச்சி என்ற நூலை நாம் வாசித்துப் பார்த்தோமானல், கார்ல் மார்க்ஸ், லெனின் முதலியோரைவிட அவன் தீவிரமாகச் சென்றிருக்கிருன் என்பது தெரியும். ஆஸ்கார் ஜாஸ்சி (Oscar Jaszi) என்னும் அறிஞன் ஓரிடத்தில் கூறுகிருன் :

"பிளேட்டோ, தன் கற்பனையைக் கொண்டு சிருஷ்டி செய்திருக்கிற ராஜ்யத்திற்கும், ருஷ்ய சமதர்ம வாதிகளின் ராஜ்யத்திற்கும் பொதுவான அமிசங்கள் பல இருக்கின்றன. இரண்டும், லாபத்தை அடிப்படையாகக் கொண்ட வியாபாரத்தை வெறுக்கின்றன; தீமைகளுக்கெல்லாம் மூலகாரணம் தனிச் சொத்துரிமை என்பதை அங்கீகரிக்கின்றன; அதிகச் செல்வம், அதிக வறுமை இரண்டும் கூடாவென்று கண்டிக்கின்றன; எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒரே மாதிரியான கல்வி போதிக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றன; ராஜாங்கக் கல்வி முறைக்கான ஒரு சாதனமாகவே கலையையும் இலக்கியத்தையும் கருதுகின்றன; ராஜ்யத்தின் க்ஷேமத்திற்காகவே விஞ்ஞான சாஸ்திரம், உயர்ந்த மனோபாவங்கள் முதலியன இருக்கவேண்டுமென்று கூறுகின்றன; சமுதாய க்ஷேமத்திற்கு, தனிப்பட்டவர்களுடைய நலன்கள் கீழ்ப்பட்டிருக்க வேண்டுமென்ற கொள்கையுடையனவா யிருக்கின்றன."

இந்த மேற்கோள் எதை நிரூபிக்கிறது? சமதர்மத்தைப் பற்றிப் பொதுவாக ஏற்பட்டிருக்கிற அச்சத்திற்கு அஸ்திவாரமில்லை என்பதையும், ஆனால் அந்தச் சமதர்மக் கொள்கைக்கு அழகான அஸ்திவாரம் உண்டென்பதையுமே நிரூபிக்கின்றது. அச்சம் அறியாமையையும் அறியாமை வெறுப்பையும் முறையே உண்டுபண்ணுகின்றன. ருஷ்யாவைப் பற்றியும் அங்கு நடைபெறும் சோவியத் ஆட்சி முறையைப் பற்றியும் ஒருவித மாறுபாடான அபிப்பிராயம் பெரும்பாலோரிடத்தில் இருந்து வருவதற்குக் காரணம் இந்த வெறுப்புத்தான். இந்த நூலின் மூலமாக மேற்படி வெறுப்பு அகலவேண்டும் என்பது என் விருப்பம்.

ருஷ்யாவைப் பற்றிச் சுருக்கத்தில் ஒரு நூல் வெளியாக வேண்டுமென்பது முதல் உத்தேசம். பின்னர், இது

பெரிய நூலாகி விரிந்து விட்டது. ஆனாலும் எழுத வேண்டியவைகளை யெல்லாம் எழுதிவிட்டதாக எனக்குத் திருப்தி ஏற்படவில்லை. ஏனென்றால், ருஷ்யாவைப் பற்றித் தெரிய வேண்டியது அதிகம்; தெரிந்திருப்பது மிகக் குறைவு. அப்படியே நான் இங்குச் சொல்லாமல் விட்டது அதிகம்; சொல்லியிருப்பது மிகக் குறைவு. என்றாலும், ருஷ்யாவைப் பற்றி விரிவான முறையில் நூல்கள் பல வெளியாவதற்கு இஃதொரு தூண்டுகோலா யிருக்குமானல், அதுவே நான் அடைகிற மகிழ்ச்சி.

இந்த நூலை நல்ல முறையில் வெளிக்கொணர்ந்த சக்தி காரியாலயத்தாருக்கு எனது மனப்பூர்வமான நன்றி.

சென்னை,
30—12—42

வெ. சாமிநாதன்

## இரண்டாம் பதிப்பின் முகவுரை

ருஷ்ய-ஜெர்மானிய யுத்தம், ருஷ்யர்களுக்குச் சாதகமாக முடிந்த பிறகு இந்த இரண்டாம் பதிப்பு வெளிவருகிறது. இதை முன்னிட்டு, ருஷ்யாவின் வெற்றிக்கான காரணங்களைச் சுருக்கமாகக் கடைசி அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறேன். ஆனால் இஃது எனக்குத் திருப்தியளிக்கவில்லை. இந்த மகாயுத்தத்தில், ருஷ்யப்படையினர் காட்டிய வீரத்தையும், ருஷ்ய மகாஜனங்கள் செய்த தியாகத்தையும் விஸ்தரித்து ஒரு தனி நூலே எழுதப்பெற வேண்டும். இதனைத் தக்கவர்கள் செய்ய வேண்டுமென்பது என் பிரார்த்தனை.

இந்த இரண்டாம் பதிப்பில் கடைசியாக ஓர் அத்தியாயம் சேர்த்திருக்கிறேன். மற்றும், சமீபகாலம் வரையில் கிடைத்த சில புள்ளி விவரங்களையும், முதற் பதிப்பு வெளியான பிறகு நடைபெற்ற சில முக்கியமான சம்பவங்களையும் அந்தந்த அத்தியாயங்களில் உரிய இடங்களிலே சேர்த்திருக்கிறேன். இவைகளைத் தவிர வேறு அதிகமான மாற்றங்கள் ஒன்றையும் இந்த இரண்டாம் பதிப்பில் செய்யவில்லை; அப்படிச் செய்ய வேண்டிய அவசியமுமில்லை.


இந்த நூலின் முதல் பதிப்பை ஆவலுடன் வரவேற்ற எனது தமிழ்நாட்டுச் சகோதரர்கள், இந்த இரண்டாம் பதிப்பையும் அன்புடன் வரவேற்பார்களென்று நம்புகிறேன்.

தியாகராய நகர்,
சென்னை.
20—12—'45

வெ. சாமிநாதன்

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை | iii |
| | முகவுரை | iv |
| 1. | சரித்திர வரலாறு | 1 |
| 2. | முடியரசின் மறைவு | 23 |
| 3. | குடியரசின் தோற்றம் | 50 |
| 4. | சமதர்மம் என்றால் என்ன? | 75 |
| 5. | சமதர்மக் கட்சி | 88 |
| 6. | சோவியத் அரசியல் அமைப்பு | 123 |
| 7. | பொருளாதாரத் திட்டம் | 153 |
| 8. | விவசாயம்—தொழில் | 164 |
| 9. | பெண்ணுரிமை | 177 |
| 10. | கல்வி—கலை | 191 |
| 11. | சுகாதாரம்—ஓய்வு | 197 |
| 12. | அந்நிய நாட்டுக் கொள்கை | 208 |
| 13. | புதிய நாகரிகம் | 230 |
| 14. | நீதியின் தீர்ப்பு | 256 |
| | அநுபந்தம் 1 | 286 |
| | அநுபந்தம் 2 | 287 |
| | அநுபந்தம் 3 | 288 |
| | அநுபந்தம் 4 | 289 |
| | துணை நூல்கள் | 294 |
| | பொருட் குறிப்பு | 297 |



லெனின்



1. ஜெர்மானியர் :
15,00,000



2. மகா ருஷ்யர் :
10.00,00.000



3. உக்ரேனியர் :
3,80,00,000



4. பால்கேரியர் :
43,000



5. காஜக்கு :
30,00,000



6. யாகுட் :
3,00,000



7. துருக்கியர் :
8,00,000



8. ஆஸ்டியாக் :
25,000



9. கிர்கியர் :
8,85,000



10 புரியாத் :
5,00,000



11. வெள்ளை ருஷ்யர் :
1,00 00 000



12. ஜார்ஜியர் :
2,20,00,000



13. உஸ்பெக் :
50,00,000



14 கால்மிக் :
1,35,000



15. பெலுட்ஸ்ஜிடேனியர் :
1,000



16. டாட்ஜிக்
12,00,000



17. யூதர் :
50,00,000



18. சாம் :
1,700




மாஸ்கோவிலுள்ள அரசாங்கக் காரியாலயம்



ஒரு விவசாயப் பெண்

மாஸ்கோ செஞ்சதுக்கம்





உஸ்பெக்ஸ்தானிலுள்ள ஒரு பொது உணவுச்சாலை



இதுதான் சோவியத் பார்லிமெண்ட் : இடது புறத்திலிருந்து 3. மோலோடோவ்; 4. காலினின்; 5 வோரோஷிலோவ்; 6. ஸ்டாலின். கீழிருப்பது : ஸ்டாலினோகோர்ஸ்க் என்னும் ஊரில் புதிய மாதிரி கட்டப்பெற்றிருக்கும் வீடுகள்





தேர்தலில் பெண்கள்
ஓட்டும் போடுகிறார்கள்




மத்தியிலிருப்பது
செம்படையைச் சேர்ந்த
ஒரு ஸ்திரீ இஞ்ஜினீர்






மேலிருப்பது : குழந்தைகளின் (கிண்டர் கார்டன்) விளையாட்டுப் பள்ளிக்கூடம்
கீழிருப்பது : செம்படையிலுள்ள ஸ்திரீ வீரர்கள் துப்பாக்கி பழகுகிறார்கள்





மேலிருப்பது : இரும்பு, எஃகு முதலியன தயார் செய்யும் ஒரு தொழிற்சாலை
கீழிருப்பது : பூமிக்குக் கீழ் ஓடும் ரெயில் (மெட்ரோ) ஒரு சிற்பியின் கைத்திறம்



டாக்டர் நிகோவ்ஸ்கி



ஸ்டாலின்

# 1. சரித்திர வரலாறு

உலகத்தில் மிகப் பெரிய நாடுகள் மூன்று. அவை இந்தியா, சீனா, ருஷ்யா. ஒன்று, சுதந்திரத்திற்காகக் கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறது. இன்னொன்று, உயிருக்காக மன்றாடிக்கொண் டிருக்கிறது. மற்றொன்று, சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளப் போராடிக் கொண்டிருக்கிறது. ஒன்றில், அந்நியர் ஆட்சி நடைபெறுகிறது. வேறொன்றில், ஜனங்களுக்காக ஆட்சி நடைபெறுகிறது. பிறிதொன்றில், ஜனங்களுடைய ஆட்சி நடைபெறுகிறது. மூன்றும்—ருஷ்யாவில் ஒரு சிறிய பாகம் தவிர—ஆசியா கண்டத்திலேயே இருக்கின்றன. ஆனால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கண்டம்; தனித்தனி உலகம். உலகத்தில் எத்தனை விதமான மதங்கள், ஜாதிகள், பாஷைகள், சீதோஷ்ணஸ்திதிகள் முதலியன உண்டோ அத்தனை விதங்களையும் இந்த மூன்று நாடுகளிலும் பார்க்கலாம். இந்த மூன்று நாடுகளிலும் வற்றாத ஜீவ நதிகள் ஓடுகின்றன; பொன் விளையக்கூடிய பூமி இருக்கிறது. ஆனால் ஜனங்கள் பஞ்சத்தில் அடிபட்டுச் சாவதில் என்னவோ குறைவில்லை. இந்த மூன்று பெரிய நாடுகளையும் ஒரு சிறிய தீவுநாடு இப்பொழுது, இந்த 1942-ஆம் வருஷத்தில் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது.*

உலகத்தை ஆறு துண்டாகப் போடு; அதில் ஒரு துண்டு ருஷ்யா. உலகத்தின் ஜனங்களைப் பதின்மூன்று பிரிவினராகப் பிரி; அதில் ஒரு பிரிவினர் ருஷ்ய நாட்டார். ருஷ்யாவின் விஸ்தீரணம் 88,19,791 சதுர மைல்; ஜனத்

---

* இந்தச் சிறிய தீவு நாடாகிய ஜப்பான், 1945-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதக் கடைசி வாரத்தில் நேச வல்லரசுகளிடம் சரணாகதி அடைந்து விட்டது.

தொகை 19¼ கோடி. இங்கே 167 ஜாதியினர் வசிக்கின்றனர்; 90 பாஷைகள் பேசப்படுகின்றன. நாகரிகத்தின் உச்சாணிக் கிளையில் ஏறிக்கொண்டிருக்கிற ஜனங்கள் முதல், கிழங்குகளைத் தின்றுகொண் டிருக்கும் காட்டு மிராண்டிகள் வரை, எல்லோரையும் இந்த நாட்டிலே காணலாம்.

வடக்கே வட மகா சமுத்திரம்; கிழக்கே பசிபிக் மகா சமுத்திரம்; தெற்கே சீனு, இந்தியா, ஈரான் முதலிய நாடுகள்; மேற்கே ஜெர்மனி. இவைகளின் மத்தியில் இருப்பது ருஷ்யா. இதன் எல்லைக்குள் பதினன்கு கடல்கள் அலைமோதுகின்றன; மூன்று மலைகள் உயர்ந்து நிற்கின்றன; மூன்று ஆறுகள் நீண்டு ஓடுகின்றன. ருஷ்யாவின் வியாபாரப் போக்குவரத்தில் மூன்றில் ஒரு பாகம் ஆற்று மார்க்கத்திலேயே நடைபெறுகிறது.

1918-ஆம் வருஷத்தோடு ருஷ்யாவில் முடியாட்சி முடிந்தது. அதோடு ருஷ்யா என்ற பெயரும் மறைந்தது. பின்னர், குடியரசு ஏற்பட்டது. ருஷ்யாவின் பெயரும் "சோவியத் சமதர்மக் குடியரசு நாடுகளின் ஐக்கிய ராஜ்யம்" என்று (1923-ஆம் ளு) மாறியது. நியாயமாக இப்பொழுது நாம் அழைக்க வேண்டிய பெயர் இதுதான். ஆனல், சுருக்கத்திற்காகவும் சௌகரியத்திற்காகவும் ருஷ்யா என்று அழைக்கிரும்: வட அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மாகாணங்களைச் சேர்த்துப் பொதுவாக அமெரிக்கா என்று அழைப்பது போல.

இந்த ஐக்கிய ராஜ்யத்தில் வசிக்கிற ஜனங்களில் பாதி பேர் ருஷ்யர்கள். மானிட சமுதாயத்தைப் பல பிரிவினராகப் பிரித்திருக்கிருர்களல்லவா அறிஞர்கள்? அவர்களில் ஸ்லாவியர் என்ற ஒரு பிரிவினர் உண்டு. இந்த ஸ்லாவியப் பிரிவைச் சேர்ந்தவர்களே ருஷ்யர்கள். இவர்கள் பேசுகிற பாஷைக்கு ருஷ்ய பாஷை என்றே பெயர். இந்தப் பாஷையில் அநேகம் பிரிவுகள் இருந்தாலும், பொது

வாக ருஷ்ய பாஷை என்று சொல்வதுதான் வழக்கம். இதுதான் அரசாங்க பாஷையாகவும் இருக்கிறது.

பொதுவாக ருஷ்யர்கள் கட்டுமஸ்தான தேகமுடையவர்கள். அதே பிரகாரம் உறுதியான மனப்பான்மை கொண்டவர்கள். எந்த விதமான கஷ்டத்தையும் சந்தோஷமாகச் சகித்துக் கொள்வார்கள். ஊண் உறக்கமில்லாமல் நான்கு நாட்கள் வழி நடக்க வேண்டுமா, மயக்க மருந்தில்லாமல் பெரிய 'ஆபரேஷன்' செய்துகொள்ள வேண்டுமா, இவை எல்லாம் ருஷ்யர்களுக்குச் சுலபமான விஷயங்கள். தவிர, இவர்கள் எல்லோருடனும் கலந்து வாழ்வதிலே பிரிய முடையவர்கள்.* புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டு மென்பதிலும், புதிய நண்பர்களோடு பழக வேண்டு மென்பதிலும் அதிக ஆசை யுடையவர்கள். தாங்களே வலிய வந்து யாருடனும் பழகுவார்கள். ஒருவரை யொருவர் அறிமுகப்படுத்தி வைத்த பிறகுதான் பேச வேண்டுமென்ற சம்பிரதாய மெல்லாம் இவர்களுக்கு அவ்வளவாகத் தெரியாது. யாரைப் பற்றியும் குறைவாகப் பேசமாட்டார்கள். யாரையும் தாழ்வாகக் கருதமாட்டார்கள். தங்கள் மனதில் தோன்றிய அபிப்பிராயத்தை ஒளிமறை வின்றி, ஆனல் மரியாதையான பாஷையில் சொல்வார்கள். நன்ருக உழைப்பார்கள். அப்படியே நன்ருக ஓய்வும் எடுத்துக்கொள்வார்கள். கற்பனை உலகத்திலாகட்டும், காரிய உலகத்திலாகட்டும் தாராளமாகச் சஞ்சரிப்பார்கள். ஆனல் புராதனப் பெருமையிலே தங்கள் நிகழ்கால வாழ்வைத் துறந்துவிட மாட்டார்கள். ஏனென்ருல், இவர்களுடைய சரித்திரம் புராதனப் பெருமை கொண்டதல்ல.

* "உண்மையான ருஷ்யன் என்ருல் அவன் எல்லா ஜனங்களுடையவும் சகோதரன்; உலக முழுமைக்கும் அவன் சகோதரன் என்றும் வைத்துக்கொள்ளலாம்" என்பது டோஸ்டோயெவ்ஸ்கியின் வாக்கு.

ருஷ்யா என்ற ஒரு தனி ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டதே கி. பி. 855 அல்லது 856-ஆம் வருஷத்தில்தான். இதன் ஸ்தாபகன் ரூரிக்* என்பவன். இவன் காலத்திலிருந்தே, ருஷ்யாவைத் தொடர்ந்தாற் போல் ஏதோ ஓர் அரச பரம்பரை ஆண்டு வந்திருக்கிறது. ஆனால் மாஸ்கோவையும் அதைச் சுற்றியுள்ள சிறு பிரதேசத்தையுந்தான். சுமார் 1500-ஆம் வருஷம் வரை, இந்த மாஸ்கோ அரச பரம்பரை, அந்நியர்கள் படையெடுப்பினின்று தற்காத்துக் கொள்ளும் முயற்சியிலேயே ஈடுபட்டிருந்தது. இதற்குப் பிறகுதான், ருஷ்யாவுக்குச் சர்வதேச மேடையில் ஓர் அந்தஸ்து ஏற்பட ஆரம்பித்தது. ராஜ்யமும் வர வர விசாலமடைந்து வந்தது. 1505-ஆம் வருஷத்தில் எட்டு லட்சம் சதுரமைல் விஸ்தீரண முடையதா யிருந்த ருஷ்ய ஏகாதிபத்தியம், 1900-ஆம் வருஷத்தில் எண்பத்தைந்து லட்சம் சதுரமைல் விஸ்தீரணமுடைய ஏகாதிபத்தியமாக வளர்ந்துவிட்டது. அதாவது ஒரு நாளைக்கு ஐம்பது சதுர மைல் விகிதம் வளர்ச்சி! உலகத்தில் வேறெந்த ஏகாதிபத்தியமும் இவ்வளவு வேகமாகத் தரை மார்க்கத்தில் வளர்ச்சியடையவில்லை. இந்த வளர்ச்சியின் அர்த்தமென்ன? அநேக ஜாதியினர் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள். அவர்களுடைய பாஷை, கலை, நாகரிகம் முதலியன, இலை உதிர்ந்த மரம்போலாயின. ராஜ்யத்தின் வெளிப்புறம் பகட்டு: உட்புறம் அழுகல்.

பதினாறுவது நூற்றாண்டின் கடைசி பதினைந்து, இருபது வருஷ காலம் ருஷ்யா முழுவதும் ஒரே குழப்பம். அரசனில்லாத நாடா யிருந்தது. கொலை, கொள்ளை, தரித்திரம், நோய் முதலியன மலிவான சரக்குகளா யிருந்தன. அநேக ஏழை ஜனங்கள், வயிற்றுப் பசியை ஆற்றிக் கொள்வதற்காக வெளி நாடுகளுக்கு ஓடிவிட்டார்கள்.

---

* Rurik *1800-1873.*

அப்பொழுது சில பெரியதனக்காரர்கள் ஒன்று சேர்ந்து மைக்கேல் ரோமனுவ் என்ற ஒரு சிறு பையனை 1613-ஆம் வருஷம் சிங்காதனத்தில் ஏற்றி வைத்தார்கள். சுமார் முந்நூறு வருஷ காலம் இந்த ரோமனுவ் பரம்பரை, ருஷ்ய சிங்காதனத்தை இடைவிடாமல் இறுகப் பிடித்துக்கொண்டிருந்தது. கடைசியில் 1917-ஆம் வருஷம் ஏற்பட்ட புரட்சி வெள்ளத்திலே மூழ்கிவிட்டது. அப்படி மூழ்குவதற்கு நான்கு வருஷங்கள் முந்தித்தான் இரண்டாவது நிக்கோலாஸ் மன்னன், ரோமனுவ் அரசர்கள் சிங்காதனம் ஏறிய முந்நூறுவது வருஷத்தை ஆடம்பரமாகக் கொண்டாடினன். இந்தக் கொண்டாட்டம், விளக்கு அணைவதற்கு முன் தோன்றும் பிரகாசம் போலிருந்தது.

மைக்கேல் மன்னனைச் சிங்காதனத்தில் ஏற்றிவைத்த பெரியதனக்காரர்கள், நாட்டில் அதிகமான செல்வாக்குப் பெற்றுக்கொண்டு விட்டார்கள். இவர்கள் இட்டது சட்டமா யிருந்தது. குழப்ப காலத்தில் வயிற்றுப் பிழைப்புக்காக நாட்டைவிட்டு வெளியே சென்றிருந்த ஏழை மக்களைக் கட்டாயப்படுத்தி நாட்டுக்குள் அழைத்து வந்தார்கள். அவர்களைக் கொண்டு தங்கள் நிலங்களைச் சாகுபடி செய்வித்தார்கள். இதனுல் இவர்க ளெல்லோரும் நிலச் சுவான்தார்களாகவும், மற்ற ஜனங்கள் இவர்களுக்குத் தொண்டு செய்யும் அடிமைகளாகவும் ஆனார்கள். அதாவது, நிலத்தை உழுது பயிரிடுபவர்களுக்கு அந்த நிலத்தின் மீது உரிமை யில்லாமற் போய்விட்டது. இதிலிருந்தே ருஷ்யாவின் ஆண்டான்—அடிமைப் போராட்டம் துவங்குகிறது.

ரோமனுவ் பரம்பரையில், மைக்கேலுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த முக்கியமான மன்னன் மகா பீட்டர்* என்பவன். இவன் சுமார் ஏழு அடி உயரம் இருப்பான்.

* Peter the Great.

அதற்குத் தகுந்த பருமன். ஒட்டமாகத்தான் நடப்பான். பத்தாவது வயதிலே பட்டத்திற்கு வந்தான். நாற்பத்து மூன்று வருஷ காலம் (1682-1725) ஆண்டான். இந்த நாற்பத்து மூன்று வருஷ கால ஆட்சியும், ருஷ்ய சரித்திரத்தில் ஒரு புயற்காற்று மாதிரி இருந்தது. இவன் "ருஷ்யாவைப் பலவந்தமாக ஐரோப்பாவுக்குள் பிடித்துத் தள்ளினன்" என்று சொல்வார்கள். அதாவது, இவன் ஐரோப்பிய கலாசாரங்களையும், அரசியல் முறைகளையும் பிறவற்றையும் அப்படியே ருஷ்யாவிற்குள் கொண்டு புகுத்தப் பார்த்தான். இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகள் இவனுக்கு முன் மாதிரிகளா யிருந்தன. ருஷ்ய ராணுவத்தைப் புதிய முறையில் சீர்திருத்தி அமைத்தான். சட்டசபை ஏற்படுத்தினன். தொழிற்சாலைகளை ஸ்தாபித்தான். சும்மா உட்கார்ந்து பெரியதனம் செய்து வந்த நிலச்சுவான்தார்களின் பிள்ளைகளை அரசாங்க ஊழியத்தில் சேர்ந்து கொள்ளும்படி கட்டாயப்படுத்தினன். தாடி வைத்துக்கொள்வதும் நீண்ட அங்கி தரித்துக்கொள்வதும் அநாகரிகமென்று சொல்லி, அவைகளுக்குத் தடை உத்தரவு போட்டான். பார்ப்பதற்கு லட்சணமா யிருக்க வேண்டுமென்று சொல்லி, சிலருடைய பற்களைக்கூட பிடுங்கிவிட்டான். ருஷ்ய பாஷையின் எழுத்துக்களைச் சீர்படுத்தினன். முதன் முதலாக ஒரு பத்திரிகையை ஆரம்பித்தான். அந்நிய நாடுகளிலிருந்து அநேக அறிஞர்களை வரவழைத்துத் தனது சேவையில் அமர்த்திக்கொண்டான். அவர்களைக் கொண்டு அநேக நூல்களை எழுதச் செய்தான். தானும் சில நூல்கள் எழுதினன். தன் பெண்களையும் மற்ற உறவினர்களையும் ஐரோப்பிய அரசிளங் குமரர்களுக்கு மணஞ் செய்து கொடுத்தான். மேற்குப் புறமாக இருந்த செயின்ட் பீட்டர்ஸ்பர்க்* என்ற

* செயின்ட் பீட்டர்ஸ்பர்க் என்ற இந்த நகரத்தின் பெயர், 1914-ஆம் வருஷம் பிட்ரோ கிராட் என்று மாற்றப்பட்டது. இதுவும்

ஊரைத் தனது தலைநகரமாக்கிக் கொண்டான். ஒரு குடியானவனைப் போலவே, தனது சொந்த வாழ்க்கையை எளிய முறையில் அமைத்துக் கொண்டான். இவ்வள வெல்லாம் செய்தும், இவன் தன் சுயேச்சாதிகாரத்தை மட்டும் விட்டுக் கொடுக்கவே யில்லை; அதற்கு மாருக, அதிகரித்துக் கொண்டும் வலுப்படுத்திக் கொண்டும் வந்தான். இவன் காலத்தில் ஜனங்களுடைய வரிச்சுமை அதிகமாயிற்று; ராஜ்யமும் விஸ்தீரண மடைந்தது.

மகா பீட்டருக்குப் பின்னல் பட்டத்திற்கு வந்தவர்கள் எல்லா வகையிலும் பலவீனர்களா யிருந்தார்கள். அரசர்களுடைய இந்தப் பலவீனத்தை நிலச்சுவான்தார்கள் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக் கொண்டார்கள். அரசாங்க சேவையில் தாங்கள் கட்டாயம் ஈடுபட வேண்டுமென்று மகாபீட்டர் செய்துவைத்துப் போயிருந்த சட்டத்தை ரத்து செய்து கொண்டார்கள். அதே சமயத்தில் தங்கள் கீழ் அடிமைப்பட்டுக் கிடக்கும் விவசாயிகளின் மீது ஏற்கனவே தங்களுக்கிருந்த ஆதிக்கத்தை இன்னும் அதிகமாக வலுப்படுத்திக் கொண்டார்கள். ஏழை விவசாயிகளோ ஒன்றும் சொல்லமுடியாத ஊமைகளாய்ப் போய்விட்டார்கள். சில சமயங்களில் இவர்கள், தங்கள் அடிமைத் தளையிலிருந்து விடுதலை செய்து கொள்ள முயன்ருர்கள்; கலகமும் செய்தார்கள். ஆனல் நிலச்சுவான்தார்கள், அரசாங்கத்தின் துணையைக்கொண்டு பீரங்கியைக் காட்டிப் பயமுறுத்தி இவர்களை மறுபடியும் பந்தத்திற்குள் திணித்து விட்டார்கள். எப்பொழுதுமே ஏகபோக உரிமையும் அதிகார சக்தியும் இரட்டைச் சகோதரர்க ளல்லவா?

மகா பீட்டர் இறந்துபோன சுமார் ஐம்பத்தைந்து

---

1924-ஆம் வருஷத்தில் லெனின்கிராட் என்று மாற்றப்பட்டது. இப்பொழுது லெனின்கிராட் என்றே அழைக்கப்பட்டு வருகிறது.

வருஷங்களுக்குப் பிறகு, இரண்டாவது காதரைன்* என்ற ஒரு ஸ்திரீ, அரச பீடத்தில் அமர்ந்தாள். இவள் மகா துணிச்சல்காரி; கொடுமை நிறைந்தவள்; ஆனால் திறமைசாலி: தன் புருஷனைக் கொலை செய்து விட்டுச் சிங்காதனத்தைக் கைப்பற்றிக் கொண்டாள். அதிகார பதவியிலே அவ்வளவு மோகம்! இதற்காக இவள் தன் மானத்தைக்கூடப் பெரிதென மதிக்கவில்லை. மகா பீட்டர் "ருஷ்யாவைப் பலவந்தமாக ஐரோப்பாவுக்குள் பிடித்துத் தள்ளினான்" என்று சொன்னால், இவள் "ஐரோப்பாவைப் பலவந்தமாக ருஷ்யாவுக்குள் திணித்தாள்" என்று சொல்ல வேண்டும். கி. பி. 18-வது நூற்றாண்டில் பிரெஞ்சு நாகரிகத்திற்கும் கலைகளுக்கும் மேனாடு முழுதும் ஒரு வித செல்வாக்கு இருந்ததல்லவா? காதரைன் அந்தச் செல்வாக்குக்கு உட்பட்டாள். பிரெஞ்சு அறிஞர்களான வால்ட்டேர், மாண்டெஸ்கு, டிடெரோ† முதலியவர்களுடன் சிநேகம் வைத்துக் கொண்டாள். அவர்களுக்கும் தனக்கும் கடிதப் போக்குவரத்து உண்டென்று சொல்லி அதிலே பெருமை கண்டாள். தானும் அவர்களைப் போல் ஒரு மேதாவி என்று நினைத்து, அதன் பிரகாரமே நடித்தாள். பிரான்சில் என்னென்ன மாதிரியான அரசியல் முறைகள் அநுஷ்டிக்கப் பட்டனவோ அவைகளையெல்லாம் அப்படியே ருஷ்யாவில் கொண்டு புகுத்தினாள். கல்வி முறையில் சில சீர்திருத்தங்களைச் செய்தாள். ஜனப் பிரதிநிதி சபை யொன்றைக் கூட்டுவித்தாள். ஆனால், எல்லாம் நான்கு பேர் பார்த்து மெச்சுவதற்குத்தான்! உண்மையைச் சொல்லப் போனால், இவள் சமுதாயத்தின் மேல் படியிலிருந்தவர்களுக்குத்தான் அதிகமான சலுகைகள்

---

* Catherine II *1729—1796*.

† Voltaire *1694—1778;* Montesquieu *1689—1755:* Deni Diderot *1713—1784.*

காட்டினளே தவிர, கீழ்ப்படியி லிருந்தவர்களை இன்னும் அதிகமாகவே நசுக்கி வந்தாள்.

இவள் காலத்தில், அதாவது 1789-ஆம் வருஷத்தில் பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்டது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற சப்தங்கள் தொலை தூரத்திலிருந்த ருஷ்யாவிலும் கேட்க ஆரம்பித்தன. வால்ட்டேர், மாண்டெஸ்கு முதலியோருடைய உபதேசங்களில் மனம் லயித்துப் போன பணக்காரக் குடும்பத்துப் பிள்ளைகள், தங்கள் தாய்நாட்டை—ருஷ்யாவை—திரும்பிப் பார்க்க ஆரம்பித்தார்கள்; யாருடைய உழைப்பினல் தங்களுடைய வயிறு நிரம்புகிறதோ அவர்கள்—அந்த விவசாய அடிமைகள்—எந்த ஆழத்திலே விழுந்து கிடக்கிறார்களென்று எட்டிப் பார்க்க ஆரம்பித்தார்கள். இளைஞர்கள் இந்த மாதிரி சாதாரண ஆசை கொண்டதுகூட காதரைனுக்குப் பிடிக்கவில்லை. வெறி பிடித்தவள் போலானள். அடக்கு முறையைப் பிரயோகித்தாள். அப்படியே தன் வாழ்க்கையையும் முடித்துக் கொண்டாள்.

1789-ஆம் வருஷத்திலிருந்து 1799-ஆம் வருஷம் வரை, சுமார் பத்து வருஷ காலம் கொந்தளித்துக் கொண்டிருந்த பிரெஞ்சுப் புரட்சி, ஜனசக்தியைத் தூண்டிக் கொடுத்து விட்டு, தான் அடங்கிவிட்டது. இந்த ஜனசக்தியின் வளர்ப்புப் பிள்ளையாக நெப்போலியன் (1769—1821) தோன்றினன்; ஆனல் சர்வாதிகாரியாகவே ஆண்டான். இவன் 1812-ஆம் வருஷம் ருஷ்யா மீது படையெடுத்தான். முதலில் ருஷ்யர்கள் தோல்வியுற்றுப் பின்னடைந்து கொண்டு போனர்கள். நெப்போலியன் இவர்களைத் துரத்திக் கொண்டு மாஸ்கோ நகரத்திற்கு அருகாமையில் வந்தான். ருஷ்யர்கள், நகரத்திற்குத் தீ வைத்துவிட்டுப் பின்னடைந்தார்கள். இனிப் பயனில்லை என்று கண்டுகொண்டான் நெப்போலியன். ஊருக்குத் திரும்பினன். அப்பொழுது நல்ல குளிர்காலம். இதனல் இவனுடைய

சேனைக்கு அதிகமான கஷ்டங்களும் நஷ்டங்களும் ஏற்பட்டன. இவனுக்கும் முடிவு காலம் தொடங்கிவிட்டது.

நெப்போலியனின் படையெடுப்புக்கு பின்னர் ருஷ்யாவில் இளைஞர்களுடைய மனப்போக்கு, புரட்சிப் பாதையிலே திரும்பியது. ஆங்காங்கு ரகசியச் சங்கங்கள் முளைத்தன. இவைகளைத் தோற்றுவித்தவர்களில் பெரும்பாலோர் ராணுவ சேவைக்காகவும் உயர்தரப் படிப்பிற்காகவும் பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளுக்குச் சென்று திரும்பியவர்கள்; அங்கு, ஜனங்கள் தன்மதிப்பு உணர்ச்சி பெற்று வருவதையும், அந்த உணர்ச்சியை வளர்க்கக் கூடிய ஸ்தாபனங்கள் பல தோன்றி நன்முக வேலை செய்து வருவதையும் நேரில் பார்த்தவர்கள். தவிர, உழைப்பிலே சிறிது கூடச் சலிப்புக் காட்டாதவர்களும், பொறுமை யுடையவர்களும், புத்திசாலிகளுமான ருஷ்ய விவசாயிகள், தலை நிமிர முடியாதவர்களாய் ஒடுக்கப்பட்டுக் கிடப்பதைப் பார்த்து, இவர்கள் மனம் புழுங்கினார்கள். உலகத்தினரால் கௌரவிக்கப்படக் கூடிய ஒரு ஸ்தானத்தை எதிர்காலத்தில் ருஷ்யா அடையவேண்டுமானல், அதற்கு இந்த விவசாயிகளின் வாழ்க்கை அந்தஸ்தை உயர்த்த வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்தார்கள். இதற்காக மேற்படி ரகசியச் சங்கங்களை ஸ்தாபித்து வேலை செய்ய முயன்றார்கள். ஆனல், இவர்களுக்குள்ளே ஒழுங்கோ ஒற்றுமையோ இல்லை; ஒருவித வேலைத் திட்டமும் இல்லை.

1825-ஆம் வருஷம் முதல் 1855-ஆம் வருஷம் வரை, முதலாவது நிக்கோலாஸ் என்ற அரசன் ஆண்டான். இவனுடைய ஆட்சி, புரட்சியில் ஆரம்பித்து அடக்குமுறையில் வளர்ந்தது. 1825-ஆம் வருஷம் டிசம்பர் மாதம், சில பணக்காரக் குடும்பத்து இளைஞர்கள் ஒன்று சேர்ந்து, தேசத்திற்குப் புதியதோர் அரசியல் திட்டம் வேண்டுமென்று நிக்கோலாஸைக் கேட்டார்கள். கிடைத்த

பதிலென்ன? பீரங்கிப் பிரயோகம்; தூக்குமேடை. இந்தச் சம்பவத்திற்குத் தான் "டிசம்பர் புரட்சி" என்று பெயர். இதில் கலந்து கொண்டவர்கள் "டிசம்பரிஸ்ட்டுகள்"* என்று அழைக்கப்பட்டார்கள்.

இந்த நிக்கோலாஸ் மன்னன் எப்பொழுதும் புரட்சிக் கனவையே கண்டுகொண் டிருந்தான். சங்கீதம், கணிதம் முதலியவை சம்பந்தமாக வெளியான நூல்களில்கூட ஏதோ ரகசியச் சூழ்ச்சிகள் இருப்பதாக இவன் மருண்டான். இவன் காலத்தில் வெளியான நூல்களைக் காட்டிலும், அந்த நூல்களைப் பரிசீலனை செய்வதற்கென்று இவன் நியமித்திருந்த கண்காணிப்பு அதிகாரிகள்தான் அதிகமா யிருந்தார்கள். நாட்டுக்கு நன்மை தரக்கூடிய அபிப்பிராயங்களை யாராவது எடுத்துச் சொன்னால் அவர்கள் தீவாந்தர தண்டனையைச் சன்மானமாகப் பெற்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் இவன், ஜனங்களின் சிந்தனா சக்தியை மண்ணிலே புதைத்துவிட்டான்; ருஷ்யாவின் வாயையும் கையையும் கட்டிப்போட்டான்.

இவ்வளவையும் இவன் செய்தான் என்றாலும் இவன் காலத்திலேயே ருஷ்ய பாஷைக்கு ஒரு புதிய ஜீவகளை உண்டாயிற்று; ஜனங்களுடைய அரசியல் அறிவு அதிகப்பட்டுக் கொண்டு வந்தது. இஃது ஒரு சரித்திரப் புதிர். புஷ்கின், டர்கணீவ், கோகோல், லெர்மாண்டாவ், டோஸ்டோயெவ்ஸ்கி, அலெக்ஸாந்தர் ஹெர்ஸென், டால்ஸ்டாய் † முதலிய அறிவுச் சுடர்கள் இவன் காலத்தில்தான் பிரகாசித்தார்கள். இவர்களுடைய எழுத்துக்களை ருஷ்யாவின் மத்திய வகுப்பு இளைஞர்கள் ஆவலோடு படித்தார்கள். இதன் பயனாக ருஷ்ய சமுதாயத்தின்

* Decemberists.

† Pushkin *1799—1837*; Turgenev *1818—1883*; Gogol *1809—1852* Lermontov *1814—1841*; Dostoyevski *1818—1881*; Alexander Herzen *1812—1870*; Tolstoy *1828—1910*.

சீர்கேடான நிலைமையைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர்கள். இந்தச் சிந்தனையானது தேச நன்மைக்காக எல்லா வித தியாகங்களையும் செய்யக்கூடிய ஓர் உணர்ச்சியையும் உறுதியையும் இவர்களுக்கு அளித்தது. இந்தக் காலத்திலிருந்து இவர்கள், சுயேச்சாதிகாரத்திற்கு விரோதமான எண்ணங்களைத் தேசத்தில் வளர்த்து வந்தார்கள்.

நிக்கோலாஸுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த இரண்டாவது அலெக்ஸாந்தர் (1855-1881) 1861-ஆம் வருஷத்தில் சில சீர்திருத்தங்களை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தான். விவசாயிகள், நிலத்தோடு கட்டுப்பட்டு அடிமைகளாய்க் கிடக்கும் ஏற்பாட்டை ரத்து செய்தான். இதனுல் விவசாயிகளுக்கு விடுதலை கிடைத்தது. ஆனுல் விடுதலையின் பயனை அவர்கள் அநுபவிக்க முடியவில்லை. ஏனென்ருல், ஜீவனத்திற்குத் தேவையான நிலங்கள் அவர்களுக்கு இல்லை. எல்லாம் நிலச்சுவான்தார்கள் வசத்தில் அல்லவோ இருந்தன? இதனுல் விவசாயிகளின் அதிருப்தி வளர்ந்ததே தவிர குறையவில்லை. மற்றும், நிலச்சுவான்தார்களுக்கும் இந்தச் சீர்திருத்தம் கசப்பா யிருந்தது. கசப்பா யில்லாமல் வேறெவ்விதமாக இருக்க முடியும்? விவசாயிகளின் மீது தங்களுக்கு இருந்த ஆதிக்கம் போய்விட்டதல்லவா? இதனுல் இவர்களும் அதிருப்தி அடைந்திருந்தார்கள்.

இதே சமயத்தில் மேலே சொன்ன படித்த மத்திய வகுப்பு இளைஞர்களிடையே புரட்சி எண்ணங்கள் வளர்ந்தும் உருவாகியும் வந்தன. இதுகாறும் ரகசியமாக வேலை செய்து வந்த இவர்கள் இப்பொழுது பகிரங்கமாக வெளியே வந்து வேலைசெய்யத் துணிவு கொண்டார்கள். தங்களை ஒரு தனிக் கட்சியாக அமைத்துக்கொண்டார்கள். இதற்கு "நாரோத்னிக்" * என்று பெயர் சூட்டினுர்கள்.

* Narodniks.

அதாவது "ஜனசக்தி" என்று அர்த்தம். இந்த நாரோத்னிக்குகள் கிராமங்கள் தோறும் சென்று விவசாயிகளிடையே புரட்சி விதைகளை விதைக்கத் தொடங்கினர்கள்; உற்சாகத்தோடு பிரசாரம் செய்தார்கள். ஆனல் இவர்களை முன்பின் அறியாத விவசாயிகள், இவர்களுடைய வார்த்தைகளுக்குக் காது கொடுக்கவில்லை; அது மட்டுமின்றி இவர்கள் மீது அவநம்பிக்கையும் கொள்ளலானர்கள். தங்களுடைய அடிமைத் தளையை மறுபடியும் இறுக்கிப் பூட்டிவிடவந்த போலீஸ் உளவாளிகள் என்று இவர்களைச் சந்தேகித்தார்கள்; போலீஸார் வசமே ஒப்படைத்தும் விட்டார்கள்! ஜனங்களோடு நெருங்கிப் பழகாமல் அவர்களுக்காக வேலை செய்யப் போகிறேமென்று புறப்படுகிறர்களே, அவர்கள் அநுபவிக்கிற பயன் இதுதான். விவசாயிகள், மண்ணிலே வாழ்கிறவர்கள். அவர்களின் முன்னிலையில் ஆகாசக் கோட்டை கட்டினல் அவர்கள் அதை இடித்துப் போடாமல் வேறென்ன செய்வார்கள்?

விவசாயிகள், தங்களை இப்படிக் காட்டிக் கொடுப்பார்களென்று இந்த இளைஞர்கள் எதிர்பார்க்கவே யில்லை. இவர்களுக்கு இது பெரிய அதிர்ச்சியா யிருந்தது. போலீஸாரின் கைக்கு அகப்பட்டுக் கொண்டவர்கள் போக எஞ்சி யிருந்தவர்களிற் சிலர், அதாவது பொறுமையும் நிதான முடையவர்கள் ஒரு தனிக் கட்சியினராகப் பிரிந்து, கிராமங்களிலே நிரந்தரமாகத் தங்கி அமைதியான சேவைகளில் ஈடுபட்டார்கள்; ஜனங்களுக்கு, அவர்களுடைய தேவை இன்னதென்பதை உணர்த்தி வந்தார்கள். புரட்சி எண்ணங்கள் தாமாகவே வளர்ந்தன.

பொறுமையும் நிதானமு மில்லாத வேறு சிலர், நகரங்கள் தோறும் சென்று பரவி, பலாத்காரச் செயல்கள் செய்யத் துணிந்தார்கள். இதற்காகத் தூக்குமேடையிலும் ஏறத் தயாரானர்கள். சிலர் ஏறியும் விட்டார்கள்.

இங்ஙனம் ஏறியவர்களுள் ஒருவன் லெனினின் சகோதரன், லெனின், * பிற்காலத்தில் புரட்சி இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டதற்குத் தன் சகோதரனுடைய இந்தத் துணிச்சலான மரணந்தான் காரணமா யிருந்தது.

கடைசியில் 1881-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் முதல் தேதி இரண்டாவது அலெக்ஸாந்தர் மன்னன் கொலை செய்யப்பட்டு விட்டான். இதற்குப் பிறகு சுமார் இருபத்தைந்து வருஷகாலம் அரசாங்கத்தார் அநுஷ்டித்த அடக்குமுறை இருக்கிறதே அது மனிதத்தன்மைக்கு முற்றிலும் மாறுபட்டதா யிருந்தது. இப்படித்தான் சுருக்கமாகச் சொல்லி முடிக்க வேண்டும். இந்த அடக்குமுறை உச்ச நிலையிலிருந்த பொழுதுதான், ரோமனாவ் பரம்பரையின் கடைசி வாரிசான இரண்டாவது நிக்கோலாஸ் மன்னன்

* Lenin *1870—1924*. இவனுடைய இயற் பெயர் வ்ளாடிமீர் இலிட்ச் உலியனாவ் (Vladimir Ilitch Ulianov) என்பது. சிம்பிர்ஸ்க் என்ற ஊரில் ஒரு நடுத்தர வகுப்புக் குடும்பத்தில் பிறந்து, இளமையில் காஜான் கலாசாலையில் படித்துக்கொண் டிருந்தபோது, அரசாங்கத்திற்கு விரோதமாக மாணாக்கர்கள் நடத்திய ஓர் இயக்கத்தில் கலந்துகொண்டதற்காகச் சர்வகலாசாலையிலிருந்து பிரஷ்டம் செய்யப்பட்டான். பின்னர் சட்டக் கல்லூரியில் சேர்ந்து பயின்றான். அப்பொழுது தொழிலாளர் இயக்கத்தில் சேர்ந்து உழைத்தான். இதற்காக அரசாங்கத்தின் கோபத்துக்காளாகி, சைபீரியாவுக்கு மூன்று வருஷ காலம் நாடு கடத்தப்பட்டான். *1900*-ஆம் வருஷம் விடுதலை பெற்றுப் புரட்சி இயக்கத்தில் மீண்டும் கலந்து கொண்டான். இதனால், *1917*-ஆம் வருஷம்வரை சுமார் பதினேழு வருஷகாலம் வெளி நாடுகளிலேயே தேசப் பிரஷ்டனாக வசிக்கவேண்டி யிருந்தது. அப்படி வெளியேயிருந்து, பத்திரிகைகள் மூலமாகவும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், ருஷ்யாவில் புரட்சி இயக்கத்திற்குத் தலைமை பூண்டு நடத்தினான். இந்தக் காலத்தில் இவனுக்கு உறுதுணையா யிருந்தவள் இவனது மனைவி குரூப்ஸ்கயா. *1917*-ஆம் வருஷம் ஜார் ஆட்சி விழுந்துபட்டதும், இவன் ருஷ்யாவுக்கு வந்து புரட்சிக்குத் தலைமை பூண்டு நடத்தி வெற்றிபெற்று, சோவியத் அரசாங்கத்தை ஸ்தாபித்தான். அதிக உழைப்பின் காரணமாக நோய் வாய்ப்பட்டு *1924*-ஆம் வருஷம் ஜனவரி மாதம் *21*-ஆம் தேதி இறந்து போனான்.

அரசு கட்டில் ஏறினன். இதனுல்தான் இவனுடைய சுமார் இருபத்தைந்து வருஷகால ஆட்சியும் (1894—1917) ரத்தக்கறை படிந்ததாகவே இருந்தது போலும். ரத்தக் களரியின் மத்தியில் சிங்காதானம் ஏறிய இவன், அதே ரத்தக்களரியின் மத்தியிலேயே உயிரையும் போக்கடித்துக் கொண்டான்.

இது நிற்க, மேலே சொன்ன அடக்குமுறை, தேசத்தில் எவ்வித அமைதியையும் அளிக்க வில்லை; அதிருப்தியையே வளர்த்தது. பொது மக்கள் புரட்சிவாதிகளுக்கு முன்னைவிட அதிகமான ஆதரவு காட்டலானுர்கள். அடக்குமுறைக்குத் தப்பி அநேக இளைஞர்கள் வெளி நாடுகளுக்கு ஓடி விட்டார்கள். இவர்கள் அங்குச் சும்மா இருக்கவில்லை. தங்கள் தங்கள் இடத்திலிருந்து கொண்டே, ருஷ்யாவில் புரட்சித் தீயை வளர்த்து வந்தார்கள். வெளிநாடுகளில் துண்டுப் பிரசுரங்களையும் பத்திரிகைகளையும் அச்சடித்து, ருஷ்யாவில் பொது ஜனங்களிடையே, சிறப்பாகக் கிராம விவசாயிகளிடையே பரப்பி வந்தார்கள்.

இப்படி அரசாங்கத்தார் ஒரு புறத்தில் அடக்குமுறையை அநுஷ்டித்து வந்த போதிலும், மற்ருெரு புறத்தில் மேற்போக்கான சில சீர்திருத்தங்களையும் அவ்வப்பொழுது மருந்து மாதிரி அளித்து வந்தார்கள். இதற்கு முக்கிய காரணமா யிருந்தவன் விட்டே என்பவன். இவன் 1892-ஆம் வருஷத்தி லிருந்து 1903-ஆம் வருஷம் வரை அரசாங்கத்தின் பொக்கிஷ மந்திரியா யிருந்தான். இவன் நீதி இலாகாவிலிருந்த ஊழல்களைக் களைந்தான்; அரசாங்கத்தின் வரவு செலவு முறையைச் சீர்திருத்தினன்; நாணய மாற்று முறையைத் திருத்தி யமைத்தான்; ஏற்கனவே பெயரளவில் இருந்த ஸ்தல ஸ்தாபனங்களை உயிர்ப்பித்து, கல்வி சுகாதாரம் முதலிய பொதுநல விஷயங்களைக் கவனித்துக் கொள்ளும்படி அவைகளுக்கு அதிகாரம் அளித்தான்.

அமைதியாகக் கிராமசேவை செய்து கொண்டிருந்த புரட்சிவாதிகள் இந்த ஸ்தல ஸ்தாபனங்களில் இடம் பெற்ருர்கள்; ஜனங்களிடத்தில் நெருங்கிப் பழகுவதற்கும் அவர்களுடைய மனப்பான்மையைத் திருத்தி யமைப்பதற்கும் இந்த ஸ்தாபனங்களை உபயோகித்துக் கொண்டார்கள்.

இந்தக் காலத்தில் சீனுவில், ஐரோப்பிய வல்லரசுகள், வியாபார உரிமைகள், சலுகைகள் முதலியவற்றைப் பெறும் விஷயத்தில் போட்டி போட்டு வந்தன. இந்தப் போட்டியில் ருஷ்யா கலந்து கொண்டது. இப்படி மேற்கு வல்லரசுகள், தனக்கருகாமையிலுள்ள சீனுவில் வந்து போட்டி யிடுவது, அப்பொழுதுதான் துளிர்த்துத் தலை யெடுத்துக் கொண்டிருந்த ஜப்பானுக்குச் சிறிது கூடப் பிடிக்கவில்லை. இது சம்பந்தமாக ஜப்பானுக்கும் ருஷ்யாவிற்கும் அடிக்கடி சில்லரை மனஸ்தாபங்கள் நேரிட்டு வந்தன.

இந்த மனஸ்தாபங்கள் குறையாமலிருக்க, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி முதலிய மேனுடுகளைச் சேர்ந்த முதலாளிகள் அடிக்கடி தூபம் போட்டுக்கொண்டே வந்தார்கள். 1860-ஆம் வருஷத்திலிருந்தே இந்த முதலாளி வர்க்கத்தினர், ருஷ்யாவின் முக்கியமான நகரங்களில் தொழிற்சாலைகளை ஆரம்பித்து நடத்தி வந்தனர். ருஷ்ய அரசாங்கம் இவர்களுக்கு ஆதரவு அளித்தது. இந்த ஆதரவின் நிழலில், ருஷ்யப் பணக்காரர் சிலரும், தங்கள் சொந்த முதலைப் போட்டுத் தொழிற்சாலைகள் தொடங்கினுர்கள். இந்தத் தொழிற் சாலைகளில் தயாரிக்கப்பட்ட பொருள்கள் எல்லா இடங்களிலும் பரவின. இவைகளின் மீது ஜனங்களுக்கு ஒரு மோகம் விழத் தலைப்பட்டது. எப்பொழுது யந்திரப் பொருள்களின்மீது மோகம் விழுந்ததோ அப்பொழுதே கிராமக் கைத்தொழில்கள் குன்ற வேண்டியதுதானே. அப்படியே குன்றிப் போயின.

இவைகளினால் உண்டான விளைவுகள் இரண்டு. ஒன்று, நிலச்சுவான்தார்களின் ஆதிக்கம் போய், தொழில் முதலாளிகளின் ஆதிக்கம் ஏற்பட்டது. மற்றொன்று, தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர் கூட்டம் பெருகியதால், தொழிலாளர் இயக்கம் என்ற தனியானதோர் இயக்கம் தோன்றியது. இந்த முதலாளி இயக்கமும் தொழிலாளி இயக்கமும் போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்தன. முன்னது அரசாங்கத்தின் துணைபெற்று வளர்ந்தது; பின்னது புரட்சிவாதிகளின் ஆதரவைப் பெற்று வளர்ந்தது. புரட்சிவாதிகள் இதுவரையில் கிராம விவசாயிகளின் மத்தியில் வேலை செய்து வந்தார்கள். இப்பொழுது நகரத் தொழிலாளர்களின் மத்தியிலும் வேலை செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால், இதில் ஓர் அநுகூலம் இருந்தது. என்னவென்றால், இந்தத் தொழிலாளர்கள் தொழிலுக்குப் புதியவர்கள். இதற்கு முன் கிராமங்களில் விவசாயிகளாக வேலை செய்துகொண்டிருந்தவர்கள்தானே இப்பொழுது நகரத் தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள். இவர்களுக்குத் தங்கள் தொழில் சம்பந்தமான நிறைகுறைகளோ, நன்மை தீமைகளோ சரிவரத் தெரியாதல்லவா? இதனால் எந்த விதமான புதிய எண்ணத்தையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய திறந்த மனப்பான்மை இவர்களிடத்தில் இருந்தது. இதனை ருஷ்யப் புரட்சிவாதிகள் மிகுந்த சாமர்த்தியமாக உபயோகப்படுத்திக் கொண்டார்கள். எப்படியென்றால், அப்பொழுது செல்வாக்குப் பெற்றிருந்த கார்ல் மார்க்ஸின்* கொள்கைகளைத் தொழிலாளர்களிடையில் புகுத்தினார்கள். அவர்களும் இந்தக் கொள்கைகளை உற்சாகத்தோடு வரவேற்றார்கள்.

* Karl Marx *1818—1883* இளமையில், ஜெர்மனியிலுள்ள பான் சர்வகலாசாலையிலும் பெர்லின் சர்வகலாசாலையிலும் படித்தான். கவி பாடுவதிலும் தத்துவ ஆராய்ச்சியிலும் திறமை எய்தினான். ஜீவனத்

ஆனால், துரதிருஷ்டவசமாக இந்தக் காலத்தில் ஐரோப்பாவின் பல பாகங்களிலும் பரவியிருந்த மார்க்ஸ் கோஷ்டியினருக்குள் கருத்து வேற்றுமைகள் தோன்றத் தலைப்பட்டன. ஒரு சாரார், மார்க்ஸின் கொள்கைகளை இம்மியளவும் பிசகாது பின்பற்றி நடக்கவேண்டு மென்றும், இது விஷயத்தில் வேறெந்தக் கட்சியுடனும் சமரஸம் செய்துகொள்ளக் கூடாதென்றும், இப்படி உறுதியாக நடப்பதன் மூலந்தான் தொழிலாளர் புரட்சியை உண்டு பண்ண முடியுமென்றும் கூறினார்கள். மற்றொரு சாரார், இருக்கப்பட்ட சூழ்நிலையை அநுசரித்து, சமரஸம் செய்து கொள்ள வேண்டிய இடத்தில் சமரஸம் செய்தும், தனித்து இயங்க வேண்டிய சந்தர்ப்பத்தில் தனித்து இயங்கியும், இப்படிப் படிப்படியாகச் சென்றுதான் தொழிலாளர் புரட்சியை உண்டுபண்ண முடியுமென்று கருதினார்கள். இந்தக் கருத்து வேற்றுமை, ஐரோப்பாவிலுள்ள எல்லா நாடுகளிலும் தேசப் பிரஷ்டர்களாகச் சிதறிக் கிடந்த ருஷ்ய மார்க்ஸ் வாதிகளிடையிலும் ஏற்பட்டது. இவர்களிற் பெரும்பாலோர் லெனினைப் பின்பற்றி நடந்தார்கள். லெனின் அப்பொழுது லண்டனில் வசித்து வந்தான். இவனுக்குச் சமரஸம் என்பது பிடிக்காது. ஒரு கட்சிக்கு எப்பொழுது சமரஸ மனப்பான்மை

---

திற்காகப் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டு அநேக அவதிகள் அடைந்தான். 1844-ஆம் வருஷம் இவனுக்கும் எங்கெல்ஸுக்கும் சந்திப்பு ஏற்பட்டது. இதுமுதற் கொண்டு இருவரும் இணைபிரியா நண்பர்களாயிருந்து சமதர்ம சித்தாந்தத்திற்கு விதையூன்றினார்கள். மார்க்ஸின் மனைவி ஜென்னி, மகா உத்தமி. தன் கணவனோடு சேர்ந்து இவள் பட்ட கஷ்டங்கள் மனத்தை உருக்குந் தன்மையன. மார்க்ஸ், சுமார் முப்பது வருஷகாலம் லண்டனில் வாசம் செய்தான். இந்தக் காலத்தில்தான் இவனுடைய சிறந்த சிருஷ்டியாகிய காபிடல் என்ற நூல் உருப்பெற்றது. இந்த நூலை எழுதுவதற்காக இவன் சுமார் ஆயிரத்தைந்நூறு நூல்கள்வரை ஆராய்ச்சி செய்திருக்கிறான். இவனுடைய பூரண வாழ்க்கை விவரங்களுக்கு, கார்ல் மார்க்ஸ் என்ற நூலைப் பார்க்க.

ஏற்பட்டுவிடுகிறதோ அப்பொழுதே அந்தக் கட்சிக்குள் சந்தர்ப்பவாதிகள் புகுந்து கொண்டு, கட்சியின் பலத்தைக் குலைத்து விடுவார்களென்று இவன் உறுதியாக நம்பினன். இருக்கப்பட்ட சூழ்நிலையை அநுசரித்து படிப்படியாகப் புரட்சியை வளர்ப்பதென்பது அநுபவ சாத்தியமற்ற தென்று இவன் கருதினன். தன்னுடைய இந்தக் கொள்கைக்கு இணங்கி வருகிறவர்கள் எத்தனைபேர் என்பதைப் பற்றி இவன் கவலையே கொள்ளவில்லை. எண்ணிக்கைக்கு இவன் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. பரிபூரணப் புரட்சியில் நம்பிக்கை யுள்ளவர்கள் யாரோ, அதற்காகத் தங்களுடைய சர்வத்தையும் - பொது ஜனங்களின் கைதட்டுதலையும் தலையாட்டுதலையுங்கூட—துறந்து விடத் தயாரா யிருக்கிறவர்கள் யாரோ அவர்கள் மட்டும் தனி யாகப் பிரிந்து விடுதல் நல்லதென்று இவன் சொல்லி வந்தான். புரட்சியின் தத்துவங்களையும், அதன் செயல் முறைகளையும் நன்கு தெரிந்துகொண்டுள்ள ஒரு நிபுணர் கோஷ்டி முதலில் தயாராக வேண்டும். அப்படித் தயா ரான கோஷ்டியினுல்தான் ஒழுங்கான புரட்சியை நடத்த முடியும். புரட்சியில் அநுதாபம் இருக்கிறதென்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்தால் போதுமா? லெனினுடைய இந்த நிபந்தனைகள் மிகவும் கடுமையாக இருந்தபோதிலும், பெரும்பான்மையோர் இவனுடைய அபிப்பிராயத்தையே அங்கீகரித்தனர்; இவனைப் பின்பற்றி நடக்கத் தீர்மானித்த னர். இந்தப் பெரும்பான்மை, சிறுபான்மை அபிப்பிராய பேதத்தி லிருந்துதான் போல்ஷ்வெக், மென்ஷ்வெக் என்ற இரண்டு வார்த்தைகள் கிளம்பின. இவை இரண்டும் ருஷ்ய வார்த்தைகள். லெனினைப் பின்பற்றிய பெரும் பான்மையோர் போல்ஷ்வெக்கர் என்றும், இவனுடைய கருத்துக்கு மாறுபட்ட சிறுபான்மையோர் மென்ஷ்வெக் கர் என்றும் அழைக்கப்பட்டார்கள். இந்தப் பிளவு ஏற் பட்டது 1903-ஆம் வருஷம்.

ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் மனஸ்தாபங்கள் இருந்தனவென்று ஏற்கனவே சொல்லியிருக்கிறோமல்லவா? இவை முற்றி 1904-ஆம் வருஷ ஆரம்பத்தில் ருஷ்ய-ஜப்பானிய யுத்தமாக மூண்டது. தங்களுடைய தேசம், ஜப்பானுடன் யுத்தந் தொடுத்ததை ருஷ்யப் பொதுஜனங்கள் விரும்பவில்லை. யுத்தந் தொடங்கிய காலத்திலிருந்து, நாட்டில் தரித்திரம் தாண்டவமாடியது; ஜனங்கள் பஞ்சத்தினால் வாடினார்கள்; பிணியினால் இறந்து போனார்கள். இவை தவிர, ஏற்கனவே ஜனங்களின் பேச்சுரிமை, எழுத்துரிமை முதலியன வெல்லாம் மறுக்கப்பட்டிருந்தன. இந்த உரிமைகள் சம்பந்தமாக யாரேனும் அற்பசொற்பமாக முணுமுணுத்தால்கூட அவர்கள் மீது அடக்குமுறை ஆயுதம் பலமாகப் பிரயோகிக்கப்பட்டது. இவ்வளவுக்கும் ஜனங்கள் பொறுமையை இழக்கவில்லை; அமைதியாகவே கிளர்ச்சி செய்து வந்தார்கள். அவர்கள் வேறொன்றும் கேட்கவில்லை; ஜீவாதாரமான உரிமைகள் என்று சொல்லப்படுகிற எண்ண உரிமை, எழுத்துரிமை, பேச்சுரிமை, நான்குபேர் சேர்ந்து கூட்டமாகக் கூடுகிற உரிமை முதலியன தங்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்றும், தேச மக்களின் பிரதிநிதிச் சபையாக ஒரு சபை கூட்டப்படவேண்டு மென்றும் கேட்டார்கள்; தங்களுடைய கோரிக்கைகளைக் குறிப்பிட்டு ஒரு தேசியத் திட்டம் தயாரித்து வெளியிட்டார்கள். இதற்குத் தேசத்தில் பரிபூரண ஆதரவு ஏற்பட்டது.

இதற்கு மத்தியில், ருஷ்ய சரித்திரத்தையே கறைப்படுத்தக்கூடிய ஒரு சம்பவம் நடைபெற்றது. 1905-ஆம் வருஷம் ஜனவரி மாதம் இருபத்திரண்டாந் தேதி ஞாயிற்றுக்கிழமை பீட்டர்ஸ்பர்க் நகரத்திலுள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்துகொண்டிருந்த ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளையும் கூட்டிக்

கொண்டு காபோன் * என்ற ஒரு பாதிரியின் தலைமையில் ஜார் மன்னனுடைய குளிர்கால அரண்மனைக்கு ஊர்வல மாக அணிவகுத்துக் கொண்டு ஒழுங்காகச் சென்றார்கள். ஊர்வலத்திற்கு முன்னாடி நிக்கோலாஸ் மன்னனுடைய உருவப் படம் அரச விருதுகளுடன் சென்றது. இந்தக் கூட்டத்தைப் பார்த்தால், ஏழ்மையே உருவெடுத்து வந்தாற்போ லிருந்தது. எதற்காக இந்த ஏழை ஜனங்கள் ஊர்வலமாகச் சென்றார்கள்? மேலே சொன்ன தேசியத் திட்டத்தை அரசரின் சந்நிதானத்தில் சமர்ப்பிப்பதற்காக; தங்களுடைய கஷ்டநிஷ்டூரங்களுக்கு ஏதேனும் பரிகாரம் தேடிக்கொடுக்கும்படி பிரார்த்திப்பதற்காக. 'தெய்வத் திருத்தந்தை'யான ஜார், தங்களுடைய பரிதாப நிலையை நேரில் பார்த்தால் நிச்சயம் மனமிரங்குவான் என்று கபடமற்ற இந்த ஜனங்கள் நம்பினார்கள். மெதுவாக ஊர்வலம் அரசமாளிகையை அடைந்தது. அரசனும் தரிசனம் கொடுத்தான். ஜனங்கள் தங்கள் குறைகளை மரியாதையோடு தெரிவித்துக் கொண்டார்கள். வயிற் றுக்கு ஆகாரம் கிடைக்கவில்லை என்று விண்ணப்பித்துக் கொண்டார்கள். "எங்கள் பிரார்த்தனைக்குச் செவி சாய்க்காமல் இருந்துவிட்டால் தங்கள் திருமாளிகை முன்னர் இறந்து போவதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை" என்று தங்களுடைய நிர்க்கதியான நிலைமை யைப் புலப்படுத்தினார்கள். கிடைத்த பதில் என்ன? அரசன் வாய் திறந்து ஓர் ஆறுதல் வார்த்தை சொல்வான் என்று ஏழைத் தொழிலாளர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவன் இவர்களைச் சுட்டுத் தள்ளும்படி கைநீட்டி உத்தரவு கொடுத்தான். அவ்வளவுதான். பீரங்கிகள் முழங்கின. ஆகாரமில்லாமல் காலியாயிருந்த ஏழை மக் களின் வயிற்றிலே குண்டுகள் பாய்ந்தன. வெள்ளைப்

* Father Gapon.

பனி படிந்திருந்த அரண்மனை முன்சதுக்க மெல்லாம் சிவப்பு ரத்தம் படிந்தது. நூற்றுக்கணக்கான பேர் யமபுரத்திற்குச் சென்றூர்கள். உயிர் தப்பியவர்களைக் குதிரைப் படை வீரர்கள் சவுக்காலடித்து விரட்டினூர்கள். இந்த ஞாயிற்றுக்கிழமை "சிவப்பு ஞாயிறு" என்றும் "ரத்த ஞாயிறு" என்றும் சரித்திரத்தில் பிரசித்தமும் அடைந்து விட்டது.

## 2. முடியரசின் மறைவு

'ரத்த ஞாயிறு' சம்பவம் ருஷ்ய சமுதாயத்தின் அஸ்திவாரத்தையே அசைத்துக் கொடுத்தது. ஆனல் அதே சமயத்தில் ருஷ்யாவின் கொடுங்கோலாதிக்கத்துக்கு முடிவு காலமும் ஆரம்பித்து விட்டது. ஜனங்கள் இப்படிக் கிளர்ச்சி செய்வதும் சீர்திருத்தங்கள் வேண்டுமென்று கேட்பதும் அரசாங்கத்திற்குச் சிறிதுகூடப் பிடிக்கவில்லை. ஜப்பானுடன் தான் நடத்திவரும் யுத்தத்தை இவை தடை செய்கின்றனவென்று அது கருதியது. கோபங் கொண்டது. பயங்கரமான அடக்குமுறைகளைக் கையாண்டது. இவைகளைக் கண்டு ஜனங்கள் கொதித் தெழுந்தார்கள். இரண்டாவது நிக்கோலாஸின் நெருங்கிய உறவினனும் உயர்தர ராணுவ உத்தியோகத்தில் இருந்தவனுமான ஸெர்கியஸ் கோமகன் 1905-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் ஒரு நாள் பட்டப் பகலில் கொலை செய்யப்பட்டான். இவனைக் கொலை செய்த இளைஞன் தப்பியோட முயற்சி செய்யவில்லை. போலீஸ் அதிகாரிகள் இவனிடமிருந்து எதாவது வாக்குமூலம் வாங்கிவிட வேண்டுமென்று எவ்வளவோ பிரயத்தனப் பட்டார்கள். முடியவில்லை. எல்லாவற்றிற்கும் மௌனஞ் சாதித்து விட்டான். தனக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையைப் புன்சிரிப்போடு ஏற்றுக் கொண்டான். இந்தப் புன்சிரிப்பு ருஷ்ய சுயேச்சாதிகாரக் கோட்டைக்கு நெருப்புப் பொறியா யிருந்தது. நாடெங்கணும் வேலை நிறுத்தங்கள் தொடங்கப்பட்டன. வேலை நிறுத்தத்தை ஒழுங்காக நடத்திச் செல்லும்பொருட்டு ஒவ்வொரு முக்கிய நகரத்திலிருந்த தொழிலாளர்களும் தங்களுக்குள் ஒவ்வொரு சிறிய "சோவியத்" தை அமைத்துக் கொண்டார்கள். (சோவியத் என்ற ருஷ்ய வார்த்தைக்கு, சபை அல்லது கவுன்சில் என்று அர்த்தம்.) இந்தச் சோவியத்துகள்,

வேலை நிறுத்தத்தை மிகத் திறமையாகவும் கட்டுப்பாடாக வும் சுமார் எட்டு மாத காலம் நடத்தின. கடைசியில் ஜார் அரசாங்கம் ஸ்தம்பித்துப் போய்விட்டது. அரசாங்க இலாகாக்கள் அவைகளுக்குரிய கடமைகளைச் செய்ய முடியாமல் நிலை குலைந்தன. போக்குவரவு சாதனங்கள் இல்லை. வீதிகளிலே விளக்குகள் இல்லை. பத்திரிகைகள் வெளிவர முடியவில்லை. வைத்தியர்களுடைய தொழில் ஒன்று தவிர மற்றெல்லாவகைத் தொழில்களும் நின்று போய் விட்டன. போலீஸார்கூடத் தங்கள் 'சட்டத்தை யும் அமைதியையும் பாதுகாக்கிற' தொழிலைச் செய்ய முடியாதவர்களானார்கள்.

போதாக் குறைக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் ருஷ்ய-ஜப்பானிய யுத்தம், ருஷ்யாவுக்குத் தோல்வியாக முடிந்தது. ஜார் அரசாங்கத்தின் திறமை யின்மையும் நிருவாக ஊழலுமே இந்தத் தோல்விக்குக் காரணம் என்று ருஷ்ய மகாஜனங்களுக்கு நன்முகப் பட்டுவிட்டது. இதை அரசாங்கமும் உணர்ந்திருந்தது. எனவே, ஜன சக்திக்கு முன்னே தலைவணங்கியது. சட்டமியற்றும் உரிமையோடு கூடிய ஒரு ஜனப் பிரதிநிதி சபை அமைக் கப்படுமென்றும், இந்தச் சபையினுல் தெரிந்தெடுக்கப் பட்ட ஒரு மந்திரிச் சபை அரசாங்கத்தை நடத்துமென் றும், ஜனங்களுடைய ஓட்டுரிமை விசாலிக்கப்படுமென் றும் ஜார் அரசன் ஓர் அறிக்கை வெளியிட்டான். இந்த அறிக்கையை அநுசரித்து ஒரு மந்திரிச் சபையும் அமைந்தது. மேற்போக்கான இந்தச் சீர்திருத்தம் அநேக சந்தர்ப்பவாதிகளின் ஆவேசத்தைத் தணித்து விட்டது. இவர்கள், அரசாங்கத்தின் பக்தர்களானார்கள். இவர்களுடைய தூண்டுதலின் பேரில், மாதக்கணக்காகத் தொடர்ந்து நடைபெற்ற வேலை நிறுத்தம் முடிவடைந்தது. பழையமாதிரி அரசாங்க இலாக்காக்கள் வேலை செய்ய ஆரம்பித்தன.

ஆனல் இந்தச் சீர்திருத்தம், புரட்சி வாதிகளுக்குத் திருப்தியை அளிக்கவில்லே. இவர்கள் மேலும் தொடர்ந்து வேலே நிறுத்தத்தை நடத்துவதற்கு முனேந்தார்கள். இவர்களுடைய நோக்கம் அரசியல் முன்னேற்றம். அதாவது ஜார் அரசாங்கத்தினிடமிருந்து சர்வ அதிகாரங்களேயும் பிடுங்கி ஜனங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்பது. ஆனல் நகரத் தொழிலாளர்களும் கிராம விவசாயிகளும் அரசியல் முன்னேற்றத்தை அவ்வளவு பிரதானமாகக் கருதவில்லே. அப்பொழுதிருந்த ஸ்திதியில் தொழிலாளர்களுக்குத் தேவையாயிருந்தது உயர்ந்த கூலி; விவசாயிகளுக்குத் தேவையா யிருந்தது உழுது பயிரிடப் போதுமான நிலம். இதனல் புரட்சி வாதிகளுக்கும், பெரும்பாலோரான தொழிலாளர்கள்-விவசாயிகள் இவர்களுக்கும் மத்தியில் ஒரு பிளவு எற்படத் தொடங்கியது. இதனே அரசாங்கத்தார் விரிவுபடுத்தினர்கள். பசி நோயால் பரிதவித்துக் கொண்டிருக்கும் பாமர ஜனங்களுக்கு, தாங்கள் ஏதோ அநுகூலங்கள் செய்யப்போவதாகச் சமிக்ஞை காட்டி அவர்களேப் புரட்சிவாதிகளுக்கு விரோதமாகத் தூண்டினர்கள். இதனல் சில்லரைக் கலகங்களும் குழப்பங்களும் ஆங்காங்கே ஏற்பட்டன. நாட்டிலே அமைதியை நிலேநாட்ட வேண்டு மென்று சொல்லிக் கொண்டு அரசாங்கத்தார் அடக்குமுறையைக் கடுமையாகப் பிரயோகித்தனர். மேலே சொன்ன சோவியத்துகளேப் பலவந்தமாகக் கலேத்தனர். ஓரிரண்டு மாதங்களுக்குள் புரட்சி இயக்கத்தை அடக்கி ஒடுக்கி விட்டனர். ருஷ்யா முழுமையும் கணக்கெடுத்துப் பார்த்தபோது, சுமார் பதினலாயிரம் பேர் இந்த அடக்குமுறைக்குப் பலியாகி யிருந்தனர். சிறிய ஜப்பானிடத்தில் தோல்வியடைந்ததற்குப் பிரதியாகத் தன் பிரஜைகளிடத்தில் பெரிய பழிதீர்த்துக்கொண்டு விட்டான் ஜார் அரசன்!

புரட்சியை அடக்கி ஒடுக்கியாகி விட்டது. இனி ஜார் அரசன் தன் இஷ்டப்படி அரசியல் விவகாரங்களை நடத்திக்கொண்டு போகலாம். ஆனால் அவன் அப்படிச் செய்ய இஷ்டப்படவில்லை. தனது சுயேச்சாதிகாரக் கோலத்தை ஜனநாயகப் போர்வையினால் மறைத்துக் கொண்டு அரசியல் மேடையில் நடிப்பதென்று தீர்மானித்தான். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, சமுதாயத்தின் மேல் படியிலிருந்த நிலச்சுவான்தார்கள், பெரிய வியாபாரிகள், தொழில் முதலாளிகள் முதலியோரைத் தன் கைக்குள் போட்டுக்கொள்ள வேண்டுமென்பது. ஏனென்றால், தேசத்து மகாஜனங்கள் அடக்குமுறைகளினாலும், வறுமை, பஞ்சம், பிணி முதலியவைகளினாலும் அதிகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இந்தக் கஷ்டத்தினால் அவர்களுக்கு அரசாங்கத்தின் மீது அதிகக் கோபம் ஏற்பட்டிருந்தது. அவர்கள் எந்தச் சமயத்திலும் அரசாங்கத்திற்கு விரோதமாகக் கிளம்பலாம். அப்பொழுது தனக்கு ஒரு சிலருடைய துணையாவது தேவையாயிருக்குமல்லவா? இதற்காகப் பணக்காரர்களைத் திருப்திப்படுத்தி வைத்திருக்க வேண்டுமென்று ஜார் மன்னன் கருதினான். மற்றொன்று, மேற்கு வல்லரசுகளிடத்தில் நல்ல பெயரெடுத்துக் கொள்ளவேண்டுமென்பது. ஜார் ஆட்சி என்று சொன்னால், அடக்குமுறைக்கு அடையாளம் என்கிறமாதிரிதான் ஐரோப்பிய நாடுகளில் அபிப்பிராயம் இருந்தது. இந்த அபிப்பிராயத்தைப் போக்கி ஜனவிருப்பப்படியே தான் நடந்துகொள்வதாகக் காட்டிக்கொள்ள வேண்டுமென்று ஜார் அரசன் விரும்பினான். எனவே, மேலே சொன்ன அறிக்கைப்படி ஜனப்பிரதிநிதி சபையைக் கூட்டுமாறு உத்திரவு செய்தான். ஜனப்பிரதிநிதி சபைக்கு ருஷ்ய பாஷையில் "டூமா"* என்று பெயர். இதைத்தான் ருஷ்யாவின்

* Duma.

பார்லிமெண்ட் என்று சொல்வார்கள். டூமா என்றால் சிந்தனை செய்கிற இடம் என்று அர்த்தம்.*

டூமாவுக்குச் சம்பிரதாயமான தேர்தல்கள் நடைபெற்றன. சமுதாயத்தின் மத்திய வகுப்பைச் சேர்ந்தவர்கள் அபேட்சகர்களாக நின்று வெற்றி பெற்றார்கள். இவர்களிற் பெரும்பாலோர் மிதவாத மனப்பான்மை கொண்டவர்கள். இவர்களைக்கொண்ட டூமா முதன் முறையாக 1906-ஆம் வருஷம் மே மாதம் கூடியது. விவசாயிகளின் வறுமைப் பிணியைப் போக்கி அவர்களுடைய கோபத்தைத் தணிக்க வேண்டுமென்பதற்காக அங்கத்தினர்கள் சில சீர்திருத்தப் பிரேரணைகளைக் கொண்டு வந்தார்கள். ஆனால் இவை ஜார் மன்னனுக்குப் பிடிக்கவில்லை. டூமாவைக் கலைத்து விட்டான். சுமார் இரண்டரை மாதத்தோடு முதல் டூமாவின் வாழ்வு முடிந்தது.

1907-ஆம் வருஷ ஆரம்பத்தில் இரண்டாவது டூமாவுக்குத் தேர்தல்கள் நடைபெற்றன. புரட்சிவாதிகளும் அவர்களை ஆதரிக்கிற மற்றத் தீவிர வாதிகளும் தேர்தலில் வெற்றி பெறக்கூடாதென்பதற்காக, போலீஸார் என்னென்ன உபத்திரவங்களைச் செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்தனர். தீவிரப்போக்குடைய அபேட்சகர்களைச் சிறையிலே பிடித்துத் தள்ளிவிடுவதென்கிற சுலபமான முறையை அநுஷ்டித்தனர். இதனால் சாமான்யத் திறமையுடையவர்களும், கொஞ்சம் பயந்த சுபாவமுடையவர்களும் தேர்தலில் வெற்றி பெற்றுப் பிரதிநிதிகளாக வந்தனர். ஆனால் இவர்களுடைய போக்குக்கூட ஜார் மன்னனுக்குப் பிடிக்கவில்லை. அரசாங்கத்திற்கு விரோதமாகச் சூழ்ச்சிசெய்த குற்றத்தை இவர்கள் மீது சுமத்தி, டூமாவைக் கலைத்து விட்டான். கடைசியில்

* பார்லிமெண்ட் என்றால் பலர் சந்தித்துப் பேசுகிற இடம் என்று அர்த்தம்.

விசாரித்துப் பார்க்கிறபோது, அரசாங்கத்தின் ரகசியப் போலீஸாரே ஒரு சதியாலோசனைக் குற்றத்தைச் சிருஷ்டித்து அதனை அங்கத்தினர்மீது சுமத்தினர் என்று வெளியாயிற்று. இந்த இரண்டாவது டுமாவின் வாழ்வு மூன்று மாதத்தோடு முடிந்தது.

பார்த்தான் ஜார். வயது வந்த எல்லோருக்கும் ஓட்டுக்கொடுக்கும் உரிமை அளித்திருப்பதனால்தான், தீவிரவாதிகள் பிரதிநிதிகளாக வர முடிகிறதென்று கருதி ஓட்டுரிமையைக் குறைத்தான். சொந்தப் பண்ணைக்காரர்கள் முதலிய சமுதாயத்தின் மேல் அந்தஸ்திலுள்ளவர்கள் மட்டுமே ஓட்டுக் கொடுக்கலாம் என்று சட்டத்தைத் திருத்தி யமைத்தான். இதனோடு தீவிரப்போக்குடைய பலரையும் சிறைக்கூடத்திற்கு அனுப்பினான். சுயமாகச் சிந்தனை செய்வதென்பது அரசாங்கத்திற்கு விரோதமென்று கருதப்பட்டது. கொள்ளைக் கூட்டத்தினர் ஆங்காங்கு அக்கிரமச் செயல்கள் புரிந்து வந்தனர். தேசம் சோர்ந்து கிடந்தது. இந்தமாதிரியான நிலைமையில் மூன்றுவது டுமாவுக்குத் தேர்தல் நடைபெற்றது. அரசாங்கத்தை ஆதரிக்கும் மனப்பான்மையுள்ள பணக்காரர்களும், விவசாயம், தொழில் முதலியவைகளைப் பற்றின அந்தஸ்துடையவர்களுமே பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். இவர்களைக் கொண்ட இந்த மூன்றுவது டுமா 1907-ஆம் வருஷத்திலிருந்து 1912-ஆம் வருஷம் வரை, அதாவது சட்ட ரீதியாக அதற்கேற்பட்ட ஐந்து வருஷ ஆயுட்காலம் வரை, கௌரவமான முறையில் ஜார் அரசனின் தலையீடின்றித் தன் விவகாரங்களை நடத்தி வந்தது. சிலர் பயந்திருந்தபடி இந்த மூன்றுவது டுமா அவ்வளவு பிற்போக்குடையதாயில்லை. இதன் அங்கத்தினர்கள், தங்களாலான வரையில் ஜனங்களுக்கு நன்மையைச் செய்ய வேண்டுமென்ற எண்ணமுடையவர்களாயிருந்தார்கள். ஆரம்பக் கல்வி எல்லோருக்கும் இலவச

மாகப் போதிக்க ஏற்பாடு செய்தனர். ஜனங்களின் மத உரிமையும் கலாசார உரிமையும் கௌரவிக்கப்படுமாறு ஏற்பாடுகள் செய்தனர். எழுத்துரிமை, பேச்சுரிமை முதலியவை சம்பந்தமாக இருந்த நிர்ப்பந்தங்கள் தளர்த்தி விடப்பட்டன. அரசாங்கத்தின் பொக்கிஷ நிலைமை சீர்திருந்தி வந்தது. இதனுல் அந்நியநாட்டு முதலாளிகள் முன்னைவிடத் தாராளமாக முதல் கொண்டு போட்டார்கள். புதிய தொழில்கள் தொடங்கப் பட்டன. இந்த ஐந்து வருஷ காலத்தில் ருஷ்யாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் சுமுகமான தொடர்பு ஏற்பட்டது.

ருஷ்ய-ஜப்பானிய யுத்தம் வரையில், ருஷ்யாவைப் பற்றி, பிரிட்டனுக்கு ஒருவித பயம் இருந்தது. மேற்படி யுத்தத்தில், ருஷ்யா தோல்வியுற்ற பிறகு அந்தப் பயம் போய்விட்டது. அதற்குப் பதில், ஜெர்மனியைப் பற்றிய பயம் பிரிட்டனுக்குப் பிடித்துக் கொண்டது. இதற்குத் தகுந்தாற்போல் ஜெர்மனியும் 20-ஆவது நூற்ருண்டுத் தொடக்கத்திலிருந்து இரண்டாவது வில்லியம் கெய்ஸருடைய தலைமையின் கீழ், தனது ஆயுத பலத்தை அதிகரித்து வந்தது; ஐரோப்பாவின் மற்றச் சிற்றரசுகளையும் பேரரசுகளையும் திரணமாக மதித்து நடத்தி வந்தது. இதை மனதில் வைத்துக்கொண்டு, ஆம், ஜெர்மனிக்கு விரோதமாக, பிரான்ஸ், பிரிட்டன், ருஷ்யா ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து ஒரு சிநேக ஒப்பந்தம் செய்து கொண்டன.* இதைப் பார்த்து ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தலி ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து ஒரு சிநேக ஒப்பந்தம் செய்து கொண்டன.† இந்த இரு சார்பினரும் ஒருவருக்கொருவர் விரோதமாக யுத்த முஸ்தீப்புகள் செய்துவந்தனர். வெகு சீக்கிரத்தில் மகா

---

* Triple Entente.

† Triple Alliance.

யுத்தம் ஒன்று ஏற்படப் போகிறதென்று விஷய மறிந்த வர்கள் சொல்லிக்கொண்டு வந்தார்கள்.

1912-ஆம் வருஷம் நான்காவது டூமாவுக்குத் தேர்தல் நடைபெற்றது. ஏறக்குறைய பழைய பிரதிநிதிகளே தெரிந்தெடுக்கப் பட்டார்கள். இந்த நான்காவது டூமா, தனது பூரா ஆயுட்காலமும், 1917-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் புரட்சி ஏற்படுகிற வரையில் இயங்கிக் கொண் டிருந்தது. ஆனால் இதன் ஆரம்பகாலத்திலிருந்தே ஜார் ஆட்சியின் அஸ்திவாரம் ஆட்டங் கொடுக்கத் தொடங் கியது.

இரண்டாவது நிக்கோலாஸ் ஒருவித அசட்டை மனப் பான்மை யுடையவன்; அறிவுப் பிரகாசமில்லாதவன்; அறிஞர்களுடைய புத்திமதிகளைச் சரியானபடி பாராட்டத் தெரியாதவன். அரச லட்சணமான ஆண்மைத் தனத்தைத் தனது மனைவியினிடத்தில் ஒப்புவித்து விட்டு, தான் ஒரு கோலைமட்டும் கையில் பிடித்துக் கொண்டிருந்தான். அதனைச் செங்கோலாக இவன் கருதிவந்தா னென்றாலும், செங்கோலோச்சும் காருண்ய அரசனாக நடித்துவந்தா னென்றாலும், இவனுடைய பிரஜைகள் கொடுங்கோ லாட்சியின் கீழ்த்தான் வாழ்ந்து வந்தார்கள். இவன் தன் மனைவியினிடத்தில் அதிகமாகக் காதல் கொண்டிருந்தான். அதற்காக அவளிடத்தில் தன் இருதயத்தோடு அறிவையும் ஒப்புக்கொடுத்து விட்டான்: இதனால் தனக்கும், முந்நூறு வருஷமாகத் தொடர்ந்துவந்த ரோமனாவ் வமிசத்திற்கும் அழிவு தேடிக்கொண்டான். ஆனால் இவனுக்கு இது தெரியவில்லை. ஓர் அறிஞன் எழுதுகிறான்:

"ஜார் அரசனும் அரசியும் அநேக முட்டாள்களாலும் அயோக்கியர்களாலும் சூழப்பட்டிருந்தார்கள். இவர்களுக் குச் சரியானபடி விஷயங்களை எடுத்துச் சொல்லக்கூடிய தைரியம் ஒருவருக்கும் இல்லை. கிரகோரி ராஸ்புட்டீன் *

* Gregory Rasputin *1871—1916.*

என்ற ஒரு பரம அயோக்கியன் இவர்களுக்கு நெருங்கிய சிநேகிதனாக ஏற்பட்டான். இந்த ராஸ்புட்டீன் (ராஸ்புட்டீன் என்ற வார்த்தைக்கு அழுக்குப் படிந்த நாய் என்று அர்த்தம்) ஓர் ஏழைக் குடியானவன். சிறுவயதில் விவசாயிகளின் குதிரைகளைத் திருடுவதில் வல்லவன். இதனால் அநேகம் தொந்திரவுகள் இவனுக்கு ஏற்பட்டன. எனவே பணம் சம்பாதிப்பதற்குச் சந்நியாசிக்கோலம் பூண்டான். இந்தியாவைப்போல் ருஷ்யாவிலும் பணம் சம்பாதிப்பதற்கு இது சுலபமான வழி. இவன் தன் மயிரை நீளமாக வளர்த்துக் கொண்டான். மயிர் நீளநீள இவன் புகழும் நீண்டுகொண்டே போய், கடைசியில் ஜார் மன்னனின் சந்நிதானத்தை அடைந்தது. அப்பொழுது ஜார் மன்னனின் குமாரனுக்கு உடம்பு அசௌக்கியமா யிருந்தது. இதனை ராஸ்புட்டீன் குணப்படுத்திவிட்டான். இது முதற்கொண்டு ஜார் தம்பதிகளிடம் இவனுடைய செல்வாக்கு வளர்ந்து வந்தது. இவனுடைய விருப்பப்படியே அரசாங்க உயர்தர உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டு வந்தார்கள். இவன் சிற்றின்பத்திலே ஈடுபட்டும், அநேகம் பேரிடத்தில் லஞ்சம் வாங்கியும் மிகக் கேவலமான வாழ்க்கையை நடத்திவந்தான். இருந்தாலும் இவன் அநேக வருஷகாலம் ஜார் தம்பதிகளின் செல்வாக்கிலேயே இருந்தான்."

ராஸ்புட்டீனை அரச தம்பதிகள் இவ்வளவு கௌரவமாக நடத்துவதும், அவன் சொற்படி அரச காரியங்களைச் செய்வதும் பொது ஜனங்களுக்குச் சிறிதுகூடப் பிடிக்கவில்லை. தவிர, இந்தக் காலத்தில் போலீஸ் உளவாளிகளின் உபத்திரவம் ஜனங்களிடத்தில் அதிகமாயிற்று. இதற்கு எதிர்ப்பாக புரட்சி வாதிகளும் சுறு சுறுப்பாக வேலை செய்தனர். போல்ஷெவிக்கரின் கட்சி நாளுக்கு நாள் எண்ணிக்கையிலும் செல்வாக்கிலும் பெருகிவந்தது. இந்தக் கட்சியினர் ஆங்காங்கு ஸ்தாபித்திருந்த காரிய சபைகளில் போலீஸ் உளவாளிகள் அங்கத்தினராகச் சேர்ந்துகொண்டு, அந்தச் சபைகளின் அந்தரங்க வேலை

களையெல்லாம் தெரிந்து கொண்டனர். இதன் விளைவாக உண்மைத் தொண்டர் பலர் தூக்குமேடையில் ஏறினர். இந்த மாதிரி நடைபெற்ற துரோகச் செயல்கள், ஜனங்களின் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டன. எங்குப் பார்த்தாலும் புரட்சிப் பேச்சாகவே இருந்தது. கூடிய சீக்கிரத்தில் புரட்சி உண்டாகுமென்று அனைவரும் எதிர்பார்த்தார்கள்.

இப்படியிருக்கையில் 1914-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் ஐரோப்பிய மகா யுத்தம் மூண்டது. ஆஸ்திரிய இளவரசனை ஆர்ச்-ட்யூக் பெர்டினந்து, செர்வியாவில் கொலை செய்யப்பட்டதுதான் இதற்குக் காரணம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். செர்வியாவுக்குப் பரிந்துகொண்டு ருஷ்யாவும், ஆஸ்திரியாவுக்குப் பரிந்து கொண்டு ஜெர்மனியும் முறையே படை திரட்டின. பிரான்சும் பிரிட்டனும் ருஷ்யாவின் பக்கம் சேர்ந்து கொண்டன. இந்த யுத்தத்திற்கு ஜெர்மனியைப்போல் ருஷ்யா அவ்வளவு தயாராயிருந்ததென்று சொல்ல முடியாது. எப்படியோ ஐரோப்பாவிலுள்ள எல்லா முக்கிய நாடுகளும், விருப்பத்தினலோ அல்லது நிர்ப்பந்தத்தினலோ இந்தக் கோரமான தீக்குழியில் இறங்கின.

ருஷ்ய மகாஜனங்களுடைய கவனம் இந்த யுத்தத்திலே சென்றது. வெளிச் சக்தி ஏதேனுமொன்று ஒரு மனிதனைத் தாக்குகிறபோது அவனுக்குள்ளே யிருக்கும் வியாதிகள் அனைத்தும் மாயமாய் மறைந்து போவதை நாம் பார்த்திருக்கிறோம். அதைப்போல் ருஷ்யா, தன் முகத்தைப் போர்முகத்துக்குத் திருப்பிக்கொண்டதும், உள்ளே குமுறிக்கொண்டிருந்த போல்ஷ்வெக் இயக்கம் தானகே ஒடுங்கிவிட்டது. போல்ஷ்வெக்கர்களில் ஒரு சிலர், யுத்தம் கூடாதென்றும், இது முதலாளிகளின் யுத்தமென்றும், இந்த யுத்தத்தில் கலந்துகொள்வதனல் ஏழைத் தொழிலாளர்களுக்கோ விவசாயிகளுக்கோ எவ்வித நன்மையும்

உண்டாகாதென்றும் கூறினார்கள். ஆனால் இவர்களுடைய நல்வார்த்தைகளைக் காது கொடுத்துக் கேட்பவர் யாருமில்லை. ஜனங்கள், இவர்கள்மீது அருவருப்புக் காட்டவும் தொடங்கினார்கள்.

ருஷ்ய அரசாங்கம் யுத்தத்தில் இறங்குகிறபோது தன்னுடைய சக்தியைச் சரியாக நிதானித்துக்கொள்ளவில்லை. ருஷ்யாவுக்கு விசாலமான நிலப்பரப்பு இருந்ததைப் போல், அதிக எண்ணிக்கையுள்ள துருப்புகளும் இருந்தனவென்பது வாஸ்தவம். ஆனால் இந்தத் துருப்புகளுக்கு எவ்வளவு உற்சாகம் இருந்ததோ அவ்வளவு பயிற்சி இல்லை. போதிய ஆயுத உதவியும் இவைகளுக்கு இல்லை. ராணுவ நிருவாகமோ மகா ஊழலாயிருந்தது. கேட்க வேண்டுமா உயிர்ச்சேதத்திற்கு? யுத்தந் தொடங்கின முதல் பத்து மாதத்தில் சுமார் முப்பது லட்சம்பேர் போர் முனையில் இறந்து போனார்கள். திறமையான ராணுவ உத்தியோகஸ்தர்கள் பலர் உயிரிழந்தார்கள். போர்க்களத்தில் பிணங்கள் மலைமலையாகக் குவிந்து கிடந்தனவென்றும், இந்தப் பிணமலைகளை அப்புறப் படுத்திக் கொண்டுதான், தாங்கள் எதிரில் வரும் எதிரியின் புதுப்படைகளைக் குறி பார்த்துத் தாக்க வேண்டியிருந்ததென்றும் ஜெர்மன் சேனைத் தலைவர்கள் எழுதிவைத்துப் போயிருக்கிறார்கள். இவ்வளவு சேதங்கள் ஏற்பட்டாலும், யுத்தத்தின் ஆரம்ப காலத்தில் ருஷ்ய ஜனங்கள் மிகவும் உற்சாகம் காட்டி வந்தார்கள். போர்முகத்தில் போர்புரியும் வீரர்களுக்குப் பலவித உதவிகள் செய்து வந்தார்கள். காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை செய்வதற்காக அரசாங்கத்தார் செய்திருந்த ஏற்பாடுகள் போதுமானவையாயில்லை. சரியான சிகிச்சை இல்லாமல் ஆயிரக்கணக்கான பேர் பிராணனை விட்டார்கள். இதனால் ஜனங்களே ஆங்காங்குத் தொண்டர் படைகளைத் திரட்டிப் போர்க்களத்திற்கு அனுப்பினார்கள். இந்தத் தொண்டர் படையினர் சுமார்

ஒரு மாத காலத்திற்குள் பத்து லட்சம் பேருக்குச் சிகிச்சை செய்திருக்கிறார்க ளென்று சொன்னால், இதற்கு முன்னர் சரியான சிகிச்சை இல்லாமல் எத்தனைபேர் செத்துப்போயிருக்க வேண்டுமென்பதை நாம் ஊகித்துக் கொள்ளலாமல்லவா? ஆனால் துரதிருஷ்டவசமாக இந்தச் சிகிச்சைத் தொண்டர்படை செய்த அருமையான சேவையைப்பற்றிச் சில துர்மந்திரிகள் ஜார் மன்னனிடத்தில் தாறுமாறாகச் சொல்லி வந்தனர். இந்தச் சிகிச்சைப் படையினர் அத்தனை பேரும் புரட்சிக்காரர்களென்றும், இவர்கள் ராணுவத்திற்குள் புரட்சியை உண்டு பண்ணி அதன் மூலமாக அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடப் பார்க்கிறார்களென்றும் ஜாரின் காதைக் கடித்தார்கள். மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்தானே? ஏற்கனவே ஜார் மன்னனும் அவனுடைய நெருங்கிய சகபாடிகளும் எங்கும் புரட்சியைக் கண்டு வந்தார்கள். இப்பொழுது யுத்த பீதியினால் மூளை வேறே குழம்பியிருந்தது. கேட்க வேண்டுமா? சுயேச்சாதிகார சக்திக்குத் தன்னையே தான் அழித்துக் கொள்கிற சக்தி உண்டென்று சொல்வார்கள். தன்னுடைய கனவைத் தானே நனவாக்கிக் கொள்ளும் சக்தியும் அதற்குண்டென்பதை இரண்டாவது நிக்கோலாஸ் மன்னன் நிரூபித்து விட்டான். சிகிச்சைப் படைக்கு யார் தலைவனாயிருந்தானோ அவனே—ஜார்ஜ் ல்வோவ் என்பவனே *—ஜார் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு ஏற்பட்ட புரட்சி அரசாங்கத்தில் பிரதம மந்திரியானான்!

1915-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் கடைசி வாரத்தில் டான்னென்பெர்க் † என்ற இடத்தில் ருஷ்யர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் ஒரு கடுமையான யுத்தம் நடந்தது. இதில் ருஷ்யர்கள் படுதோல்வி யடைந்தார்கள்.

* Prince George Lvov.

† Battle of Tannenberg.

இதிலிருந்து ருஷ்யர்களுக்குத் தோல்விமேல் தோல்வியே ஏற்பட்டுக்கொண்டு வந்தது. இதனால் ஜார் மன்னன் கவலை கொண்டான். தன் பழைய மந்திரிகளை நீக்கி விட்டுப் புதிய திறமையான மந்திரிகளை நியமித்து அவர்கள் மூலம் யுத்தத்தை வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று ஆசைப்பட்டான். ஆனால் அவன் மனைவியும் ராஸ்புட்டீன் என்ற மகா பாபியும் சேர்ந்து அவனுக்குத் துர்ப்போதனைகள் செய்தார்கள்; மந்திரிகள், தங்களுடைய கைப்பொம்மைகளாக இருக்கவேண்டு மென்று கங்கணம் கட்டிக்கொண்டு அதன் பிரகாரமே காரியங்களை நடத்தி வந்தார்கள்; இதனால் தேசத்திற்கு விரோதிகளாகி விட்டார்கள்.

ராஸ்புட்டீனுடைய நடவடிக்கைகள், அவன் விஷயத்தில் ஜார் கொண்டிருந்த அபார நம்பிக்கை ஆகிய இவைகளைக்கண்டு அரசகுடும்பத்தைச் சேர்ந்த பலரும் வெறுப்படைந்தார்கள். இந்த வெறுப்பு, சதியாலோசனையாக மாறியது. 1916-ஆம் வருஷக் கடைசியில் ராஸ்புட்டீன், அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனாலேயே சுட்டுக் கொல்லப்பட்டான். ஜனங்கள் ஒரு விடுதலை மூச்சு விட்டனர். ஆனால் இந்தக் கொலை, போலீஸ் அதிகாரிகளின் அக்கிரமத்தை அதிக மாக்கியது. அடக்குமுறை வலுத்தது. இதனால் ஜனங்கள் கோபங் கொண்டார்கள். போதாக் குறைக்கு உணவுப் பஞ்சம் வேறே. எல்லாம் தனக்கென்று சொல்லி, ஜனங்களுடைய தேவைப் பொருள்களையெல்லாம் ராணுவம் விழுங்கிக்கொண்டு வந்தது. அப்படி விழுங்கினாலும் அந்த ராணுவம் திறமையாகப் போர் புரிந்து வெற்றிக்கொடி நாட்டிக்கொண்டு வருகிறதா? இல்லவே இல்லை. தங்களுடைய ராணுவத்தின்மீது ருஷ்ய மகா ஜனங்கள் எவ்வளவுக் கெவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார்களோ அவ்வளவுக் கவ்வளவு ஏமாந்து போனார்கள். இந்த ஏமாற்றம் அவர்களுடைய பசிப்பிணியை

இன்னும் அதிகமாகத் தூண்டியது. ஜார் மன்னனின் மீது வெறுப்பு வேறே. போலீஸ் உபத்திரவமோ சொல்லி முடிய வில்லை. என்ன செய்வார்கள்? புரட்சிக்குக் கிளம்புவதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது? புரட்சிக்குப் பிறகு என்ன செய்வதென்பது அப்புறம் யோசிக்க வேண்டிய விஷயம். இப்பொழுது உடனே இருக்கப்பட்டதை அழிக்க வேண்டும். அவ்வளவுதான். இந்த மாதிரியான மன நிலைமைக்கு 1917-ஆம் வருஷத் தொடக்கத்தில் ருஷ்ய மகாஜனங்கள் வந்துவிட்டார்கள்.

இந்த லட்சணத்தில் ஜார் மன்னன் போர் முகத் திற்குச் சென்று பிரதம சேனாதிபதி பதவியை ஏற்றுக் கொண்டான். தன்னால் ஏதோ சாதித்துவிட முடியும் என்ற மூட நம்பிக்கைதான் இதற்குக் காரணம். இவ னுடைய இந்தச் செய்கை, ராணுவத்திலிருந்த உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கு அதிருப்தியையும் ஆத்திரத்தை யும் உண்டுபண்ணி விட்டது. யுத்த நடவடிக்கை களில் அசிரத்தை காட்டத் தொடங்கி விட்டார்கள். இந்த அசிரத்தை சாதாரணத் துருப்புகளிடத்திலும் பரவியது.

இப்படி முக்கிய நகரங்களிலும் போர் முனையிலும் பரவியிருந்த அதிருப்தி ஏதேனும் ஒரு வழியில் வெளியாக வேண்டுமல்லவா? ருஷ்யப் பெண்மணிகள்தான் முதன் முதலில் அதிருப்தியை வெளிக் கொணரும் இந்தக் கைங் கரியத்தைச் செய்தார்கள். இது மகா ஆச்சரியமான விஷயம். ருஷ்யப் புரட்சியின் சிருஷ்டி கர்த்தர்கள் பெண் மக்களாயிருந்திருக்கிறார்களென்று நினைக்கிறபோது, நமக்கு மயிர்க் கூச்செறிகிறது. உலகத்திலே ஆண் அழிக் கிறான்; பெண் சிருஷ்டிக்கிறாள். உடலுக்குள் ஒட்டிக் கொண்டிருக்கும் உயிர்முதல் எல்லையில்லா அழகுவரை யில், எல்லாம் அவளுடைய சிருஷ்டிதான்.

1917-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் எட்டாந்தேதி

காலை பீட்ரோகிராட்* நகரத்திலுள்ள நெசவுத் தொழிற் சாலைகளில் வேலைசெய்து கொண்டிருந்த ஸ்திரீ தொழிலா ளர்கள், தங்கள் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறி வீதிகள் தோறும் ஊர்வலம் வந்தார்கள். தங்களுக்குச் சரியான உணவு கிடைக்கவில்லை யென்பது இவர்கள் கூக்குரல். இவர்களோடு மற்ற ஆண் தொழிலாளர்களும் சேர்ந்து கொண்டார்கள். புரட்சி ஆரம்பம்! இந்த வேலை நிறுத்தம் எல்லா முக்கிய நகரங்களிலும் உடனே பரவி விட்டது. எங்கணும் குழப்பம்! எங்கணும் 'சுயேச்சாதி காரம் வீழ்க' என்ற முழக்கம்! ஏற்கனவே தடுமாறிக் கொண்டிருந்த அரசாங்கம் இந்த வேலை நிறுத்தங்களைக் கண்டு கலங்கி விட்டது; வேலை நிறுத்தக்காரர்களை அடக்கி ஒடுக்கும்படி துருப்புகளை ஏவியது. ஆனால் துருப் பினர் வேலை நிறுத்தக்காரர்களோடு சேர்ந்து கொண்டு விட்டார்கள்! கேட்கவேண்டுமா ஜனங்களுக்கு உண் டான உற்சாகத்தை? அரசாங்கத்தின் உத்திரவுக் கிணங்கி, போலீஸார் மட்டும் சில இடங்களில் ஜனங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஜனங்கள் ஆத்திரங்கொண்டு அவர்களைக் கல்லாலும் கழியாலும் தாக்கினார்கள். ஒழுங்கீனங்கள் அதிகமாயின. மார்ச்சு மாதம் எட்டாந் தேதியிலிருந்து பன்னிரண்டாந் தேதி வரையில் ஐந்து நாட்களும் எங்கும் ஒரே கலவரமா யிருந்தது. அரசாங்கம் என்பது எங்கே இருக்கிறது, என்ன செய்து கொண்டிருக்கிறது என்ற விவரங்கள் ஒன்றுந் தெரியவில்லை.

சரி, ஜார் அரசன் எங்கே? அவன், போர்முனைக் கருகாமையில் எங்கேயோ ஒரு கிராமத்தில் தங்கியிருந் தான். தான் தலைமை வகித்துப் போரை நடத்திக்கொண் டிருப்பதாக அவனுக்குள் எண்ணம். தலைநகரமாகிய

---

* 6-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் பார்க்க.

பீட்ரோகிராட்டில் தொழிலாளர்களும் படைவீரர்களும் சேர்ந்து குழப்பம் விளைவித்துக் கொண்டிருக்கிறார்க ளென்றும், அவர்களோடு மற்ற ஜனங்களும் சேர்ந்து கொண்டிருக்கிறார்க ளென்றும் அவனுக்குச் செய்திகள் எட்டின. ராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரும்படியும், கலகக்காரர்களைச் சுட்டு வீழ்த்துமாறும் உத்தரவிட்டான். உத்திரவு செய்து விட்டான் சுலபமாக. ஆனால் அதை நிறைவேற்றுவது யார்? பீட்ரோகிராட் நகர சேனைத்தலைவன், தான் எடுத்துக்கொண்ட ராஜவிசுவாசப் பிரமாணத்திற்குப் பங்கம் உண்டாக்கக் கூடாதென்பதற்காக, மேற்படி ராணுவச் சட்ட உத்திரவைப் பிரகடனம் செய்தான். ஆனால், ஜனங்களுக்குத் தெரியும்படியாகத் தமுக்கடிப்பதோ, சுவர்களில் விளம்பரங்கள் ஒட்டுவதோ முதலிய ஒன்றையும் செய்ய முடியவில்லை. ஏனென்றால் செய்வோர் யாருமில்லை. அரசாங்கம் அப்படித் துண்டு துணுக்குகளாகச் சிதறிப்போய்விட்டது. ஜாருக்கு இது விஷயம் எட்டிற்று. தானே நேரில் தலைநகரத்திற்குவந்து ஒழுங்கை நிலைநாட்டத் தீர்மானித்தான். ரெயிலேறி வந்துகொண்டிருக்கையில், ரெயில்வே தொழிலாளர்கள், அவனது வண்டியை மேற்கொண்டு செல்லாதபடி தடுத்துவிட்டார்கள். பீட்ரோகிராட்டின் அருகாமையிலிருந்த ஜார் அரசிக்கு இந்தத் தகவல் தெரிந்தது. அலறினாள். தன் புருஷனுக்கு என்ன கதி நேர்ந்து விட்டதோ என்று கவலை கொண்டாள். உடனே ஜாருக்கு ஒரு தந்தி கொடுத்தாள். "விலாசதாரரின் இருப்பிடம் தெரியவில்லை" என்ற ஒரு பென்சில் குறிப்புடன், தந்திக் காரியாலயத்திலிருந்து தந்தி திரும்பி வந்து விட்டது! நிலைமை நிரம்ப மோசமாகி விட்டது. விமோசனம் என்ன?

அவசரம் அவசரமாக டூமா கூடியது. சுயேச்சாதிகாரம் இதனோடு ஒழிய வேண்டு மென்றும், அதற்கு அத்தாட்சியாக ஜார் அரசன் முடிதுறக்க வேண்டுமென்றும்

தீர்மானங்கள் நிறைவேறின. போர் முனையிலிருந்த ராணுவத் தலைவர்களும், ஜார் மன்னன், முடி துறப்பது தான் நல்லதென்று அபிப்பிராயம் தெரிவித்தார்கள். என்ன செய்வான் நிக்கோலாஸ்? தனக்குப் பின்னால் தன்னுடைய சகோதரனை மைக்கேலை அரசனாக நியமித்துவிட்டு, தான் முடிதுறந்து விட்டான். ஆனால் மைக்கேல் அரச பீடத்தில் அமரவே யில்லை. இரண்டாவது நிக்கோலாஸ் மன்னனோடு ரோமனாவ் அரசவமிசம் முற்றுப்பெற்று விட்டது.

இந்தக் காலத்தில் தொழிலாளர் ஸ்தாபனங்களான சோவியத்துகள் விரிவடைந்தன; செல்வாக்குப் பெற்றன. இவற்றில், தொழிலாளர் பிரதிநிதிகளோடு, போர் வீரர்களின் பிரதிநிதிகளும் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள். இந்தச் சோவியத்துகளில் தலைசிறந்து நின்றது பீட்ரோகிராட் சோவியத். இதற்குக் காரணம், இதன் ஸ்தாபகனான ட்ரோட்ஸ்கி,* ஆதியி

---

* Leon Trotsky—*1877-1940.* இவனுடைய இயற்பெயர் ப்ரான்ஸ்டைன் (Bronstein). மகா மேதாவி. நாவன்மை படைத்தவன். *1901*-ஆம் வருஷம் அரசியல் கிளர்ச்சிகளில் சம்பந்தப்பட்டதன் பயனாக சைபீரியாவுக்குப் பிரஷ்டம் செய்யப் பட்டான். ஆனால் அடுத்த வருஷமே தப்பி லண்டனுக்குச் சென்று, அங்கே அப்பொழுது வசித்துக்கொண்டிருந்த லெனினுடன் சேர்ந்துழைத்தான். *1905*-ஆம் வருஷம் ருஷ்யாவுக்குத் திரும்பிவந்து, அவ்வருஷம் நடைபெற்ற புரட்சியில் பங்கெடுத்துக் கொண்டான். மறுபடியும் கைதியானான்; சைபீரியாவுக்கு அனுப்பப்பட்டான்; அங்கிருந்து தப்பியோடி, ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் வாழ்ந்து வந்தான். *1917*-ஆம் வருஷம் ருஷ்யாவில் புரட்சி ஏற்பட்டதும் திரும்பிவந்து, லெனினுக்குத் துணையாக இருந்து புரட்சியை வெற்றிகரமாக நடத்தினான். சோவியத் அரசாங்கம் ஏற்பட்டதும் அந்நிய நாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டான்; பின்னர் செம்படைத்தலைவனானான். லெனின் இறந்த பிறகு இவனுடைய செல்வாக்கு குறைந்தது. ஏற்கனவே இவனுக்கும் ஸ்டாலினுக்கும் இருந்த மனஸ்தாபம் முற்றியது. ருஷ்யாவிலிருந்து பிரஷ்டம் செய்யப்பட்டு, துருக்கி, பிரான்ஸ், நார்வே முதலிய நாடுகளில் வசித்து, கடைசியில் *1936*-ஆம் வருஷம் மெக்ஸிகோ நாட்டுக்குச் சென்று அங்கேயே *1940*-ஆம் வருஷம் வரை வசித்துக் கொண்டிருந்தான். மேற்படி வருஷம் ஆகஸ்ட் மாதம் இவன், தன் விட்டிலேயே கொலை செய்யப்பட்டான்.

லிருந்தே இதனை ஒழுங்குபடுத்தி வைத்துச் சென்றதுதான். புரட்சியின்போது இவன் அமெரிக்காவிலே அஞ்ஞாத வாசஞ் செய்துகொண்டிருந்தானாயினும், இவன் ஏற்படுத்தி விட்டுப்போன ஒழுங்கு, குலையாமலிருந்ததால், இந்த பீட்ரோகிராட் சோவியத்துக்கு எப்பொழுதுமே ஒரு செல்வாக்கு இருந்து வந்தது. இந்த பீட்ரோகிராட் சோவியத், டூமா எந்தக் கட்டிடத்தில் கூடி வந்ததோ அதே கட்டிடத்தின் ஒரு பாகத்தைப் புரட்சியின் ஆரம்பத்தில் கைப்பற்றி அதில் தன் காரியாலயத்தை ஸ்தாபித்துக்கொண்டது.

சரி: புரட்சி வெற்றிகரமாக முடிந்துவிட்டது. ஜார் அரசனும் முடிதுறந்து விட்டான். இனி அரசாங்கம் நடக்க வேண்டுமே? நடத்துவது யார்? தாங்களே இதைச் செய்யலாம், செய்ய முடியும் என்று சோவியத் அங்கத்தினர்களுக்குப் படவேயில்லை. இஃது ஓர் ஆச்சரியமான விஷயம். டூமாதான் அரசாங்கத்தை நடத்த வேண்டுமென்று இவர்கள் முடிவு செய்து கொண்டார்கள். அப்படியே இவர்களுடைய விருப்பத்தைத் தெரிவிப்பதற்காகப் பிரதிநிதிக் கூட்டமொன்று, டூமா அங்கத்தினர்கள் கூடியிருந்த இடத்திற்குச் சென்றது. ஒரு கூட்டம், அதிலும் தொழிலாளர், படைவீரர் இவர்களடங்கிய ஒரு கூட்டம், தங்களை நோக்கி வருவதைப் பார்த்து டூமா அங்கத்தினர்கள் மிகவும் பயந்து விட்டார்கள். தங்களைக் கைது செய்வதற்காகவே இந்தக் கூட்டம் வருகிறதென்று கருதி விட்டார்கள்! அரசாங்க நிருவாகத்தை ஏற்று நடத்துமாறு மேற்படி சோவியத்துப் பிரதிநிதிக் கூட்டத்தினர், டூமா அங்கத்தினர்களைக் கேட்டுக் கொண்டார்கள். டூமா அங்கத்தினர்களுக்கு இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள மனமில்லை; ஆனால் மறுக்கவும் தைரியமில்லை. வேறு வழியின்றி ஒப்புக் கொண்டார்கள். ஒரு சிறிய கமிட்டி நியமிக்கப்பட்டு அதனிடம்

அரசாங்க நிருவாகம் ஒப்படைக்கப்பட்டது. இந்தக் கமிட்டிக்குத்தான் "தற்காலிக அரசாங்கம்"* என்று பெயர். அரசியல் அகராதியிலே அர்த்தமில்லாத ஒரு பெயர் இது.

ஒரே கட்டிடத்தின் ஒரு பாகத்தில் தற்காலிக அரசாங்கம்; வேறொரு பாகத்தில், இந்தத் தற்காலிக அரசாங்கத்தை ஏற்படுத்தின சோவியத். இரண்டுக்கும் அடிக்கடி மனஸ்தாபங்கள் ஏற்பட்டன. சோவியத், நிருவாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டு, தற்காலிக அரசாங்கத்தின் செயல்களில் அடிக்கடி தலையிட்டு வந்தது. இதற்கு முக்கிய காரணமென்னவென்றால், தற்காலிக அரசாங்கத்தின் அங்கத்தினர் அனைவரும் மிதவாதிகள்; சோவியத்தைச் சேர்ந்தவர் அத்தனைபேரும் தீவிரவாதிகள். முரண்பாடுகள் ஏற்படாமலிருக்குமா? ஒரே காலத்தில் இரட்டை அரசாங்கங்கள் ஆட்சி செலுத்துவது போலிருந்தது. தற்காலிக அரசாங்கம் ஓர் உத்திரவு பிறப்பிக்கும்; சோவியத் அதை மறுத்து வேறோர் உத்திரவு விடும். இந்த நிலைமையில் ஒழுங்கு என்பது ராஜ்யத்தில் லவலேசமும் இல்லாமல் போய்விட்டது. சிறப்பாகப் போர் முனையில் ஒழுங்கீனங்கள் அதிகமாகத் தலைகாட்டத் தொடங்கின.

இந்தச் சந்தர்ப்பத்தில் லெனின் வந்து சேர்ந்தான். இவன் இதுகாறும் ஸ்விட்ஜர்லாந்தில் அஞ்ஞாதவாசம் செய்து கொண்டிருந்தான். ருஷ்யாவில் புரட்சி ஏற்பட்டிருக்கிறதென்று தெரிந்ததும், இவன் உடனே தன்னுடைய தாய்நாட்டிற்கு, கர்மக்ஷேத்திரத்திற்கு வர ஆவல் கொண்டான். எப்படி வருவது? ஜெர்மனி வழியாகத்தான் வர வேண்டும். எனவே, இவனுடைய சார்பாகச் சில நண்பர்கள், ஜெர்மன் அரசாங்கத்தினிடம் தூது சென்று இவனை ருஷ்யாவுக்குள் செல்ல அநுமதிக்கும்படி

* Provisional Government.

கோரினர்கள். ஜெர்மன் அரசாங்கம் இதற்குச் சம்மதித்தது. லெனின், ஐரோப்பிய யுத்தத்திற்குப் பரம விரோதி யென்பது அதற்குத் தெரியும். இவன், ருஷ்யாவுக்குள் சென்ருல் சும்மா இருக்கமாட்டா னென்றும், யுத்த எதிர்ப்புப் பிரசாரம் செய்து ருஷ்யாவின் போரிடும் சக்தியை அடியோடு குன்றச் செய்வா னென்றும், இதனல் கிழக்குப் போர்முனையில் தனக்கு எதிர்ப்பு இல்லாமல் செய்துகொள்வது சாத்தியமென்றும், அப்பொழுது மேற்குப் போர்முனையில், அதாவது பிரான்ஸ், பிரிட்டன் இவைகளுக்கு விரோதமாகத் தன்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்தலா மென்றும் ஜெர்மன் அரசாங்கம் கருதியது. இவைகளை யெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு லெனினையும் அவனுடைய சகாக்களையும், தக்க பந்தோபஸ்துடன் ருஷ்ய எல்லையில் கொண்டு விட்டது. 1917-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் பதினேழாந்தேதி பீட்ரோகிராட் நகரம் வந்து சேர்ந்தான் லெனின் தனது சகாக்களுடன். சில நாட்களுக்குப் பிறகு, அமெரிக்காவிலிருந்து ட்ரோட்ஸ்கியும் பீட்ரோகிராட் நகரத்தை யடைந்தான்.

லெனினுடைய வருகையின் போது, பீட்ரோகிராட் சோவியத்தில், போல்ஷ்வெக்கர்கள், எண்ணிக்கையிலும் செல்வாக்கிலும் குறைந்தவர்களாகவே இருந்தார்கள். மென்ஷ்வெக்கர்களுடைய கைதான் ஓங்கியிருந்தது. லெனின், போல்ஷ்வெக் கட்சியின் தலைவனல்லவா? எனவே தன் கட்சியின் நலத்தை நாடி ஒரு திட்டம் வகுத்தான். என்ன திட்டம்? யாருடைய முயற்சியினல் புரட்சி வெற்றிகரமாக முடிந்ததோ அவர்களுடைய, அந்தத் தொழிலாளர்களுடைய ஆதரவை, போல்ஷ்வெக்கர்கள் முதலில் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். பின்னர் அந்த ஆதரவையும் பலத்தையும் கொண்டு சோவியத்தைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டும். அதன் பிறகு அரசாங்க அதிகாரம் தாஞகத் தங்கள் கையில் வந்து சேரும். இப்படி

ஒழுங்காகத் திட்டம் போட்டு வேலை செய்யக்கூடியவர்கள், போல்ஷ்வெக் கட்சியில், லெனின் வருகைக்கு முன் ஒருவரு மில்லை. தவிர, லெனின், ஒரு பிறவித் தலைவனுதலின், ருஷ்ய மண்ணில் காலடி எடுத்து வைத்தவுடன், ஜனங்களின் தேவை இன்னதென்பதை உணர்ந்து கொண்டான். "ஜனங்கள் சமாதானம் வேண்டுமென்கிருர்கள்; ஆகாரம் வேண்டு மென்கிருர்கள்; நிலம் வேண்டு மென்கிருர்கள். ஆனல் அவர்களுக்கு அளிக்கப் படுவது என்ன? யுத்தம்; பட்டினி. அவர்களுக்கு ஆகாரம் கிடைப்பதில்லை. நிலச்சுவான்தார்கள் தங்களிஷ்டப்படி நிலத்தை அநுபவித்துக் கொண்டு வருகிருர்கள்" என்று ஓரிடத்தில் கூறினன். தன்னுடைய கட்சியினர், அதாவது போல்ஷ்வெக்கர்கள், இந்த மாதிரியான விஷயங்களில் கவனஞ் செலுத்தாமல், மென்ஷ்வெக்கர்களோடு தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டும், தற்காலிக அரசாங்கத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு இணங்கிக் கொண்டும் போவதை இவன் விரும்பவே இல்லை. இதற்காகத் தன் கட்சியினரைக் கண்டித்தான்; அவர்களைச் செயலுக்குத் தூண்டினன்.

லெனின் வந்த பிறகு, பீட்ரோகிராட் சோவியத்தில் போல்ஷ்வெக்கர்களின் கை வலுத்தது. இது, தற்காலிக அரசாங்கத்தைப் பாதிக்காம லிருக்குமா? போல்ஷ்வெக்கர்கள், மெது மெதுவாக ஜனசாதகமான பிரேரணைகளை, உதாரணமாகத் தொழிலாளர்களுடைய வேலை நேரத்தை எட்டுமணியாக்குவது போன்றவைகளைக் கொண்டு புகுத்தி அவற்றை அமுலுக்குக் கொண்டுவரச் செய்தார்கள். தற்காலிக அரசாங்கம் இவைகளுக்கெல்லாம் இணங்கியே கொடுத்தது. ஆயினும், அதன் போக்கு போல்ஷ்வெக்கர்களுக்குப் பிடிக்க வில்லை. மிதவாதிகளையும் பணக்காரர்களையும் கொண்ட கூட்டந்தானே தற்காலிக அரசாங்கம்? இவர்களுக்குள்ளே அடிக்கடி மனஸ்தாபங்கள்

வேறே ஏற்பட்டு வந்தன. இவை காரணமாக, அரசாங்கம் அடிக்கடி கைமாறிக் கொண்டு வந்தது. ஒரு சமயம் மிதவாதிகளையும் சில தீவிரவாதிகளையும் கொண்ட ஒரு கூட்டு அரசாங்கம் ஏற்பட்டது. இதற்கு கெரென்ஸ்கி* என்பவன் தலைவனானான். அதாவது பிரதம மந்திரி. இவன் சிறந்த நாவலன். வக்கீல். தொழிளாலர்களின் மத்தியில் இவனுக்குக் கொஞ்சம் செல்வாக்கு இருந்தது. தன்னுடைய செல்வாக்குக்குப் போட்டியாக, போல்ஷ்வெக்கர்களுடைய செல்வாக்கு வளர்ந்துகொண்டு வருவதை இவன் விரும்பவில்லை. இது மனித சுபாவந்தானே? அதுவும் அரசியலிலே பிரவேசித்திருப்பவர்களுக்குக் கேட்கவேண்டுமா? பொறாமையும் போட்டியும் அரசியலோடு கலந்த பொருள்கள். கெரென்ஸ்கி, தனக்கிருக்கிற அதிகார பலத்தைத் துணையாகக்கொண்டு, போல்ஷ்வெக் கட்சியை ஒடுக்க முயன்றான். லெனின் உள்பட அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலரைக் கைதுசெய்யுமாறு உத்திரவிட்டான். பலர் கைதியாயினர். ஆனால், லெனினும் வேறு சிலரும் கைதியாகாமல் தலை மறைந்துவிட்டனர். கெரென்ஸ்கிக்கு ஆத்திரம் அதிகரித்தது. இன்னும் சில அடக்கு முறைகளைக் கையாண்டான். ஆனால், எதிர்பார்த்தபடி வெற்றி கிடைக்கவில்லை. போல்ஷ்வெக்கர்களுடைய செல்வாக்குத்தான் ஜனங்களிடத்தில் அதிகமாயிற்று.

இதைக் கண்டு மனம் புழுங்கினான் கெரென்ஸ்கி. தன் அதிகார பலத்தில் இன்னும் அதிகமான நம்பிக்கை வைக்கலானான். போல்ஷ்வெக்கர்களைத் திருப்தி செய்ய முடியாமற் போனாலும், பிரான்ஸ், பிரிட்டன் முதலிய நேசக் கட்சியினரையாவது திருப்திப்படுத்திப் பார்ப்போம் என்கிறமாதிரி, போர் முனையில் யுத்த முஸ்தீப்புகளை அதிகப்படுத்தினான். போரைத் தீவிரமாக நடத்தி ஜெர்மனியைத் தோற்கடித்துவிட்டால், அந்தச் செல்வாக்கைக் கொண்டு,

* Alexander Kerensky.

போல்ஷ்வெக்கர்களின் செல்வாக்கை முறியடித்துவிடலாம், ஜனங்களுடைய நம்பிக்கையையும் சம்பாதித்துக் கொண்டு விடலாம் என்று என்னென்னவோ நினைத்து ஏதேதோ ஏற்பாடுகள் செய்தான்.

ஆனால், ராணுவத் தலைவர்கள் இவனுக்கு விரோதிகளா யிருந்தார்கள். கெரென்ஸ்கியினுடைய இந்தப் புதிய யுத்த முயற்சிகள் அவர்களுக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. ஆத்திரங்கொண்டார்கள். கோர்னிலோவ்* என்ற ஒரு சேனைத் தலைவன் "தற்காலிக அரசாங்கமாவது போல்ஷ்வெஸமாவது, கெரென்ஸ்கியாம், லெனினும், எல்லாவற்றையும், எல்லாரையும் நசுக்கிப் போடுகிறேன் பார்" என்று வீறுபேசிக்கொண்டு, ஆயிரக்கணக்கான துருப்புகளுடன் பீட்ரோகிராட் நகரத்தை நோக்கிப் படையெடுத்து வந்தான். ஆனால், தலை நகரத்திற்கருகே வருகையில் அவனுடைய துருப்புகள் மாயமாய்க் கரைந்து விட்டன. எங்கே போய்விட்டார்கள் அத்தனை பேரும்? போல்ஷ்வெக்கர்களோடு சேர்ந்து கொண்டுவிட்டார்கள்! கோர்னிலோவ் கண்முன்னே, கெரென்ஸ்கியின் அதிகார நிழலிலே, கைகுலுக்கல்களும் கட்டித் தழுவுதல்களும் நடைபெற்றன.

சுருக்கமாகச் சொல்கிறபோது, ஜார் ஆட்சி வீழ்ந்த பிறகு சுமார் எட்டுமாத காலம்வரை, ருஷ்யா முழுதும் ஒரே கலவரமாயிருந்தது. அரசியல் வாழ்க்கையிலாகட்டும், சமுதாய வாழ்க்கையிலாகட்டும் ஒழுங்கு என்பது தலைமுழுகிவிட்டது; அமைதி என்பது ஆரவாரத்திலே அடைக்கலம் புகுந்துகொண்டது. படை பலம், அதிகார பலம், பண பலம் முதலியன வெல்லாம், சமாதானம், தேவை என்கிற ஜனங்களின் ஆவலுக்குப் பலியாயின. இந்த ஆவலின் பிரதிநிதியாக நிற்கிறான் ஒருவன். அவன் யார்? லெனின்.

* General Kornilov.

லெனின் என்ற பெயரைச் சொன்ன மாத்திரத்தில் ஜனங்களுக்கு ஒரு நம்பிக்கை பிறக்கிறது. அவர்கள் முகத்திலே ஜீவகளே ரேகை விடுகிறது. புது உலகம், புது நாகரிகம், புது வாழ்வு என்றெல்லாம் அவர்கள் பேசிக் கொள்கிருர்கள். லெனின் மீது அவ்வளவு நம்பிக்கை! இந்தக் காலத்தில், குழப்பங்களும் போட்டிகளும் நிறைந்த இந்த எட்டுமாத காலத்தில், லெனின் தனது லட்சியத்தை அடைவதற்கான பாதையை மிகக் கவனமாகச் செப்பனிட்டுக் கொண்டு வந்தான். இதில்தான் இவனுடைய திறமையும் பெருமையும் இருக்கின்றன. இந்த எட்டு மாத காலத்தில் சுமார் நான்கு மாத காலம் இவன் ஒளிந்திருந்து தன் கட்சியை வலுப்படுத்திக் கொண்டுவந்தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

தற்காலிக அரசாங்கமோ இந்த எட்டு மாத காலத்தில் படிப்படியாக க்ஷீணித்துக்கொண்டு வந்தது. கடைசியில் வெம்பிப்போய் கீழே விழும் தறுவாயிலுள்ள ஒரு பழம் மாதிரி ஆகிவிட்டது. இருந்தாலும் அது தன்னே ஊர்ஜிதம் செய்து கொள்ளும் பொருட்டுப் பிடிவாதமாகப் போராடி வந்தது. சமுதாயத்தின் மேல்படியிலிருந்த ஒரு சிலரும், அறிவை மட்டும் கொண்டு பிழைப்பு நடத்தும் மத்திய வகுப்பினர் சிலரும் அதற்குப் பக்க பலமா யிருந்தார்கள். ஆனல் ஓர் அரசாங்கத்திற்கு இந்தப் பலம் மட்டும் இருந்தால் போதுமா? போதாது என்பதை, தீர்க்கதரிசியான லெனின் நன்கு தெரிந்து கொண்டிருந்தான். இதனுலேயே சமுதாயத்தின் கீழ்ப்படியில் பெரும்பான்மையோராயுள்ள விவசாயிகள், தொழிலாளர்கள் முதலியோருடைய ஆதரவைத் திரட்டுவதிலேயே தன் முழுக் கவனத்தையும் செலுத்தி வந்தான். அந்த ஆதரவும் இவனுக்கு நிறையக் கிடைத்து வந்தது. அந்த ஆதரவைக் கொண்டு அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கு, தகுந்த சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அந்தச் சமயம்

வந்தவுடன் அதற்கான ஏற்பாடுகளை யெல்லாம் ட்ரோட்ஸ் கியைக் கொண்டு செய்வித்தான்.

*1917*-ஆம் வருஷம் நவம்பர் மாதம் ஏழாந் தேதி அகில ருஷ்ய சோவியத் காங்கிரஸ் பீட்ரோகிராடில் கூடுவதாக ஏற்பாடு செய்யப்பட்டது. அன்றைய தினமே அரசாங் கத்தைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்று லெனின் திட்டம் போட்டிருந்தான். குறிப்பிட்டபடி காங்கிரஸ் கூடியது. 650 பிரதிநிதிகள் ஆஜரா யிருந்தார்கள். இவர் களில் 390 பேர் போல்ஷ்வெக்கர்கள். எனவே, "போல்ஷ் வெக்கர்களின் சார்பாகவே சோவியத் காங்கிரஸ் பேசு கிறது" என்று லெனின் அப்பொழுது சுட்டிக் காட்டி யது பொருத்தமாகவே இருந்தது. வந்திருந்த 650 பேரில் 505 பேர், சோவியத் கையிலேயே அரசாங்க நிருவாகம் இருக்க வேண்டுமென்ற அபிப்பிராயமுடையவரா யிருந் தனர். தனக்கு வெற்றி நிச்சயம் என்பதை லெனின் ஸ்திரப்படுத்திக் கொண்டான்.*

காங்கிரஸ் கூடியதும் வழக்கமான வாதப்பிரதிவாதங் கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இப்படி நடைபெற் றுக் கொண்டிருக்கிறபோது, ஏற்கனவே செய்திருந்த ஏற் பாட்டின்படி போல்ஷ்வெக்கப் படை வீரர்கள், அரசாங் கக் காரியாலயத்தையும், தந்தி ஆபீஸ், தபாலாபீஸ், டெலி போன் ஆபீஸ், அரசாங்க பொக்கிஷசாலை முதலிய முக்கிய ஸ்தாபனங்களையும் சுவாதீனப்படுத்திக் கொண்டு விட்டார் கள். இங்கெல்லாம் வேலை செய்துகொண்டிருந்த மந்திரி மார்கள், முக்கியமான உத்தியோகஸ்தர்கள் முதலிய பல ரையும் கைது செய்து பந்தோபஸ்தில் வைத்துவிட்டார் கள். பிரதம மந்திரியான கெரென்ஸ்கி மட்டும் பெண்

---

* அப்பொழுது லெனின் தலைமறைவா யிருந்தா னென்பதும், தற்காலிக அரசாங்கம் அடியோடு விழுந்துவிட்ட பிறகே அவன் காங் கிரசில் பகிரங்கமாக வந்தானென்பதும் இந்தச் சமயத்தில் ஞாபகத் தில் வைத்துக் கொள்ளுதல் நல்லது.

வேஷம் தரித்துக் கொண்டு தப்பியோடி விட்டான். தற்காலிக அரசாங்கம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. இந்தத் தகவல், வாதப் பிரதிவாதங்களில் மும்முரமாக ஈடுபட்டிருந்த சோவியத் காங்கிரசுக்கு எட்டியது. உடனே "இனி எல்லா அரசாங்க அதிகாரங்களும் சோவியத்துகளினுடையவே" என்ற தீர்மானம் நிறைவேறியது. தற்காலிக அரசாங்கம் போய், சோவியத் அரசாங்கம் ஸ்தாபிதமாயிற்று. காங்கிரசில் காரியங்கள் துரிதமாக நடைபெற்றன. மந்திரிச் சபை அமைந்தது. மொத்தம் பன்னிரண்டு மந்திரிகள். லெனின், மந்திரிச் சபையின் தலைவன்; ட்ரோட்ஸ்கி, அந்நியநாட்டு மந்திரி; ஸ்டாலின், சிறுபான்மைச் சமூகத்தினரின் நலன்களைக் கவனிக்கும் மந்திரி. இப்படி இலாகாக்கள் பிரிக்கப்பட்டு, தக்கவர் கையில் ஒப்படைக்கப்பட்டன.

மந்திரிச்சபை அமைந்த பிறகு, மகாநாட்டில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேறின. ஒன்று, ஜெர்மனியோடு நடைபெறும் யுத்தத்தை நிறுத்திச் சமாதானம் செய்து கொள்ள வேண்டு மென்பது. மற்றொன்று, விவசாய நிலங்களின் மீது நிலச்சுவான்தார்களுக்கு இருந்த உரிமைகள் ரத்து செய்யப்பட்டு, அவை, அந்த நிலங்கள் தேசிய சொத்தாகக் கருதப்படவேண்டு மென்பது. இந்தத் தீர்மானங்கள் நிறைவேறின பிறகு காங்கிரஸ் கலைந்துவிட்டது.

1917-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் நடைபெற்ற புரட்சியினால் சுயேச்சாதிகார ஆட்சி வீழ்ந்தது. எட்டு மாதங் கழித்து நவம்பர் மாதம் நடைபெற்ற புரட்சியினால் ஜன ஆட்சி ஸ்தாபிதமாயிற்று.* ஒரே வருஷத்தில் இரண்டு

---

* ருஷ்யாவில் அநுஷ்டிக்கப்படுகிற தேதி முறைக்கும் மற்ற நாடுகளில் அநுஷ்டிக்கப்படுகிற தேதி முறைக்கும் ஏறக்குறைய பதினைந்து நாள் வித்தியாசம் இருக்கிறது. ருஷ்யப் பஞ்சாங்க (காலெண்டர்)ப்படி இந்த நவம்பர் 7-ஆந் தேதிச் சம்பவம், அக்டோபர் 23-ம் தேதி நடைபெற்றது. இதனாலேயே இதனை அக்டோபர் புரட்சி யென்றும், ஜார் மன்னன் முடி துறப்பதற்குக் காரணமாயிருந்த புரட்சியை பிப்ரவரி புரட்சி யென்றும் ருஷ்யர்கள் அழைப்பார்கள்.

புரட்சிகள்! ஒன்று அழிப்பதற்கு; மற்றொன்று ஆக்குவதற்கு. இரண்டிற்கும் சூத்திரதாரியாக இருந்தவன் லெனின். முந்திய புரட்சியை நாட்டுக்கு வெளியே இருந்து நடத்தினன்; பிந்திய புரட்சியை நாட்டுக்குள்ளிருந்தே நடத்தினன். இந்த இரண்டாவது புரட்சிக்குப் பிறகுதான், லெனின் பிறக்கிறபோதே ஒரு தலைவனுகப் பிறந்தான் என்ற உண்மையைப் பொதுவாக உலக மகா ஜனங்களும், சிறப்பாக ருஷ்ய மகாஜனங்களும் தெரிந்து கொண்டார்கள்.

## 3. குடியரசின் தோற்றம்

அரசாங்க நிருவாகத்தைக் கைப்பற்றிக்கொண்டு விட்டான் லெனின். சுக்கானைப் பிடித்துக் கொண்டிருக்கிற மீகாமன் போல் கம்பீரமாக நிற்கிறான். அரசாங்க அமைப்போ புதிய மாதிரி. ஜனங்களுடைய அரசாங்கம். ஜனங்களுக்காக அரசாங்கம். ஜனங்களுக்கே இது புதிது. இதனை ருஷ்ய சமுதாய மென்னும் சமுத்திரத்தில் இப்பொழுது தான் முதன் முதலாக மிதக்க விட்டிருக்கிறான் லெனின். பார்க்கப்போனால், இஃதொரு பரிசோதனை. இதற்கு மகத்தான துணிச்சல் வேண்டும். ஆனால், ருஷ்ய மக்களின் அதிருஷ்டவசமாக லெனின் ஒரு துணிச்சல் காரனாக மட்டும் இல்லை; வீரனாகவும், தலைவனாகவும் இருந்தான். இவன் மேற்படி அரசாங்கக் கப்பலின் சுக்கானை எந்த நிமிஷத்தில் பிடித்தானோ அந்த நிமிஷத்திலிருந்தே இவனைச் சுற்றி எவ்வளவு கொந்தளிப்பு! எவ்வளவு கடுமையான புயற்காற்று! மேலே மேகங்கள் குமுறின. கீழே திமிங்கிலங்கள் இவன் காலைப் பற்றி இழுத்தன. ஆனால் அசையாத ஸ்தம்பம்போல் இவன் உறுதியாக நின்றான்; எத்தனையோ பேருடைய சாபங்களுக்கும் கோபங்களுக்கும் ஆளானான். எதற்காக? ருஷ்ய சமுதாயத்தின் நல்வாழ்வுக்காக; உலக மகாஜனங்களின் எதிர்கால க்ஷேமத்திற்காக.

அப்பொழுது லெனின், தன்னைச் சுற்றி எந்த மாதிரியான காட்சியைக் கண்டான்? ருஷ்ய ராணுவம் துண்டு துணுக்குகளாகச் சிதறுண்டு கிடந்தது. அது மறுபடியும் சக்திபெற்றுச் சண்டை போடும் என்று சொல்வதற் கில்லாமல் இருந்தது. ஆனால் ஜெர்மனியோடு சண்டை மட்டும் நடந்து கொண்டிருந்தது. தேசமுழுவதும் ஒரே

கலவரம். போர் முனையிலிருந்து ஓடிவந்து விட்டவர்களும், வழிப்பறிக் கொள்ளைக்காரர்களும் தங்கள் இஷ்டப்படி காரியங்கள் செய்துகொண்டு போனார்கள். சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு அடியோடு சீர் குலைந்து போயிருந்தது. உணவுப் பொருள்கள் அகப்படுவது அருமையாகி விட்டது. ஜனங்களோ பட்டினி கிடந்தனர். பழைய ஜார் ஆட்சி முறையின் பிரதிநிதிகள், புரட்சியை அடக்கிப் போடுவதற்குத் தயாராகக் காத்துக் கொண்டிருந்தனர். பழைய அரசாங்கத்தின் ஊழியர்கள், புதிய அரசாங்கத்துடன் ஒத்துழைக்க மறுத்துவிட்டார்கள். பாங்கிக்காரர்கள் பணங்கொடுக்க மறுத்துவிட்டார்கள். தந்திக் குமாஸ்தாக்களும்கூட, தந்தி யனுப்ப முடியாதென்று சொன்னார்கள். எப்படிப்பட்ட மனோதிடங் கொண்டவனையும் பிரமிக்கச் செய்யக் கூடிய ஒரு கடினமான நிலைமை ஏற்பட்டு விட்டது.

அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக் கொண்டதும் லெனின் செய்த முதல் காரியம் என்னவென்றால், ஜெர்மனியோடு சமாதானம் செய்து கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டதுதான். அப்பொழுது போர்முகத்தில் சேனாதிபதியாக இருந்தவன் துக்கோனின்* என்பவன். யுத்தத்தை நிறுத்தி, ஜெர்மன் சேனைத் தலைவனுடன் சமாதானப் பேச்சுத் தொடங்குமாறு லெனின் அவனுக்கு டெலிபோன் மூலம் உத்திரவு கொடுத்தான். ஆனால் அவன் இதற்குக் கீழ்ப்படிய மறுத்துவிட்டான். உடனே, அவனை வேலையிலிருந்து விலக்கி யிருப்பதாகவும், கிரிலென்கோ† என்ற சேனைத் தலைவனைப் படைமுகத்திற்கு அனுப்பி யிருப்பதாகவும், அவனிடத்தில் பொறுப்பை ஒப்புவித்து விடுமாறும், பீட்ரோ கிராட்டிலிருந்து கண்டிப்பான உத்திரவு சென்றது.

---

* Genral Dukhonin. † General Krylenko.

கிரிலென்கோ யுத்த களத்திற்குச் சென்றான்; பதவியை ஒப்புக்கொண்டான். சோர்ந்தும், கோபமடைந்தும் இருந்த போர்வீரர்கள் யுத்த முனையிலேயே துக்கோனினை உயிரோடு கொளுத்திவிட்டார்கள்.

ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் சமரஸப் பேச்சுகள் தொடங்கின. ப்ரெஸ்ட்—லிடோவ்ஸ்க் * என்ற ஊரில் இரண்டு நாட்டுப் பிரதிநிதிகளும் கூடினார்கள். ருஷ்யர்களின் பலவீனமான நிலைமையை நன்கு தெரிந்து கொண்டிருந்த ஜெர்மானியர்கள் மிகக் கடுமையான நிபந்தனைகளை விதித்தார்கள். இந்த நிபந்தனைகளை ஒப்புக் கொள்வதைக் காட்டிலும், ருஷ்யா வென்று பெயர் சொல்லிக் கொண்டு தனியாக ஒரு தேசம் இல்லாமலிருப்பதே நல்லதென்கிற மாதிரியாக போல்ஷ்வெக்கர்களில் பெரும்பாலோர் அபிப்பிராயப் பட்டார்கள். ருஷ்யப் பிரதிநிதிக் கூட்டத்தின் தலைவனா யிருந்தவன் ட்ரோட்ஸ்கி. இவன், தனது வாசாலகத்தை யெல்லாம் உபயோகப்படுத்தி, ஜெர்மானியர்களைச் சிறிது இறங்கி வரும்படி செய்ய எவ்வளவோ முயன்றான். ஜெர்மனியால் வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளுக்குச் சுயநிர்ணய உரிமை அளிக்க வேண்டுமென்று மன்றாடினான். பயனில்லை. இன்னும் சாதாரணமான பல கோரிக்கைகளைக் கிளத்தினான். ஜெர்மானியர்கள் பிடிவாதமாக யிருந்துவிட்டார்கள். எனவே, சமரஸப் பேச்சுகள் முறிந்தன. ஜெர்மானியர், மீண்டும் யுத்த கோஷம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அவர்களுடைய படை, பீட்ரோ கிராட் நகரத்தை நோக்கி வரத் தொடங்கியது.

இந்த நிலைமையில் என்ன செய்வது? பார்த்தான் லெனின். ருஷ்யப் பொது ஜனங்கள், சமாதானத்தில் எவ்வளவு ஆவலுடையவர்களா யிருக்கிறார்க ளென்பது இவ

---

* Brest-Litovsk.

னுக்கு நன்றாகத் தெரியும். யுத்தகளத்தில் போர் வீரர்கள் ஓர் அடிகூட முன் எடுத்து வைக்கத் தயாராயில்லை என்பதையும் இவன் தெரிந்து கொண்டிருந்தான். எனவே ஜெர்மானியர்கள் கூறுகிற சமாதான நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தான். இதனால் இவன் மீது, இவனுடைய கட்சியினராகிய போல்ஷ்வெக்கர்களுக்கு அதிக அதிருப்தி ஏற்பட்டது. இவர்களைச் சமாதானப்படுத்தி நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளச் செய்வது இவனுக்குப் பெரிய பிரயாசையாகிவிட்டது. முடிவாக, மேலே சொன்ன ப்ரெஸ்ட் — லிடோவ்ஸ்க் என்ற ஊரிலேயே 1918-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் மூன்றாந் தேதி ஜெர்மானியப் பிரதிநிதிகளும் ருஷ்யப் பிரதிநிதிகளும் சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள். இதற்கு ப்ரெஸ்ட்— லிடோவ்ஸ்க் ஒப்பந்தம் என்று பெயர். இதனால் ஏற்பட்ட பகிரங்கமான பலன் என்னவென்றால், ருஷ்யாவின் மேற்குப் பக்கத்தில் அதற்குச் சொந்தமா யிருந்த பெரும்பாலான பிரதேசம் ஜெர்மனியைப் போய்ச் சேர்ந்தது. போல்ஷ்வெக்கர்கள் தங்கள் அரசாங்கத் தலைமை ஸ்தானத்தை பீட்ரோ கிராட்டிலிருந்து மாஸ்கோவுக்கு மாற்றிக் கொண்டார்கள். அது முதற்கொண்டு, மாஸ்கோவே ருஷ்யாவின் தலை நகரமா யிருந்து வருகிறது.

இரண்டாவதாக, லெனின் நில விஷயத்தைப் பற்றிக் கவனிக்கத் தொடங்கினான். ஏற்கனவே சோவியத் காங்கிரசில், நிலச்சுவான்தார்களுடைய நிலங்களும், மற்றச் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டு கிராம சோவியத்துகளின் கையில் தேசிய சொத்தாக ஒப்படைக்கப்படுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தல்லவா? இந்தத் தீர்மானத்தை பல உத்தரவுகளின் மூலம் அநுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தான். இது சம்பந்தமாக இவன் குறை கூறப்படுகிறானதலின், இதைப்பற்றிச் சிறிது விஸ்தரித்துக் கூறுவது நல்லது.

தற்காலிக அரசாங்கத்தின் நிருவாக காலத்தில், அத னுடைய பலவீனத்தை உணர்ந்த நிலச்சுவான்தார்கள், போல்ஷ்வெக்கர்கள் அதிகார பதவியை ஏற்றுக் கொண் டால் எங்கு தங்கள் நிலங்களைப் பறிமுதல் செய்துவிடு வார்களோ என்று அஞ்சி ஒரு சூழ்ச்சி செய்தார்கள். தங் களுடைய நிலங்களைச் சிறு சிறு தனிகளாகப் பிரித்து; தங்களிடத்தில் ஏதோ ஒரு வகையில் பவ்யப்பட் டிருக்கிற வர்களுக்குச் சுவாதீனப்படுத்தி விட்டார்கள். தங்க ளுடைய சொத்துக்களில் சிலவற்றை அந்நியர்களுக்கு மாற்றிவிட்டார்கள். இப்படித் தற்காலிகமாகப் பிரித் தும் மாற்றியும் கொடுத்து, பின்னடி தக்க சமயம் வருகிற போது எல்லாவற்றையும் தங்களுக்கே திருப்பி மாற்றிக் கொண்டுவிடலா மென்பது இவர்கள் எண்ணம். விவ சாயிகள் இதன் சூட்சுமத்தைத் தெரிந்து கொள்ளாம லிருப்பார்களா? அவர்கள் ஏழைகள்தான். ஆனல் முன் கூட்டி வரப்போவதை ஊகித்துக் கொண்டுவிடும் சக்தி அவர்களுக்கு உண்டு. இந்த நிலமாற்ற விவகாரங்களை நிறுத்தச் செய்ய வேண்டுமென்று தற்காலிக அரசாங்கத் திற்கு விண்ணப்பித்துக் கொண்டார்கள். ஆனல் அஃது, அந்தத் தற்காலிக அரசாங்கம், எவ்லோரையும் திருப்தி செய்ய முயன்று கடைசியில் எல்லோருடைய அதிருப்தி யையும் சம்பாதித்துக் கொள்கிற வேலையில் சுறுசுறுப்பாக இருந்தது.

பார்த்தார்கள் விவசாயிகள். அரசாங்கத்தை நம்பு வதில் பிரயோஜன மில்லை என்று தெரிந்துகொண்டார்கள். தாங்களே, நிலச்சுவான்தார்களிடமிருந்து நிலங்களைப் பலாத்காரமாகச் சுவாதீனப்படுத்திக்கொண்டு வந்தார் கள்; தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டார்கள். எதிர்த்து நின்ற நிலச்சுவான்தார்கள் கொலைசெய்யப்பட் டார்கள். அவர்களுடைய சுகபோக வாழ்க்கை ஸ்தலங் கள் சூறையாடப்பட்டன; தீக்கிரையாக்கப் பட்டன.

இதனால் ஏராளமான சொத்துக்களுக்கு நஷ்டம் உண்டாயிற்று. இந்தச் சொத்து நஷ்டம் சமுதாயப் பொதுவுக்கு ஒரு கஷ்ட மல்லவா?

விவசாயிகள் இப்படி நிலங்களைப் பங்கு போட்டுக் கொள்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டு, போர்முகத்திலிருந்த படைவீரர்கள், லட்சக்கணக்கில் கிராமங்களுக்குத் திரும்பி வந்து, இந்தப் பங்கு போட்டுக்கொள்ளும் வேலையில் ஈடுபட்டார்கள். ஏற்கனவே இவர்கள் விவசாயிகளாக இருந்தவர்கள் தானே? போர்முகத்திலும் இவர்களுக்குச் சரியான உடையோ உணவோ கிடையாது. அதிகமாகச் சோர்வுற்றுக் கிடந்தார்கள். வயிற்றுப் பிழைப்புக்கு ஏதேனும் ஒரு வழி ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமல்லவா? எறும்புக் கூட்டங்கள் மாதிரி கும்பல் கும்பலாகக் கிராமங்களுக்குள் நுழைந்தார்கள். எந்த அரசாங்கந்தான் இதனைத் தடுக்க முடியும்? அஃது எவ்வளவு வல்லமை பொருந்திய அரசாங்க மாகத்தான் இருக்கட்டுமே. விவசாயிகளின் ஆக்கிரமிப்புச் செயலைக் கண்டித்து விடுவதால் மட்டும் ஏதேனும் நன்மை உண்டாகுமா? இதனால்தான் லெனின், புத்திசாலித்தனமாக, தேசத்திலுள்ள நிலமனைத்தையும் ஜனங்களுடைய சொத்தாக்கிவிட்டான். ஜார் அரசனுக்கும், அவனுடைய குடும்பத்தினருக்கும், மத ஸ்தாபனங்களுக்கும் சொந்தமாயிருந்த எல்லாச் சொத்துக்களும் பங்கிடப் பெற்று விவசாயிகளுக்கு விநியோகிக்கப் பெற்றன. இந்த விநியோக வேலையை யார் செய்வது? அந்தந்தக் கிராமக் கமிட்டிகளின் வசத்திலேயே விட்டான். இந்தக் கமிட்டிகளோ அந்தந்தக் கிராம விவசாயிகளால் தெரிந்தெடுக்கப்பட்டவை. விவசாய சம்பந்தமான பரிசோதனைகள் நடத்துவதற்காக மட்டும் முக்கியமான இடங்களில் சில நிலங்களை அரசாங்கமானது, தனக்கென்று வைத்துக் கொண்டது. ஆனால் இவைகளைக்கூட விவசாயிகள் சிறிது காலங் கழித்துத்

தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டு விட்டார்கள். நிலத்தேவை அவ்வளவு அதிகமாகயிருந்தது.

நிலச்சுவான்தார்களை அவர்களுடைய நிலத்திலிருந்து விவசாயிகள் அப்புறப்படுத்தி விட்டதுபோலவே, நகரத் தொழிற்சாலைகளில் வேலை செய்துகொண்டிருந்த தொழிலாளர்கள், பல இடங்களில் தங்களுடைய முதலாளிகளைத் துரத்திவிட்டு, தாங்களே தொழிற்சாலைகளை ஆக்கிரமித்துக் கொண்டு விட்டார்கள். ஆக்கிரமித்துக்கொண்டு என்ன செய்வது? அவைகளை நடத்த வேண்டுமே? இதற்குப் பணமும், திறமையும், நிருவாக ஒழுங்கும் தேவையல்லவா? எல்லாம் பொதுவுடைமை என்கிற உற்சாகத்திலே, தொழிலாளர்கள், தொழிற்சாலைகளில் வேலை நடைபெற வொட்டாதபடி செய்து விட்டார்கள். இப்படி வேலையற்றுப் போன தொழிற்சாலைகளை என்ன செய்வது? ஆடம்பர வஸ்துக்கள் எதுவும் வேண்டியதில்லை யென்றாலும், வாழ்க்கைக்கு அவசியம் தேவையாயிருக்கிற துணிமணிகளாவது, ஜனங்களுக்கு, ஏதோ ஒன்றுக்குக் கால் விகிதமேனும் கிடைக்கச் செய்யவேண்டு மல்லவா? மேற்படி தொழிற்சாலைகளை மறுபடியும் முதலாளிகள் வசம் ஒப்புவித்து, வேலை தொடங்கச் செய்ய, சோவியத் அரசாங்கத்திற்கு இஷ்டமில்லை. அப்படிச் செய்வது, முதலாளித்துவத்தின் ஆக்கத்திற்கு, தானே தூண்டுகோல் போட்டதாகு மல்லவா?

இன்னும் சில இடங்களில், தேசத்தில் ஏற்பட்டிருக்கிற கலக்கத்தை ஆதாரமாகக் கொண்டு, பொதுவுடைமை இயக்கம் வளரக் கூடாதென்ற நோக்கமுடைய முதலாளிகளிற் சிலர், தங்கள் வசத்திலிருந்த தொழிற்சாலைகள் சரியாக வேலைசெய்ய வொட்டாதபடி விஷமம் செய்து வந்தார்கள். இவற்றைத் தடுத்துத் தொழிற்சாலைகளைக் காப்பாற்ற வேண்டியது அவசியமாயிருந்தது. எனவே, இந்தப் பல காரணங்களையும் உத்தேசித்து, எல்லாத்

தொழிற்சாலைகளையும் அரசாங்கத்தாரே சுவாதீனப் படுத்திக்கொண்டு விட்டார்கள். இதுதான் சமயமென்று லெனின், தேச முழுமைக்கும் பொதுவுடைமைத் தத்துவத் தைக் கொண்டு புகுத்தினன். அரசாங்கத்தின் அமைப்பை யும் நோக்கத்தையும் தெளிவு படுத்திக் காட்டினன். 1918-ஆம் வருஷம் ஜூலை மாதம் பத்தாந் தேதி அவன் வெளியிட்ட அறிக்கையின் முதல் பாகம் வருமாறு:—

1. தொழிலாளர்கள், படை வீரர்கள், விவசாயிகள் ஆகியோருடைய பிரதிநிதிகள் அடங்கிய சோவியத்துகளைக் கொண்ட குடியரசு நாடாக ருஷ்யா இனி இருக்கும் என்று இதன்மூலம் அறிவிக்கப் படுகிறது. எல்லா மத்திய, ஸ்தல அதிகாரங்களும் இந்தச் சோவியத்துகளின் கையிலேயே ஒப்படைக்கப் படுகின்றன.

2. சுதந்திரமாயுள்ள ஜாதியினர், அவர்கள் விருப்பப் படி ஒன்று சேரலாமென்கிற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, தேசீயக் குடியரசு நாடுகளின் சமஷ்டியாக, ருஷ்ய சோவியத் குடியரசு ஸ்தாபிக்கப் படுகிறது.

3. மனிதனை மனிதன் சுரண்டுவதைத் தடுக்கும் பொருட்டும், சமுதாயத்தைத் தரவாரியாகப் பிரிவினை செய் வதை நிறுத்தும் பொருட்டும், சுரண்டுபவர்களைக் கண்டிப் பாக அடக்கிப்போட வேண்டு மென்பதற்காகவும், சமுதா யத்தை அபேதவாத முறையில் அமைக்கவேண்டு மென்பதற் காகவும், எல்லா நாடுகளிலும் அபேதவாதம் வெற்றிபெற வேண்டு மென்பதற்காகவும் கீழ்க்கண்டவாறு உத்திரவு செய்யப்படுகிறது:—

(அ) நிலங்களின் மீது தனிப்பட்டவர்களுக்குள்ள சொந்த பாத்தியதை இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது. எல்லா நிலங்களும், தேசீய சொத்தாகக் கருதப்பட்டு, உழைப்பாளிகளின் வசத்தில் ஒப்புவிக்கப்படும். இதற்கு முந்தி நிலத்துக்குச் சொந்தக்காரர்களா யிருந்தவர்க

ளுக்கு எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்கப்பட மாட்டாது. நியாயமான முறையில் எல்லோருக்கும் நிலங்கள் பங்கிட்டுக் கொடுக்கப்படும். ஆனால் எல்லோருக்கும் நிலத்தை உபயோகப் படுத்திக்கொள்ள மட்டுமே பாத்தியதை உண்டு.

(ஆ) காட்டுப் பிரதேசங்கள், பூமியின் கீழ் உள்ள சுரங்கப் பொருள்கள், தேசிய முக்கியத்துவம் பெற்ற நீர் வசதிகள், கால் நடைகள், அவற்றைச் சேர்ந்தவைகள், மாதிரி விவசாயப் பண்ணைகள், விவசாய முயற்சிகள் முதலிய யாவும் தேசிய சொத்துக்களாகவே இனிக் கருதப்படும்.

(இ) தொழிற்சாலைகள், பொருள் விற்பனை ஸ்தாபனங்கள், சுரங்கங்கள், ரெயில்வேக்கள் முதலிய உற்பத்தி சாதனங்களும், போக்கு வரத்து சாதனங்களும், தொழிலாளர்—விவசாயிகளடங்கிய சோவியத் குடியரசின் கைக்குப் பரிபூரணமாக மாறுவதற்கு முன்னேற்பாடாகவும், சுரண்டுபவர்களைக் காட்டிலும் உழைப்பாளிகளின் அந்தஸ்துதான் மேலானதென்பதை ஊர்ஜிதம் செய்யும் பொருட்டும், தொழில் ஸ்தாபனங்களினுடைய நிருவாகம் இனி, "தலைமைப் பொருளாதாரக் கவுன்சில்"ன் வசம் ஒப்படைக்கப்படும்.

சுமார் மூன்று வருஷ காலம், இந்தப் பொதுவுடைமைக் கொள்கையை, சோவியத் அரசாங்கம் கண்டிப்பான முறையில் அநுஷ்டித்து வந்தது. இதற்கு "யுத்த காலப் பொதுவுடைமை" என்று பெயர்.

முக்கியமான இந்த விஷயங்களைக் கவனித்துவிட்டு, பிறகு லெனின், அரசாங்க யந்திரத்தைப் பழுது பார்க்கத் தொடங்கினன். முறுக்காணிகளும் திருகாணிகளும் நிறைய இருந்தன. இவைகளையெல்லாம் நிர்த்தாட்சண்யமாக அப்புறப்படுத்தினன். உதாரணமாக, பழைய நிருவாகத்தின் கீழ் வேலை பார்த்துக் கொண்டிருந்த அரசாங்க

உத்தியோகஸ்தர்கள் புதிய நிருவாகத்தின் கீழ் வேலை செய்வதற்கு முணுமுணுத்தார்கள்; ஒத்துழையாமையை அநுசரித்தார்கள். இவர்களெல்லோரையும் கண்டிப்பாக உத்தியோகத்தினின்று விலக்கிவிட்டான். "வேலையில்லாதவர்களுக்கு உணவு கிடையாது" என்று எல்லோருக்கும் பொதுவாக ஒரு விதியை ஏற்படுத்தினன். பாங்கி முதலாளிகள், தங்களுடைய இரும்புப் பெட்டகங்களைத் திறந்து பணத்தை எடுத்துப் புழக்கத்திற்குக் கொண்டுவர மறுத்தார்கள். அவற்றை வெடிமருந்து வைத்துத் திறந்து பணத்தைச் செலாவணிக்குக் கொண்டுவரச் செய்தான். இப்படிச் சில்லரையாக ஏற்பட்ட பலதடைகளைக் கொஞ்சங்கூடத் தயை காட்டாமல் விலக்கினன். ஜார் குடும்பத்தினர், யூரல் மலைக்கருகாமையில் எகாடெரின்பெர்க் என்ற ஊரில் பாதுகாவலுடன் வைக்கப்பட்டிருந்தார்கள். ஆனல் அவர்களை மையமாக வைத்துக் கொண்டு, அரசாங்கத்திற்கு விரோதமாக ஒரு சதியாலோசனை நடைபெற்றது. இதனல் அரசாங்கத்திற்கு ஆபத்துண்டாகும் போலிருந்தது. எனவே, ஜார் குடும்பத்தினர் இவ்வுலகத்தில் இல்லாதபடி மறு உலகத்திற்கு (17—6—1918) அனுப்பப்பட்டுவிட்டார்கள். இங்ஙனமாக எழுந்த பல குட்டிக் கலகங்கள் கடுமையாக அடக்கப்பட்டன.

ருஷ்யர்கள், ஜெர்மானியர்களுடன் ப்ரெஸ்ட்—லிடோவ்ஸ்கில் தனித்து ஒப்பந்தம் செய்து கொண்டது நேசக்கட்சியினருக்குப் பிடிக்கவில்லை. யுத்த நடுவில், ருஷ்யர்கள் தங்களைக் கைவிட்டதாக நினைத்தார்கள். தவிர, ருஷ்யாவில் பொதுவுடைமைத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சோவியத் அரசாங்கம் ஏற்பட்டிருப்பது, முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட வல்லரசுகளுக்குப் பிடிக்கவில்லை. தங்கள் நாடுகளில் புரட்சியும் பொதுவுடைமைக் கொள்கையும் பரவி விடுமோ என்று அஞ்சினர்கள். எனவே, சோவியத் ஆட்சி முறை, ருஷ்

யாவில் நிலைபெறுவதற்கு முன்னரே அதனை அழித்துவிடு வது தங்கள் கடமை யென்று கருதி விட்டார்கள். இதற் காக, படை பலம், பண பலம் முதலியனயாவும் திரட்டப் பட்டன. ஐயோ, 1918-ஆம் வருஷம் பதினொன்கு தேசங் கள், தங்கள் படை பலத்துடன் ருஷ்யாவை வளைத்துக் கொண்டன. ருஷ்யாவுக்குள் எந்தவிதமான உணவுப் பொருள்களும் செல்லவொட்டாதபடி தங்கள் கப்பற்படை களைக் கொண்டு தடுத்தன. 1918-ஆம் வருஷத் தொடக் கத்திலிருந்து 1920-ஆம் வருஷம் முடிய, சுமார் மூன்று வருஷ காலம் இந்த வல்லரசுகள் சோவியத் அரசாங்கத் தையும் ருஷ்ய மகா ஜனங்களையும் படுத்தின பாடு சொல் லத்தர மன்று. பிரிட்டன் மட்டும் இந்தக் கைங்கரியத் துக்காக, சுமார் நூறு கோடி ரூபாய் செலவழித்தது.

இந்த வல்லரசுகள், ஏற்கனவே ஜார் அரசாங்கத்தின் கீழ் வேலை செய்துகொண்டிருந்து, இப்பொழுது சோவி யத் அரசாங்கத்திற்கு விரோதமாகக் கலகக்கொடி தூக்கி யிருக்கிற ராணுவத் தலைவர்கள் பலருக்கும் ஆயுதங்கள் உதவின; ஆட்களை அனுப்பின. எல்லாம் ஜன நாயகத் தின் பெயரால்! ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்குத் தான்!

இப்படி ஒன்று திரண்டெழுந்த ஏகாதிபத்திய சக்தியை எதிர்த்து நிற்பது, சோவியத் அரசாங்கத்தின் இன்றியமையாத கடமை யாயிற்று. அப்படி எதிர்த்து நின்றிராவிட்டால், அன்றே மடிந்துபோயிருக்க வேண் டியதுதான். எனவே, அது, சீர்குலைந்துபோயிருந்த தனது ராணுவத்தை முதலில் ஒழுங்குபடுத்தியது. இந்த வேலையை ட்ரோட்ஸ்கி மிக அருமையாகச் செய்தான். இவனுடைய கண்டிப்பான நிருவாகத்தின்கீழ், சோவியத் ராணுவ மானது, ஒழுங்கிலும், ஒழுக்கத்திலும், திறமையிலும் வெகு வாக முன்னேறியது. ராணுவத்தின் எண்ணிக்கையும் லட்சக் கணக்கில் பெருகியது.

சோவியத் படைக்கு "செம்படை" என்றும், புரட்சி விரோதிகளின் படைக்கு "வெண்படை" யென்றும் பெயர். சோவியத் செம்படை, வெண்படைகளை எதிர்த்துப் பதினேழு போர்முகங்களில் ஒரே சமயத்தில் போராடியிருக்கிறது என்று சொன்னால், அஃதொன்றே, ட்ரோட்ஸ்கியின் நிருவாகத் திறமைக்கு அத்தாட்சியல்லவா? இந்த இரண்டு படைகளுக்கும் மத்தியில் தேச மகாஜனங்கள் அகப்பட்டுக்கொண்டு திணறினர்கள். உயிரழிவும் பொருட் சேதமும் சொல்லி முடியாது. சுமார் எழுபது லட்சம் ஜனங்கள் அகால மரணமடைந்தார்கள். உக்ரேன் என்ற பிரதேசத்தின் நிருவாகம் மட்டும், இந்தச் சண்டை நடைபெற்ற மூன்று வருஷத்தில், செம்படைக்கும் வெண் படைக்குமாகப் பதினன்கு முறை கைமாறியது!

இந்த நிலைமையில் சமுதாயமானது எப்படி ஒழுங்காக இயங்கிக்கொண்டிருக்க முடியும்? உணவுப் பொருள்கள் உற்பத்தியாவது குறைந்து விட்டது. தொழிற்சாலைகள் சரியாக நடைபெறவில்லை. 1913-ஆம் வருஷத்தில் ருஷ்யா முழுவதிலும் உற்பத்தியான விவசாயப் பொருள்கள் எவ்வளவோ அதில் மூன்றில் ஒரு பங்குதான் 1920-ஆம் வருஷத்தில் உற்பத்தியாயிற்று. வயிற்றுப் பசிக்குச் சாப்பாடு அகப்படாது; அடுப்பெரிக்கக் கரி அகப்படாது. அநேக சந்தர்ப்பங்களில், ஜனங்கள், சிறப்பாக பீட்ரோ கிராட் நகரத்தில் வசித்துக் கொண்டிருந்தவர்கள், பசியையும் குளிரையும் தாங்க முடியாமல் மரணத்தின் வாயிற்படியை எட்டிப் பார்த்திருக்கிறுர்கள். இறந்துதான் அமைதி பெற வேண்டுமென்ற ஒரு நிர்க்கதியான ஸ்திதியில் ஜனங்கள் இருந்தார்கள். இந்தக் கால நிலையை ஓர் அறிஞன் வருணிக்கிறுன் :—

"ஜனங்களுடைய நிலைமை மிக மோசமாயிருந்தது. உலகத்திலுள்ள எல்லா வல்லரசுகளினுடையவும் துவேஷமோ சொல்லி முடியாது. இந்தத் துவேஷம் காரணமாக

இவை, கிளப்பி விட்டு ஆதரவும் தந்து வந்த போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றன; கடுமையாகவும் நடைபெற்றன. இந்த நிலைமையில் சோவியத் அரசாங்கம், சாகாமல் உயிர் வைத்துக்கொண்டிருக்கத்தான் முடிந்தது."

1920-ஆம் வருஷக் கடைசியில்தான் வல்லரசுகளின் தலையீடு நின்றது. அவைகளும் வருஷக்கணக்காகச் சண்டை போட்டுச் சண்டை போட்டு ஓய்ந்துபோயிருந்தன. எனவே, வேறு வழியின்றி, தங்கள் துருப்புகளை ருஷ்யாவிலிருந்து வாபஸ் வாங்கிக்கொண்டு விட்டன. இந்தத் துருப்புகளோடு, சோவியத் அரசாங்கத்தின் கொள்கைகளை அங்கீகரிக்க முடியாத ருஷ்யர்களும், அந்நியர்களும், எல்லோரும் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். ருஷ்யாவில் ஏற்பட்ட கலகங்களைச் சாதகமாகக் கொண்டும், அந்நிய வல்லரசுகளின் தூண்டுதலின் பேரிலும், நூற்றுண்டுக் கணக்காக ருஷ்ய ஏகாதிபத்தியத்திற்குட்பட்டிருந்த லாட்வியா, லிதுானியா, எஸ்தோனியா முதலிய நாடுகள் சுதந்திரக்கொடி தூக்கின. சோவியத் அரசாங்கம் மிகுந்த ராஜதந்திரத்துடன் இவைகளின் சுதந்திரத்தை அங்கீகரித்து, இவைகளோடு சிநேக ஒப்பந்தமும் செய்துகொண்டது.* கடைசியில், 1920-ஆம் வருஷம் நவம்பர் மாதத்தோடு எல்லாச் சச்சரவுகளும் ஒருவாறு தீர்ந்தன; அமைதி ஏற்பட்டது.

ஆனல் சோவியத் அரசாங்கம் இந்த அமைதியிலே ஆறுதல் அடைந்துவிடவில்லை. யுத்தகாலப் பொதுவுடைமைத் திட்டத்தை முன்னைவிட அதிகத் தீவிரமாக அநுஷ்டிக்கத் தொடங்கியது. அதாவது, எல்லாத் தொழில்களும் தேசிய மயமாக்கப்பட்டன. தனிப்பட்டவர்கள் லாபத்திற்காக வியாபாரம் செய்யக்கூடாதென்று தடுக்

* 1940-ஆம் வருஷம் ஜூன் மாதம், இந்த மூன்று நாடுகளும் மறுபடியும் ருஷ்யாவின் ஆதிக்கத்துக்குட்பட்டு விட்டன.

கப் பட்டார்கள். பொதுவுடைமை முறையில் விவசாயம் நடைபெற வேண்டுமென்று உத்திரவு பிறந்தது. ரெயில், தபால், தந்திக் கட்டணங்கள் முதலியன ரத்து செய்யப் பட்டன. நாணயச் செலாவணி என்பது இல்லாதொழிந் தது. இந்த மாதிரி புதுப்புது உத்திரவுகள் பிறந்துகொண் டிருந்தன.

இவைகளினல் உண்டான பலன் என்ன? கிராமங் களிலுள்ள விவசாயிகள், தங்களுக்குத் தேவையான அளவு மட்டும் உணவுப்பொருள்களை உற்பத்தி செய்து கொண்டார்கள். இதனல் நகரவாசிகளுக்குப் போதிய ஆகாரம் கிடைப்பது அரிதாயிற்று. கிராமங்களிலிருந்து உணவுப் பொருள்கள் சென்ருல்தானே, நகரவாசிகள் சாப்பிட முடியும்? கிராம விவசாயிகள், விற்பனைக் கென்று உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய இஷ்டப் படவில்லை. விற்ருல் பணங் கிடைக்காதென்பதை, அவர் கள் தெரிந்து கொண்டு விட்டார்கள். நாணயப் பரிவர்த் தனை ரத்து செய்யப்பட்டு விட்டதல்லவா? பண்டமாற்றல் விவகாரந்தானே? நகரவாசிகளின் பண்டங்கள் கிராம வாசிகளுக்கு என்ன உபயோகம்? எனவே, நகர வாசிகள் தங்களிடத்திலேயுள்ள சாமான்களை மூட்டை கட்டிக் கொண்டு, கூட்டங் கூட்டமாகக் கிராமங்களுக்குச் சென்று அந்தச் சாமான்களை விவசாயிகளிடம் வலியக் கொடுத்து, தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை வாங்கிக்கொண்டு நகரங்களுக்குத் திரும்புகிற நிலைமை ஏற்பட்டது.

நகரங்களிலுள்ள தொழிற்சாலைகளில் தொழிலாளர் எல்லோருக்கும் ஒரே மாதிரியான கூலி விகிதம் என்ற முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு விட்டபடியால், பொருளுற்பத்தி குன்றிவிட்டது. ஜனங்களுக்குத் தேவை யான பொருள்கள் அகப்படாமையினல், அநேக நகரங் கள் காலியாயின. பீட்ரோ கிராட் நகரத்தில் மட்டும்

ஜனத்தொகை மூன்றில் ஒன்றுகக் குறைந்து விட்டது. அங்கிருந்த மர வீடுகள் உடைக்கப்பட்டு அடுப்பெரிக்க உபயோகிக்கப் பட்டன. வியாபாரம் என்பது இல்லாமலே போய்விட்டது.

இத்தனை அவஸ்தைகளுக்கு மத்தியிலே, என்றுமில்லாத ஒரு பஞ்சம் தேச முழுவதிலும் ஏற்பட்டுவிட்டது. இதற்கு முன் ருஷ்யாவில் எத்தனையோ பஞ்சங்கள் உண்டா யிருக்கின்றன; ஜனங்கள் மாண்டிருக்கிருர்கள். ஆனல் இந்த 1921-ஆம் வருஷத்தில் ஏற்பட்ட பஞ்சத்தைப்போல் கடுமையான பஞ்சம் ஒருபொழுதும் ஏற்பட்டதில்லை. இதில் மொத்தம் 430 லட்சம் பேர் இறந்து போனுர்கள். வயிற்றுக்குத் தீவனம் அகப்படாமல், கால் நடைகள் வேறே லட்சக் கணக்கில் மாண்டு வந்தன. இனியும் லட்சியம் என்று சொல்லிக்கொண்டிருந்தால், ஜனங்கள் பொறுத்துக்கொண் டிருப்பார்களா? அரசாங்கத்திற்கு விரோதமாகக் குட்டிக் கலகங்கள் ஆங்காங்குக் கிளம்ப ஆரம்பித்தன. வயிற்றுக்குச் சாப்பாடு வேண்டுமென்ற கூக்குரல் வலுத்தது. போல்ஷ்வெக்கர்களின் பிடிவாதத்திஞல் தான் இவ்வளவு தூரம் தேசம் சீர்கெட்டுப் போய்விட்டது என்ற எண்ணங்கூட ஜனங்களுக்கு உண்டாகத் தொடங்கியது.

பார்த்தான் லெனின்; யுத்தகாலப் பொதுவுடைமைத் திட்டத்தைத் தற்காலிகமாக வாபஸ் வாங்கிக் கொண்டு விட்டு, ஒரு "புதிய பொருளாதார திட்ட"த்தை* அநுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தான். பழைய மாதிரி, நாணயச் செலவாணி முறை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. விவசாயிகள், தங்கள் விளை பொருள்களைப் பணத்திற்குக் கிரயம் செய்ய அநுமதிக்கப்பட்டார்கள். நிலவரி புதுப்பிக்கப்பட்டது. ரெயில், தபால், தந்திக்

* New Economic Policy.

கட்டணங்கள் முன்மாதிரி விதிக்கப்பட்டன. தனிப்பட்டவர்கள் சொந்த முறையில் தொழில்கள் ஆரம்பிப்பதற்கு ஊக்கமளிக்கப் பட்டார்கள். தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் 'மார்க்கெட்டு'களில் விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டன.

இந்தப் புதிய பொருளாதாரத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்ததனால், லெனின், தனது பொதுவுடைமைக் கொள்கையின் தோல்வியை ஒப்புக் கொண்டு விட்டானென்று, முதலாளித்துவத்தின் மடியிலே வளர்ந்தவர்கள் கொக்கரிக்கத் தொடங்கினார்கள். ஆனால், இது சரியல்ல; உண்மையுமல்ல. லெனின் ஒரு சிறந்த ராஜதந்திரி. இரண்டு அடிமுன் செல்வதற்கு ஓர் அடி பின் வாங்க வேண்டியது அவசியம் என்று உணர்ந்தால், அப்படிச் செய்ய அவன் பின் வாங்கியதே கிடையாது. அது போன்றதொரு சந்தர்ப்பம்தான் இது. பொதுவுடைமை என்னும் கட்டிடத்தின் மேல்மாடியில், தான் ஸ்திரமாக இருந்துகொண்டு, கீழேயுள்ள சில சாளரங்களைச் சில்லரை வியாபாரிகளுக்குத் திறந்துவிட்டான். இதுதான் புதிய பொருளாதாரத் திட்டத்தின் ரகசியம். இதைப்பற்றி, பின்னரும் விஸ்தரித்துக் கூறுவோம்.

சோவியத் அரசாங்கம், யுத்தகாலப் பொதுவுடைமைத் திட்டத்தை எப்பொழுது வாபஸ் வாங்கிக் கொண்டு விட்டதோ அப்பொழுதே, அந்நியநாட்டு முதலாளிகள் அதனுடன் சிநேகம் செய்யத் தொடங்கினார்கள். எந்த வல்லரசுகள் இதுகாறும் சோவியத் அரசாங்கத்தை அழித்து விட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு திரிந்தனவோ அந்த வல்லரசுகளே, இப்பொழுது சோவியத் அரசாங்கம் அழியவில்லை யென்பதை அறிந்துகொண்டன. அதற்கு நல்ல புத்தி ஏற்பட்டு மறுபடியும் முதலாளி வழிக்கே வந்துவிட்டதென்று சுய திருப்தி அடைந்தன; அதனோடு கைகுலுக்க விரும்பிய தங்கள் நாட்டு முதலாளி

களுக்கு ஆதரவு காட்டின. முதலாளிகளின் நோக்க மென்ன? லாபம் சம்பாதிக்க வேண்டுமென்பது. எப் படிச் சம்பாதித்தாலென்ன? எங்கே சம்பாதித்தா லென்ன? அதற்காக யாரோடு சிநேகம் செய்து கொண் டாலென்ன? இங்கிலாந்துதான்—"கொலைகாரர்களோடு கைகுலுக்க முடியாது" என்று சொன்ன லாயிட் ஜார் ஜைப் பிரதம மந்திரியாகக் கொண்டிருந்த இங்கிலாந்து தான்—இதற்கு முதல் வழிகாட்டியது. 1921-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் ஆங்கிலோ-சோவியத் வியாபார ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. இதற்குப் பிறகு, எல்லாநாடுகளும் ருஷ்யாவோடு வியாபார ஒப்பந்தங்கள் செய்துகொண் டன. அந்நியநாட்டு முதலாளிகள் கூட்டங் கூட்டமாக ருஷ்யாவுக்குச் சென்றார்கள். வெறுங்கையுடனா? இல்லை. பணப் பையுடன். ஏன்? தொழில்கள் ஆரம்பிக்க; அரசாங்கத்திற்குக் கடன் கொடுக்க. இப்படித் தொழில் கள் ஆரம்பிப்பதும் அரசாங்கத்திற்குக் கடன் கொடுப்ப தும் எதற்காக? லாபம் சம்பாதிக்க வேண்டு மென்பதற் காகவா? இல்லவே இல்லை. ருஷ்யாவை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பதற்காக! ருஷ்யர்கள் நன்றாக வாழவேண்டு மென்பதற்காக! எந்த நாட்டுக்குமே முதலாளிகள் இந்த மாதிரி நோக்கத்துடன்தான் செல் கிறார்கள்!

புதிய பொருளாதாரத் திட்டம் 1921-ஆம் வருஷத்தி லிருந்து 1928-ஆம் வருஷம்வரை நடைமுறையில் இருந்தது. இந்த ஏழுவருஷ காலத்தில், சோவியத் தலைவர்கள், தேசத்தை ஓர் உருப்படியாக்கினார்கள்; உடைந்துபோய்க் கிலமாகிக்கிடந்த பொருளாதார வாழ்க்கையைச் சீர்ப் படுத்தினார்கள்; புதிய ஒரு ஜாதியையே சிருஷ்டித்தார்கள். ருஷ்யமாதா, சமதர்மம் என்னும் குழந்தையைப் பெறுவ தற்கு (1917-ஆம் வருஷம் பிப்ரவரி மாதத்திலிருந்து நவம்பர் மாதம் வரை) ஒன்பது மாதம் வேதனைப்பட்டாள்.

பத்தாவது மாதம் பிரசவித்தாள். லெனின், பிரதம தாதியாக இருந்தான். முதல் மூன்று வருஷம் குழந்தை மிகவும் சிரமப்பட்டது. இருக்குமோ போய்விடுமோ என்ற சந்தேகங்கூடச் சிலருக்கு. ஆனால், லெனினும் அவனுடைய சகாக்களும் பல கஷ்டங்கள்பட்டு, குழந்தையைக் காப்பாற்றிவிட்டார்கள். இனி அதனைப் போஷித்து வளர்க்கவேண்டும். இந்தப் வளர்ப்புத் தொண்டை, சோவியத் தலைவர்கள் மிக அருமையாகச் செய்தார்கள். இதற்காக இவர்கள் பட்டபாடும், உழைத்த உழைப்பும் சொல்லித்தரமன்று. ஒரு ஜாதி முன்னுக்கு வரவேண்டுமானல், அதற்காக அந்த ஜாதியின் தலைவர்கள் எவ்வளவு தன்னல மறுப்புடையவர்களா யிருக்கவேண்டி யிருக்கிறது! எளிய வாழ்க்கை, அதாவது இயற்கை வாழ்க்கை என்பதை எப்படி எழுத்துப் பிசகாமல் அநுஷ்டிக்க வேண்டி யிருக்கிறது!

ஒரு தேசம், பொருளாதார விஷயத்தில் மற்ருெரு தேசத்திற்கு அடிமைப்பட்டிராமல் தன்னைக் காப்பாற்றிக் கொண்டு விடுமானல், அது, தன்னுடைய சுதந்திரத்தையும் காப்பாற்றிக்கொண்டு விடமுடியும் என்பதை தீர்க்கதரிசியான லெனின் நன்கு தெரிந்துகொண்டிருந்தான். இதற்கேற்ருற்போலவே திட்டங்களைத் தயாரித்தான். முதலில் மின்சார உற்பத்திக்கு ஏற்பாடு செய்தான். அநேக நிபுணர்களைக் கொண்டு ஒரு திட்டம் வகுத்தான். நாடெங்கணும் மின்சார உற்பத்தி ஸ்தாபனங்கள் ஏற்பட்டன. இப்படி ஏற்பட்டதன் பயனக, கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டாயிற்று. தொழில்கள் அபிவிருத்தியாயின. மின்சார உதவியினல், விவசாயிகளும் தொழிலாளர்களும் குறைவான உழைப்பில் அதிகமான பொருள்களை உற்பத்தி செய்தார்கள். இதனல் கிராமத்தில் வசிக்கும் விவசாயிகளுக்குத் தேவையான செய் பொருள்களும்

நகரத்தில் வசிக்கும் தொழிலாளர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களும் மலிவாகவும் நிறையவும் முறையே கிடைத்தன. ஜனங்களுக்கு ஒரு புதிய மனப்பான்மை ஏற்பட்டது. பழைய குருட்டு வழிகளை விடுத்து, புதிய வழிகளைக் கடைப்பிடித்தார்கள்.

தேசத்தின் நிருவாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நடத்தினல் மட்டும் போதாது, தேசத்தின் பொருளாதார வாழ்வையும் தங்கள் சுவாதீனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும், அப்படி வைத்துக் கொண்டால்தான் சமதர்ம லட்சியத்தைக் கைவிடாமல் காப்பாற்ற முடியும் என்பதை சோவியத் தலைவர்கள் ஆரம்பத்திலிருந்தே நன்கு தெரிந்து கொண்டிருந்தார்கள். யுத்தகாலப் பொதுவுடைமைத் திட்டத்தை லெனினும் அவனுடைய சகாக்களும் வாபஸ் வாங்கிக்கொண்டு விட்டார்களென்று சொன்னல், தேசத்தின் உற்பத்திச் சாதனங்கள், பொருளுற்பத்தி, வியாபாரம் முதலிய அனைத்தையும் தனிப்பட்டவர்களுடைய சுவாதீனத்திற்கு விட்டு, அவர்களிஷ்டப்படி சுரண்டுவதற்கு அநுமதி கொடுத்து விட்டார்கள் என்பது அர்த்தமல்ல. அப்படி அவர்கள் செய்யவே இல்லை. சில்லரைச் சாமான்களை உற்பத்தி செய்வது, சில்லரை வியாபாரம், இப்படிப்பட்ட சிறிய அமிசங்களைத்தான் தனிப்பட்டவர்களுடைய உரிமைக்கு விட்டனர். இப்படிச்செய்து, தேசத்தின் உற்பத்திச் சக்திக்குச் சிறிது உற்சாகம் கொடுக்கவேண்டுமென்பதே அவர்களின் நோக்கம். ஏனென்றல், லாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற ஓர் ஆசை, சதா தூண்டிக் கொண்டிருக்குமல்லவா? ஆனல், இந்த ஆசையை வளர விடாமல் பார்த்துக்கொண்டு வந்தார்கள். எப்படி? தேசத்தின் பெரிய தொழில்கள், மின்சார ஸ்தாபனங்கள், அந்நியநாட்டு வியாபாரம், உள்நாட்டு வியாபாரம், போக்கு வரவு சாதனங்கள் முதலியவற்றில் ஒரு சிறிய விகிதாசாரம் தவிர பெரும்பாகம் ஜனங்களின் பொதுச்

சொத்தாகவே கருதப்பட்டது. அதாவது இவையனைத்தும் அரசாங்கத்தின் சுவாதீனத்தில் இருந்தன. இதனால், அரசாங்கமே, பொருளுற்பத்தி செய்கிற முதலாளியாகவும், அந்தப் பொருள்களை விநியோகிக்கிற வியாபாரியாகவும் இருந்தது. ஜனங்களுக்குத் தேவையான பொருள்களை நல்ல முறையில் தயார்செய்து, குறைந்த விலைக்கு விற்க இவர்களால் முடிந்தது. ஏனென்றால், இவர்களுக்குத்தான் லாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லையே. லாபம் சம்பாதிப்பது என்று சொன்னால், அஃது ஒரு தனி மனிதனுடைய தேவையைப் பூர்த்திசெய்யும் சாதனமல்ல; அவனுடைய சுயநலத்தை வளர்க்கும் ஒரு தூண்டுகருவி. சோவியத் அரசாங்கம் ஜனங்களுடைய அரசாங்கம். அரசாங்கம் வேறே, ஜனங்கள் வேறே என்ற வேற்றுமை அங்கு இல்லை. ஜனங்களுடைய நன்மையைத் தவிர்த்து அரசாங்கத்தின் நன்மை என்று தனியாக ஒன்று இல்லை. இதனால், சுயநலத்திற்கு அங்கு இடமில்லை. லாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற அவசியமும் அதற்கு இல்லை. ஜனங்களின் தேவையைப் பூர்த்தி செய்வதிலேயே அது திருப்தியடைகிறது; அடைந்தது. இப்படி ஜனங்களுக்குத் தேவையான சாமான்களை நல்லமுறையில் தயார்செய்து அடக்கவிலைக்கு விற்பதற்கென்று அரசாங்கமானது, பல கூட்டுறவுப் பண்டசாலைகளை ஆங்காங்கு ஸ்தாபித்தது. இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மொத்தமாகவும் சில்லரையாகவும் வியாபாரம் செய்தன; நல்ல பொருள்களை மலிவாக விற்றன. ஜனங்கள் இவைகளை ஆதரித்தார்கள். இவைகளுக்கு எதிராகத் தனிப்பட்ட வியாபாரிகள் என்னசெய்ய முடியும்? எப்படி லாபம் சம்பாதித்துப் பணக்காரர்களாக முடியும்? புதிய பொருளாதாரத் திட்டத்தின் ஆரம்பத்தில் சிறிதுகாலம் வரை, அதாவது ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்கிற சக்தி தனக்கு ஏற்பட்டு விட்டது என்று அரசாங்கம் உணர்

கிறயரை, இவர்கள் ஆதரிக்கப்பட்டார்கள். பிறகு, இவர்களுக்கு அநேக நிர்ப்பந்தங்கள் விதிக்கப்பட்டன. மெதுமெதுவாக இவர்கள் ஒடுக்கப்பட்டு விட்டார்கள். இவர்கள் தான் பிற்காலத்தில் சோவியத் அரசாங்கத்திற்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்தவர்கள்.

அந்நியநாட்டு வியாபாரம் முழுவதையும் சோவியத் அரசாங்கம் தன்னுடைய சுவாதீனத்திலேயே வைத்துக்கொண்டிருந்தபடியால், அது, தேசத்தின் தொழில் அபிவிருத்திக்கும் விவசாய அபிவிருத்திக்கும் என்னென்ன தேவையோ அவைகளை மட்டுந்தான் அந்நிய நாடுகளிலிருந்து வரவழைத்துக்கொண்டது. இதனோடு, சொந்த நாட்டில் அகப்படாத—ஆனால், ஜனங்களுக்கு அவசியம் தேவையாயிருக்கிற—சில பொருள்களையும் இறக்குமதி செய்ய அநுமதித்தது. ஆடம்பரப் பொருள்கள் யாவும் இறக்குமதி செய்யப்படுவதினின்று கண்டிப்பாக விலக்கப்பட்டன. தேச மக்கள் ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபடக்கூடாதென்றும், இயற்கையான, நிதானமுள்ள வாழ்க்கையையே நடத்த வேண்டுமென்றும், ஆரம்பத்திலிருந்தே சோவியத் அரசாங்கம் வேலைசெய்துகொண்டு வந்தது. "ஆடம்பரம், சமதர்மத்தை அழித்துவிடும்; வெளிப்பகட்டு, வீண் செலவு, அகம்பாவம் இவைகளை உண்டாக்கும். இவைகளில்லாமல் செய்யவேண்டுமென்பது எங்கள் நோக்கம்" என்று சோவியத் அதிகாரிகள் கூறிவந்தார்கள். இப்படி அந்நிய நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட பொருள்களை அரசாங்கத்தார், சொற்ப லாபத்திற்குக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் ஜனங்களுக்கு விற்றார்கள். இதே பிரகாரம், தேசத்தில் உற்பத்தியாகிற பொருள்களில், ஜனங்களின் தேவை போக மிகுதியானவற்றை அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தார்கள். இதன்மூலம் அரசாங்கத்திற்கு வருமானம் கிடைத்தது. இந்த வருமானங்களைக் கொண்டு, தேசத்தின் தொழில்

அபிவிருத்திக்கும் விவசாய அபிவிருத்திக்கும் தேவையான யந்திரங்கள், கருவிகள் முதலியவற்றை வாங்கினர்கள். பிரதி வருஷமும் தொழிற்சாலைகள் அதிகப்பட்டுக்கொண்டே வந்தன. விவசாய உற்பத்தியும் விருத்தியாகிக்கொண்டு வந்தது.

இதே பிரகாரம் விவசாயிகளின் க்ஷேமத்தையும் அரசாங்கத்தார் கவனிக்கத் தொடங்கினர்கள். ருஷ்யாவில் விவசாயிகளை மூன்று தரத்தினராகப் பிரித்திருந்தார்கள். முதலாவது, பெரிய பண்ணைக்காரர்கள். இவர்களைக் "குலாக்குகள்" * என்று அழைப்பார்கள். கிராமத்துப் பெரியதனக்காரர்கள் என்று இவர்களைச் சொல்லலாம். கொஞ்சம் அதிகமான பூஸ்திதியுடைவர்க ளெல்லோரும் இந்தத் தரத்திலே சேர்க்கப்பட்டனர். இரண்டாவது, மத்தியதரத்து விவசாயிகள். இவர்கள் சொற்ப நிலபுலங்களை வைத்துக் கொண்டு சுயமாக ஜீவனம் செய்துகொண் டிருக்கிறவர்கள். மூன்ருவது, நிலத்திலே வேலை செய்கிறவர்கள். இவர்களுக்குச் சொந்தமாக நிலம் கிடையாது. மற்றவர்களுடைய நிலத்தைக் கூலிக்கு உழுது பயிரிடுகிறவர்கள். விவசாயிகளிலே இவர்கள்தான் பெரும்பான்மையோர். இவர்களைக் குலாக்குகள் கசக்கிப் பிழிந்து வந்தனர். இவர்களுக்குத் தேவையானபோது கடன்கொடுத்து, இவர்களைத் தங்கள் அடிமைகள் போல் நடத்தி வந்தனர். ஒருவர் உழைப்பிலே மற்ருெருவர் வாழக்கூடா தென்ற கொள்கையுடைய சோவியத் அரசாங்கத்தார், இந்தமாதிரி அக்கிரமங்களையெல்லாம் சட்டமூலமாக அகற்றிவிட்டனர்.

ருஷ்யா எப்பொழுதுமே மதபக்தி நிறைந்த நாடு. "தெய்வத் திருநாடு" என்று தங்கள் நாட்டைப்பற்றிச் சொல்லிக் கொள்வதிலே ருஷ்யர்களுக்கு ஒரு பெருமை.

---

* Kulaks.

ஜார் மன்னனை "தெய்வத் திருத்தந்தை" என்றுதான் அழைப்பார்கள். இப்படிப்பட்ட ஒரு நாட்டிலே, புரோகிதர்களுடைய ஆதிக்கத்துக்குக் கேட்கவேண்டுமா? இவர்களுக்கு ஏராளமான சொத்து, சுதந்திரங்கள் இருந்தன. இவைகளை யெல்லாம் சோவியத் அரசாங்கத்தார் பறிமுதல் செய்ததோடு, புரோகிதர்களுடைய ஆதிக்கத்தையும் குறைத்தனர். எதிர்ப்புக் காட்டியவர்கள் கடுமையாக அடக்கப்பட்டார்கள். மதம் காரணமாக ஒருவனுக்கு விசேஷ சலுகைகள் காட்டப்படக் கூடாதென்பது சோவியத் அரசாங்கத்தின் நோக்கம். கடவுள் நம்பிக்கை என்று சொல்லிக் கொண்டு, ஜனங்கள் தன்னம்பிக்கையை இழந்துவிடக்கூடாதென்பது அவர்கள் கவலை. ஜனங்கள், மதச் சடங்குகள் என்று சொல்லி ஏராளமான பணத்தைச் செலவழித்து வந்தார்கள். இப்படிச் செலவழித்து அவர்கள் மோட்ச மார்க்கத்தில் செல்லவில்லை: வறுமைக் குழியில்தான் இறங்கினார்கள். இதனை அரசாங்கத்தார் தடுத்து விட்டனர். அரசியல் வேறாகவும், மதம் வேறாகவும் பிரிக்கப்பட்டது. பள்ளிக்கூடங்களில் மத போதனை நிறுத்தப்பட்டது. பதினெட்டு வயதுக்குட்பட்ட சிறுவர்களாக நான்கு பேரைக் கூட்டி வைத்துக் கொண்டு யாராவது மதபோதனை செய்தால், அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தியாவைப் போலவே ருஷ்யாவிலும் பல மாகாணங்கள் உண்டு. ஒவ்வொரு மாகாணமும் ஒவ்வொரு தனி நாடு மாதிரி. 1917-ஆம் வருஷத்தில் போல்ஷ்வெக் கட்சியினர் அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக் கொண்ட போது, பொதுவாக ருஷ்யா குடியரசு முறையில் ஆளப்படும் என்று பிரகடனம் செய்யப்பட்டது. ஆனால் இது சரிவர விளக்கப்படவில்லை. 1923-ஆம் வருஷம், ஒவ்வொரு மாகாணத்திற்கும் பூரணப் பொறுப்பாட்சி உரிமை அளிக்கப்பட்டு, எல்லா மாகாணங்களும் சேர்ந்த ஒரு சமஷ்டிக்

குடியரசு ஏற்படுத்தப்பட்டது. இது முதற் கொண்டு தான் ருஷ்யாவுக்கு "சோவியத் சமதர்மக் குடியரசு நாடுகளின் ஐக்கிய ராஜ்யம்" என்ற பெயர் வந்தது. அதாவது, பல குடியரசு நாடுகளின் ஐக்கியந்தான் ருஷ்யா. இது தவிர, ருஷ்யாவிலுள்ள பல ஜாதியின ருடைய பாஷை, கலாசாரம், நாகரிகம் முதலியன பாது காக்கப்படுவதற்காகத் தனித் தனி ஸ்தாபனங்கள் ஏற் படுத்தப்பட்டன. இவைகளின் மூலமாக அவரவர்க ளுடைய பாஷை முதலியன வளர்ச்சிபெற்றன. எல்லோ ருக்கும் பொதுவான தேசம் என்ற உணர்ச்சியை நன்ருக வலியுறுத்திவிட்டு, மற்ற விஷயங்களில் அந்தந்த ஜாதியின ருக்கும் பரிபூரண உரிமை அளித்துவிட்டனர் சோவியத் அரசாங்கத்தினர்.

பொதுவாக, இந்தப் புதிய பொருளாதாரத் திட்ட காலத்தில், ருஷ்யா, பொருளுற்பத்தி, விவசாய அபிவிருத்தி முதலிய விஷயங்களில் ஐரோப்பிய மகா யுத்தத்திற்கு முன்னிருந்த நிலைமையை அடைந்தது. ஜனங்களுடைய வாழ்க்கையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. கொடுங்கோ லாட்சியினலும், பொருளாதார அடிமைத்தனத்தினலும் சகஜமாக ஏற்படுகிற ஒரு சோர்வு அவர்களை விட்டகன் றது. அவர்கள் புதிய நம்பிக்கை பெற்ருர்கள்; புதிய வாழ்க்கை தொடங்குவதற்குத் தயாராஞர்கள். இவ்வள வுக்கும் காரணம் என்ன? சோவியத் தலைவர்களின் தன்னல மற்ற உழைப்பு; லட்சியத்திலே அவர்கள் கொண்ட உறுதியான நம்பிக்கை.

ஆனல் துரதிருஷ்ட வசமாக, லெனின், இந்தப் புதிய பொருளாதாரத் திட்டத்தின் வளர்ச்சியையும் விளைவை யும் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. எப்பொழுதுமே மகான்கள், தங்களுடைய காரியத்தின் பலனைப் பாரா மலும் அநுபவியாமலுமே போய்விடுகிருர்கள். லெனி னும் அப்படித்தான். புதிய பொருளாதாரத் திட்டம்

ஒரு வகையாக வேலை செய்யத் தொடங்கின காலத்தி லிருந்தே, அவனுக்கு உடம்பு சரியில்லாமலிருந்தது. வர வர க்ஷீணதசை அடைந்துகொண்டு வந்தான். கடைசி யில் 1924-ஆம் வருஷம் ஜனவரி மாதம் இருபத்தோராந் தேதி கடைசி தடவையாகக் கண் மூடிக் கொண்டு விட் டான். அன்று ருஷ்ய மகாஜனங்கள் அவனைத் தங்கள் கண்ணீரினல் கழுவினர்கள். ஏனென்ருல், அவர்களுடைய கண்ணைத் திறந்துவிட்ட மகான் அல்லவா அவன்?

## 4. சமதர்மம் என்றால் என்ன?

சோவியத் ருஷ்யாவின் தலைமை ஸ்தானம் மாஸ்கோ. மாஸ்கோவின் இருதய ஸ்தானம் சிவப்புச் சதுக்கம். இந்தச் சதுக்கத்தின் மத்தியிலுள்ள உயர்ந்த கட்டடத்தினுள் உயிரில்லாத ஓர் உருவம் வீற்றிருக்கிறது. அது யார்? ருஷ்ய மகா ஜனங்களின் இருதய மூர்த்தி; உலகத்து ஏழை மக்களின் நம்பிக்கைப் புருஷன்; லெனின். அவன் இறந்து பதினெட்டு வருஷங்களாகின்றன. ஆனால், இறந்து போனபோது எப்படி இருந்தானோ அப்படியே இப்பொழுதும் காட்சியளித்துக்கொண் டிருக்கிறான்; எப்பொழுதும் காட்சியளித்துக் கொண்டிருப்பான்.

கவிக்கும் சிரங்கள், குவிக்கும் கரங்கள், நீர் மல்கும் கண்கள், அசைக்கும் உதடுகள், இப்படித் தினந்தோறும் ஆயிரக்கணக்கான மனிதர்கள், அந்த மகானின் உருவத்தைத் தரிசித்துக்கொண்டு போகிறார்கள். ஏன்? வாழ்க்கையிலே புதிய ஒளி பெறுவதற்காக. கடவுள் பக்தி என்று சொல்லிக்கொண்டு மூட நம்பிக்கையிலே ஆழ்ந்து கிடந்த ஜனங்களை, எவன் தன்னம்பிக்கை என்னும் கரைக்கு ஏற்றி விட்டானோ அவனை இப்பொழுது அதே ஜனங்கள் கடவுளாகக் கும்பிடுகிறார்கள்; தேவ புருஷன் என்று கொண்டாடுகிறார்கள். ஆனால், எட்டாத கடவுளாக அல்ல; வழி காட்டாத அவதார புருஷனாக அல்ல. லெனின் உயிரோடிருந்தபோது, பிறருக்காகவே வாழ்ந்தான். இறந்த பிறகும், அவனுடைய உடல் பிறருக்காகவே இருக்கிறது.

இறந்த பிறகு, தேகத்தை மட்டும் பரிமள தைலத்தில் இட்டுப் பாதுகாத்து வைப்பது என்கிற கௌரவம், இது வரையில் எந்த மகானுக்கும் ஏற்பட்டதில்லை. 'மகா'

பட்டம் பெற்ற கிரேக்க அலெக்ஸாந்தர் என்ன, ருஷ்ய பீட்டர் என்ன, ப்ருஷ்ய ப்ரெடெரிக் என்ன, பிரெஞ்சு நெப்போலியன் என்ன—யாருமே இப்படிப் போற்றப் படவில்லை; ஆனால், பின்பற்றப்படவுமில்லை. கோல் பிடித்த அரசர்கள், வாளேந்திய வீரர்கள், அன்பையே அணிகல னாகப் பூண்ட அடியார்கள், அறிவுச் சிகரத்தின் மீது ஏறி நின்றவர்கள், மானிட ஜாதியின் இருதய ஆழத்தைக் குடைந்து பார்த்தவர்கள் முதலிய பலரையும் நாம் எங்கே பார்க்கிறோம்? அவர்கள் எழுதிவைத்துப் போன நூல் களிலே, அல்லது காவியக்காரர்களுடைய கற்பனையிலே, அல்லது ஓவியக்காரர்களுடைய சித்திரங்களிலேதான். உயிருக்குப் பிறகு உடலைமட்டும் வைத்துக்கொண்டு யாரும் இதுவரையில் கௌரவம் பெறவில்லை, புராதன எகிப்திய மன்னர்களைத் தவிர்த்து. அவர்களில் யாருக் கும் ஏற்படாத ஒரு கௌரவம் லெனினுக்கு மட்டும் ஏன் ஏற்பட்டது? காரணம், அவர்கள் சீர்திருத்தினார்கள்; லெனின் சிருஷ்டித்தான். சிருஷ்டிக்கிறவர்களுக்கு எப் பொழுதுமே பெருமை உண்டுதானே? ஒரு தலைமுறை காலத்திற்குள், ருஷ்யாவில் ஒரு புதிய சமுதாயம் அமைந்து விட்டது; ஒரு புதிய நாகரிகம் தோன்றிவிட்டது. லெனின் வாழ்க!

லெனினுடைய வாழ்க்கை வற்றாத நதி; குறையாத சுரங்கம்; துருப்பிடியாத இரும்பு; அணையாத விளக்கு; அழியாத முத்திரை. அவன், மானிட சமுதாயமென்னும் கொந்தளிப்பு நிறைந்த சமுத்திரத்தில், சமதர்மக் கப்பலைத் துணிச்சலாக மிதக்க விட்டான். அஃது, அவனுக்குப் பிறகு, புதிய உலகத்தை நோக்கி எத்தனையோ இடையூறு களையும், புயல் காற்றுகளையும் சமாளித்துக்கொண்டு வேகமாகச் சென்றுகொண்டிருக்கிறது. ஸ்டாலின், அதனை உறுதியாகவும் ஜாக்கிரதையுடனும் இப்பொழுது செலுத்திக்கொண் டிருக்கிறான். லெனின், மாஸ்கோ

சிவப்புச் சதுக்கத்தில் அதனைப் பார்த்த வண்ணம் ஓய் வெடுத்துக்கொண் டிருக்கிறான்.

சமதர்ம சித்தாந்தத்தின் சிருஷ்டி கர்த்தன் கார்ல் மார்க்ஸ். அவனுடைய வாழ்க்கை ஒரு துன்பக் கடல். ஆனால், அதிலிருந்துதான் மானிட ஜாதியின் இன்ப வாழ்க்கைக்கு ஏற்ற ஒரு சாதனம் பிறந்தது. அவனுடைய காலத்தில் அவனுடைய சித்தாந்தம் பரிகசிக்கப் பட்டது, ஆனால், அவன் பிறந்த நூறாவது வருஷத்தில், அஃது, ஒரு திட்டமாக அதிகார ஸ்தானத்தில் ஏறி அமர்ந்து ஆட்சிபுரியத் தொடங்கியது; பகற் கனவாகக் கருதப்பட்டது, நனவு முறையாக அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப் பட்டது.

கார்ல் மார்க்ஸின் தத்துவத்தை எவ்வளவுக்கெவ்வளவு ஆராய்ச்சி செய்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு அதனுடைய ஆழத்திலே நாம் அமிழ்ந்து போகிறோம்; அதனுடைய தர்க்க நியாயத்தில் ஈடுபட்டு விடுகிறோம். ஒரு சிலருடைய இருதயம், அந்தத் தத்துவத்திற்கு இடங் கொடாமலிருக்கலாம். ஆனால், யாருடைய அறிவும் அதற்கு வணக்கஞ் செலுத்தாமலிருக்க முடியாது. ஏனென்றால், மனித அறிவுக்கு எட்டாத ஒரு விஷயத்தைப் பற்றி அல்லது ஒரு சக்தியைப்பற்றி அவன் சொல்லவில்லை; கற்பனை உலகத்திற்கு நன்மை அழைத்துக்கொண்டு போகவில்லை. இந்த உலகத்திலே மனிதனுடைய வாழ்க்கை, மனிதர் பலரைக் கொண்ட ஒரு சமுதாயத்தின் வாழ்க்கை, எப்படி இருக்க வேண்டும், எந்த மாதிரி இருந்தால் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த எல்லா ஜனங்களுக்கும் க்ஷேமம் உண்டாகும் என்பவைகளைப் பற்றியே அவன் சொல்கிறான்; அமானுஷ்ய சக்திகள் என்று சொல்லிக்கொண்டு அவைகளைக் கண்டு மனிதன் அஞ்சிக் கொண்டிராமல் அவைகளைத் தன் ஆதீனத்திற்குட் படுத்திக்கொள்ள முயலவேண்டியது மனிதன் கடமை என்று வற்புறுத்துகிறான். மனிதராய்ப் பிறந்த எல்லோ

ருக்குமே, அவன் தத்துவம் பொதுவானது; பொருந்தியது. அவன் பேசுவதெல்லாம் உலகத்தை நோக்கி; சர்வ ஜனங்களின் சௌக்கியத்தைக் கருதி. பால், வகுப்பு, மதம், நிறம் முதலிய எந்தவிதமான வேற்றுமைகளும் அவன் பார்வையில் படவே யில்லை. அவனுடைய தத்துவத்தை, சமதர்மம் என்ற பெயரிட்டு அழைப்பதுதான் பொருந்தும். அபேதவாதம் என்றும் பொதுவுடைமை என்றும் அழைப்பது, அவனுடைய கோட்பாட்டின் அல்லது நோக்கத்தின் ஒவ்வோர் அமிசத்தை மட்டும் எடுத்துக் காட்டுவது போல இருக்கிறது. அபேதவாதம் என்று சொன்னால், அது நடைமுறையில் கொணர முடியாத ஒரு தத்துவ அளவோடு நிற்பதுபோல் அர்த்தம் தொனிக்கிறது. மார்க்ஸின் தத்துவம், எதிர்மறைத் தத்துவமல்ல; உடன்பாட்டுத் தத்துவம். பொதுவுடைமை என்று சொல்கிறபோது, மனிதனுடைய அல்லது சமுதாயத்தினுடைய பொருளாதார வாழ்க்கையை மட்டும் குறிப்பது போல இருக்கிறது. ஆனால் மார்க்ஸின் சித்தாந்தம், மானிட வாழ்க்கையின் எல்லா அமிசங்களையும் ஐக்கியப் படுத்திக் காட்டுகிறது; எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஒரு குலம் என்ற உண்மையை வலியுறுத்துகிறது. அது, மானிட வாழ்க்கை முழுவதையும் கவிந்து கொண்டிருப்பதால், அதனைச் சமதர்மம் என்று அழைத்தலே பொருந்தும். "மானிட வாழ்க்கையின் அடிப்படையான நோக்கங்கள், நலன்கள் இவையனைத்திலும், மானிட வாழ்க்கையின் ஒவ்வொரு விகாசத்திலும், பரிபூர்ணமான மான மாறுதலைநாடி நிற்பது போல்ஷ்வெஸம்" என்பது ஓர் அறிஞனுடைய வாக்கு. *

மார்க்ஸினுடைய சித்தாந்தத்தைப்பற்றி விரிவான வியாக்கியானம் செய்துகொண்டு போவது இங்கு நோக்க

* The Mind and Face of Bolshevism by Rene Fulop-Miller.

மல்ல. அவனுடைய வாழ்க்கை எப்படி ஒரு பெருந் துன்பக் கடலாயிருந்ததோ அப்படியே அவனுடைய சித்தாந்தமும் ஒரு விரிவான சமுத்திரம். மானிட சமுதாயத்தின் சரித்திரத்தை அவன் விஞ்ஞானக் கண் கொண்டு பார்க்கிருன். மனிதன் போராடிப் போராடித்தான், காட்டுமிராண்டி நிலையிலிருந்து இன்றைய சிக்கலான நாகரிக நிலைக்கு வந்திருக்கிருனே தவிர, புறச் சக்திகள், அதாவது மனிதனுடைய அறிவுக்கு எட்டாத சக்திகள் ஒன்று சேர்ந்துகொண்டு அவனை மேல்நிலைக்குக் கொண்டுவரவில்லை யென்பதை அவன் தர்க்க ரீதியாக நிரூபித்துக் காட்டுகிருன்.

மனிதன்தான் சரித்திரத்தைச் சிருஷ்டிக்கிருனே தவிர, சரித்திரம் மனிதனைச் சிருஷ்டிக்கவில்லை. அவனுடைய இந்தச் சரித்திரம், போராட்ட மயமாகவே இருந்து வந்திருக்கிறது. இயற்கையோடு போராட்டம்; சகோதர மனிதனேடு போராட்டம்; இல்லாதவர்களுக்கும் உள்ளவர்களுக்கும் போராட்டம்; பழைய நம்பிக்கைகளுக்கும் புதிய எண்ணங்களுக்கும் போராட்டம்; எல்லாம் போராட்டம்; எப்பொழுதும் போராட்டம். இந்தப் போராட்டங்கள் அரசியல் புரட்சி யென்றும், பொருளாதாரக் குழப்பம் என்றும், மதச் சண்டை யென்றும், இப்படிப் பலவிதமாகப் பெயரெடுத்துக் கொண்டு சரித்திரத்தில் இடம் பெற்று விடுகின்றன. இந்தப் போராட்டங்களுக்கு மத்தியிலேதான் மனிதன் வளர்ச்சியடைய வேண்டியிருக்கிறது; சமுதாயம் உருப்படியாக வேண்டியிருக்கிறது.

என் இப்படி? போராட்டங்கள் நடைபெற வேண்டியதன் அவசியம் என்ன? ஆதிகாலத்தில் மனிதன், தனக்குத் தேவையான பொருள்களைத் தானே உற்பத்தி செய்து கொண்டுவந்தான். பிறகு ஜனத்தொகை பெருகப் பெருக, சமுதாயம் விரிய விரிய, அவனுடைய உற்பத்தி

முறைகள் மாறின. தேவைக்கு மிஞ்சின பொருள்களை உற்பத்தி செய்யத் தொடங்கினன். சமுதாயத்தில் பிளவு எற்பட்டது. உழைத்து உழைத்துப் பொருள்களை உற்பத்தி செய்வோர் பெரும்பாலோராகவும் அந்த உழைப்பை மேற்பார்வை செய்வோர், உழைப்பினின்று ஊதியம் பெறுவோர், அந்த உழைப்பாளிகளைப் பகைவரினின்று காப்பாற்றுவோர், அவர்களுடைய க்ஷேமத்திற்காகக் கடவுளை நோக்கிப் பிரார்த்தனை செய்வோர், தேசத்தின் அரசியலை நடத்துவோர் ஆகிய இவர்கள் சேர்ந்து சிறுபான்மையோராகவும் பிரிந்தனர். அதாவது ஏழைகளென்றும் பணக்காரர்களென்றும இரு பிரிவினராகப் பிரிந்தார்கள். இந்த இருபிரிவினரும் அவரவருடைய உரிமைகளை ஸ்தாபித்துக்கொள்வதற்காக நடத்திய போராட்டங்களின் தொகுப்புத்தான் சரித்திரம். பணக்காரர்கள், பழைய சம்பிரதாயங்கள், பழைய கொள்கைகள், பழைய சமுதாய அமைப்பு, இப்படி எல்லாம் பழமையாக, இருந்தது போலவே இருக்கவேண்டு மென்பதற்காகப் போராடுவார்கள். ஏழைகள், புதிய வாழ்வு பெற வேண்டு மென்பதற்காகப் போராடுவார்கள். சமுதாயத்தில் ஏழைகளென்றும் பணக்காரர்களென்றும் வித்தியாசங்கள் இருக்கிறவரையில், இந்தப் போராட்டங்கள் இருந்து கொண்டுதான் இருக்கும். மார்க்ஸீய பாஷையில் சொல்லப்படுகிற வர்க்கப் போராட்டம் என்பது இது தான். இந்த வர்க்கப் போராட்டங்கள் இல்லாதிருக்க வேண்டுமானல், வர்க்கப் பிரிவினைகளே இல்லாதிருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சமுதாயம்—வர்க்கப் பிரிவினைகள் இல்லாத ஒரு சமுதாயம், உலகப்பொதுவான ஒரு சமுதாயம்—அமையுமானல்தான், சர்வ ஜனங்களும் சுகப்பட முடியும். இப்படி வர்க்கப் பிரிவினைகள் இல்லாத ஒரு சமுதாயம் அமைய வேண்டுமானல், வர்க்கப் போராட்டங்களே இல்லாதிருக்க வேண்டுமானல், பொருளுற்பத்தி

முறையை மாற்றியமைக்க வேண்டும். அதாவது தேவைக்காகப் பொருளை உற்பத்தி செய்யவேண்டுமே தவிர, லாபத்திற்காகப் பொருளை உற்பத்தி செய்யக்கூடாது. மற்றும் பொருளுற்பத்திக்குச் சாதனங்களா யுள்ளவைகளை ஒரு சிலருடைய சுவாதீனத்திற்கு விடாமல், தேசத்தின் பொதுச் சொத்தாக்கவேண்டும். இந்த இரண்டு நோக்கங்களும் நிறை வேறுவதற் கேற்ற விதமாக அரசியல் அமைப்பு இருக்கவேண்டும். இந்த அரசியல் அமைப்பில், மனிதனுடைய சக்திகள் சமுதாய நலனுக்காகவே உபயோகிக்கப் பெறுகின்றன. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாய் இருப்பதுவே தனது கடமையென்று ஒவ்வொருவனும் கருதுகிறான். இந்த மாதிரியான பலதிறப்பட்ட அமிசங்களைக் கொண்ட மார்க்ஸின் சித்தாந்தத்திற்கு லெனினும் ஸ்டாலினும் அநேக வியாக்கியானங்கள் செய்திருக்கிறார்கள்; அப்படி வியாக்கியானங்கள் செய்ததோடு நில்லாமல், அநுஷ்டானத்திற்கும் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இப்படி இவர்கள் அநுஷ்டானத்திற்குக் கொண்டு வந்த பிறகுதான், மார்க்ஸின் தத்துவத்திற்கு அறிஞர் உலகத்தில் ஒரு மதிப்பு ஏற்பட்டது. அதன் மீது ஜனங்களுக்கு ஒரு நம்பிக்கை உண்டாயிற்று. அதுவரையில், ஒரு சிலருக்கு அது பொற்கனவாக இருந்தது; இன்னுஞ் சிலருக்கு, எளிதிலே உடைந்து போகக்கூடிய மட்பாண்டமாக இருந்தது. ஆனால் அஃது இரண்டும் இல்லை. ஓர் ஆசிரியன் கூறுகிற மாதிரி, சமதர்மம் என்பது ஒரு பூதமுமல்ல; அல்லது நமக்கு எட்டாத ஒரு கடவுட் சக்தியுமல்ல. இப்படி இரண்டிலே ஒன்றாக நினைப்பதற்குக் காரணம் அறியாமைதான்; அச்சந்தான். பொருள் பலமில்லாதவர்கள் நினைக்கிறார்கள், சமதர்மம்—அபேதவாதம்—பொதுவுடைமை என்று சொன்ன மாத்திரத்தில், தாங்கள், மாளிகைகளிலே குடிபுகுந்து ஓயாமல் சாப்பிட்டுக் கொண்டு, ஒரு வேலை

யும் செய்யாமல் தூங்கிக் கொண்டிருக்கலாமென்று. பணக்காரர்கள் பயப்படுகிறார்கள், சமதர்மம் அநுஷ்டானத்திற்குவந்து விட்டால், தங்களுடைய செல்வமெல்லாம் போய், கந்தை உடுத்து, வீதிகளிலே பிச்சை யெடுக்க வேண்டி வந்து விடும் என்று. ஏழைகளைப் பணக்காரர்களாக்குவதும், பணக்காரர்களை ஏழைக ளாக்குவதும் சமதர்மமல்ல; அதன் நோக்கமுமில்லை. பணம் காரணமாக ஒருவனுக்கு விசேஷ சலுகைகளோ, உரிமைகளோ, தனியான நீதி முறைகளோ இருக்கக்கூடாது என்றுதான் சமதர்மம் கூறுகிறது; பொருளாதாரம் காரணமாகச் சமுதாயத்தில் பிரிவினைகள் அல்லது ஏற்றத் தாழ்வுகள் இருக்கக் கூடாதென்றுதான் வலியுறுத்துகிறது.

சமதர்மம் என்றால் எல்லோருக்கும் ஒரே மாதிரியான உடை, உணவு, இருப்பிடம் என்பது அர்த்தமில்லை. எல்லோரும் ஒரே உயரமாகவும், ஒரே பருமனாகவும் இருக்க முடியுமா? அப்படியே எல்லோரும் ஒரே மாதிரியான புத்திசாலிகளாகவோ அல்லது ஒரே மாதிரியான முட்டாள்களாகவோ அல்லது ஒரே மாதிரியான தேகபல முடையவர்களாகவோ இருக்க முடியுமா? யானைக்கும் பூனைக்கும் ஒரே அளவு ஆகாரத்தைப் பங்கிட்டுக் கொடுக்க முடியுமா? அப்படிச் செய்தால், யானை, போதிய ஆகாரம் இல்லாமல் செத்துப் போகும்; பூனை அதிக ஆகாரத்தினால் செத்துப் போகும். சமதர்மத்தில், இந்த மாதிரியான நியாயத்திற்கு இடமே கிடையாது. யானைக்குத் தேவையான அளவை யானைக்குக்கொடு, பூனைக்குத் தேவையான அளவைப் பூனைக்குக்கொடு என்று அது கூறுகிறது. ஒன்றை நினைத்துக்கொண்டு, மற்றொன்றை மறந்துவிடக் கூடாது என்பதையே அது வலியுறுத்துகிறது.

சமுதாயம் என்பது ஓர் உடல் மாதிரி. உடலிலுள்ள ஒவ்வோர் உறுப்பும் ஒவ்வொரு வேலையைச் செய்கிறது. ஆனால், எல்லா உறுப்புக்களையும் நாம் ஒரேவிதமாகக்

கவனிக்கிறோம்; ஒரேவிதமாகவே காப்பாற்றுகிறோம். இதில் ஏற்றத் தாழ்வுகள் கிடையாது. ஓர் அவயவம் மட்டும் நன்றாக வளர்ச்சியடைய வேண்டு மென்று சொல்லி, அதற்காக மற்ற அவயவங்களை நாம் புறக் கணித்து விடுகிறோமா? இல்லை. அப்படிச் செய்தால், நம்முடைய உடல், உடலாயிராது; ஒரு மாமிசப் பிண்ட மாகவே இருக்கும். உடல் என்பதற்கு என்ன லட்சணங் கள் உண்டோ அந்த லட்சணங்களோடு நமது உடல் இருக்க வேண்டுமானால், ஒவ்வோர் அங்கத்தையும் அதன தன் வேலையைச் செய்யுமாறு விட்டுவிட்டு, எல்லா அவய வங்களையும் ஒரே மாதிரியாகப் போஷித்துவர வேண்டும். இதுதான் நியாயம். இந்த நியாயத்தையே சமுதாய விஷயத் திலும் அநுசரிக்கவேண்டும் என்று சமதர்மம் கூறுகிறது. ஒரு குடும்பத்தில் ஒரு பிள்ளை திடசாலியாக இருக்கிறது; இன்னொன்று நோயாளியாக இருக்கிறது. திடசாலியான பிள்ளையை மட்டும் நாம் குடும்பத்தில் வைத்துக்கொண்டு, நோயான பிள்ளையைக் கழுகுகளுக்கு இரையாகக் காட் டிலே எறிந்து விடுகிறோமா? இல்லையே. அதுபோலவே, சமுதாயம் என்கிற குடும்பத்திலுள்ள பிரஜைகளாகிற பிள்ளைகளின் விஷயத்திலும் அவரவருடைய தேவையை அநுசரித்து நடக்க வேண்டு மென்பதுவே சமதர்மத்தின் முழக்கம்.

"ஒரு தேசத்திலுள்ள எல்லா ஜனங்களினுடைய வரு மானத்தையும் ஒன்றாகக் கூட்டி, ஜனங்களெல்லோருக் கும் சரிசமானமாக ஈவு போட்டுக் கொடுத்து விடு" என்று சமதர்மம் கூறுவதாகச் சிலர் கலங்குகிறார்கள். அப்படி இல்லவே இல்லை. "ஒவ்வொருவருடைய தேவை யையும் கவனி; தேவை போக மிச்சம் இருப்பதைச் சரி யான வரி மூலம் ஒன்று சேர்த்து எல்லா ஜனங்களுடைய நன்மைக்காகவும் உபயோகி" என்றே சமதர்மம் சொல் கிறது. இப்படி உபயோகிக்கிற விஷயத்தில் எவ்விதப்

பாகுபாடும் கூடாது. ஓர் ஊரில் நல்ல பாதைகள் போட்டால், அவற்றில் இன்னார்தான் நடக்கலாம், இன்னார் நடக்கக்கூடாது, அல்லது மோட்டார் வண்டிகள் மட்டும்தான் போகலாம், மாட்டு வண்டிகள் போகக் கூடாது என்கிற மாதிரியான வித்தியாசங்கள் இருக்கக் கூடாது. எல்லோருக்கும் உபயோகமாகிற நல்ல பாதைகள், நல்ல குழாய் நீர், நல்ல ஆஸ்பத்திரிகள், நல்ல பள்ளிக்கூடங்கள், இந்த மாதிரியான வசதிகளை, மேலே சொன்ன மிச்சப் பணத்திலிருந்து செய்து கொடுக்க வேண்டும். இதுவே சமதர்மத்தின் நீதி.

சமதர்மத்தின் மூலதத்துவங்களில் ஒன்று என்னவென்றால், எல்லாப் பொருள்களுக்கும் மூலமாய் இருக்கப்பட்டவை எவையோ அவை யாவும், எல்லோருக்கும் பொதுவான சொத்தா யிருக்க வேண்டுமென்பது. உதாரணமாகச் சூரிய வெளிச்சத்தை எடுத்துக் கொள்வோம். இஃது எல்லோருக்கும் பொது. இந்தச் சூரிய வெளிச்சத்தால் காடுகள் உண்டாகின்றன. அவை யாருக்குச் சொந்தம்? தேசப் பொதுவுக்கே சொந்தம். நிலத்தின் மீது வளர்ந்த மரங்கள், பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னால் கீழே விழுந்து, மண்ணுக்குள்ளே புதைந்து போய், நிலக்கரியாகி விடுகின்றன. அந்த நிலக்கரி யாருக்குச் சொந்தம்? தேசத்திற்குத்தான். ஆறுகள், மலைகள், சுரங்கங்கள் முதலிய பொருளுற்பத்திக்கான மூலங்களும், ரெயில், கப்பல் போன்ற போக்குவரத்துச் சாதனங்களும், மின்சாரம், தொழிற்சாலைகள் முதலிய பொருளுற்பத்திக்கான சாதனங்களும் தேசப் பொதுவுக்கு அதாவது தேச மக்களுக்குச் சொந்தமானவை; தனிப்பட்டவர்களுடைய லாபம் சம்பாதிப்பதற்கான கருவிகளல்ல.

இரண்டாவது மூலதத்துவம் என்னவென்றால், லாபம் சம்பாதிக்கிற முறை. முதலாளித்துவ நாடுகளில், பொருளை உற்பத்தி செய்து பணத்தைக் குவிப்பதற்குத்

தூண்டுகோலா யிருப்பது எது? தனிப்பட்ட நபர்கள் லாபம் சம்பாதிப்பதற்குச் சந்தர்ப்பம் இருப்பதுதான். லாபம் சம்பாதிக்கிற இந்தத் தூண்டுதலானது தொழில்கள் பெருகுவதற்கு உதவி செய்கிறது. முதலாளியும் தனக்கு அதிகமான லாபம் கிடைக்கு மென்று எதிர்பார்க்கிறான். ஆனால் அவன், இப்படித் தனக்குக் கிடைக்கிற லாபத்தை, தேச நன்மைக்குச் செலவிடுகிறானா? இல்லை. சுய நலத்துக் காகவே உபயோகப்படுத்துகிறான். தவிர, லாபம் சம்பாதிக் கிற இந்தத் தூண்டுதலின் விளைவாக, ஒரு புறம், மலிவான மார்க்கெட்டிலே சரக்குகளை வாங்கிக் கிராக்கியான மார்க் கெட்டிலே விற்றுப் பணத்தைக் குவிக்கிற ஒரு கூட்டத் தினர் உண்டாகின்றனர். இவர்கள் பொருள் உற்பத்திக்கு எவ்வித உதவியும் செய்யாமலே பணத்தைச் சம்பாதித்து விடுகின்றனர். மற்றொருபுறத்தில், சுரண்டுவதையே முக்கிய தொழிலாகக் கொண்ட ஒரு கூட்டத்தினர், வேலையாட் களைக் கூலி கொடுத்து அமர்த்தி அவர்கள் உழைப்பி னின்று உற்பத்தியான பொருள்களை விற்று, தாங்கள் பணக்காரர்களாகிறார்கள். இந்த இரண்டு அமிசங்களையும், அதாவது ஒரு பொருளின் விலையை ஒரு நிர்ணயத்துக் குட்படுத்தாமல் ஏற்றியும் இறக்கியும் லாபம் தரத்தக்க விதமாக விற்பனை செய்தல், பிறருடைய உழைப்பின்பேரில் அதிகமான பணத்தைச் சேகரித்தல் என்ற இரண்டு அமி சங்களையும், சமுதாயத்தின் பொருளாதார வாழ்வினின்று அப்புறப்படுத்த வேண்டுமென்று சமதர்மம் கூறுகிறது.

ஆக, சமதர்மத்தின் நோக்கம், முதலாவது, மனித னோடு மனிதன் வைத்துக் கொண்டிருக்கிற பரஸ்பர சம்பந்தத்தில் நியாயம் என்பது நிரந்தரமாக நிலவ வேண்டு மென்பது. அதாவது பரஸ்பர நன்மையை முன்னிட்டுத் தான் விவகாரங்கள் நடத்தப்பட வேண்டுமே தவிர, ஒரு சிலருக்கு நன்மையா யிருப்பது வேறு சிலருக்குத் தீமை யாய் முடிவதாக இருக்கக்கூடாது. இரண்டாவது, பொரு

ளாதார விஷயத்தில் பாகுபாடுகள் இல்லாத, ஏற்றத்தாழ்வுகள் இல்லாத ஒரு ஜன சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்பது. வித்தியாசங்கள் இல்லாத இந்த ஜன சமுதாயத்தில், அவரவரும் தங்களுடைய திறமைக்குத் தகுந்தபடி உழைக்கவும், தேவைக்குத் தகுந்தபடி ஊதியம் பெறவும் சந்தர்ப்பம் உண்டு. இந்த இரண்டு நோக்கங்களும் எந்தச் சமுதாயத்தில் அநுஷ்டானத்தில் இருக்கின்றனவோ அந்தச் சமுதாயத்தில்தான், மனிதனுடைய வாழ்க்கை பூரணத்துவம் பெறுகிறது; எல்லாத் துறைகளிலும் பிரகாசிக்கிறது.

சமதர்மத்தின்படி, தேசமே எல்லாவற்றிற்கும் மூல காரணமா யிருக்கிறது; எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியமானதா யிருக்கிறது. தேசத்திற்குத் தான் எல்லா உரிமைகளும் உண்டு. அப்படியே அந்தத் தேசத்திலுள்ள தனி மனிதர்களுக்கும் உரிமைகள் உண்டு; எல்லா உரிமைகளும் உண்டு; ஆனால், தேசத்திற்கு விரோதமான உரிமைகள் கிடையா. தனி மனிதனுடைய உரிமையா, தேசத்தினுடைய உரிமையா என்கிற பிரச்னை எழுமானால், சமதர்மத்தின்படி, தேசத்தின் உரிமைதான் முக்கிய இடம் பெறுகிறது. தேசம் ஒரு பெரிய யந்திரம்; தனி மனிதன் அந்த யந்திரத்திலிருக்கும் ஒரு சுள்ளாணி. யந்திரம் சுழல்கிற விதமாகத்தான் சுள்ளாணி சுழல முடியுமே தவிர, அது தனியாகச் சுழலமுடியாது. அதுபோல் தனி மனிதன், சமுதாயத்திற்கு விரோதமாக நடக்க முடியாது; நடக்கக் கூடாது. இது சமதர்மத்தின் கண்டிப்பான உத்திரவு.

சமதர்ம சித்தாந்தப்படி, ஒரு சமுதாயத்தின் அரசியல் அமைப்பானது, அந்தச் சமுதாயத்தின் பொருளாதார நிலைமையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. சமுதாயத்தின் முக்கிய ஜீவனோபாயத் தொழிலாக விவசாயம் இருந்த காலத்தில், செல்வமானது, நிலச்சுவான்தார்களின் மேற்பார்வையில் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்டு

வந்தது. இப்படி உற்பத்தி செய்யப்பட்ட செல்வத்தில் பெரும்பகுதி நிலச்சுவான்தார்களுக்கும், சிறு பகுதி விவசாயிகளுக்கும் போய்ச் சேர்ந்தது. யாரிடத்தில் செல்வம் அதிகமாயிருக்கிறதோ அவர்களிடத்தில் அரசியல் அதிகாரம் போயடைவது இயற்கையல்லவா? எனவே, நாளாவட்டத்தில் பணம் படைத்த நிலச்சுவான்தார்களிடம் அரசியல் அதிகாரம் சென்றது. இதற்கே "ப்யூடலிஸம்"* என்று பெயர். பின்னர் விஞ்ஞான அறிவு விருத்தியாக, அதன் பயனுகத் தொழில்கள் பெருக, தொழில் முதலாளிகளிடத்தில் அரசியல் அதிகாரம் சென்றது. அதாவது நிலச்சுவான்தார்களின் ஆதிக்கம் போய், முதலாளிகளின் ஆதிக்கம் ஏற்பட்டது. அதுதான் இப்பொழுது நடைமுறையில் இருக்கிறது. இதற்கும் முடிவு காலம் ஏற்படுமென்றும், இதற்குப் பிறகு, பொருளுற்பத்தி செய்கிறவர்கள் யாரோ அவர்களுடைய ஆதிக்கம் ஏற்படுமென்றும், மார்க்ஸ் அறுதியிட்டுச் சொல்லியிருக்கிருன். அதை ஒருவாறு இப்பொழுது நாம் பார்த்து வருகிருேம். அரசியல் அமைப்பும் பொருளாதார வாழ்க்கையும் பிரிக்க முடியாத ஒரு பின்னல் என்ற உண்மையை, சமதர்மம் மையமாகக் கொண்டிருக்கிறது.

ஆகவே, சமதர்மம் என்பது, ஏற்றத் தாழ்வுகளில்லாத பொருளாதாரத் திட்டம்; எல்லோருக்கும் சம உரிமை வழங்குகிற அரசியல் அமைப்பு; மனிதனுடைய வளர்ச்சியின் முடிந்த நிலை; எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு புதிய நாகரிகம். உலகத்திலே தோன்றின நாகரிகங்கள் பலவும் மதத்தை அடிப்படையாகக் கொண்டவை; சமதர்ம நாகரிகமோ பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது. இப்படிப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், அது, மானிட வாழ்க்கையின் எல்லா அமிசங்களுடனும் நெருங்கிய தொடர்பு உடையது.

---

* Feudalism.

## 5. சமதர்மக் கட்சி

மார்க்ஸ், சமதர்மத்தை உலகத்திற்குப் பொதுவான ஒரு தத்துவமாக வகுத்துவிட்டுப் போனன். லெனின் அதனை, ருஷ்யாவில் நடைமுறைத் திட்டமாகக் கொணர்ந்து, வெற்றிக்கான அறிகுறிகளைக் கண்டுவிட்டுக் கண் மூடிவிட்டான். ஒரு திட்டத்தை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டுமானல், அதற்கென்று ஒரு தொண்டர் கூட்டம் தேவை. இந்தத் தொண்டர் கூட்டந்தான் சமதர்மக் கட்சி. சமதர்மக் கட்சியில்லாவிட்டால், லெனின் வெற்றியடைந்திருக்க முடியாது. அப்படியே லெனின் இல்லாவிட்டால், சமதர்மக் கட்சியும் தோன்றியிருக்க முடியாது. மார்க்ஸின் சிந்தனை அரும்பு, இன்று ருஷ்ய மகா ஜனங்களின் வாழ்க்கை மலராகப் பரிணமித்திருக்கிறதென்று சொன்னல் அதற்குக் காரணம் இந்தச் சமதர்மக் கட்சிதான். உலகத்தில் இதுவரை எத்தனையோ அரசியல் கட்சிகள் தோன்றியிருக்கின்றன; எத்தனையோ மதஸ்தாபனங்கள் கிளம்பியிருக்கின்றன; எத்தனையோ சமுதாயச் சீர்திருத்தச் சங்கங்கள் உற்பத்தியாகியிருக்கின்றன. ஆனல் சமதர்மக் கட்சியைப்போல் எந்தக் கட்சியும், எந்த ஸ்தாபனமும், எந்தச் சங்கமும், பயப்படக்கூடிய ஒரு புதிராக இருந்ததில்லை. ருஷ்யாவுக்குப் புறம்பாயுள்ள பெரும்பாலோருக்கு, சமதர்மக் கட்சி என்று சொன்னல், அது நெருப்பையும் ரத்தத்தையும் கக்கக்கூடிய ஒரு ஹிம்ஸைக் கூட்டம் என்கிற மாதிரியான ஒரு மருட்சி இருக்கிறது. இந்த மருட்சிக்கு ஆதாரமேயில்லை. சமதர்மக் கட்சியென்பது ஒரு தொண்டர்படை; சந்நியாசக் கூட்டம்; கட்டுப்பாடான ஒரு கட்சி; பரநலத்திற்கென்றே வாழ்கிற ஒரு கோஷ்டி. சமதர்மக் கொள்

கைக்கு முற்றிலும் விரோதமாயுள்ள மாக்ஸ் ஈஸ்ட்மான் என்ற ஒரு மேனாட்டு அறிஞன் பின்வருமாறு கூறு கிறான் :—

"உலகத்திலுள்ள எத்தனையோ ஸ்தாபனங்களைப் போன்றதன்று ருஷ்ய சமதர்மக் கட்சி. ஒரு தொழில் ஸ்தாபனம், ஓர் ஆராய்ச்சிக் கழகம், ஒரு சகோதரச் சங்கம், ஒரு ராணுவம், ஓர் அரசியல் கட்சி, ஆகிய இவை யாவும் ஒன்று சேர்ந்தால் எதுவோ அதுதான் சமதர்மக் கட்சி. பொருளாதார வாழ்க்கையில் பலதிறப்பட்ட அந்தஸ்துடையவர்களும் இந்தச் சமதர்மக் கட்சியில் சேர்ந்திருக்கிறார்கள். இந்தக் கட்சியின் வேரானது, அரசியல் உணர்ச்சியே இல்லாதவர்களும், சமுதாயத்தின் கடைசி படியிலே உள்ளவர்களுமான பாமர ஜனங்கள் வரை சென்றிருக்கிறது. அப்படிச் சென்று பரவக்கூடிய மாதிரியாகவே இந்தக் கட்சி அமைப்பு இருக்கிறது. அந்நியர்கள் யாரும் கனவிலேகூடக் கருத முடியாதபடி அவ்வளவு சாமர்த்தியமாகவும் சூட்சுமமாகவும் லெனின் இந்தச் சமதர்மக் கட்சி என்னும் அரசியல் கருவியை உபயோகப்படுத்தி வந்திருக்கிறான். அவன் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டபோது, கல்வியறிவில்லாத பாமர ஜனங்களின் பெயரால், தான் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண் டிருப்பதாகக் கூறினான். அவன் அப்படிக் கூறியது முற்றிலும் பொருந்தும். அப்படிக் கைப்பற்றிக் கொண்ட அதிகாரத்தை, அவன் தன் ஒரு கையில் மட்டும் வைத்துக் கொண்டிருந்த போதிலும் உலகத்து எல்லா அரசாங்கங்களும் சேர்ந்து அவனைக் கீழே வீழ்த்த முடியவில்லை." *

இந்தச் சமதர்மக் கட்சியின் ஆரம்ப வரலாறு என்ன? பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதியில், மார்க்ஸீய மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு ஐரோப்பாவின் பல பாகங்களிலும் அநேகம் கட்சிகள் தோன்றின. இவற்றிலே ஒன்றாக ருஷ்யாவில் 1898-ஆம் வருஷம் "அபேத

* Stalin's Russia and the Crisis of Socialism by Max Eastman.

வாத ஜனநாயகக் கட்சி''* என்ற பெயருடன் ஒரு கட்சி ஸ்தாபிதமாயிற்று. ருஷ்யாவிலிருந்து தேசப் பிரஷ்டம் செய்யப்பட்ட புரட்சி வாதிகளிற் சிலரே, இதனை வெளி நாடுகளிலிருந்துகொண்டு நடத்தி வந்தனர். இவர்களில் லெனினும் ஒருவன். இவனுக்கு வாய் வேதாந்தம் பிடிக்காது. வாய்ப் பந்தல் வேய்ந்து அதன் கீழிருந்து கொண்டு புரட்சியை நடத்த முடியாதென்பது இவ னுடைய திடமான நம்பிக்கை. புரட்சி என்று சொன் னால், பழமையை அழிப்பது மட்டுமல்ல; புதுமையைச் சிருஷ்டிப்பதுங்கூட. ருஷ்யாவில் சுயேச்சாதிகார ஆட்சி முறையைக் களைந்துவிட்டு அதன் மீது புதியதோர் அர சியலை, புதியதொரு சமுதாயத்தை நிர்மாணம் செய்ய வேண்டுமென்பதே இவனுடைய நோக்கம். அதாவது மார்க்ஸ் கண்ட கனவை நனவாக்க வேண்டுமென்பதே இவன் கோரிக்கை. இதற்காக, "அபேதவாத ஜனநாய கக் கட்சி"யை ஒரு கருவியாக உபயோகப்படுத்தத் தீர்மானித்தான். இவன் இந்தக் கட்சியில் சேர்ந்தபோது, அவ்வளவு பிரபலஸ்தனா யிருக்கவில்லை. மார்க்ஸின் தத்து வத்தில் மோகங்கொண்டிருந்த பலரில் ஒருவனாகவே இருந் தான். பின்னரே, கட்சியில் சேர்ந்த சுமார் இரண்டு வருஷங்களுக்குப் பிறகே, இவனுடைய சக்தி, இவனு டைய தலைமையின் தகுதி, இவனுடைய புருஷத்துவம் கட்சியில் பிரதிபலிக்க ஆரம்பித்தது.

ஒரு கட்சி யென்றிருந்தால், அதைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேரும் ஒரே லட்சிய முடையவர்களாகவும், ஒரே மனப்பான்மை யுடையவர்களாகவும், ஒரே மாதிரியான கட்டுப்பாட்டுக் குட்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல், கட்சிக் கொள்கையிலே அநுதாபம் இருக்கிறதென்று சொல்லிக்கொண்டும், ஜனங்களுக்கு

* Social Democratic Party.

உபகாரம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் தங்களுக்கு இருக்கிற தென்பதைக் காட்டிக் கொள்வதற்காகவும், கட்சியில் அங்கத்தினராகச் சேர்ந்து கொள்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது? அப்படிப்பட்டவர்களால் கட்சிக்கு என்ன நன்மையுண்டாகும்? லெனினுடைய கருத்துப்படி, கட்சியென்பது, பெரும்பான்மை ஸ்தானங்களைக் கைப் பற்றிக் கொள்வதற்கான ஒரு கருவியல்ல; ஜனங்களிடத் திலே செல்வாக்குப் பெறுவதற்கான ஒரு சாதனமல்ல; பொருள், பதவி, பட்டம் முதலிய வற்றைச் சுலபமாக அடைவதற்கு அவ்வப்பொழுது உபயோகப் படுத்திக் கொள்ளும் ஒரு பீடமுமல்ல. இந்த மாதிரியான எண் ணங்களை, லெனின், அடிக்கடி தன் கட்சிக்கூட்டங்களில் வலியுறுத்தி வந்தான்.

புரட்சி செய்கிறவர்கள் யார்? படித்த கூட்டமா? இல்லை. வாதப் பிரதிவாதங்களிலே மூழ்கி யிருப்போரா? இல்லை. பின் யார்? பாமர ஜனங்கள். இவர்களைச் செயலுக்குத் தூண்டவும், ஒழுங்கான பாதையில் இவர்களை அழைத்துக் கொண்டு செல்லவும், புரட்சிக் குப் பிறகு இவர்களைக் கொண்டு சமுதாயத்தைப் புனர்நிர்மாணம் செய்யவும் ஒரு கோஷ்டி தேவை. இந்தக் கோஷ்டி எண்ணிக்கையிலே பருத்திருக்க வேண்டு மென்பதில்லை; உறுதி நிரம்பியதா யிருக்கவேண்டும்; கார்ல் மார்க்ஸின் சமதர்மக் கொள்கையில் பரிபூரண நம்பிக்கை யுடையதாயிருக்க வேண்டும்; அப்படி நம் பிக்கை கொண்டிருப்பதோடு மட்டு மல்லாமல், சமயம் நேர்கிறபோது அதனை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரக்கூடிய ஆற்றல் படைத்ததாகவும் இருக்க வேண்டும். சுருக்கமாகச் சொல்லப் போனால், பிரசாரத் திறமை, செயலாற்றும் திறமை, நிருவாகத் திறமை ஆகிய அனைத்து முடைய ஒரு நிபுணர் கூட்டம் தேவை. "அபேதவாத ஜனநாயகக் கட்சி"யை இப்படிப்பட்ட தொரு நிபுணர்

கூட்டமாக உருவாக்க வேண்டு மென்று லெனின் சுமார் பதினைந்து வருஷ காலம் ஓயாது உழைத்தான்; சலியாது போராடினன். இவனுடைய இந்தக் கண்டிப்பான முறை, கட்சியைச் சேர்ந்த பலருக்குப் பிடிக்கவில்லை. எப்படிப் பிடிக்கும், சொல்லினல் சேவை செய்து திருப்தி யடைகிற வர்களுக்கு? இதனல், கட்சியில் பிரிவினை உண்டாயிற்று. "அபேதவாத ஜனநாயகக் கட்சி"யின் கீழ் போல்ஷ்வெக்கர் (பெரும்பாலோர்) என்றும் மென்ஷ்வெக்கர் (சிறுபாலோர்) என்றும் இரண்டு பிரிவினர் தோன்றினர். லெனினைத் தலைவனகக் கொண்டவர்கள் போல்ஷ்வெக்கர். *

1914-ஆம் வருஷத்தில் தொடங்கின ஐரோப்பிய மகாயுத்தத்தின்போது, இந்த போல்ஷ்வெக்கர்களுக்கும், மற்றப் புரட்சிப் பிரிவினர்களுக்கும் கருத்து வேற்றுமை கள் வலுத்தன. இந்த மகாயுத்தம் ஏகாதிபத்திய சக்தி களுக்கிடையே நடைபெறுகிற யுத்த மென்றும், இதில் ஏழை ஜனங்கள் கலந்து கொள்ள வேண்டியதில்லை யென்றும், அப்படிக் கலந்து கொள்வதனல் அவர்களுக்கு எவ்வித நன்மையும் உண்டாகா தென்றும் லெனின் சொல்லிக் கொண்டு வந்தான். ஆனல் ருஷ்யாவிலுள்ள மற்றப் புரட்சி வாதிகள், தாய்நாட்டைக் காப்பாற்றுவதாகிற முகாந்திரத்தை வைத்துக்கொண்டு யுத்தத்தை ஆதரித்தார்கள்; யுத்தத்திற்கு உதவி செய்தார்கள். ஆனல் யுத்தம் தொடங்கின சிறிது காலத்திற்குப் பிறகு, ஜனங்களுக்கு யுத்தத்தின் மீது ஒரு வெறுப்பு ஏற்பட்டு விட்டது. இந்த வெறுப்பை லெனின் சாமர்த்தியமாக உபயோகித்துக்கொண்டு தன் கட்சியை வலுப்படுத்தினன். 1917-ஆம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் ஒரு கணக்கு எடுத்துப் பார்த்தபோது, போல்ஷ்வெக் கட்சியில் முப்பதினயிரம் பேர் அங்கத்தினரா யிருந்தனர்.

* 19-ஆம் பக்கம் பார்க்க.

அதாவது, இந்த முப்பதினாயிரம் பேரும், புரட்சியையே தொழிலாகக் கொண்டவர்கள்; லட்சியத்திற்காகத் தங்களுடைய சர்வத்தையும் துறந்து விட்டவர்கள். அப்பொழுது ஜார் அரசாங்கத்தின் அடக்குமுறையோ வருணிக்க முடியாத அவ்வளவு கொடூரமாயிருந்தது. இதற்கு மத்தியில் போல்ஷ்வெக் கட்சி, எண்ணிக்கையிலே கூட வளர்ந்து வந்தது என்று சொன்னால், லெனினுடைய செயலாற்றும் திறனை நாம் எப்படி வியந்து பாராட்டாமலிருக்க முடியும்? 1917-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் புரட்சி ஏற்பட்டு ஜார் ஆட்சி வீழ்ந்துவிட்ட பிறகு, தற்காலிக அரசாங்கம் என்ற பெயருடன் முதுகெலும்பில்லாத ஒரு கூட்டம் நிருவாக ஸ்தானங்களைச் சுமார் எட்டு மாத காலம் பற்றிக்கொண்டிருந்த தல்லவா, அந்தக் காலத்தில், போல்ஷ்வெக் கட்சியின் எண்ணிக்கை இரண்டு லட்சமாகப் பெருகியது. என்ன வேடிக்கை? லெனின், இந்தக் காலத்தில் ஒரு யந்திரம்போல் உழைத்தான்.

1917-ஆம் வருஷக் கடைசியில், போல்ஷ்வெக்கர்களின் பலத்தைக்கொண்டு, லெனின், அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டான்; குடியரசு முறையை ஏற்படுத்தினன். கட்சியின் பெயரையும் மாற்றியமைத்தான். "அபேதவாத ஜனநாயகக் கட்சி"யாயிருந்தது "ருஷ்ய சமதர்மக் கட்சி (போல்ஷ்வெக்)" என்று மாறியது. 1923-ஆம் வருஷத் தொடக்கத்தில், குடியரசு முறையை சமஷ்டி அரசாக மாற்றி, அரசியலை ஒரு புதிய ஒழுங்குக்குக் கொண்டுவந்த போது, அதை அநுசரித்தாற்போல் கட்சியின் பெயரையும் சிறிது திருத்தி யமைக்க வேண்டியதா யிருந்தது. "ருஷ்ய சமதர்மக் கட்சி (போல்ஷ்வெக்)" என்பது போய், (சோவியத் சமதர்மக் குடியரசு நாடுகளடங்கிய) "ஐக்கிய ராஜ்யத்தின் சமதர்மக் கட்சி (போல்ஷ்வெக்)" * என்று ஆயிற்று.

* The All-Union Party (of Bolsheviks).

அதுவே இப்பொழுது, எவ்வித எதிர்ப்பு மில்லாத, வேறு பிரிவினைகளை அல்லது அபிப்பிராய பேதங்களைத் தன்னகத்தே கொண்டிராத சமதர்மக் கட்சியாக விளங்குகிறது. ருஷ்யாவில் சாதாரணமாக, கட்சியைச் சேர்ந்தவன், கட்சியைச் சேராதவன் என்றுதான் சொல்லுவார்கள். கட்சி என்ருல், அது ஒரு கட்சிதான்; சமதர்மக் கட்சிதான். பொதுவாக இப்பொழுது இந்தச் சமதர்மக் கட்சியின் பெயராலேயே போல்ஷ்வெக்கர்கள் அழைக்கப்படுகிருர்கள். எனவே, போல்ஷ்வெக் கட்சி யென்ருலும் சமதர்மக் கட்சி யென்ருலும் இப்பொழுது ஒன்றுதான்.

சமதர்மக் கட்சியில் ருஷ்ய—ஜெர்மானிய யுத்தம் தொடங்குவதற்கு முன்னர் சுமார் முப்பத்தைந்து லட்சம் பேர் அங்கத்தினரா யிருந்தனர். *

1937-ஆம் வருஷம் ருஷ்யாவில் புதிய அரசியல் திட்டம் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இந்த அரசியல் திட்டத்தில் சமதர்மக் கட்சிக்கு ஒரு ஸ்தானம் கொடுக்கப்பட் டிருக்கிறது. சட்ட அங்கீகாரம் பெற்ற இந்தக் கட்சியின் செல்வாக்குத் தான், ருஷ்யாவின் அரசியல் வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை, பொருளாதார வாழ்க்கை முதலிய எல்லாத் துறைகளிலும் படிந்திருக்கிறது. ஆனல் இந்தக் கட்சிக்கும் அரசியல் நிருவாகத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. கட்சியில் அங்கத்தினர்

* 1938-ஆம் வருஷம், சமதர்மக் கட்சியில் 90 லட்சம்பேர் அங்கத்தினர்களா யிருந்தார்களென்று ஸர் வால்ட்டர் ஸிட்ரைன் ('In Russia Now' by Sir Walter Citrine) என்ற ஆங்கில அறிஞன் கூறுகிருன். கட்சியில், கண்டவரும் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை யென்பதையும், மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு இரண்டுபேர் விகிதந்தான் கட்சியில் அங்கத்தினர்களா யிருக்கிருர்க ளென்பதையும் சேர்த்துப் பார்க்கிறபோது, மேற்படி 90 லட்சம் என்பது அதிகமான எண்ணிக்கை என்பதில் சந்தேக மில்லை. ஒருகால், சமதர்மக் கட்சியை ஒட்டினற்போலுள்ள இளைஞர் இயக்கங்களின் அங்கத்தினர் எண்ணிக்கையையும் கூட்டி 90 லட்சம் என்று சொல்லியிருக்கிருன் போலும்.

களாகவோ, தலைவர்களாகவோ இருக்கிறவர்கள், அரசாங்க அதிகாரிகளாக இருக்கலாம். ஆனால், கட்சி வேறு; அரசாங்கம் வேறு. *

சமதர்மக் கட்சியின் அமைப்பு ஒரு கோபுரம் மாதிரி இருக்கிறது. விரிவான உரிமையின்மீது கூர்மையான கடமை வைக்கப்பட் டிருக்கிறது. சமுதாயத்தின் எல்லாப் படியிலுள்ளவர்களும் எவ்விதச் சலுகையோ வித்தியாசமோ காட்டப்படாமல் இதில் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ஆனால், மேலிருக்கப்பட்ட ஒரு சிலருடைய அதிகாரத்திற்கு எல்லாரும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

கட்சியில், ஏதோ சந்தா செலுத்தி விட்டு அங்கத்தினராகச் சேர்ந்து விடலாம் என்பது முடியாது. கட்சியின் விதிகளை முதலில் தெரிந்து கொண்டு, அவற்றில் கூறப்பட்டுள்ள அநேக நிபந்தனைகள்படி தன்னால் நடக்க முடியுமா என்று பிரதியொரு நபரும் தன்னைத்தானே பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். ஏனென்றால், எடுத்த உடனே ஒருவனை அல்லது ஒருத்தியை அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்வதென்பது சமதர்மக் கட்சியில் கிடையாது. அநேக பரிசோதனை நிலைகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இவற்றில் தேறிச் சென்ற பிறகுதான், அங்கத்தினர் என்ற கௌரவமான, ஆனால் மிகவும் பொறுப்புள்ள ஸ்தானம் கிட்டும். கௌரவமான ஸ்தானம் என்று ஏன் சொல்லுகிறோமென்றால், இவர்கள் அங்கத்தினர்களாக எப்பொழுது அங்கீகரிக்கப் படுகிறார்களோ அப்பொழுதே இவர்களுக்

---

* கட்சியின் கொள்கைகளைப் பிரதிபலித்துக் காட்டுவதற்கென்று ஒரு பத்திரிகையும், அரசாங்கத்தின் கொள்கைகளைப் பிரதிபலித்துக் காட்டுவதற்கென்று ஒரு பத்திரிகையும் தனித் தனியாக இருக்கின்றன. கட்சிப் பத்திரிகைக்கு ப்ராவ்டா (Pravda) என்றும், அரசாங்கப் பத்திரிகைக்கு இஸ்வெஸ்டியா (Izvestia) என்றும் முறையே பெயர்.

குத் துறவு மனப்பான்மை இருக்கிறது என்பது விசதமாகி விடுகிறது. சேவை செய்வதற்கு இவர்கள் தகுதியுடைய வர்களாகி விடுகிறார்கள். ஜனங்களுக்குத் தலைமை பூண்டு அவர்களை வழி நடத்திச் செல்வதற்கு இவர்களுக்கு யோக்கியதை இருக்கிற தென்பது அங்கீகரிக்கப் பட்ட தாகிறது. சேவை செய்கிறவர்களுக்கு, அதுவும் தன்னல மற்ற சேவை செய்கிறவர்களுக்கு, தலைமை ஏற்றுக் காரி யங்களை நடத்துகிறவர்களுக்கு, சமுதாயத்திலே எப்பொழு தும் கௌரவமான ஸ்தானம் உண்டல்லவா?

கட்சியிலே அங்கத்தினராகச் சேர விரும்புவோர், முதலாவது, மார்க்ஸின் சமதர்ம சித்தாந்தத்தை ஒப்புக் கொள்பவர்களா யிருக்கவேண்டும். அதுமட்டுமின்றி, அந்த மார்க்ஸின் சித்தாந்தத்திற்கு லெனினும் ஸ்டாலினும் அவ்வப்பொழுது என்னென்ன வியாக்கியானங்கள் செய் திருக்கிறார்களோ அவை யனைத்தையும் அங்கீகரிக்கிறவர் களா யிருக்க வேண்டும். இரண்டாவது, அவர்கள் எந்த உத்தியோகத்தி லிருந்தாலும், எந்தத் தொழில் செய்து கொண்டிருந்தாலும், அரசியல் விவகாரங்களில் சிரத்தை எடுத்துக் கொள்ளவேண்டும். அதாவது, அரசியல் விஷ யங்களில் அக்கரை காட்டுவ தென்பது அவர்களுடைய வாழ்க்கையோடு ஒட்டிய ஒரு சுபாவமாக இருக்க வேண் டும். இந்தச் சுபாவம் செயலிலும் பரிணமிக்க வேண்டும். எப்படியென்றால், வயிற்றுப் பிழைப்புக்கான உத்தியோ கமோ தொழிலோ செய்து முடிந்துவிட்ட பிறகு, தினந் தோறும் ஏதோ சில மணி நேரம் பொதுநலத் தொண்டு ஒன்றில் ஈடுபட்டு உழைக்க வேண்டும். மூன்றாவது, அவர்களுக்கு எந்தவிதமான மதப்பற்றும் இருக்கக் கூடாது. இவை தவிர, தனிச் சொத்துரிமையில் ஆசை இருக்கக் கூடாது. சமுதாயத்தைப் பலதரத்தினராகப் பிரித்து வைத்து, எல்லாத் தரத்தினரையும் திருப்தி செய்து கொண்டுபோக வேண்டுமென்ற மனப்பான்மை இருக்கக்

கூடாது. உழைக்காமலே அல்லது லேசாக உழைத்து அதிகமான சுகத்துடனே வாழ விரும்புவோர், தங்களுக்கென்று சொந்தமாக அநேக சொத்துச் சுதந்திரங்களை வைத்துக்கொண்டு அநுபவிக்க வேண்டுமென்ற இச்சையுடையவர்கள், புரோகிதர்கள், மடாதிபதிகள், நிலச்சுவான்தார்கள், தொழில் முதலாளிகள், லாபம் சம்பாதிப்பதற்காக வியாபாரம் செய்வோர் ஆகிய பலரும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் கட்சியில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

கட்சியில் யாரும் நேரடியாக அங்கத்தினராகச் சேர்ந்து கொண்டுவிட முடியாது. ஏற்கனவே கட்சியில் அங்கத்தினரா யுள்ளவர்களில் இரண்டு பேரோ, மூன்று பேரோ அல்லது ஐந்து பேரோ சேர்ந்து ஒருவனை அல்லது ஒருத்தியைச் சிபார்சு செய்யவேண்டும். இப்படிச் சிபார்சு செய்யப் படுகிறவர்கள் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களா யிருக்க வேண்டும். சிபார்சு செய்கிறவர்கள், சிபார்சு செய்யப்படுகிறவர்களை நன்குகத் தெரிந்துகொண் டிருக்கிறவர்களாகவும், அவர்களுடைய நன்னடத்தைக்குப் பொறுப்பாளிகளாகவும் இருக்க வேண்டும். இப்படிச் சிபார்சு செய்யப் படுகிறவர்கள் முதலில் உமேதவாரிகளாகச் * சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஒரு வருஷகாலமோ, இரண்டு வருஷகாலமோ, அவரவர்களுடைய தொழில் அந்தஸ்துக்குத் தகுந்தபடி இந்த உமேதவாரிக் காலம் இருக்கும். உதாரணமாக, பொருளுற்பத்தி வேலையில் ஐந்து வருஷகாலம் தொடர்ந்து ஈடுபட்டிருக்கிற தொழிலாளி யொருவன், கட்சியில் அங்கத்தினனுகச் சேருவதற்கு, ஐந்துவருஷ காலம் கட்சியில் அங்கத்தினராயுள்ள மூன்று பேருடைய சிபார்சு வேண்டும். இவன் ஒரு வருஷ காலந்தான் உமேதவாரியாக

* Probationers.

வைக்கப்படுவான். ஐந்து வருஷ காலத்திற்குக் குறைவாகப் பொருளுற்பத்தி வேலையில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், செம்படையிலே சேர்ந்திருக்கிற விவசாயிகள்—தொழிலாளர்கள், தொழிற்சாலைகளில் வேலை செய்துகொண்டிருக்கும் இஞ்சினீர்கள் முதலியோருக்கு ஐந்து பேருடைய சிபார்சும், இரண்டு வருஷ உமேதவாரிக் காலமும் வேண்டும். இப்படித் தொழில் அந்தஸ்துக்குத் தகுந்தபடி அங்கத்தினர்களுக்குப் பிரவேச நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. உமேதவாரிகளாக இருக்கிறபோது இவர்கள் "அபேட்சகர்கள்"* என்று அழைக்கப்படுகிறார்கள். ஒரு வருஷ காலமோ இரண்டு வருஷ காலமோ அபேட்சகர்களாக இராமல் யாரும் கட்சியில் பொறுப்புள்ள அங்கத்தினராக முடியாது. இது விஷயத்தில் எவ்வித விதிவிலக்கும் கிடையாது. இந்த ஒரு விஷயத்தில் மட்டுமென்ன? எந்த விதிக்கும் விலக்குக் கிடையாதுதான். அபேட்சகர்கள், அங்கத்தினர்களுக்கு என்ன சந்தா விதிக்கப்பட் டிருக்கிறதோ அந்தச் சந்தாவைச் செலுத்தவேண்டும். அங்கத்தினர்களுடைய சந்தா அவரவர்களுடைய வருமானத்திற்குத் தகுந்தபடி நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றது. உதாரணமாக, சுமார் நூறு ரூபாய் சம்பாதிக்கிறவர், மாதம் பன்னிரண்டு அணா சந்தா செலுத்தவேண்டும். முந்நூறு ரூபாய்க்கு மேற்பட்டுச் சம்பாதிக்கிறவர்கள், வருமானத்தில் நூற்றுக்கு மூன்று விகிதம் சந்தாவாகக் கொடுக்கவேண்டும். சந்தாத் தொகை தவிர, அபேட்சகராகச் சேருகிறபோது பிரவேசக் கட்டணமாக ஒரு சிறு தொகை கொடுக்கவேண்டும். அபேட்சகர்களா யிருக்கப் பட்டவர்கள், எல்லாக் கட்சிக் கூட்டங்களுக்கும் ஆஜரா யிருக்கலாம். ஆனால், ஓட்டு மட்டும் கொடுக்கக்கூடாது. ஓர் அங்கத்தினர் வசம்

* Candidates.

என்னென்ன வேலைகள் ஒப்படைக்கப் படுகின்றனவோ அந்த வேலைகள் யாவற்றையும் அபேட்சகர்கள் வசம் ஒப்புவித்து அவர்கள் திறமையையும் தகுதியையும் பரிசோதனை செய்து பார்ப்பார்கள். மற்ற அங்கத்தினர்களும், இந்த அபேட்சகர்களுடைய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பார்கள். கட்சியின் மேலதிகாரிகளுக்கு இவர்களைப்பற்றி அடிக்கடி அறிக்கைகள் சென்று கொண்டிருக்கும். உமேதவாரிக் காலமாகிய பரிசோதனைக் காலத்தை அபேட்சகர்கள், வெற்றிகரமாகக் கடத்தி விடுவார்களானல், உடனே அங்கத்தினர்களாகப் பதிவு செய்து கொள்ளப் படுகிருர்கள். பரிசோதனையில் இவர்கள் திருப்திகரமாக நடந்துகொள்ள வில்லையென்று கட்சி அதிகாரிகளுக்குப் படுமானல், உமேதவாரிக் காலத்தை நீடிக்கச் செய்கிருர்கள்; அல்லது கட்சியில் சேருவதற்குத் தகுதியில்லையென்று சொல்லி விலக்கி விடுகிருர்கள்.

கட்சியிலே சேர்ந்து விட்ட பிறகு அங்கத்தினர்கள் மூன்று விதமான நியமங்களுக்குக் கண்டிப்பாக உட்பட்டுத் தீரவேண்டும்; இந்த நியமங்களைத் தங்களுடைய அன்ருட வாழ்க்கையில் அநுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தாக வேண்டும். இவை யென்ன?

1. சமதர்ம தத்துவத்தைப் பற்றியோ அல்லது சோவியத் அரசாங்கத்தின் கொள்கைகளைப் பற்றியோ அவ்வப்பொழுது தலைவர்கள் என்ன வியாக்கியானம் செய்கிருர்களோ அல்லது என்ன முடிவை வெளியிடுகிருர்களோ அந்த வியாக்கியானத்தை அல்லது அந்த முடிவை அங்கீகரித்து அதன்படியே நடக்க வேண்டும். இது விஷயத்தில் இம்மியளவுகூடப் பிறழக்கூடாது. இடதுசாரி அபிப்பிராயமென்றும் வலது சாரி அபிப்பிராய மென்றும் சொல்லிக்கொண்டு, கட்சியின் முடிவான அபிப்பிராயத்தோடு தங்களுடைய சொந்த அபிப்பிராயத்தை ஒட்டுப் போடக் கூடாது.

பிரதியோர் அங்கத்தினரும், கட்சியோடு மட்டும் ஒன்றுபட்டவ ரல்ல; கட்சியினுடைய அபிப்பிராயத்திலும் ஒன்றுபட்டவர். ஏதேனும் ஒரு விஷயத்தைப் பற்றிக் கட்சியின் தலைமை ஸ்தானம் முடிவான அபிப்பிராயம் தெரிவிக்க வில்லை யென்று வைத்துக் கொள்வோம். அப்படித் தெரிவிக்கப்படும் வரை, அந்த விஷயத்தைப் பற்றி அந்தரங்கமாகவோ பகிரங்க மாகவோ தர்க்கம் செய்யவோ, கண்டிக்கவோ, மாற்று அபிப் பிராயம் சொல்லவோ பிரதியோர் அங்கத்தினருக்கும் பரி பூர்ண உரிமை உண்டு. ஆனல், முடிவான அபிப்பிராயம் வெளியாகிவிட்ட பிறகு, அதற்குக் கட்டுப்பட்டே எல்லா அங் கத்தினர்களும் நடந்துகொள்ள வேண்டும்; எதிர்ப்போ, கண்டனமோ இருக்கவே கூடாது. அப்படிச் செய்தால், தண்டனை கிடைக்கும். கட்சியிலிருந்து விலக்கப்படலாம்; அல்லது சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் படலாம்; அல்லது தேசப்பிரஷ்டம் செய்யப்படலாம்.

2. கட்சியின் அதிகாரத்திற்குப் பிரதியோர் அங்கத் தினரும் கட்டாயம் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். கட்சியின் தலைவர்கள், ஓர் அங்கத்தினரின் தகுதியைப் பார்த்து அவ ரிடத்தில் எந்த வேலையை ஒப்புவித்தாலும் அந்த வேலையை அந்த அங்கத்தினர் செய்தாக வேண்டும். தனக்குத் தகுதி யில்லை யென்றோ அல்லது வேறு வேலை யிட்டால் அதைத் தான் சிறப்பாகச் செய்து காட்ட முடியுமென்றோ சொல்லக் கூடாது. தனக்கிட்ட வேலையைச் செய்வதற்காக அந்த அங்கத்தினர் எந்த இடத்திற்குப் போகவும், எந்த இடத்தில் வசிக்கவும், எந்தத் தொழிலைச் செய்யவும், எதற்கும் தயாரா யிருக்க வேண்டும். உலகத்தில் சமதர்மம் பரவவேண்டு மென்ற ஒரே நோக்கந்தான் பிரதியோர் அங்கத்தினருக்கும் இருக்கவேண்டும்.

3. கட்சி அங்கத்தினர்கள், சாதாரண—அதாவது ஆடம்பரம் அல்லது பரம தரித்திரம் இரண்டும் இல்லாத— இயற்கையான வாழ்க்கையை நடத்தவேண்டும். கட்சியிலே சேர்ந்து விட்டால், அவர்கள், உணவுக்கும் உடைக்கும்

திண்டாடிக் கொண்டு சேவை செய்ய வேண்டு மென்பது அர்த்தமல்ல. அப்படியே, கட்சியில் சேர்ந்து விட்ட பிறகு, செலவுத் தொகை ஒன்று கிடைக்கிறதென்று, எந்த வேலையையும் செய்யாமல் சும்மா யிருக்கவும் முடியாது. வாழ்க்கைக்கு என்ன தேவையோ அதைப் பிரதியோர் அங்கத்தினரும் பெறுவதற்கு உரிமையுடையவர் என்று கட்சித் தலைவர்கள் நிர்ணயப்படுத்தி யிருக்கிருர்கள். கட்சி அங்கத்தினர்கள், எந்தத் தொழிலைச் செய்துகொண்டிருந்த போதிலும், அந்தத் தொழிலிலிருந்து கிடைக்கிற வருமானத்திலிருந்து, கட்சி அங்கத்தினர் என்ற ஹோதாவில் தாம் எவ்வளவு எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவ்வளவு எடுத்துக்கொண்டு, மிகுதித் தொகையைக் கட்சி நிதிக்குச் சேர்த்துவிட வேண்டும். இப்படிச் சொல்வதனல், அங்கத்தினரா யுள்ளவர்கள், தங்கள் உத்தியோக அவசியத்திற்காக என்ன செலவழிக்க வேண்டுமோ அதைச் செலவழிக்கக் கூடாதென்பது அர்த்தமல்ல. உதாரணமாக, கட்சி அங்கத்தினர் ஒருவர், அரசாங்க உயர்தர உத்தியோகஸ்தரா யிருக்கிருரென்று வைத்துக் கொள்வோம். அவர், உத்தியோகஸ்தர் என்ற தோரணையில் ரெயிலிலோ, கப்பலிலோ, ஆகாய விமானத்திலோ பிரயாணம் செய்வதற்கும், மோட்டார்கள் வைத்துக் கொள்வதற்கும், சௌகரியமான இடத்தில் வசிப்பதற்கும் உரிமை யுடையவர். இந்தச் செலவுகள், அவருக்கு அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து அளிக்கப்பட்டு விடுகின்றன. அப்படியே, ஓர் அங்கத்தினர், தமது நியாயமான வருமானத்தைக் காட்டிலும் அதிகமான ஒரு தொகையைக் கட்சி வேலைக்காகச் செலவழிக்கும்படி நேரிட்டு விட்டால், அந்தத் தொகை, கட்சி நிதியிலிருந்து கொடுக்கப்பட்டு விடுகிறது.

இந்த மூன்று நியமங்களையும் தவிர, பொதுவாக எல்லாக் கட்சி அங்கத்தினர்களும், சொந்த விவகாரங்களிலாகட்டும், பொது விவகாரங்களிலாகட்டும் மிகவும் கண்ணியமாக நடந்துகொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கப் படுகிருர்கள். அவர்களுடைய பேச்சு, நடை,

உடை, ஒரு காரியத்தைச் செய்கிற மாதிரி முதலியவை களைப் பார்த்ததும், அவர்களுடைய தனித்துவம் விளங்க வேண்டும். அதாவது ஒழுங்கு முதல் ஒழுக்கம் வரையில், புறத்தூய்மை முதல் அகத்தூய்மை வரையில் எல்லாவற்றி லும் அவர்கள் மற்றவர்களுக்கு வழி காட்டிகளா யிருக்க வேண்டும். இன்னும் சாதாரண பாஷையில் சொல்வ தானல், அவர்கள், உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை யில் சமதர்மக் கட்சி அங்கத்தினர்களா யிருக்கவேண்டும். ஒரு தொழிற்சாலையில் அல்லது ஒரு காரியாலயத்தில், பலருக்கு மத்தியில் இரண்டு மூன்று சமதர்மக் கட்சி அங்கத்தினர்கள் இருந்தால், அந்த இரண்டு மூன்று பேரும் மற்றவர்களை அதிகமான வேலை செய்வதற்குத் தூண்டவேண்டும்; தாங்களும், மற்றவர்களைக் காட்டி லும் அதிகமாக வேலை செய்து காட்டவேண்டும். கணக் கெழுதுவது முதல் யந்திரம் சுற்றுவது வரை, மற்றவர் களுக்கு முன்மாதிரியா யிருக்கவேண்டும். இப்படி அதிகமான உழைப்பை மேற்கொண்டபோதிலும், வேறு விதங்களில் சிரமப்பட்டாலும், மற்றவர்களைவிட விசேஷ மான சலுகைகளை எதிர்பார்க்கக் கூடாது.

இங்ஙனம் சமதர்மக் கட்சியில் ஒழுங்கான அங்கத் தினர்களைத் தவிர, "அநுதாபிகள்" * என்ற ஒரு பிரிவி னர் உண்டு. இவர்கள் கட்சியினிடத்தில் விசுவாச முடையவர்கள்; அதன் கொள்கையில் அநுதாப முடைய வர்கள். ஆனல், அந்தக் கொள்கையைப் பற்றி, பொது வாக மார்க்ஸீயத்தைப் பற்றிப் பிறர்க்கு விளங்குமாறு சொல்லத் தெரியாதவர்கள். இப்படிப்பட்டவர்கள் ஒழுங் கான அங்கத்தினர்களாக முடியாது. "அநுதாபிகள் கோஷ்டி" † என்று இவர்களைத் தனியாகப் பிரித்து, கட்சியின் "பிரதம சபை" ‡ களோடு இணைத்து விடுகிருர்

* Sympathisers. † Sympathisers' Group. ‡ Primary Party Organ.

கள். இவர்கள் மேற்படி பிரதம சபையின் கூட்டங்களுக்கு ஆஜராகலாம்; அங்கு நடைபெறும் எல்லா விஷயங்களிலும் கலந்துகொள்ளலாம்; ஆனால் ஒட்டு மட்டும் கொடுக்கக் கூடாது.

கட்சியில் அங்கத்தினராகச் சேரும் விகிதாசாரத்தைக் கட்சித் தலைவர்கள் எப்பொழுதும் ஒரு நிதானத்திற்குள்ளாகவே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதாவது, கையினாலுழைத்துப் பிழைக்கிறவர்கள் யாரோ அவர்களுடைய விகிதாசாரம் எப்பொழுதும் கொஞ்சம் கூடுதலாக இருக்குமாறு பார்த்துக் கொள்கிறார்கள். பொதுவாகவே, தொழிலாளர்கள், விவசாயிகள், செம்படையிலுள்ளவர்கள் ஆகிய இவர்களுடைய எண்ணிக்கைதான், கட்சியில் எப்பொழுதும் அதிகமாக இருந்துகொண்டு வருகிறது.

ஆனால் ருஷ்ய—ஜெர்மானிய யுத்தம் ஏற்பட்டதன் விளைவாகச் சமதர்மக் கட்சியின் கட்டுப்பாடுகளிற் சில தளர்த்தி விடப்பட்டிருக்கின்றன. அங்கத்தினர் விகிதத்திலும் சில மாறுதல்கள் உண்டாகியிருக்கின்றன. 1939-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் முதல் வாரம் ஹிட்லர் யுத்தச் சங்கை ஊதினானல்லவா, அதற்கு ஆறு மாதங்களுக்கு முந்தி, 1939-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் சமதர்மக் கட்சியின் பதினெட்டாவது காங்கிரஸ் நடைபெற்றது. அதில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்களின் மூலமாக, கட்சி அங்கத்தினராவதற்கென் றேற்பட்டிருந்த நிபந்தனைகளின் கடுமை சிறிது குறைக்கப்பட்டது. உதாரணமாக, ஒழுங்கீனமாக நடந்துகொண்ட அங்கத்தினர்கள் விஷயத்தில் சிறிது தயை காட்டப்பட்டது. அங்கத்தினராகச் சேர விரும்புவோருடைய தகுதியைப் பொறுத்து அவர்களுடைய உமேதவாரிக் காலம் குறைக்கப்பட்டது. இன்னும் அங்கத்தினரில் பலதரத்தினர் உண்டு என்ற வித்தியாசம் எடுக்கப்பட்டுவிட்டது. இவைகளின் பயனாகக்

கட்சியின் கட்டுப்பாடு தளர்ந்து விட்டது என்று சிலர் கருதலாம். ஆனால், அப்படி யில்லை. அதற்குமாறாகக் கட்சியின் கட்டுக்கோப்பு விரிவடைந்திருக்கிறது என்று சொல்லவேண்டும்.

ருஷ்ய—ஜெர்மானிய யுத்தத்தில் ருஷ்யப் போர்வீரர்கள் காட்டிய வீரம், செய்த தியாகம் இவை யெல்லாம் சேர்ந்து சமதர்மக் கட்சியை இன்னும் விரிவு படுத்தியும், வலுப்படுத்தியும் இருக்கிறது. எப்படி யென்றால் இப்பொழுது, சமதர்மக் கட்சியில் செம்படை வீரர்களின் எண்ணிக்கை முன்னைக்காட்டிலும் அதிகப்பட்டிருக்கிறது. கட்சியில் அங்கத்தினராகச் சேரவிரும்பும் செம்படை வீரர்களுக்குப் பலவிதமான சலுகைகள் காட்டப்பட்டிருக்கின்றன. இவர்கள் பூரண சமதர்மவாதிகளாகவோ அல்லது மார்க்ஸ்—லெனின் சித்தாந்தத்தில் நன்கு தேர்ச்சி பெற்றவர்களாகவோ அல்லது எவ்வித மதப்பற்றும் இல்லாதவர்களாகவோ இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. போர் முகத்தில் வீரங்காட்டியதன் பயனாகத் தாய் நாட்டைக் காப்பாற்றிக் கொடுத்த ஒரு பெருமை மட்டும் உடையவர்களாக இருந்தால் போதும். இவர்கள் மூன்று மாதகாலம் உமேதவாரிகளாக இருந்து பின்னர் முழு அங்கத்தினர்களாகத் தங்களைப் பதிவுசெய்து கொள்ளலாம்.

இந்த மாதிரி சலுகைகள் காட்டப்பட்டு வருவதன் காரணமாகக் கட்சியின் அங்கத்தினர் எண்ணிக்கை ருஷ்ய—ஜெர்மானிய யுத்தம் நடைபெற்றுக் கொண்டு வந்த காலத்தில் அதிகப்பட்டது. 1942-ஆம் வருஷத்தில் மட்டும் 13,40,000 பேர் சமதர்மக் கட்சியில் அங்கத்தினராகச் சேர்ந்துகொண்டனர் என்று ஒரு கணக்கு கூறுகிறது.

இனி சமதர்மக் கட்சியின் அமைப்பைப் பற்றிச் சிறிது கவனிப்போம். இந்தக் கட்சியின் அமைப்பானது ஒரு கோபுரம் மாதிரி இருக்கிறதென்று ஏற்கனவே

சொல்லி யிருக்கிறோம். இந்தக் கோபுரத்தின் அடிப்படையில் இருப்பது "பிரதம சபை." இந்தப் பிரதம சபையில் குறைந்தது மூன்றுபேர் அங்கத்தினரா யிருக்கவேண்டும். ஒரு தொழிற்சாலை, கல்லூரி, ஆஸ்பத்திரி, பத்திரிகாலயம், ரெயில், கப்பல் முதலிய எந்த ஸ்தாபனத்திலும், எந்த இடத்திலும், கட்சி அங்கத்தினர்களாக மூன்றுபேர் இருப்பார்களானல், அவர்கள் மூவரும் சேர்ந்து ஒரு பிரதம சபையை ஏற்படுத்திக் கொள்ளலாம். இந்த மூன்று பேர் என்பது குறைந்த பட்ச எண்ணிக்கையே தவிர, இதற்குமேல் எத்தனை பேர் வேண்டுமானுலும் ஒரு பிரதம சபையில் அங்கத்தினரா யிருக்கலாம். ஒரு தொழிற்சாலையிலோ அல்லது வேறெந்த ஸ்தாபனத்திலோ நூற்றுக் கணக்கான கட்சி அங்கத்தினர்கள் இருப்பார்களானல், கட்சியின் நிருவாக சௌகரியத்திற்காகவும் வேலை சௌகரியத்திற்காகவும், இலாகாவாரியாகப் பிரதம சபை ஏற்படுத்திக் கொள்ளலாம். இப்படி ஒரே ஸ்தாபனத்தில் பல பிரதம சபைகள் இருக்கும் பட்சத்தில், இவைகளின் வேலையை ஒருமுகப்படுத்தி, கொண்டு செலுத்தும் பொருட்டு, பொதுக் கமிட்டி ஒன்று ஏற்படுத்திக் கொள்வார்கள்.

இந்தப் பிரதம சபைகளின் வேலை என்ன? எந்த ஒரு ஸ்தாபனத்தின் வேலையிலும் இந்தப் பிரதம சபை தலையிடாது. உதாரணமாக ஒரு தொழிற்சாலையில் சமதர்மக் கட்சியின் பிரதம சபையொன்று இருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். அந்தத் தொழிற்சாலையை எப்படி நிருவாகம் செய்யவேண்டும் என்பது போன்ற விவகாரங்களில் இந்தப் பிரதம சபை அங்கத்தினர்கள் தலையிடமாட்டார்கள். மற்றத் தொழிலாளர்களுக்கு என்ன உரிமைகள், என்ன கடமைகள் உண்டோ அதே உரிமைகள், அதே கடமைகள்தான், கட்சி அங்கத்தினர்களுக்கும் உண்டு. ஆனல், கட்சி அங்கத்தினர்கள் என்ற ஹோதா

வில் இவர்களுடைய பொறுப்பு அதிகம். இவர்கள் உழைப்பிலே சோர்வு காட்டுகிறவர்களுக்கு உற்சாகம் அளிக்க வேண்டும்; தவறி நடந்தவர்களைச் சீர்திருத்த வேண்டும்; பொதுவாகச் சமதர்ம தத்துவத்தை எங்கும், எல்லாரிடத்திலும் புகுத்த வேண்டும். இவர்கள் நடந்து கொள்கிற மாதிரியைப் பார்த்து, மற்றவர்களும் சமதர்மக் கட்சியில் சேரவேண்டுமென்று ஆவல் கொள்ள வேண்டும். தொழிலாளர் சங்கங்கள், கூட்டுறவு ஸ்தாபனங்கள் முதலிய எல்லாவற்றிலும் இவர்களுடைய செல்வாக்கு பரிணமித்திருக்கிறது. இவர்கள்தான், இந்தப் பிரதம சபைகள்தான், சமதர்மக் கட்சிக் கோபுரத்தின் அஸ்திவாரம்; உயிர் நாடி. இந்த மாதிரியான பிரதம சபைகள் சுமார் 1,30,000-க்கு மேற்பட்டு இருக்கின்றன.

பிரதம சபைகளுக்கு மேல் ஜில்லா சபை; ஜில்லா சபைக்கு மேல் மாகாண சபை; மாகாண சபைக்குமேல் மத்தியக் கமிட்டி. இப்படி வரிசைக் கிரமமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இதே வரிசையில் ஜில்லா மகாநாடுகள், மாகாண மகாநாடுகள், அகில ஐக்கிய மகாநாடு முதலியன அவ்வப்பொழுது கூடுகின்றன. இவைகளுக்கு அவ் அவற்றின் கீழ்ப்படியிலுள்ள மகாநாடுகளினால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆஜராவார்கள். அதாவது, கிராம சபைகளினால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஜில்லா மகாநாட்டுக்கும், ஜில்லா மகாநாடுகளினால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மாகாண மகாநாட்டுக்கும் இப்படி முறையே ஆஜராவார்கள். இந்த மகாநாடுகள் வருஷத்துக் கொருமுறை கூடி, தங்கள் தங்கள் நிருவாகக் கமிட்டியைத் தெரிந்தெடுத்துக் கொள்கின்றன. இந்த நிருவாகக் கமிட்டிகள்தான் மேலே சொன்ன ஜில்லா சபை முதலியன. இந்த மகாநாடுகளில் அரசாங்கத்தார் நிறைவேற்றின வேலைத் திட்டங்கள், இனிச் செய்யப் போகிற காரியங்கள் முதலிய யாவும் பரிசீலனை செய்யப்

பெறும். ஆனல், வாதப் பிரதிவாதங்களுக்கு இங்கு அதிகமாக இடம் அளிக்கப்படுவதில்லை.

கட்சியின் மேல் அமைப்பில் இருப்பது மத்தியக் கமிட்டி என்று சொன்னேமல்லவா? இதுதான் கட்சியின் நிருவாக சபை. இதில் சுமார் எழுபது அங்கத்தினர்கள் இருக்கிருர்கள். இந்த நிருவாக சபையானது, ஒரு தலைவர், ஒரு காரியதரிசி, மூன்று உதவிக் காரியதரிசிகள், இரண்டு காரியக் கமிட்டிகள் இவைகளின் மூலமாக எல்லா விவகாரங்களையும் நடத்திக்கொண்டு போகிறது. காரியக் கமிட்டிகளில் ஒன்றுக்கு "பாலிட் பீரோ" * என்று பெயர். மற்றென்றுக்கு "ஓர்க் பீரோ" † என்று பெயர். இந்த ஒவ்வொன்றிலும் ஒன்பது அல்லது பத்து பேர் அங்கத்தினர்கள். இந்த இரண்டு காரியக் கமிட்டிகளையும் தவிர, "கட்சி நிருவாகக் கமிஷன்" ‡ என்றும் "கணக்குப் பரிசோதனைக் கமிஷன்" $ என்றும் இரண்டு கமிட்டிகள் இருக்கின்றன. இந்தக் கமிட்டிகளும், மேலே சொன்ன தலைவர், காரியதரிசி முதலிய உத்தியோகஸ்தர்களும், அகில சமதர்மக் கட்சிக் காங்கிரசினுல் தெரிந்தெடுக்கப்படுகிருர்கள். கட்சி நிருவாகக் கமிஷனும், கணக்குப் பரிசோதனைக் கமிஷனும், கட்சிக் காங்கிரசினுல் நிறைவேற்றப்படுகிற தீர்மானங்களை எல்லா அங்கத்தினர்களும் சரியாக அநுஷ்டானத்திற்குக் கொண்டு வருகிருர்களா என்பதையும், கட்சி விஷயத்தில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டவர்களை விசாரித்துத் தகுதியில்லாதவர்களை விலக்குகிற வேலையையும் கவனித்துக் கொள்ளும்.

காரியக் கமிட்டிகளில் பாலிட் பீரோ என்பதுதான் முக்கியமானது. கட்சி உத்தியோகஸ்தர்கள், இந்த பாலிட்

---

* Politbureau. † Orgbureau.

‡ Commission of Party Control.

$ Auditing Commission.

பீரோவைக் கலந்து கொண்டுதான் எல்லாக் காரியங்களை யும் செய்வார்கள். அரசாங்கத்தின் உயர்தர உத்தியோகஸ்தர்களில் பெரும்பாலோர் இந்த பாலிட் பீரோவில் அங்கத்தினர்கள். பாலிட்பீரோ என்றால் அரசியல் கழகம் என்று அர்த்தம்.*

மத்தியக் கமிட்டியானது ஏறக்குறைய மாதத்திற்கொருமுறை கூடுகிறது. இந்த மாதாந்தக் கூட்டத்தில் ஒரு மாதத்தின் வேலைகள் பூராவும் விமரிசனம் செய்யப்படுவதோடு, அடுத்த மாதத்து வேலைத் திட்டமும் தயாரிக்கப்படுகிறது. இவைகளுக்கெல்லாம் மூலகாரணமாயிருப்பது பாலிட் பீரோ. கட்சியின் உத்தியோகஸ்தர்களாகிய தலைவர், காரியதரிசி முதலியோர், இந்த மாதக் கூட்டங்களில், ஒளிமறைவின்றி எல்லா விஷயங்களையும் ஆஜர்படுத்தி, கமிட்டியின் நம்பிக்கையையும் அங்கீகாரத்தையும் பெறுவார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்டாலினை†ப்பற்றி ஒரு வார்த்தை. ஸ்டாலினை ஒரு சர்வாதிகாரியாகவே, வெளியுலகம் சித்திரித்துக் காட்டுகிறது. உண்மையில் இது சரியில்லை. சமதர்மக் கட்சியின் காரியதரிசி இவன். இந்தப் பதவியை இவன் அநேக வருஷ காலமாகத் தொடர்ந்து வகித்து வருகிறான். இதற்குக் காரணம், கட்சிக்கு இவன் மீதுள்ள நம்பிக்கைதான். ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் போர் மூண்டபிறகு, இவன், காரியதரிசிப் பதவியோடு கூட, அரசாங்கத்தின் பிரதம மந்திரிப் பதவியையும் வகித்து வருகிறான். இந்தப் பிரதம மந்திரியினிடத்தி

*ருஷ்ய - ஜெர்மானிய யுத்தம் தொடங்குவதற்கு முன்னர், கீழ்க்கண்டவர்கள் இந்த பாலிட் பீரோவில் அங்கத்தினரா யிருந்தார்கள். (1) ஜே. வி. ஸ்டாலின், (2) எல். எம். காகனேவிச், (3) எம். ஐ. காலினின், (4) கே. இ. வோரோஷிலோவ், (5) ஏ. ஏ. ஆண்ட்ரீவ், (6) ஏ. ஏ. ஜாட்னேவ், (7) ஏ. ஐ. மிக்கோயான், (8) வி. எம். மோலோடோவ், (9) என். எஸ். க்ருஷேவ்.

† Stalin. *பிறந்தது 21-12-1879.*

லேயே, ருஷ்ய—ஜெர்மானிய யுத்தம் தொடங்கப்பட்ட வுடன் தற்காலிகமாக ராணுவ நிருவாகமும் ஒப்படைக் கப்பட்டது. யுத்தத்தை ஒழுங்காக நடத்தி வெற்றி காண வேண்டுமென்பதற்காகத்தான், இங்ஙனம் அதிகா ரங்கள் ஐக்கியப்படுத்தப்பட்டன.

சோவியத் ருஷ்யாவில் ஒரு விசித்திரம், அதாவது, ஒரு புதிர்மாதிரி காணப்படுவது என்னவென்றால், சம தர்மக் கட்சிக்கும் அரசாங்க நிருவாகத்திற்கும் உள்ள தொடர்புதான். சோவியத் அரசியல் திட்டத்தில் சம தர்மக் கட்சிக்குப் பொதுவாக ஒரு ஸ்தானம் கொடுக்கப் பட்டிருக்கிற தென்பது வாஸ்தவம். ஆனால், கட்சியின் மத்தியக் கமிட்டிக்கோ, அந்த மத்தியக் கமிட்டியின் காரியக் கமிட்டியாகிய பாலிட் பீரோவுக்கோ அதில் இட மில்லை. இவை, அரசாங்க ஸ்தாபனங்களுமில்லை. ஆனாலும், இவை, இந்த மத்தியக் கமிட்டியும் பாலிட் பீரோவும், அரசாங்க நிருவாகத்தைப் பற்றின விஷயங்களையே பெரும்பாலும் கவனிக்கின்றன. தேசத்தின் ஒழுங்கான நிருவாகமும், தேச மக்களினுடைய க்ஷேமமும் தங்க ளுடைய சொந்த விவகாரங்கள் மாதிரியாகவே பாலிட் பீரோவின் அங்கத்தினர்கள் கருதுகிறார்கள். பாலிட் பீரோவில் என்ன மாதிரியான திட்டங்கள் வகுக்கப் படு கின்றனவோ, அவற்றையே அரசாங்கம் அநுஷ்டானத் திற்குக் கொண்டு வருகிறது. பாலிட் பீரோவும் மந்திரிச் சபையும் தனித்தனி ஸ்தாபனங்களா யிருந்த போதிலும், ஒருவரே இரண்டிலும் அங்கத்தினரா யிருப்பதனாலும், தேசம் வேறே, அரசாங்கம் வேறே என்ற வேற்றுமை இல்லையாதலினாலும், எல்லாக் காரியங்களும் மிக ஒழுங் காக நடைபெற முடிகிறது.

அரசாங்கக் காரியாலயம் எப்படி பல இலாகாக்க ளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதோ அப்படியே மத்தியக் கமிட்டியின் காரியாலயமும் பல இலாகாக்களாகப் பிரிக்

கப்பட்டு, ஒவ்வோர் இலாகாவும் ஒவ்வோர் அங்கத்தின ருடைய நிருவாகத்தின் கீழ் வைக்கப்பட்டிருக்கின்றது. சமீபத்தில் ஏற்பட்ட ஒரு சீர்திருத்தத்தின்படி, மேற்படி காரியாலயம், விவசாய இலாகா என்றும், தொழில் இலாகா என்றும், இப்படி ஒன்பது இலாகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஒன்பது இலாகாக்களின் கீழ் உப இலாகாக்கள் வேறு உண்டு. உதாரணமாக, "லெனினிஸத்தைப் பற்றிய பிரசார இலாகா" என்கிற முக்கிய இலாகாவின் கீழ் (1) கட்சியைப்பற்றின பிர சாரம், கிளர்ச்சி; (2) பத்திரிகைகள், பிரசுரங்கள்; (3) பள்ளிக்கூடங்கள்; (4) புத்தகசாலைகள், விளையாட்டுச் சங்கங்கள்; (5) புதிய விஷயங்களை ஆராய்ச்சி செய்வது, கண்டுபிடிப்பது முதலிய யாவற்றையும் முறையே கவனிப் பதற்கென்று ஐந்து உப இலாகாக்கள் இருக்கின்றன. இதேமாதிரி, மாகாண, ஜில்லா, பிரதம சபைகளிலும் இலா காக்கள் ஏற்படுத்தப்பட்டு, காரியங்களை ஒழுங்காகச் செய்து வருகிறார்கள். கட்சிக் காரியாலயமென்றால், அரசாங்கக் காரியாலயம் மாதிரிதான்.

கட்சியின் ஒழுக்கத்தையும் கண்ணியத்தையும் காப் பாற்றுவதற்காக, தகுதியில்லாதவர்களை அவ்வப்பொழுது விலக்கிக்கொண்டு வருவதென்கிற முறையைத் தலைவர்கள் கண்டிப்பாக அநுஷ்டித்து வருகிறார்கள். இதற்காக, எவ்வித யதேச்சாதிகார முறையும் கையாளப்படுவது கிடையாது. தகுதியில்லாதவர்கள் என்று யார் சந்தே கிக்கப்படுகிறார்களோ அவர்கள் பகிரங்கமாகவே பரி சோதனை செய்யப் படுகிறார்கள். அவர்களுக்குச் சாதக மாகவோ பாதகமாகவோ, யார் வேண்டுமானாலும் சாட்சி சொல்லலாம். தகுந்த ருஜு ஏற்பட்டாலன்றி யாரும் அநாவசியமாக விலக்கப்படுவது கிடையாது. (1) கட்சி யின் கொள்கைகள், வேலைத்திட்டங்கள், அவ்வப்பொழுது நிறைவேற்றப்படுகிற தீர்மானங்கள், இவைகளைப்பற்றிச்

சரியாக அறிந்து கொள்ளாதவர்கள், இவைகளைப் பிறர்க்கு விளங்குமாறு சொல்லாதவர்கள், சொல்லத் திறமை யில்லாதவர்கள்; (2) கட்சியின் மூலமாகத் தமக்குக் கிடைத்திருக்கிற அந்தஸ்தை சொந்த நலனுக்காக உபயோகப்படுத்திக் கொள்கிறவர்கள், லஞ்சம் வாங்குகிறவர்கள், ஊழலாகக் காரியஞ் செய்கிறவர்கள், அரசாங்கத்தினிடம் தப்பெண்ணம் உண்டாகும்படியாகப் பாமர ஜனங்களிடத்தில் போதனை செய்கிறவர்கள் முதலியோர்; (3) கிராமங்களிலே தேசிய சொத்தாகக் கருதப் படுகிற நிலபுலங்களை, பிறருடைய அநியாயமான ஆக்கிரமிப்பினின்று காப்பாற்ருதவர்கள் ஆகிய இப்படிப் பட்டவர்கள், கட்சி அங்கத்தினர் பதவியினின்று விலக்கப்படுகிருர்கள். கடுமையான குற்றவாளிகள் என்று கருதப்படுகிறவர்களைக் கட்சியினின்று அடியோடு அப்புறப்படுத்தி விடுவதும், லேசான குற்றஞ் செய்தவர்களை அநுதாபிகள் கோஷ்டிக்கு இறக்கி விடுவதும் சர்வசாதாரண தண்டனைகள். கட்சிக்கு விரோதமாக, தேசத்திற்கு அல்லது அரசாங்கத்திற்கு விரோதமாகக் குற்றஞ் செய்கிறவர்கள், மற்றெல்லோரையும் போல் சட்டப்படி நடத்தப்படுகிருர்கள்.

கட்சியிலிருந்து விலக்கப்பட்டு விட்டார்களென்று சொன்னல், அவர்களுக்கு உத்தியோகம் போய்விட்டது, வாழ்க்கை போய்விட்டது என்பது அர்த்தமல்ல. கட்சியிலே அங்கத்தினரா யிருக்கிற கௌரவம் போய்விட்டது. அவ்வளவுதான். அவர்களிடத்தில் பொறுப்பான வேலை எதுவும் ஒப்படைக்கப் படமாட்டாது. சமுதாயத்தினர், அவர்களைக் கீழ்க் கண்ணேடுதான் பார்ப்பார்கள். பொதுவாக, மனிதத்தன்மை யில்லாதவர்கள் என்று அவர்கள் கருதப்படுவார்கள். ஏற்கனவே கூறியுள்ளபடி (பக். 103) ருஷ்ய—ஜெர்மானிய யுத்தத்தின் விளைவாக இப்பொழுது இந்த மாதிரியான குற்றவாளிகளுக்குச் சிறிது தயை

காட்டப்படுகிறது. இதற்காக இவர்கள் குற்றச் செயல் பொருட்படுத்தப் படுவதில்லை யென்றோ இவர்கள் தண்டிக்கப்படாமலே விடப்படுகிறார்க ளென்றோ அர்த்தமல்ல. முந்தி காட்டப்பட்ட கடுமை இப்பொழுது சிறிது குறைந்திருக்கிறது என்பதே அர்த்தம்.

சமதர்மத்தை இளைஞர்களின் பசுமனதில் புகுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் இளைஞர் இயக்கம் ஒன்று அற்புதமான முறையில் ருஷ்யாவில் அமைக்கப்பட்டிருக்கிறது. சமதர்மக் கட்சிக்கு அடுத்த படியாக இந்த இளைஞர் இயக்கந்தான் ருஷ்யாவிலேயே மிகவும் முக்கியமானது. இதனை மூன்று தரமாகப் பிரித்திருக்கிறார்கள். முதலாவது, "காம்ஸோமால்" * என்கிற பிரிவு. இதில் பதினான்கு வயதுக்கு மேல் இருபத்துமூன்று வயதுக்குட்பட்ட இளைஞர்கள் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். சுமார் ஐம்பது லட்சம் பேர் இதில் (ருஷ்ய ஜெர்மானிய யுத்தத்திற்கு முந்தி) அங்கத்தினர்களா யிருக்கிறார்கள். இந்த இளைஞர் கட்சி 1922-ஆம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இரண்டாவது, "பயோனீர்கள்." † பத்து வயதுக்குமேல் பதினாறு வயதுக்குட்பட்டவர்கள் இதில் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள். இது 1923-ஆம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் சுமார் 20 லட்சம் பேர் சேர்ந்திருக்கிறார்கள். மூன்றாவது "சிறிய அக்டோபரிஸ்ட்டுகள்." ‡ 1917-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் ¶ நடைபெற்ற புரட்சியின் ஞாபகார்த்தமாக இந்தப் பெயர் இடப்பட்டிருக்கிறது. எட்டு வயதிலிருந்து பதினோரு வயது வரையிலுள்ளவர்கள் இதில் அங்கத்தினர்கள். இதுவும் 1923-ஆம் வருஷத்தி லிருந்துதான் ஆரம்பிக்

---

* Comsomol. † Pioneers.

‡ Little Octoberists.

¶ 48-ஆம் பக்கத்தின் கீழுள்ள குறிப்பைப் பார்க்க.

கப்பட்டிருக்கிறது. இதில் இப்பொழுது சுமார் மூன்று லட்சம் பேர் அங்கத்தினர்களா யிருக்கிறார்கள்.

வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் இளைஞர்களுக்குத் தகுந்த பயிற்சி யளிக்கவேண்டு மென்பதற்காகவே, காம்ஸோமால் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இயக்கத்தை ஏறக்குறைய சாரணச் சிறுவர் இயக்கத்திற்குச் சமானமாகச் சொல்லலாம். இதில் சேர்ந்துள்ள இளைஞர்கள் "தங்களுடைய ஆசாரிய புருஷனாகிய லெனினுடைய பெயருக்குக் கௌரவம் உண்டாகக்கூடிய மாதிரி நடந்துகொள்ள வேண்டும். சலியாது உழைக்கிற, கண்ணியம் வாய்ந்த, துணிச்சலான போர்வீரர்களாகவும், எந்த நோக்கத்திற்காகப் புரட்சி செய்யப்பட்டதோ அந்த நோக்கத்தினிடத்தில் விசுவாசமுடையவர்களாகவும், இளைஞர்களுக்கும் மற்ற எல்லாத் தொழிலாளர்களுக்கும் வழிகாட்டிகளாகவும் இருக்கவேண்டும். தங்கள் கட்சிக்கு, அதாவது காம்ஸோமாலுக்கு அங்கத்தினர்கள் சேர்ப்பதற்காகத் தினந்தோறும் வேலை செய்ய வேண்டும். காம்ஸோமாலில் திறமையாக வேலை செய்கிறவர்கள்தான், சமதர்மக் கட்சியில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். மற்றும் இவர்கள், மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் இவர்களுடைய போதனைகளை ஒழுங்காகப் படிக்க வேண்டும். சமதர்மக் கட்சி அங்கத்தினர்களுக்கு எல்லா வகையிலும் உதவி புரிய வேண்டும். ஏதோ குறிப்பிட்ட ஒரு தொழிலைத் திறமையாகச் செய்வதற்குப் பயிற்சி பெற வேண்டும். தேசத்தின் விவசாயம், பொருளாதாரம் முதலியவற்றைப் பொதுவுடைமைகளாக்க எல்லாவகையிலும் உழைக்கவேண்டும். ஒவ்வொரு காம்ஸோமாலும் தேகப் பயிற்சியில் திறமைசாலியா யிருக்கவேண்டும். எந்தச் சமயத்திலும் ஐக்கிய சோவியத் ராஜ்யத்தைக் காப்பாற்றும்பொருட்டு ஆயுதமெடுத்துப் போராடச் சித்தமா யிருக்கவேண்டும். ராணு

வத்தில் எந்த ஒரு துறையிலாவது நன்ருகப் பயின்றிருக்க வேண்டும். ஆகாயப்படை, கப்பற்படை இவற்றில் உற்சாகம் கொள்ளவேண்டும். தங்களுக்குக் கீழ் இருக்கப்பட்ட பயோனீர்களுக்கு உதவிசெய்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவருவது ஒவ்வொரு காம்ஸோமாலினதும் இன்றியமையாத கடமையாகும்."

காம்ஸோமால்களுக்கென்று தனியாகப் பத்திரிகைகள், நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் முதலியன வெளியிடப்படுகின்றன. அடிக்கடி மகாநாடுகள் நடைபெறுகின்றன. சமதர்மக் கட்சியிலுள்ளது போலவே, இதிலும், தகுதியில்லாதவர்கள் கண்டிப்பாக விலக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் இருக்கின்றன.

காம்ஸோமால்களுக்கு அடுத்தபடியாக உள்ளவர்கள் பயோனீர்கள். இளைஞர்களுடைய உள்ளத்தில் எப்பொழுது, மனிதத்தன்மை என்கிற அரும்பு உண்டாகிறதோ அப்பொழுதுதான், அந்த வயதில்தான், அவர்களைப் பயோனீர்களாக்கி அவர்களுடைய சமுதாய உணர்ச்சியைத் தூண்டிவிட வேண்டுமென்பது லெனினின் கருத்து. இதற்காக, இந்தச் சிறுவர் இயக்கத்தைத் தொடங்கினன். வர்க்கப் பிரிவினையே இல்லாத சமுதாயம் என்கிற லட்சியம், இவர்களுடைய பசிய மனத்தில் பதிய வைக்கப்படுகிறது. அதற்கேற்ற விதமாகவே இவர்கள் பயிற்சி பெறுகிருர்கள். ஒவ்வொரு பயோனீரும் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு முன்னர், உலகத்திலுள்ள எல்லாத் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோருடைய நலனுக்காக உழைப்பதாகவும், லெனினுடைய போதனைகளை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதாகவும், பயோனீர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற சட்டதிட்டப்படி நடந்து கொள்வதாகவும் பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளவேண்டும். பிறகுதான் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டு, அதற்குரிய

சின்னங்களாகிய சிவப்பு நட்சத்திரம், சிவப்புக் கைகுட்டை ஆகிய இரண்டும் அளிக்கப்படுவார்கள். பயோனீர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சட்டங்கள் ஐந்து ; அநுஷ்டிக்க வேண்டிய திட்டங்கள் ஐந்து. ஐந்து சட்டங்களாவன :—

1. பயோனீர், தொழிலாளர் சமுதாயம் என்கிற லட்சியத்திற்கும், லெனினுடைய போதனைகளுக்கும் விசுவாசமுடையவனு யிருக்கிருன்.

2. பயோனீர், சமதர்மக் கட்சி அங்கத்தினருடைய இளைய சகோதரன்.

3. பயோனீர், தன்னைக் காட்டிலும் வயதில் சிறுவர்களை ஓர் அமைப்புக்குட்படுத்தி அவர்களுக்குத் தான் ஒரு வழி காட்டியா யிருக்கவேண்டும்.

4. பயோனீர், எல்லாப் பயோனீர்களுக்கும், உலகத்திலுள்ள தொழிலாளர்கள், விவசாயிகள் முதலியவர்களுடைய குழந்தைகளுக்கும் தோழன்.

5. பயோனீர், அறிவை விருத்தி செய்து கொள்வதில் முனையவேண்டும். விஷய ஞானந்தான், தொழிலாளர் சமுதாயத்தை அமைப்பதற்காக நடத்தவேண்டிய போராட்டத்திற்குத் தேவையாயுள்ள சக்தி.

ஐந்து திட்டங்களாவன :—

1. பயோனீர், தன்னுடைய தேகத்தைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், மற்றவர்களுடைய தேக சுகத்தையும் பாதுகாக்கவேண்டும். அவன் சகிப்புத் தன்மை யுடையவனுகவும், சந்தோஷ முடையவனுகவும் இருக்கவேண்டும். தினந்தோறும் காலையில் எழுந்து காரியங்களை ஒழுங்காகத் தொடங்கவேண்டும்.

2. பயோனீர், தன் காலத்தையும் மற்றவர்களுடைய காலத்தையும் வீணுக்காமல், சுருக்கமாகச் செலவழிக்க

வேண்டும். அவன், தன் காரியங்களைக் காலா காலத்திலும் விரைவாகவும் செய்து முடிக்கவேண்டும்.

3. பயோனீர், சுறு சுறுப்புள்ளவனாகவும் விடா முயற்சியுடையவனாகவும் இருக்கவேண்டும். எந்த நிலைமையிலும், யார் கீழும் வேலைசெய்து சமாளித்துக்கொள்ள அவன் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும்.

4. பயோனீர், மற்றவர்களுடைய சொத்துக்களைக் காப்பாற்றிக்கொடுக்க வேண்டும். தன்னுடைய துணிமணிகள், புஸ்தகங்கள், தொழிலுக்குரிய கருவிகள் முதலியவைகளின் விஷயத்தில் சர்வ ஜாக்கிரதையுட னிருக்கவேண்டும்.

5. பயோனீர், பேசுகிறபோது பிரமாணமாக, சத்தியமாக என்று சொல்லிக்கொண்டு பேசக்கூடாது; புகை பிடிக்கக்கூடாது; மதுபானம் செய்யக்கூடாது.

இதே பிரகாரந்தான், சிறிய அக்டோபரிஸ்ட்டுகளுடைய சட்டதிட்டங்களும், ஸ்தாபன அமைப்பும் இருக்கின்றன. இவற்றில் ஆண் பெண் வித்தியாச மில்லாமல், எவ்விதத்தொழில் வேற்றுமையும் பாராட்டப் படாமல் எல்லோரும் அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள்.

இந்த இளைஞர் இயக்கத்தை நாம் பொதுப் படையாக நோக்குகிறபோது, ஒருவன் அல்லது ஒருத்தி, சமுதாயத்திலே பயனுள்ள ஓர் அங்கத்தினராவதற்கு எப்படிப் பாலியத்திலிருந்தே ஒழுங்கான முறையில் பயிற்சி செய்யப்பட்டு வருகிறார்கள் என்பது நன்கு புலனாகும். சிறுவர்கள் அல்லது சிறுமிகள் இந்த இளைஞர் இயக்கங்களிலே சேர்ந்திருப்பதனால் அவர்களுடைய படிப்புக்கு ஏதேனும் இடையூறு ஏற்பட்டுவிடுகிறதோ என்று யாரும் சந்தேகிக்க வேண்டியதில்லை; பயப்பட வேண்டியதுமில்லை. பாட முறைகளையும், இந்த இளைஞர் அமைப்புகளையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவே ஏற்படுத்தி யிருக்கிறார்

கள். பொதுவாக இளைஞர்கள், சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்கு, அவர்களால் இயன்றவரை வேலை செய்யுமாறு தூண்டப்படுவதற்கே இந்த இளைஞர் இயக்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள், பொது நன்மைக்கான எல்லாக் காரியங்களையும் விருப்பு வெறுப்பின்றிச் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். அவர்கள் சாக்கடை கழுவலாம்; தெருப் பெருக்கலாம்; பொதுக் கட்டிடங்கள் கட்டுகிறபோது அவைகளுக்கு உதவி செய்யலாம்; கல்வி வாசனையில்லாதவர்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கலாம்; குடிப்பழக்கத்தை நிறுத்த வேலை செய்யலாம்; எதிர்பார்க்கிற அளவு பொருளுற்பத்தி செய்யாத தொழிற்சாலைகள், விவசாய ஸ்தாபனங்கள் முதலியவற்றில் புகுந்து அங்குள்ளவர்களுக்கு உதவி செய்யலாம்; கூட்டங்களில், ஊர்வலங்களில், அமைதியை நிலைநாட்டவும், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும் உதவிசெய்யலாம். இப்படிப் பலவகைத் தொண்டுகளிலே ஈடுபட்டு, பிறர்க்குச் சேவை செய்து கொண்டிருப்பதுதான் வாழ்க்கையின் பயன் என்ற உண்மையை அநுபவபூர்வகமாக உணர்ந்துகொண்டுவிடுகிறார்கள் ருஷ்ய இளைஞர்கள். தேசம் வேறு, தனி மனிதன் வேறு, சமுதாயம் வேறு என்ற வேற்றுமை உணர்ச்சியே இவர்களுக்கு இல்லாமற் போய்விடுகிறது. இப்படிப்பட்டவர்கள்தான் பிற்காலத்தில் தேசத்தின் தலைவர்களாக வருகிறார்கள். இவர்களை, ஒவ்வொருவரும் ஒவ்வொரு தலைவராக இருக்கிற இந்த மகா ஜாதியை, எளிதிலே அடக்கிவிட முடியுமா? அழித்துத்தான்விட முடியுமா?

இனி, "கோமிண்டர்ன்"* என்ற ஒரு ஸ்தாபனத்தைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லிவிடுவோம். இது தான், சர்வதேச சமதர்மக் கட்சிகளின் தலைமை ஸ்தாப

* Comintern or Communist International.

னம். லெனின் முதலிய போல்ஷ்வெக் தலைவர்களின் நோக்கம், வர்க்கப் பிரிவினைகள் இல்லாத, உலகமனைத்திற்கும் பொதுவான ஒரு சமுதாயத்தை ஏற்படுத்திவிட வேண்டுமென்பது; இதற்காக உலகப் புரட்சிசெய்ய வேண்டுமென்பது. இதனைப் படிப்படியாகச் செய்து கொண்டு போவதா அல்லது மொத்தமாகச் செய்வதா என்பதைப் பற்றி, சோவியத் தலைவர்களுக்குள் கருத்து வேற்றுமை இருக்கிறது. ஸ்டாலினுக்கும் ட்ரோட்ஸ்கிக்கும் ஏற்பட்ட பிணக்குக்கு இந்தக் கருத்து வேற்றுமைதான் அடிப்படையான காரணமாயிருந்திருக்கிறது. ஒரு நாட்டிலே மட்டும் புரட்சிசெய்து வெற்றிபெறுவதில் பயனில்லை, எல்லா நாடுகளிலும் சேர்ந்தாற்போல் புரட்சியை உண்டு பண்ணவேண்டும், அப்பொழுதுதான் வர்க்கப் பிரிவினைகள் இல்லாத சமுதாயத்தை அமைக்க முடியும் என்பது ட்ரோட்ஸ்கியின் கொள்கை. முதலில் சொந்த நாட்டிலே புரட்சியை உண்டு பண்ணி அதில் வெற்றிபெற்ற பிறகு, படிப்படியாக மற்ற நாடுகளுக்குச் செல்ல வேண்டுமென்பது ஸ்டாலின் சார்பாருடைய கொள்கை. ஆனாலும், இரு சார்பினருக்கும், உலகப் புரட்சி, உலக சமுதாயம் என்பதுதான் லட்சியம். இந்த லட்சியத்தின் பிரதிநிதியாக இருப்பதுதான் கோமிண்டர்ன். உலகத்துப் பல நாடுகளிலுமுள்ள சமதர்மக் கட்சி ளுக்கு இதில் பிரதிநிதித்துவமுண்டு. இந்தப் பிரதிநிதிகள் அடங்கிய சர்வதேச சமதர்ம மகாநாடு, இரண்டு வருஷத்திற் கொருமுறையோ அல்லது நான்கு அல்லது ஏழு வருஷங்களுக்கு ஒரு முறையோ, உலக நிலைமைக் கேற்றவாறு கூடுகிறது. இந்த மகாநாடுதான், கோமிண்டர்னின் தலைவர், காரியதரிசி முதலிய உத்தியோகஸ்தர்களையும் அன்றாட அலுவல்களைக் கவனிக்க ஒரு நிருவாகக் கமிட்டியையும் நியமிக்கிறது. இந்தக் கமிட்டியின் நடவடிக்கைகளிலும், கமிட்டியின் காரியாலய நிருவாக

விஷயத்திலும், சோவியத் அரசாங்கமும், ருஷ்ய சமதர்மக் கட்சியின் மத்தியக் கமிட்டியும் அதிகமான பங்கெடுத்துக் கொள்கின்றன வென்றாலும், இவைகளுக்கென்று விசேஷமான சலுகைகளோ உரிமைகளோ கிடையாது. மற்ற நாட்டுப் பிரதிநிதிகளுக்கு என்ன உரிமைகள், சலுகைகள் உண்டோ அதே உரிமைகள், சலுகைகள்தான், ருஷ்யப் பிரதிநிதிகளுக்கும் உண்டு. ஆனாலும், கோமிண்டர்னின் தலைமைக் காரியாலயம் 1919-ஆம் வருஷத்திலிருந்து அதாவது கோமிண்டர்ன் ஸ்தாபிதமான காலத்திலிருந்து, மாஸ்கோவிலேயே இருந்து வருகிறது. கோமிண்டர்ன் என்பதுதான் "தர்ட் இண்டர்நேஷனல்" என்று சொல்லப்படுகிற "மூன்றுவது சர்வதேச அமைப்பு." "முதலாவது இண்டர்நேஷனல்" 1864-ஆம் வருஷத்திலும் "இரண்டாவது இண்டர்நேஷனல்" 1889-ஆம் வருத்திலும் ஸ்தாபிக்கப்பட்டுக் கலைந்துபோயின.* தர்ட் இண்டர்நேஷனல் என்கிற மூன்றுவது சர்வ தேச அமைப்பும் 1943-ஆம் வருஷம் ஜூன் மாதம் பத்தாந்தேதி கலைக்கப்பட்டு விட்டது.

இந்த மூன்றுவது சர்வ தேச அமைப்பு கலைக்கப்பட்டு விட்டதைப் பற்றிச் சில வார்த்தைகள். இந்த அமைப்பைக் கலைத்து விட்டதனால், ருஷ்யா, தனது சமதர்ம லட்சியத்தினின்று இறங்கி விட்டதென்றும், தனது தேசமே பெரிது, தனது தேச நலனே முக்கியம் என்ற குறுகிய தேசிய மனப்பான்மை கொண்ட மற்ற நாடுகளைப்போல் ஆகி விட்டதென்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால் இன்றைய ருஷ்யாவின் தலை விதியை எழுதிக் கொண்டிருக்கிறவர்கள் இப்படிக் கருதவில்லை.

முதலாவது, சர்வ தேசப் புரட்சி யென்று சொல்லிக் கொண்டு அதில் தங்களுடைய தனித்துவத்தை அழித்துக்

* First International—*1864*. Second International—*1889*. Third International—*1919*.

கொண்டு விட ருஷ்யர்கள் விரும்பவில்லை. தங்களைக் காப்பாற்றிக் கொள்வது இவர்களுக்கு மிகவும் அவசியமாயிருந்தது. ருஷ்ய—ஜெர்மானிய யுத்தமானது இந்த அவசியத்தை இவர்களுக்கு நன்கு எடுத்துக் காட்டியது. அப்படித் தங்களைக் காப்பாற்றிக் கொள்வது, தங்களுடைய பலத்தைக் கொண்டும், ருஷ்யாவின் எதிர்கால நல் வாழ்வில் தங்களுக்கிருக்கப்பட்ட தன்னம்பிக்கையின் மீதும் தான் சாத்தியம் என்று உணர்ந்தார்கள். மற்ற நாடுகளிலுள்ள புரட்சி சக்திகளை நம்பிக் கொண்டிருப்பதில் பயனில்லை யென்பதை நன்கு கண்டு கொண்டார்கள். மற்றும், முதலாளித்துவம் என்னும் கவசம் பூண்டிருக்கும் ஏகாதிபத்திய சக்தியை எதிர்த்துப் போராடுவதற்காக உலகத்திலுள்ள புரட்சி சக்திகள் யாவும் ஒன்று சேரப் போகிறதென்று எதிர் பார்த்து அல்லது நம்பி இவர்கள் பல தடவைகளில் ஏமாற்ற மடைந்து போயிருக்கிறார்கள். ஓர் ஆசிரியன் கூறுகிறான் :—

"இண்டர் நேஷனல் விஷயத்தில் ஏற்பட்ட பல அநுபவங்களிலும் ருஷ்யர்கள் அதிகமான ஏமாற்ற மடைந்து போனதற்கு ஜெர்மானியர்களே பொறுப்பாளிகளாயிருந்தார்கள். ருஷ்யாவில் புரட்சி தொடங்கிய காலத்தில், ஜெர்மானிய மக்கள் காட்டிய அநுதாபமும், அவர்களுக்கிருந்த புரட்சி மனப்பான்மையும், போல்ஷ்வெக் லட்சியத்திற்குப் பெரிய பின்பலமா யிருந்தது. ஜெர்மன் தொழிலாளர்கள், வெறும் நம்பிக்கை மட்டும் ஊட்டவில்லை ; புரட்சிக்கு உதவி செய்வதாகவும் வாக்களித்தார்கள். 1918-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் கெய்ஸரின் சேனைகள் ருஷ்யாவுக்குள்ளே வெகுதூரம் வந்து விட்டபோது லெனின் பின்வருமாறு கூறினான் :— 'ஜெர்மன் தொழிலாளர்கள் நமக்கு உதவி செய்ய வருகிற விஷயத்தில் காலங்கடத்துகிறார்கள். ஆனல் அவர்கள் பொருட்டு நாம் வீணாகக் காத்துக் கொண்டிருக்க மாட்டோம்.' ஜெர்மன்

தொழிலாளர்கள், வாஸ்தவத்தில் ருஷ்யப் புரட்சி வாதி களின் உதவிக்கு வந்தார்கள். ஆனல் இவர்கள், அதாவது மாஸ்கோவிலுள்ள புரட்சி வாதிகள் எதிர் பார்த்தபடி, ருஷ்யாவுக்குச் சாதகமான கட்சி ஜெர்மனியில் அதிகாரத் திற்கு வரவில்லை. 1923-ஆம் வருஷம் பொதுவுடைமை பலாத்காரவாதியான மாக்ஸ் ஹோல்ஸ் என்பவன், ஜெர் மனியின் மத்திய மாகாணங்களில் ஒரு புரட்சிக்கு ஏற் பாடு செய்தபோது ருஷ்யர்களுக்கு மறுபடியும் ஒரு நம்பிக்கை உண்டாயிற்று; ஜெர்மனியில் ஒரு தொழி லாளர் புரட்சி ஏற்படுமென்று நம்பினர்கள்......ஆனல், இந்த நம்பிக்கை நிறைவேற வில்லை. இருந்தாலும் ஜெர்மன் பொதுவுடைமை வாதிகளை மிகவும் கௌரவமாக மதித்து வந்தார்கள்.........கோமிண்டர்னின் ஜெர்மன் கிளை ஸ்தாபத்தினர், 1933-ஆம் வருஷம், கோமிண்டர்னின் தலைமை ஸ்தாபனத்திடமிருந்து தங்களுக்குக் கிடைத்த உத்திரவுகளை நிறைவேற்ற முடியாத நிலைமையில் இருந் தனர். மற்றும் மேற்படி உத்திரவுகள் பிரயோஜன மற்றவையென்றும் கருதினர். பாசிஸத்திற்கு விரோதமா யிருந்த இயக்கத்தில் இவர்கள் தொடர்ந்தாற்போல் பிளவு களை உண்டுபண்ணி வந்ததால், ஹிட்லர் அதிகாரத்திற்கு வருவது சாத்தியமாயிற்று.

சீனவிலும் இதேமாதிரி நிலைமைதான். அங்கே பொது வுடைமைக் கட்சி வெற்றி பெறக்கூடிய சந்தர்ப்பங்கள் பல ஏற்பட்டு அவை நிறைவேருமலே போயின. ஜெர் மனியைப் போலவே சீனவிலும் பொதுவுடைமை வாதிகள், முக்கியமான ஜனநாயக இயக்கங்களுக்கு விரோதமாக, அதாவது ஒருபுறம் அபேதவாத ஜனநாயகக் கட்சிக்கு விரோதமாகவும், மற்றொருபுறம் கோமிண்டாங்கிற்கு விரோதமாகவும் வேலை செய்தார்கள்.

கோமிண்டர்னைப் பற்றிய செய்திகள் சோவியத் ஜனங்களுக்கு வரவரக் குறைவாகக் கிடைத்துக் கொண்டு

வந்தன. ஏனென்றால் யாரும் தங்கள் தோல்விகளைப் பகிரங்கப்படுத்திக் கொள்ள விரும்ப மாட்டார்களல்லவா? முன்னே பத்திரிகைகளில், அந்நிய நாட்டுச் செய்திகள் என்று சோவியத் பிரஜைகளுக்குக் கிடைத்துக் கொண்டிருந்ததெல்லாம் முதலாளித்துவ நாடுகளில் எங்கெங்கே குழப்பங்கள் ஏற்பட்டன, வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன, பொதுவுடைமை வாதிகள் எங்கெங்கே வெற்றி பெற்றார்கள் என்பவைகளேயாகும். இவை வர வரக் குறைந்து விட்டன. அவர்களுடைய கவனத்தின் பெரும் பாகம் தங்களது நாட்டின் பொதுவுடைமை நிர்மாண சம்பந்தமான பிரச்னைகளில் சென்றது. முதலாளித்துவ நாடுகளில் என்ன நடைபெறுகிறது என்பதைப்பற்றித் தெரிந்து கொள்ள அவர்களுக்கு அவகாசமே கிடைக்க வில்லை. மற்றும் சோவியத் பத்திரிகைகளில் உள்நாட்டு விஷயங்களுக்கு அதிக இடம் கொடுக்கப் படுகிறது. இந்த விஷயங்கள் போக இடம் மிஞ்சினால் அந்த இடத்தில் வெளி நாட்டு விஷயங்கள் போடப் படுகின்றன. ஸ்பெயினில் உள் நாட்டுக் குழப்பம் (1936-37) ஏற்பட்டபோது அது விஷயத்தில் சோவியத் பொது ஜனங்கள் சிறிது அதிகமாகக் கவனஞ் செலுத்தினார்கள். ஆனால் இந்தக் கவனம், ஸ்பெயினிலுள்ள பொதுவுடைமைக் கட்சியின் மீதல்ல; பொதுவாக ஸ்பானிஷ் குடியரசுப் படைகள் அனைத்தின் மீதுமேயாகும்......கோமிண்டர்ன் கலைக்கப் பட்டபோது சோவியத் யூனியனில் எவ்வித உணர்ச்சியும் ஏற்பட வில்லை. அதைப்பற்றி எந்த விதமான வியாக்கியானமும் எழவில்லை. ஏனென்றால் சோவியத் மகா ஜனங்களைப் பொறுத்த மட்டில், கோமிண்டர்ன் என்பது உயிருள்ள ஒரு ஸ்தாபனமாக இருக்கவில்லை.'' *

---

* Stalin and eternal Russia by Walter Kolarz, pp. *112, 113.*

# 6. சோவியத் அரசியல் அமைப்பு

சமதர்மத்தைப் பிரசாரம் செய்வது, அதைப்பற்றிய ஞானத்தை ஜனங்களுக்குப் புகட்டுவது சமதர்மக் கட்சி; அதனை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வந்து நிருவாகம் செய்வது சோவியத் அரசாங்கம். இந்த அரசாங்க அமைப்பு, அரசியல் பண்டிதர்களுக்கு ஒரு சிக்கலான பிரச்னை. ஆனால், சோவியத் தலைவர்கள், இந்தச் சிக்கலை வெகு அழகாகத் தீர்த்து வைத்திருக்கிறார்கள்; சிறுபான்மையோர் உரிமை, எல்லோருக்கும் ஓட்டுரிமை, ஜனப்பிரதிநிதித்துவம், ஜனங்களுடைய ஜீவாதாரமான உரிமைகளுக்குச் சட்டரீதியான பாதுகாப்பு முதலியவை சம்பந்தமாக எழக்கூடிய எல்லாச் சிக்கல்களையும் ஒழுங்குபடுத்தி, பொருளுற்பத்தி, பொருளுற்பத்திக்கான சாதனங்கள் ஆகியவற்றைத் தேசிய மயமாக்கி, சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தை அமைத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். சோவியத் தலைவர்களிடத்தில் காணப்படுகிற ஒரு விசேஷ அமிசம் என்னவென்றால், அவர்கள் எந்த புதிய திட்டத்தையும், அல்லது எந்த ஒரு புதிய சீர்திருத்தத்தையும், லட்சியத்தின்மீது கொண்டுள்ள அபார மோகத்தினால், அவசரப்பட்டு அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து விடுவதில்லை; ஒரே மூச்சாகவும் கொண்டுவந்து விடுவதில்லை. ஜனங்களுடைய பரிபக்குவம், தேசத்தினுடைய ஸ்திதி, தங்களுடைய நிருவாக சக்தி முதலியவற்றை யெல்லாம் கவனித்துக் கொண்டுதான் ஒரு திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருகின்றனர். ஒரே சட்டம், அல்லது ஒரே திட்டம் எந்தக் காலத்திற்கும், எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும் பொருந்தாது என்ற உண்மையை அவர்கள் நன்றாக உணர்ந்து, அதன் பிரகாரம்

புதிதாகச் சிருஷ்டிக்க வேண்டிய இடத்தில் சிருஷ்டித்தும், மாற்றவேண்டிய இடத்தில் மாற்றியும், ஒழுங்காகவும் நிதானமாகவும் காரியங்களைச் செய்துகொண்டு போகின்றனர். ஒரே ஓர் உதாரணத்தை மட்டும் இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறோம். அதைக்கொண்டு சோவியத் தலைவர்களின் சந்தர்ப்ப மதியூகத்தை நாம் தெரிந்து கொள்ளலாம்.

*1918*-ஆம் வருஷ ஆரம்பத்தில், சோவியத் தலைவர்கள் அரசாங்க நிருவாகத்தைக் கைப்பற்றிக்கொண்ட பிறகு, கீழ்க்கண்டவர்களுக்கு ஓட்டுரிமை கிடையாது என்று சட்டத்தின் மூலம் தடைசெய்து விட்டனர்:— (*1*) லாபம் சம்பாதிப்பதற்காகக் கூலிகளை அமர்த்தி வேலை வாங்குவோர்; (2) தங்களுடைய சொந்த உழைப்பினின்று பெருத வருமான முடையவர்கள்—அதாவது வட்டித் தொழில்செய்து சம்பாதிப்போர், தொழிற் ஸ்தாபனங்களை நடத்திச் சம்பாதிப்போர், பூஸ்திதிகளினின்று சம்பாதிப்போர் முதலியவர்கள்; (3) வியாபாரிகள், வியாபார ஏஜெண்டுகள்; (4) மதப் புரோகிதர்கள், மடாதிபதிகள்; (5) ஜார் ஆட்சிக் காலத்தில் போலீஸ் இலாகாவிலும் ரகசியப்போலீஸ் படையிலும் வேலைசெய்தவர்கள், ஜார் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் முதலியோர்; (*6*) சித்த சுவாதீன மில்லாதவர்களென்று சட்டமூலமாக அங்கீகரிக்கப்பட்டவர்கள், மற்றொருவருடைய பாதுகாப்பின்கீழ் இருக்கிறவர்கள் முதலாயினோர்; (7) நியாய ஸ்தலங்களில் கடுமையான குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்கள்.

*1937*-ஆம் வருஷம் புதியதோர் அரசியல் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இதன்படி, கடைசியில் சொன்ன இரண்டு பிரிவினருக்குமட்டும், அதாவது (1) சித்தசுவாதீன மில்லாதவர்களென்று சட்டமூலமாக அங்கீகரிக்கப்பட்டவர்கள் முதலாயினோர் (2) நியாய

ஸ்தலங்களில் கடுமையான குற்றங்களுக்காகத் தண்டிக் கப்பட்டவர்கள் ஆகிய இவர்களுக்குமட்டும் ஓட்டுரிமை கிடையாதே தவிர, பதினெட்டு வயது அடைந்த மற்றெல் லாருக்கும், ராணுவத்திலே சேர்ந்து உழைக்கிறவர்கள் உள்பட, ஓட்டுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? இருபது வருஷங்களுக்கு முன்னர், எந்தக் காரணங்களுக்காகச் சில பிரிவினருக்கு ஓட்டுரிமை மறுக்கப்பட்டதோ அந்தக் காரணங்கள் இருபது வருஷங் களுக்குப் பின்னர் இல்லாமற் போய்விட்டன. அதனால் மறுக்கப்பட்டிருந்தவர்களுக்கு மறுபடியும் உரிமை வழங் கப்பட்டுவிட்டது. அதாவது போல்ஷ்வெக்கர்கள் அர சாங்க நிருவாகத்தைக் கைப்பற்றிக் கொண்டபோது, சம தர்மக் குழந்தையை வளர்க்க வேண்டியிருந்தது; அதற் காக, அதன் வளர்ச்சிக்கு இடையூறு யிருந்த சக்திகளை யெல்லாம் அப்புறப்படுத்தி வைக்கவேண்டியது அவசிய மாயிருந்தது. இப்பொழுது குழந்தை நன்றாக வளர்ந்து யௌவன தசையை அடைந்துவிட்டது. இனி எந்தச் சக்தியும் அதற்கு இடையூறு செய்யமுடியாது. இடையூறு செய்யக்கூடுமென்று கருதப்பட்ட சக்திகளும் இப் பொழுது சக்தி யிழந்துவிட்டன. இனியும் அந்தச் சக்தி களைப் பொருட்படுத்தி அவற்றிற்குச் சட்ட புத்தகத்தில், இடங் கொடுத்துக் கொண்டிருப்பானேன்? ஆகவே, அவற்றை ரத்து செய்து விட்டனர்.

எந்தச் சந்தர்ப்பத்தில் எதைச் செய்யவேண்டுமோ அதை நிர்த்தாட்சண்யமாகச் செய்யவோ, பலருடைய நன்மைக்காக ஒரு சிலருடைய சலுகைகளைப் பறிமுதல் செய்யவோ, ஜனங்களுக்கு அதிகமான நன்மை யுண்டாகு மென்று தெரிந்தால் போட்ட திட்டத்தை மாற்றச்செய் யவோ சோவியத் தலைவர்கள் பின்வாங்குவது கிடையாது. இதற்காகப் போற்றுதல் ஏற்படுமானாலும் சரி, தூற்றுதல் ஏற்படுமானாலும் சரி, அதை அவர்கள் லட்சியம் செய்வதே

இல்லை. அவர்களுடைய நோக்கம் சமுதாய நலன். ஜனங்களுக்கு எதைச் செய்தால் சந்தோஷமா யிருக்குமோ அதைச் செய்யாமல், எதைச் செய்தால் நன்மையா யிருக்குமோ அதையே அவர்கள் செய்கிறார்கள்.

சோவியத் ராஜ்யத்தில் இப்பொழுது அநுஷ்டானத்தில் இருந்துவருகிற 1937-ஆம் வருஷத்து அரசியல் திட்டம், பரிபூரண ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டது; சிலர், தவறாக நினைக்கிறபடி சர்வாதிகாரத்தை மட்டும் சிகரமாக உடையதல்ல. மனிதனுடைய ஜீவாதாரமான உரிமைகளென்று, புனிதமான உரிமைகளென்று கருதப் படுகின்ற யாவும் இந்தச் சட்டத்தின்மூலம் அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றன.

சோவியத் அரசியல் அமைப்பானது, சமதர்மக் கட்சி அமைப்பு மாதிரி, ஆறு அடுக்குகள் உள்ள ஒரு கோபுரம்; கிராமத்தில் ஆரம்பித்து தலை நகரத்தில் முடிகிறது. இந்த அமைப்பைப்பற்றிச் சுருக்கமாக இங்குக் கூறுவோம்.

சோவியத் என்ற வார்த்தைக்குச் சபை என்பது பொருள். முன்னர் இஃது எந்த விதமான சபையையும் குறிப்பதா யிருந்தது. இப்பொழுது, தொழிலாளர்கள், போர்வீரர்கள், விவசாயிகள் ஆகிய இவர்களுடைய பிரதிநிதிகளடங்கிய ஒரு சபையையே குறிக்கிறது. இதில் முதலாளிகள், நிலச்சுவான்தார்கள், கடைக்காரர்கள், வேலையில்லாதவர்கள் முதலியோர் அங்கத்தினர்களாகச் சேர முடியாது. 1905-ஆம் வருஷத்துப் புரட்சியின்போது இந்தச் சோவியத்துகள் இயற்கையாகத் தோன்றி, ஒடுங்கி, மீண்டும் 1917-ஆம் வருஷத்துப் புரட்சியின்போது தலைதூக்கின வென்பதைப்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோமல்லவா? * பீட்ரோகிராட் நகரத்திற்கு லெனின் வந்த பிறகு, இந்தச் சோவியத்துகளைப் பலப்படுத்தி, இவற்

---

* 23-ஆம் பக்கத்தையும் 39-ஆம் பக்கத்தையும் பார்க்க.

றின் ஏகோபித்த பலத்தைக் கொண்டு, 1917-ஆம் வருஷம் நவம்பர் மாதம் அரசாங்க நிருவாகத்தைக் கைப்பற்றிக் கொண்டான். இவற்றை ஜனசக்தியின் பிரதிநிதிகளாக வலுப்படுத்தினன். இந்த ஜனசக்தியின் பலம் அவனுக்கு இருந்ததனல்தான் எந்தவிதமான எதிர்ப்பையும் அவனல் சமாளிக்க முடிந்தது; புதிய சமுதாயத்தை அமைக்க முடிந்தது. 1918-ஆம் வருஷம், இந்தச் சோவியத்துகளை அஸ்திவாரமாகக் கொண்டு ஓர் அரசியல் அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது. இதுவே பின்னர் 1923-ஆம் வருஷம் ருஷ்ய சமஷ்டி அரசியல் அமைப்பாக மாறியது. பின்னர் 1937-ஆம் வருஷம், இந்த அரசியல் அமைப்பு, புதிய முறையில் சீர்திருத்தப்பட்டு அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இந்த அரசியல் அமைப்பின் அடிப்படையிலுள்ள கிராம சோவியத்தைப் பற்றி முதலில் கவனிப்போம். இஃது, ஏறக்குறைய நமது கிராமப் பஞ்சாயத்து மாதிரி; ஆனல் அதைவிட அதிகமான பொறுப்பும் கடமையும் உடையது. இது, மூன்று வருஷத்திற் கொருமுறை தெரிந்தெடுக்கப்படுகிறது. சித்த சுவாதீன மில்லாதவர்கள், குற்றஞ் செய்து தண்டனை அடைந்தவர்கள் ஆகிய இவர்களைத் தவிர்த்து, கிராம எல்லைக்குள் வசிக்கிற, பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட, ஆண் பெண் எல்லாரும் இதற்குப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கிற உரிமையுடையவர்கள். அதாவது, இவர்களெல்லோரும் வாக்காளர்கள். இவர்கள் அடிக்கடி கூடி, கிராமப் பொதுவான விஷயங்களைப் பற்றிச் சர்ச்சை செய்வார்கள். இதற்கே கிராம காங்கிரஸ் என்று பெயர். இப்படிக் கூட்டங் கூடிப் பேசுவது தவிர, இவர்கள் மூன்று வருஷத்திற்கு ஒரு முறை கிராம சோவியத்துக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கிற முக்கியமான கடமையையும் செய்ய வேண்டும். நூறு பேருக்கு ஒருவர் விகிதம் பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப் படுவார்கள்.

ஆனல் ஒரு சோவியத்தில் குறைந்த பட்சம் மூன்று பிரதிநிதிகளாவது இருக்க வேண்டும். எனவே, ஒரு கிராமத்தினுடைய ஜனத் தொகையைப் பொறுத்திருக்கிறது, அந்தக் கிராம சோவியத்தின் பிரதிநிதிகளுடைய எண்ணிக்கை.

ருஷ்ய கிராமாந்தரங்களில், இந்தத் தேர்தல் கூட்டம் மிகவும் ருசிகரமா யிருக்கும். ஜனங்கள் இதில் மிகவும் உற்சாகத்துடன் கலந்து கொள்வார்கள். தேர்தலை நடத்துவதற்கென்று ஒரு தலைவரும், அவருக்கு உதவி செய்யக் கிராமத்துப் பெரியதனக்காரர்களாகப் பத்துப் பேரும் தெரிந்தெடுக்கப்படுவார்கள். இவர்களுடைய தலைமையில் தேர்தல் கூட்டம் தொடங்கும். கூட்டத்திற்கு மொத்த ஓட்டர்களில் நூற்றுக்கு நாற்பது பேர் விகிதம் ஆஜராகி யிருக்கிருர்களா என்று பார்ப்பார்கள். அந்த விகிதாசாரம் இருந்தால்தான் தேர்தல் நடைபெறும். இல்லாவிட்டால் கூட்டமே தள்ளி வைக்கப்பட்டு விடும். பிறகு, சோவியத்தில் எத்தனை ஸ்தானங்கள் உண்டோ அத்தனை ஸ்தானங்களுக்கும் பெயர்கள் ஒன்றன் பின்னென்ருகப் பிரேரிக்கப்படும். சிலர் நிராகரிக்கப்படலாம்; சிலர் அங்கீகரிக்கப்படலாம். இப்படி மணிக்கணக்கில் நடைபெற்று, கடைசியில் எல்லாப் பிரதிநிதிகளும் தெரிந்தெடுக்கப்படுவார்கள். இவர்களடங்கியதுதான் கிராம சோவியத். இந்த மாதிரியான கிராம சோவியத்துகள் ருஷ்யாவில் சுமார் எழுபதினுயிரம் இருக்கின்றன. இந்த எழுபதினுயிரம் சோவியத்துகளில் சுமார் இருபது லட்சம் பிரதிநிதிகள் இருக்கிருர்கள்.

கிராம சோவியத்தின் கடமை விரிவானது. கிராம நிருவாகத்தைக் கவனிப்பதோடல்லாமல், இது, தனக்கு மேற்பட்ட ஜில்லா, மாகாண, தேச விவகாரங்களிலும் சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சோவியத் அரசாங்கத்தினர் எதிர்பார்க்கின்றனர். ஒரு கிராம

சோவியத்தானது தனது நிருவாக எல்லைக்குள், அரசாங்கத்தின் எல்லாச் சட்ட திட்டங்களும் சரியானபடி அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றனவா என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டும்; நீதிஸ்தலங்கள் ஏற்படுத்தி எல்லாருக்கும் நியாயம் கிடைக்குமாறு செய்யவேண்டும்; தேசப் பாதுகாப்பு விஷயத்தில் எல்லா ஜனங்களும் பங்கெடுத்துக் கொள்ளுமாறு செய்யவேண்டும்; கிராமத்திலுள்ள தொழில் ஸ்தாபனங்கள், கூட்டுப் பண்ணைகள், கல்விச் சாலைகள், கூட்டுறவுப் பண்டக சாலைகள் முதலியவற்றைத் திறம்பட நடத்த வேண்டும்; சுகாதார வசதிகளைக் கவனிக்க வேண்டும்; சுருக்கமாகச் சொன்னால், ஜனன மரணக் கணக்குப் பதிவு செய்வது முதல், விளக்கேற்றுவது, ரோட்டுப் போடுவது வரை எல்லாவற்றையும் கவனிக்க வேண்டும். ஒரு கிராம சோவியத் இன்னின்ன காரியங்களைச் செய்ய வேண்டு மென்பதாகச் சுமார் 92 கடமைகள் வரிசைக் கிரமமாக வலியுறுத்தப் பட்டிருக்கின்றன. இந்த ஜாபிதாவைப் பார்க்கிறபோது யாருமே பிரமித்துப் போகக் கூடும்.

இந்தக் கடமைகள் யாவும் அப்படியே நிறைவேற்றப் படுகின்றனவா என்று கேட்பதில் பிரயோஜனமில்லை. நிறைவேற்றவும் படலாம்; நிறைவேற்றப்படாமலுமிருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால், இவைகளை யெல்லாம் செய்வதற்கு உரிமை அளிக்கப் பட்டிருக்கிறதே அதுதான் முக்கியம். இந்த உரிமையை எவ்வளவு தாராளமாக உபயோகிக்கலாமோ அவ்வளவு தாராளமாக உபயோகிக்குமாறு பிரதியொரு கிராம சபையும் அடிக்கடி தூண்டப்பட்டு வருகிறது. இதன் மூலமாக, ருஷ்ய மகாஜனங்கள் அரசியல் உணர்ச்சி பெறுவதோடு, தங்களுடைய கடமையையும் உணர்ந்து வருகிறார்கள். இதனால்தான் உரிமையினுடைய புனிதத்தன்மை அவர்களுக்கு நன்றாகப் புலப்பட்டிருக்கிறது.

கிராம சோவியத்துக்கு, தலைவர், காரியதரிசி, நிருவாகக் கமிட்டி முதலிய எல்லாச் சம்பிரதாயங்களும் உண்டு. இந்த உத்தியோகஸ்தர்கள் அடிக்கடி மாற்றப்படுகிறார்கள். ஏனென்றால், எல்லாருக்கும் நிருவாக அனுபவம் ஏற்பட வேண்டுமல்லவா? இந்த உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் உண்டு. இவர்கள் வேறெந்த ஸ்தாபனங்களிலேனும் வேலை செய்து கொண்டிருந்தால், அந்த ஸ்தாபனங்களிலிருந்து வந்து, எந்தக்காலம் வரையில் கிராம நிருவாகத்தை ஏற்று நடத்திக்கொண் டிருக்கிறார்களோ அந்தக் காலம் வரையில் இவர்களுக்கு அந்த ஸ்தாபனத்திலிருந்து ரஜா கிடைக்கிறது; அதே சம்பளமும் கிடைக்கிறது. அப்படி யில்லாதவர்களுக்குக் கிராம சோவியத்திலிருந்து கமிட்டியார் நிர்ணயிக்கிறபடி ஒரு தொகை சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. இவர்கள், இந்தக் கிராம அதிகாரிகள், தங்களுக்குக் கிடைத்திருக்கிற இந்தப் பதவியை, அதிகாரஞ் செலுத்துவதற்கான ஒரு கருவியாக உபயோகியாமல், தொண்டு செய்வதற்கேற்ற ஒரு சந்தர்ப்பமாக உபயோகிக்கிறார்கள்.

கிராம சோவியத்துக்கு அடுத்தபடியாக உள்ளது நகர சோவியத். இது நகர முனிஸிபாலிடி மாதிரி. இதனுடைய தேர்தல் முறை சிறிது சிக்கலானது. ஒரு பெரிய நகரத்தில் அநேகம் தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இவர்களுக்கு எப்படிப் பிரதிநிதித்துவம் அளிப்பது? சோவியத் தலைவர்கள் என்ன செய்திருக்கிறார்களென்றால், ஒவ்வொரு தொழிற்சாலைக்கும், அதிலே வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து, இத்தனை பிரதிநிதிகள் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இது தவிர, தொழிற்சாலைகளில் வேலை செய்கிற தொழிலாளர் அல்லாத மற்றவர்களுக்கு, ஒரு தெருவுக்கு அல்லது ஒரு பேட்

டைக்கு இத்தனை பிரதிநிதிகள் என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இப்படி நிர்ணயம் செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு, அந்தத் தெரு முனை அல்லது சதுக்கத்தில் தேர்தல் நடைபெறுகின்றது. இந்தத் தேர்தலானது, கிராம சோவியத் தேர்தல் மாதிரி, ஒருமுறை நடந்து முடிந்து போகாது; வடிக்கட்டி வடிக்கட்டிப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கிற முறையில் தேர்தல்கள் நடைபெறும். இதற்காக அநேகம் தேர்தல் கூட்டங்கள் நடைபெறவேண்டி யிருக்கும். இந்தத் தேர்தல்கள் மூன்று வருஷத்துக் கொருமுறை நடைபெறுகின்றன. பெரிய நகரங்களா யிருந்தால், ஜனத் தொகைக்குத் தகுந்தபடி நகர சோவியத்தில் ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் அங்கத்தினரா யிருப்பார்கள்.

இந்த ஆயிரக்கணக்கான பிரதிநிதிகளும் ஒன்று சேர்ந்து ஒரு காரியத்தைச் செய்ய முடியாதல்லவா? இதற்காக ஒரு நிருவாக சபை ஏற்படுத்தப் படுகிறது. இந்த நிருவாக சபை, அடிக்கடி கூடிப் பொதுவாக எல்லா நிருவாக விஷயங்களையும் பரிசீலனை செய்கிறது. ஆனால் நகரசபையின் அன்றாட அலுவல்களைக் கவனிப்பதற்கென்று ஒரு காரியக் கமிட்டி உண்டு. இதில் சுமார் பத்து அல்லது பன்னிரண்டு அங்கத்தினர்கள் இருப்பார்கள். இவர்கள் ஒவ்வோர் இலாகாவின் நிருவாகப் பொறுப்பை ஏற்று நடத்துவார்கள். இவர்களுக்கு ஆலோசனை சொல்லவும், வேறுவிதமான உதவிகளைச் செய்யவும், மேற்படி நிருவாகக் கமிட்டியானது, பல உப கமிட்டிகளாகப் பிரிந்துகொண்டு, ஒவ்வோர் இலாகாவுக்கும் ஒவ்வோர் உப கமிட்டி வீதம் வேலை செய்யும். நகர சபையின் அன்றாட வேலைகளில் பழகுவதற்கென்று தொண்டர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இதன் மூலமாக, நகரப் பிரஜைகளுக்கு நிருவாகப் பயிற்சி உண்டாகிறது.

பெரிய நகரங்களை மொத்தமாக நிருவாகம் செய்ய முடியாதென்பதற்காக அதனைப் பல பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு நகரசபை விகிதம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இதற்குப் "பகுதி சோவியத்" (ரேயன் சோவியத்)* என்று பெயர். ரேயன் என்றால் பேட்டை அல்லது பகுதி என்று அர்த்தம். இதுவும் மேற்படி நகர சோவியத் முறையிலேயே நிருவாகம் செய்யப்படுகிறது.

நகர சோவியத்துக்கு அடுத்தபடியாக உள்ளது ஜில்லா சோவியத். இதனை "க்ராய்" அல்லது "ஒப்ளாஸ்ட்" † என்று அழைப்பார்கள். இது நமது ஜில்லா போர்ட் மாதிரி. பிரதியொரு ஜில்லாவின் தலைநகரத்திலும் அந்த ஜில்லாவின் எல்லைக்குள்ளிருக்கிற கிராம சோவியத்துகளினாலும் நகர சோவியத்துகளினாலும் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட ஜில்லா சோவியத் காங்கிரஸ், வருஷத்துக் கொருமுறை கூடுகிறது. இந்தக் காங்கிரசானது, ஜில்லா நிருவாகத்திற்காகத் தலைவர், காரியதரிசி, நிருவாக சபை முதலிய உத்தியோகஸ்தர்களைத் தெரிந்தெடுக்கிறது. இந்த ஜில்லா சோவியத்துகள் பூரணப் பொறுப்பாட்சி பெற்றவை. தனிப்பட்ட ஒரு ஜாதியார் குறிப்பிட்ட ஒரு ஜில்லாவில் வசிக்கிறார்களென்று சொன்னால், அது பூரணப் பொறுப்பாட்சியுடைய ஒரு தனி மாகாணமாகக் கருதப்பட்டு அதன் பிரகாரமே நடத்தப்பட்டு வருகிறது.

ஜில்லா சோவியத்துக்கு மேற்பட்டது மாகாண சோவியத். இவற்றில் சில, பூரணப் பொறுப்பாட்சி பெற்ற பல சிறிய மாகாணங்களைத் தன்னகத்தே கொண்ட சமஷ்டிக் குடியரசு நாடுகளாக இருக்கின்றன. சோவியத் ருஷ்யாவில் இப்பொழுது (1945-ஆம் வருஷத்தில்) பதினாறு

---

* Rayon Soviet † Kraai or Oblast.

குடியரசு நாடுகள் அல்லது மாகாணங்கள் இருக்கின்றன.* இவற்றின் சமஷ்டிதான் அதாவது ஐக்கியந்தான் "சோவியத் சமதர்மக் குடியரசு நாடுகளின் ஐக்கிய ராஜ்யம்." மேற்படி பதினறு குடியரசு நாடுகளும், பூரணப் பொறுப்பாட்சி பெற்ற பல குடியரசு நாடுகளாக அல்லது சிறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. உள்ளுக்குள் சுழன்ருேடுகிற பல சக்கரங்களைக் கொண்ட ஒரு யந்திரம் மாதிரியுள்ளது சோவியத் அரசியல் அமைப்பு. உதாரணமாக, பதினறு குடியரசு நாடுகளில் ஒன்றும், மிகப் பெரிதுமான ருஷ்யக் குடியரசு நாட்டில் பதினன்கு குட்டி மாகாணங்கள் ஐக்கியப் படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த மாகாணங்கள் சிலவற்றில், சுயாட்சியுடைய ஜில்லாக்கள் சமஷ்டியாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கோபுரம் மாதிரியுள்ள இந்த அரசியல் அமைப்பில், ஒவ்வொரு வரிசையும், தனக்குக் கீழ் இருக்கப்பட்ட வரிசைகளின் மீது ஆதிக்கஞ் செலுத்த உரிமை பெற்றிருக்கிறது; தனக்கு மேற்பட்ட வரிசைகளின் ஆதீனத்திற்கு அடங்கி நடக்கக் கடமைப் பட்டிருக்கிறது.

பூரணப் பொறுப்பாட்சி பெற்ற இந்தப் பதினறு குடியரசு நாடுகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி காங்கிரஸ்கள் உண்டு. அதாவது நமது மாகாண மகாநாடுகள் மாதிரி. இந்தக் குடியரசு நாடுகளின் காங்கிரசுகளுக்கு, ஜில்லா சோவியத், நகர சோவியத், கிராம சோவியத் இவைகளின் மூலமாகப் பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்படுகிருர்கள். இந்தப் பிரதிநிதிகள் சில வருஷங்களுக்கு ஒரு முறைகூடி, மாகாண நிருவாகத்திற்காக ஒரு நிருவாக சபையைத் தெரிந்தெடுக்கிருர்கள். இந்த நிருவாக சபையில், அந்தந்த மாகாணத்தின் விஸ்தீரணத்திற்குத் தகுந்தபடி சுமார் நூறு பேர் முதல் நானூறு பேர் வரையில் அங்கத்தினர்

* இவற்றின் விவரங்களை அநுபந்தம் 1-ல் காண்க.

களா யிருக்கிறார்கள். இந்த நிருவாக சபைதான் மாகாணச் சட்டசபை. இது, வருஷத்தில் மூன்று முறையோ, நான்கு முறையோ, அந்தந்த மாகாண நிலைமையை அநுசரித்துக் கூடி, சட்ட சம்பந்தமானவையும் நிருவாக சம்பந்தமானவையுமான எல்லா விவகாரங்களையும் கவனிக்கிறது. இந்த நிருவாக சபையினால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு காரியக்கமிட்டி, மாகாண அரசியலை நடத்துகிறது. இதுவே மாகாண மந்திரிச் சபை. இந்த மந்திரிச் சபையானது, அந்தந்த மாகாணத்தின் விஸ்தீரணத்தையும் மற்றத் தேவைகளையும் அநுசரித்துச் சிறியதாகவும் பெரியதாகவும் இருக்கும்.

1944-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் முதல் தேதி நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தின் பிரகாரம், இந்தப்பதினாறு குடியரசு நாடுகளுக்கு, 1937–ஆம் வருஷத்துச் சட்டத்தின் கீழ் என்னென்ன உரிமைகள் வழங்கப் பட்டிருந்தனவோ அவைகளைக் காட்டிலும் அதிகமான உரிமைகள் வழங்கப் பட்டிருக்கின்றன. இதற்கு முன்னர் இந்தக் குடியரசு நாடுகள், சிலசில விவகாரங்களில் சமஷ்டி அரசாங்கத்தை அநுசரித்தே நடந்துகொள்ள வேண்டியிருந்தது. இப்பொழுது சுயமாக நடந்து கொள்வதற்கு அநுமதிக்கப் பட்டிருக்கின்றன. உதாரணமாக (1) ஒவ்வொரு குடியரசு நாடும் தனக்கென்று சொந்தமாக ஒரு ராணுவத்தை வைத்துக் கொள்ளலாம். (2) ஒவ்வொரு குடியரசு நாடும் அயல் நாட்டு அரசாங்கங்களோடு நேராகத் தொடர்பு வைத்துக் கொள்ளலாம்; அவைகளோடு சமரஸப் பேச்சுகள் நடத்தலாம்; ஒப்பந்தங்கள் செய்து கொள்ளலாம். (3) சோவியத் ஐக்கிய ராஜ்யத்திலிருந்து, அதாவது சமஷ்டியிலிருந்து விலகிக் கொள்ள ஒவ்வொரு குடியரசு நாட்டுக்கும் பரிபூரண உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த உரிமையை உபயோகிப்பதற்கு என்னென்ன காரணங்கள் இருக்க வேண்டு மென்பது

முன்னைக் காட்டிலும் இப்பொழுது, இந்தப் புதிய சட்டத்தின்கீழ் தெளிவாக்கப் பட்டிருக்கிறது.

மேலே சொன்ன பதினாறு குடியரசு நாடுகளுக்கும் மேற்பட்டது சமஷ்டி அரசாங்கம். இஃது, அகில ருஷ்ய சோவியத் காங்கிரசினால் தெரிந்தெடுக்கப்படுவது. சாதாரணமாக நான்கு வருஷத்திற்கொரு முறை கூடுகிற இந்தக் காங்கிரசுக்கு, விசாலமான சோவியத் ராஜ்யத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும், ஜனத் தொகையில் சுமார் ஐம்பதினாயிரம் பேருக்கு ஒரு பிரதிநிதி விகிதம் தெரிந்தெடுக்கப்பட்ட ஆயிரக் கணக்கான பிரதிநிதிகள் வருகிறார்கள். ஒவ்வொரு காங்கிரசுக்கும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை வித்தியாசப் படுகிறது. இதற்குக் காரணம் ஜனத்தொகையின் சுருக்கப் பெருக்கம். தனித்தனி பாஷைகளைப் பேசுகிற, விதம்விதமான கலாசாரங்களையுடைய, ஒருவரை யொருவர் முன்பின் பார்த்தறியாத, ஆண் பெண் என்ற வித்தியாசமோ, சமதர்மக் கட்சியைச் சேர்ந்தவர் சேராதவர் என்ற வித்தியாசமோ இல்லாத, ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் ஒரே இடத்தில் ஒரே மகாநாட்டில் ஒரே நோக்கத்திற்காகக் கூடி, விவகாரங்களை ஒழுங்காக நடத்துகிற காட்சி மிகவும் அற்புதமானது. இதில் வாதப்பிரதிவாதங்களும், அபிப்பிராய வேற்றுமைகளும் வராமலிருப்பதில்லை. ஆனால், எல்லாம் சுமுகமாகவே தீர்க்கப்பட்டு விடுகின்றன.

இந்த அகில—ருஷ்யக் காங்கிரசின் முக்கியமான வேலை, நிருவாகக் கமிட்டியைத் தெரிந்தெடுப்பது. அடுத்த காங்கிரஸ் கூடுகிறவரையில் இந்த நிருவாகக் கமிட்டிதான் இருக்கும். அதாவது இதனுடைய ஆயுட்காலம் நான்கு வருஷம். இதுவே சமஷ்டி சட்ட சபை: சுப்ரீம் சோவியத்* என்பது. இஃது இரண்டு பிரிவினை யுடையது. ஒன்று, சோவியத்துகளின் சட்ட சபை. † மற்றொன்று,

* Supreme Soviet. † Soviet of the Union.

ஜாதீய சட்ட சபை. * அதாவது, ருஷ்யாவில் விதவிதமான பாஷை, கலாசார பரம்பரை முதலியவற்றையுடைய பல ஜாதியினர் இருக்கின்றன ரல்லவா, அந்த ஜாதியினருக்குத் தனிப் பிரதிநிதித்துவம் தேவை யென்பதற்காக இந்த ஜாதீய சபை நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. சோவியத்து களின் சட்டசபையில் சுமார் மூன்று லட்சம் பேருக்கு ஒரு பிரதிநிதி விகிதம் தெரிந்தெடுக்கப்பட்ட சுமார் 570 பிரதிநிதிகளும், ஜாதீய சபையில் சுமார் 575 பிரதிநிதிகளும் இருக்கிறார்கள். இந்த இரண்டு சபைகளும், வருஷத் திற்கு இரண்டுமுறை கூடுகின்றன. கூடி, சமஷ்டி அர சாங்கத்தின் எல்லாச் சட்ட, நிருவாக விவகாரங்களையும் கவனிக்கின்றன. விசேஷ அலுவல்களிருந்தால் அவை களைக் கவனிக்க விசேஷக் கூட்டங்களும் நடைபெறுவ துண்டு.

இந்த இரண்டு சபைகளுக்கும் ஒரே காலத்திலேயே தேர்தல்கள் நடைபெறுகின்றன. அப்படி நடைபெறுகிற தேர்தல்கள் நான்கு வருஷத்திற் கொருமுறை. இந்தத் தேர்தல்களின்போது ஓட்டுரிமையுடைய பிரதி யொரு நபரும், சோவியத்துகளின் சட்ட சபைக்கு ஒரு பிரதிநிதி யையும், ஜாதீய சபைக்கு ஒரு பிரதிநிதியையும் ஒரே சமயத் தில் தெரிந்தெடுக்கலாம். அதாவது ஓட்டுரிமையுடைய ஒவ்வொருவருக்கும் இரண்டு ஓட்டுகள் கொடுக்க உரிமை யுண்டு. பிரதி யொரு நபருக்கும் இந்த உரிமையை யளித்து அதன் மூலம், சோவியத் ராஜ்யத்திலுள்ள எல்லா ஜனங்களுக்கும் பொதுவாயுள்ள நலன்களும், யார், எந்த ஜாதி அல்லது இனத்தைச் சேர்ந்தவர்களா யிருக்கிறார் களோ அந்த ஜாதி அல்லது இனத்தினுடைய நலன்களும் பாதுகாக்கப்படுகின்றன.

இந்த இரண்டு சபைகளும் ஒரே மாதிரியான அந்தஸ் துடையவை. மேல்சபை, கீழ்சபை என்கிற வித்தியாசம்

* Soviet of Nationalities.

கிடையாது. ஒன்றுக்கு மற்றொன்று துணை. இரண்டு சபைகளும் ஒரே காலத்தில் கூடி ஒரே காலத்தில் கலைகின்றன. சட்ட நிர்மாணம் செய்கிற விஷயத்தில் இரண்டு சபைகளும் ஒரேமாதிரியான உரிமையுடையவை. ஒவ்வொரு சபையும் தன் விவகாரங்களை நடத்திக்கொள்ள, ஒரு தலைவரையும் இரண்டு உபதலைவர்களையும் தெரிந்தெடுத்துக் கொள்கிறது.

இந்த இரண்டு சபைகளும் ஒன்றுகூடி "பிரெசிடியம்" * என்ற ஒரு சபையை ஏற்படுத்துகிறது. இந்த பிரெசிடியம் தான், சுப்ரீம் சோவியத்தின் பிரதிநிதியாயிருந்து எல்லாக் காரியங்களையும் கவனிக்கிறது. அதாவது, சுப்ரீம் சோவியத்தானது எப்பொழுதுமே கூடிக் கொண்டிருக்க முடியாதல்லவா? நான்கு வருஷத்திற்கொருமுறைதானே கூடுகிறது? இந்த இடைக்காலத்தில் அதன் பிரதிநிதியாயிருந்து அது செய்யவேண்டிய காரியங்களைச் செய்துகொண்டிருக்க ஒரு ஸ்தாபனம் வேண்டுமல்லவா? அதுதான் இந்த பிரெசிடியம். ஒரு பெரிய ஸ்தாபனத்தின் பிரதிநிதிச்சபை என்று இதனை ஒருவாறு கூறலாம். இதில் மொத்தம் முப்பத்தேழு அங்கத்தினர்கள் இருப்பார்கள். 1937-ஆம் வருஷத்துச் சட்டப்படி இந்த பிரெசிடியம் சபைக்குப் பல அதிகாரங்கள் அளிக்கப் பட்டிருக்கின்றன. சுப்ரீம் சோவியத்தைக் கூட்டுதல், கலைத்தல், புதிய தேர்தல் நடத்துதல், நடைமுறையில் இருக்கும் சட்டங்களுக்குச் சரியான வியாக்கியானம் செய்து அவைகள் சம்பந்தமான தாக்கீதுகள் பிறப்பித்தல், மந்திரிச் சபையினர், சட்டத்திற்கு விரோதமாக ஏதேனும் உத்திரவுகள் பிறப்பித்திருந்தால் அவைகளை ரத்து செய்தல், சுப்ரீம் சோவியத்தின் அங்கீகாரத்தை எதிர்பார்த்து மந்திரிகளை விலக்குதல், புதிய மந்திரிகளை நியமித்தல், தக்கவர்களுக்குக் கௌரவப் பட்டங்கள் வழங்குதல், குற்றஞ் செய்து

* Presidium.

தண்டனை பெற்றவர்களுக்குக் கருணைகாட்டுதல், அவசியமென்று பட்டால் ராணுவத்தலைவர்களை விலக்குதல் அல்லது நியமித்தல், வேறொரு நாட்டோடு போர்தொடுக்க வேண்டியது அவசியமாயிருந்தால் அப்பொழுது யுத்தப் பிரகடனம் செய்தல், படைதிரட்டுதல், உடன்படிக்கைகளை அங்கீகரித்தல், அந்நிய நாடுகளுக்குத் தூதர்களை நியமித்தல் ஆகிய பல சிறப்பட்ட அதிகாரங்கள் இந்த பிரெசிடியத்திற்கு உண்டு.

சுப்ரீம் சோவியத்தானது, பிரெசிடியத்தை ஏற்படுத்துவதுபோலவே ஒரு மந்திரிச் சபையையும், இந்த மந்திரி சபையோடு ஒத்துழைக்கச் சில கமிட்டிகளையும் நியமனம் செய்கிறது. இந்த மந்திரிச் சபையை சுப்ரீம் சோவியத்தின் காரிய நிருவாக சபையென்று சுருக்கமாகச் சொல்லலாம்.

சோவியத் அரசியல் அமைப்பிலேயே இந்த மந்திரிச் சபைதான் நாயகமா யிருப்பது; அதிகார ஊற்றுப்போலிருப்பது. வாசகர்களுக்கு நன்ருகத் தெரியும் பொருட்டு இதனை நாம் மந்திரிச் சபை என்று அழைக்கிரேமே தவிர, ருஷ்யாவில் இதற்கு இந்தப் பெயரில்லை. ருஷ்ய அரசாங்கத்தின் தலைவர்கள், தங்களை மந்திரிமார்கள் என்று அழைத்துக் கொள்வதோ அதிகாரிகளென்று கருதிக் கொள்வதோ கிடையாது. "ஜனங்களுடைய காரியத்தை நடத்துகிறவர்கள்" * என்றுதான் தங்களை அடக்கமாக அழைத்துக் கொள்ளுகிருர்கள். "ஜனங்களுடைய காரியத்தை நடத்துகிறவர்களின் சபை" † என்பதே மந்திரிச் சபையின் பெயர். இதில் முப்பத்திரண்டு மந்திரிகள் இருக்கிருர்கள். இவர்கள்தான் சமஷ்டி அரசாங்கத்தின் அதிகாரிகள். இந்த மந்திரிச்சபை தவிர, தொழில் திட்டக் கமிட்டி, போக்குவரத்துக்களைக் கவனிக்கிற கமிட்டி முதலிய பல கமிட்டிகள் இருக்கின்றன.

---

* People's Commissars † Council of People's Commissars.

(1) அந்நிய நாட்டு விவகாரங்கள் (அதாவது சண்டை செய்வது, சமாதானம் செய்து கொள்வது, ஒப்பந்தம் செய்து கொள்வது, எல்லையை மாற்றியமைப்பது, அந்நியநாட்டு ஸ்தானீகர்களோடு பேச்சு வார்த்தைகள் நடத்துவது முதலியன) (2) ராணுவம் (3) போக்குவரத்துகள், தபால், தந்தி, ரேடியோ முதலியவை (4) நாணயச் செலாவணி, அரசாங்கப் பண லேவாதேவி விவகாரங்கள் (5) பிரஜா உரிமை (6) நிலம், நீர், சுரங்கம் முதலிய தேசீய சொத்துக்களைப் பராமரித்தல் (7) அந்நிய நாட்டு ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் (8) பொருளுற்பத்தி, பொருள் விநியோகம் இவைகளைப்பற்றின நிருவாகம் முதலியவை, சமஷ்டி அரசாங்கத்தின் அதிகாரங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன.

ஏற்கனவே நாம் கூறியுள்ளபடி, சமஷ்டி மந்திரிச் சபைக்கும், சமதர்மக் கட்சியின் நிருவாக சபைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. உதாரணமாக, அரசாங்கத்தின் எல்லா உத்திரவுகளும், சட்ட திட்டங்களும் சரியானபடி அநுஷ்டிக்கப் படுகின்றனவா வென்பதைக் கவனிப்பதற்காக, சமதர்மக் கட்சியின் நிருவாக சபையானது தனியாக ஓர் இலாகாவை ஏற்படுத்தி, ருஷ்யாவின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் பரிசோதகர்களை அடிக்கடி அனுப்புகிறது; ஆங்காங்கு நியமனமும் செய்திருக்கிறது. சமதர்மத்தின் வளர்ச்சியிலே, அரசாங்கமும் கட்சியும் எப்படி ஒரேமாதிரி கருத்துடையனவா யிருக்கின்றன என்பதையே இது புலப்படுத்துகிறது.

இந்தச் சமஷ்டி அரசாங்கத்தின் மந்திரிச் சபையானது ஏறக்குறைய தினந்தோறும் கூடுகிறது. ஒழுங்கு முறையென்று சொல்லிக்கொண்டு, எந்த ஒரு காரியத்தையும் இங்கே தாமதப் படுத்துவது கிடையாது. மற்றும், மந்திரிச் சபையானது இன்னது செய்யப்போகிறது, இன்னது செய்ய உத்தேசித்திருக்கிறது என்பன போன்ற

ஹேஷ்யங்களுக்கும், அநாவசியமான வதந்திகளுக்கும் அரசாங்கத்தார் இடங்கொடுப்பதில்லை. இதற்குப் பதிலாக, அரசாங்கத்தின் ஒவ்வோர் இலாகாவும், அந்தந்த இலாகாவில் என்னென்ன வேலைகள் நடைபெறுகின்றன, இனி நடைபெறப் போகின்றன என்பதைக் குறிப்பிட்டு, வாரத்திற்கொருமுறை அல்லது மாதத்திற் கொருமுறை அறிக்கைகள் வெளியிடுகின்றது. இந்த அறிக்கைகள், பத்திரிகைகளில் பிரசுரிக்கப் படுகின்றன; எல்லா ஜனங்களுக்கும் கிடைக்குமாறு செய்யப்படுகின்றன. பொது ஜனங்களின் நம்பிக்கைதான், அரசாங்கத்தின் மூலபலம் என்பதை சோவியத் தலைவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

சமஷ்டி அரசாங்க இலாகாக்களில் முக்கியமானதொன்று ராணுவ இலாகா. இதற்குப் பாதுகாப்பு இலாகா என்ற பெயரே தவிர, யுத்த இலாகா என்பது அல்ல. இஃதொன்றைக் கொண்டே சோவியத் அரசாங்கத்தின் அந்நிய நாட்டுக் கொள்கை சமாதானத்தை அடிப்படையாகக் கொண்டதென்பது நன்கு புலனாகும். செம்படையென்று அழைக்கப்படுகிற சோவியத் ராணுவம், மற்ற நாட்டு ராணுவங்களைப் போன்றதன்று. அது ஜனங்களுடைய ராணுவம். ஜனங்களுடைய பாதுகாப்புக்காக அஃதிருக்கிறதே தவிர, ஜனங்களுக்கு மேலே இருந்துகொண்டு ஜனங்களைப் பயமுறுத்திக் கொண்டிருப்பதற்காக அல்ல. யுத்தப் பயிற்சிக்காக மட்டுமல்ல, ஜனங்களுடைய கல்விப் பயிற்சிக்காகவும் செம்படை இருக்கிறது. ராணுவத்திலுள்ளவர்கள், தங்களை ஒரு தனி ஜாதியினராக, சாதாரண சமுதாயத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களைக் காட்டிலும் மேலான ஜாதியினராகக் கருதிக் கொண்டுவிடும்படியான சந்தர்ப்பமோ பயிற்சியோ அளிக்கப் படுவதில்லை. ஒரு விவசாயி அல்லது ஒரு தொழிலாளி அல்லது ஒரு வைத்தியன் ஆகிய இவர்

களைக் காட்டிலும், ஒரு ராணுவ உத்தியோகஸ்தன் எந்த விதத்திலும் மேலானவனில்லை யென்று ஒவ்வொரு சமதர்ம வாதியும் சித்தாந்தப்படுத்திக் காட்டுவான்.

ருஷ்யாவில், வயது வந்த எல்லோரும் கட்டாயமாக ராணுவப் பயிற்சி பெற வேண்டுமென்ற விதி அநுஷ்டானத்தில் இருந்து வருகிறது. இருந்தாலும், விவசாயிகளும் தொழிலாளர்களுமே ராணுவத்தில் பெரும்பாலோராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுப் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். தரைப்படையினர் இரண்டு வருஷகாலமும், ஆகாயப் படையினர் மூன்று வருஷ காலமும், கப்பற் படையினர் ஐந்து வருஷ காலமும் முறையே பயிற்சி பெறவேண்டும். இங்ஙனம் பயிற்சி பெற்றவர்களில் ஒரு சிறுதொகையினரை மட்டும் ஒழுங்கான ராணுவத்தில் சேர்த்துக் கொண்டு விடுகின்றனர். மற்றவர்கள், வீடு திரும்பி அவரவர்களுடைய தொழில்களில் ஈடுபட்டு விடுகின்றனர். வருஷந்தோறும் இந்த மாதிரி ராணுவப் பயிற்சி பெற்றுவிட்டுச் சுமார் ஐந்து லட்சம் பேர் வீடு திரும்புகின்றனர். இவர்கள் ஒழுங்கான கல்விப் பயிற்சியும் ராணுவப் பயிற்சியும் பெற்றவர்களாதலினால், எந்தத் தொழிலில் பிரவேசித்தாலும் அதில் ஒழுங்கையும் திறமையையும் நிலைநாட்டுகின்றனர். ருஷ்யாவில், கிராமங்கள், நகரங்கள் முதலியன வெல்லாம் சேர்த்துச் சுமார் ஆறு லட்சம் இருக்கின்றன. இவைகளினுள்ளிருக்கும் எல்லா ஸ்தாபனங்களிலும் இந்த ராணுவப் பயிற்சியாளர்கள் புகுந்து, உன்னதமான ஒரு பதவியை வெகு சுலபமாக அடைந்து விடுகின்றனர். கிராம சோவியத்துகளில் பலவற்றிற்கு இவர்கள்தான் தலைவர்கள். கூட்டுறவுப் பண்டகசாலைகளா, கூட்டுறவுப் பண்ணைகளா, எல்லாவற்றிலும் அநேகமாக இவர்கள்தான் அதிகாரிகள். மகாநாடுகளுக்கு விஷயந் தெரிந்தவர்களைப் பிரதிநிதிகளாகப் பொறுக்கி யெடுத்து அனுப்ப வேண்டுமென்பதற்காக இவர்களே தெரிந்தெடுக்கப் படுகிறார்கள். இதனால் வரு

ஷந்தோறும் லட்சக் கணக்கில் ராணுவப் பயிற்சி பெற்று வீடு திரும்புகிறவர்கள், யுத்த காலத்தில் சிறந்த போர்வீரர்கள்; சமாதான காலத்தில் நல்ல பிரசாரகர்கள்—திறமையான நிருவாகிகள்.

இவர்கள் மேலே சொன்ன பிரகாரம் இரண்டு வருஷமோ மூன்று வருஷமோ பயிற்சி பெற்று விட்ட பிறகு இவர்களுக்கும் ராணுவத்திற்கும் தொடர்பு விட்டுப் போகிற தென்பது அர்த்தமில்லை. பிரதி வருஷமும் சில நாட்கள் ராணுவப் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்க வேண்டும். அப்பொழுதுதான் இவர்களுக்கு நவீன யுத்த முறைகள் யாவும் தெரியும்; இவர்களுடைய பயிற்சியும் துருப்பிடியாம லிருக்கும். இவர்களில் யார் எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்த போதிலும், அரசாங்கம், தனக்குத் தேவையென்று தோன்றினல், அவர்களை ராணுவ சேவைக்கு அழைத்துக் கொள்ளலாம். அப்படி ராணுவத்திலே சேர்ந்து சேவை செய்து கொண்டிருக்கிறபோது, தொழிலாளர் சங்கத்திலோ, வேறெந்த ஸ்தாபனத்திலோ அங்கத்தினரா யிருந்திருந்தால், அந்தப் பதவியை ராஜீநாமாச் செய்து விடவேண்டும். ஆனல், சோவியத் அரசாங்கத்தின் உரிமையுள்ள பிரஜைகள் என்ற முறையில், தேர்தல்களில், தங்களுக்கிஷ்டமான பிரதிநிதிகளுக்கு ஓட்டுப் போடலாம்; பத்திரிகைகளுக்கு நிருபர்களா யிருக்கலாம்; தாங்களே கூட்டுறவுப் பண்டகசாலைகளை ஏற்படுத்தி அவற்றை நிருவாகம் செய்யலாம். சுருக்கமாகச் சொல்கிறபோது, ராணுவத்தைச் சேர்ந்தவர்கள், திறமையான போர் வீரர்களா யிருப்பதோடு, செல்வாக்குள்ள பிரஜைகளாகவும் இருக்கிறார்கள்.

உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும், சிறந்த ராஜதந்திரிகளாகவோ அரசியல் வாதிகளாகவோ இருக்கிறவர்களில் பெரும்பாலோர் வக்கீல்களே. இவர்கள் அதிகமான வருமானத்தை யுடையவர்களாகவும் சமுதாயத்தில்

செல்வாக்குப் பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் சோவியத் ருஷ்யாவில் வக்கீல்களுக்கு அதிக வருமானமோ செல்வாக்கோ கிடையாது. சோவியத் தலைவர்கள், வக்கீல் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஏனென்றால், நீதி வழங்குகிற முறையை அவர்கள் சிக்கலாக வைக்கவில்லை. தவிர, ருஷ்யாவில் பணச் செல்வாக்கைக் கொண்டு நீதியை வாங்கிவிட முடியாது. மற்றும், நீதி வழங்குகிறவர்களுக்கும் நீதி கோருகிறவர்களுக்கும் நேரான தொடர்பு ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இவையெல்லாம் இருந்தாலும் அங்கே வக்கீல்கள் இருக்கிறார்கள்; வக்கீல் தொழிலும் நடக்கிறது; ஆனால் புதிய முறையில். எப்படியென்றால், அரசாங்கத்தார், வக்கீல்களுக்கென்று ஒரு சங்கம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். சட்டப் பரீட்சையில் தேறினவர்கள், அல்லது ஏற்கனவே நீதி இலாகாவில் இரண்டு வருஷ காலம் உத்தியோகம் பார்த்தவர்கள் முதலியோர் இந்தச் சங்கத்தில் அங்கத்தினராகப் பதிவு செய்து கொள்ளப் படுகிறார்கள். சட்ட சம்பந்தமாக இவர்கள் யாருக்கும் ஆலோசனை சொல்லக் கடமைப் பட்டவர்கள். இன்னின்ன மாதிரியான வழக்குகளுக்கு ஆஜரானால் இவ்வளவு இவ்வளவு கட்டணம் என்று ஒரு திட்டம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அந்தத் திட்டப்படியே இவர்கள் கட்சிக்காரர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்க வேண்டும். ஆனல் கட்சிக்காரர்கள் ஏழைகளாகவோ, நோயாளிகளாகவோ, வயதான 'பென்ஷனர்' களாகவோ இருந்தால், அவர்களிடத்திலிருந்து எவ்விதக் கட்டணமும் வசூலிக்கக் கூடாது. பொதுவாக, கட்சிக்காரர்களுடைய பொருளாதார நிலைமைக்குத் தக்கவாறு கட்டணம் வசூலிக்க வேண்டும். ஆனால், இப்படி வசூலிக்கிற கட்டணத்தை மேற்படி சங்க நிதியில் சேர்ப்பித்துவிட வேண்டும். இதற்குப் பிரதியாக ஒவ்வொரு வக்கீலுக்கும் அவரவருடைய திறமைக்கும் வேலைக்கும்

தகுந்தபடி மாதந்தோறும் ஒரு தொகை சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. இன்னொரு முக்கியமான விஷய மென்ன வென்றால், மேற்படி வக்கீல் சங்கத்திலே அங்கத்தினராகப் பதிவு செய்து கொள்ளாத யாரும், தொழிலை நடத்த முடியாது; நடத்தக் கூடாது. வக்கீல்களில் பெரும்பாலோர், வைத்தியர்களைப் போலவும், நூலாசிரியர்களைப் போலவும் சமதர்மக் கட்சியில் சேராமல் ஒதுங்கியே இருக்கிறார்கள். அப்படியிருந்தால் தான் தங்கள் கடமையைத் தாங்கள் நிஷ்பட்சபாதமாகச் செய்ய முடியும் என்று இவர்கள் நம்புகிறார்கள். இதை அரசாங்கமும் ஆதரிக்கிறது.

ருஷ்யாவில், எந்த அரசியல் பண்டிதரையும் பிரமிக்கச் செய்யக் கூடியது சிறுபான்மைச் சமூகத்தினரைப் பற்றிய பிரச்னை. ஆனால், சோவியத் தலைவர்கள் இதனை மிகச் சாமர்த்தியமாகத் தீர்த்து வைத்திருக்கிறார்கள். இதற்கு முக்கிய காரணமாயிருந்தவன் ஸ்டாலின். இவன் ஜார்ஜியர்கள் என்ற ஒரு சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவன்; எல்லா ஜாதியாருடைய கஷ்ட நிஷ்டூரங்களையும் நன்றாக அறிந்தவன். இதனாலேயே லெனின், இந்தச் சிக்கலான பிரச்னையைத் தீர்த்துவைக்கும் பொறுப்பை இவனிடம் ஒப்புவித்தான். இவனும் இதனைச் சாமர்த்தியமாகத் தீர்த்துவைத்திருக்கிறான். இதற்கு இவன் நான்கு வருஷகால உழைப்பை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

ஜார் ஆட்சிக் காலத்தில் இந்தப் பல்வகைப் பட்ட ஜாதியினருடைய நிலைமை மகாமோசமா யிருந்தது. உரிமை மறுப்பும், வறுமை வாழ்க்கையும், அறியாமைப் போராட்டமும் இவர்களுடைய கூடப் பிறந்த சகோதரர்களா யிருந்தன. வருஷந்தோறும் ஆயிரக்கணக்கான பேர் இறந்துபோவது அப்பொழுது சர்வசாதாரண சம்பவம். "ருஷ்யா, பல ஜாதியாரைக்கொண்ட ஒரு சிறைக்கூடம்" என்று லெனின் சொன்னதில் அர்த்த

மில்லாமலில்லை. 1917-ஆம் வருஷம் நவம்பர் மாதம் புரட்சி ஏற்பட்டு, போல்ஷ்வெக்கர்கள் அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டதும், இந்த நிலைமை அடியோடு மாறிவிட்டது. ருஷ்யாவில் வசிக்கும் எல்லா ஜாதியாருடைய உரிமைகளும் சட்டரீதியாகப் பாதுகாக்கப்படும் என்று 1917-ஆம் வருஷம் நவம்பர் மாதம் பதினைந்தாந் தேதியிட்டு ஓர் அறிக்கை வெளியிடப் பெற்றது. இதில் லெனினும் ஸ்டாலினும் கையெழுத் திட்டிருந்தனர். இதன்படி, ருஷ்யாவிலுள்ள சகல ஜாதியாருக்கும் ஒரே மாதிரியான உரிமைகள் உண்டு என்று அங்கீகரிக்கப் பட்டது. அவரவர்களுக்கும் சுயநிர்ணய உரிமை அளித்து, இஷ்டப்பட்டால் தனியான ஒரு நாட்டினராகப் பிரிந்து, தனியான ஓர் அரசாங்கம் அமைத்துக் கொள்ளலாம் என்று கூறப்பட்டது. இவர்கள் இஷ்டப்பட்டால் சமஷ்டி யில் சேரலாம்; இல்லாவிட்டால் ஒதுங்கி யிருக்கலாம். ஜாதி காரணமாகவோ மதம் காரணமாகவோ யாருக்கும் எந்தவிதமான விசேஷ உரிமையோ சலுகையோ கிடை யாது. ஒவ்வொரு ஜாதியாருடையவும் கலை, தொழில், சம்பிரதாயம், நாகரிக பரம்பரை முதலியன வளர்ச்சி பெறுவதற்கு எல்லா வசதிகளும் சந்தர்ப்பங்களும் அளிக் கப்பட்டன. எந்த ஜாதியினராக இருந்தாலும், எந்த மதத்தினராக இருந்தாலும், உழைத்துப் பிழைக்கிறவர்கள் என்ற முறையில் எல்லோரும் ஓரினம் என்ற உணர்ச்சி யைப் பொதுஜனங்களுக்கு வலியுறுத்திக் காட்டுவதிலே சோவியத் தலைவர்கள் மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண் டனர்; இந்த உணர்ச்சியைக் கொண்டுதான், ஆரம்பத் தில் ஏற்பட்ட வெளிநாடுகளின் எதிர்ப்பு, உள்நாட்டுக் குழப்பம் முதலிய இடையூறுகளை யெல்லாம் சமாளித்த னர்; பின்னர் இந்த உணர்ச்சியை வளர்த்தும் வந்தனர். ஜாதிப் போராட்டம், மதப் போராட்டம் முதலியவற்றிற் கெல்லாம் அடிப்படையான காரணம் பொருளா

தாரத்திலே யுள்ள ஏற்றத் தாழ்வுகள்தான். இந்த ஏற்றத் தாழ்வுகளை அகற்றி, அரசியலில் எல்லோருக்கும் சம உரிமை அளித்து விட்டார்கள். ஜாதிப் போராட்டங்களும் நின்று விட்டன. அவரவருடைய கலைகள், நாகரிகங்கள் முதலியன வளர்ச்சியடையத் தொடங்கின.

1937-ஆம் வருஷத்து அரசியல் திட்டத்தின் 123-வது பிரிவில் இந்த ஜாதிய சமஉரிமை பின்வருமாறு அழகாக வற்புறுத்தப் பட்டிருக்கிறது:—

"சோவியத் ருஷ்யாவிலுள்ள எல்லாக் குடிமக்களுக்கும், அவர்கள் எந்த ஜாதியினராக அல்லது எந்தச் சமூகத்தின ராக இருந்த போதிலும், பொருளாதாரம், ராஜ்ய விவகாரம், கலாசாரம், சமுதாயம், அரசியல் முதலிய எல்லா வாழ்க்கைத் துறைகளிலும் சம உரிமை உண்டு. இதை யாரும் மாற்ற முடியாது.

ஜாதி காரணமாக அல்லது சமூகங் காரணமாக எந்த ஒரு பிரஜைக்கேனும்நேர்முகமாகவோ மறைமுகமாகவோ உரிமை கள் மறுக்கப்பட்டாலும், அல்லது விசேஷச் சலுகைகள் வழங்கப்பட்டாலும், அல்லது ஒரு ஜாதிக்கும் மற்றொரு ஜாதிக்கும் பிரிவினையோ துவேஷமோ வெறுப்போ உண்டு பண்ணக் கூடிய விதமாக வாதம் செய்தாலும், இவையாவும் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றங்களாகக் கருதப்படும்."

அந்தந்தப் பிரதேசத்தில் வசிக்கிற ஜாதியார் அல்லது சமூகத்தாருடைய மனப்பான்மைக்கும், நாகரிகத்திற்கும் ஏற்றாற்போல் தனித்தனியான அரசியல் திட்டங்கள் வகுக்கப்பட் டிருக்கின்றன. ஆனல், ருஷ்ய சமஷ்டியில் இணங்கிச் செல்லக்கூடிய மாதிரியாகவே இவை இருக் கின்றன. சமஷ்டியி லிருந்து பிரிந்து செல்லவும் இவை களுக்கு உரிமை உண்டு. ஆனல், இவை பிரிந்து செல்வ தில்லை. பொதுவாக, எல்லோருக்கும், ராஜாங்க பாஷை யாக இருக்கிற ருஷ்ய பாஷை தெரிந்திருக்க வேண்டு மென்பதிருந்தாலும், அந்தந்த ஜாதியாருடைய பாஷைகள்,

கலைகள் முதலியன யாவும் போற்றி வளர்க்கப்படுகின்றன. இந்த ஜாதிய உரிமைகளுக்குப் பழுது நேரிடா வண்ணம் பாதுகாப்பதற்காகவே, ஜாதியப் பிரதிநிதித்துவமுடைய ஜாதிய சபை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

இந்த மாதிரி ஜாதிய உரிமைகள் பாதுகாக்கப்பட்டு வருவதன் விளைவு என்னவென்றால், மிகவும் பிற்போக்கடைந்திருந்த ஜாதியார், வெளியார் பார்த்துப் பிரமித்துப் போகக்கூடியமாதிரி முற்போக்கு அடைந்திருக்கின்றனர். இவர்களுடைய பிரதேசங்கள் செழுமை யுற்று, அநேகம் உலோகப்பொருள்களை உபயோகத்திற்குக் கொணர்கின்றன. எங்குப் பார்த்தாலும் தானியங்களை உதிர்க்கும் நிலங்கள்; பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள்; அறியாமையைத் துரத்திவிட்ட ஆண்கள்; அடிமை மனப்பான்மையை ஒழித்த பெண்கள். ருஷ்யாவிலே இஃதொரு புதுமை! சமதர்மத்திற்கு ஒரு பெருமை! ஓர் இருபது வருஷகாலத்திற்குள் இந்த ஆச்சரியகரமான மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

உதாரணமாக, காஜக்ஸ்தான் என்ற பிரதேசத்தில், முன்னர் ஒரு பையன் பள்ளிக்கூடத்திற்குப் போய்க்கொண்டிருந்தான் என்று சொன்னால், இப்பொழுது 58 பிள்ளைகள் போகிறார்கள். இப்படியே, அர்மீனியாவில் ஒருவருக்கு 68 பேராகவும், கிர்க்கிஜியாவில் 172 பேராகவும் பள்ளிக்கூடங்களுக்குப் போகிற பிள்ளைகள் அதிகமாயிருக்கிறார்கள். உக்ரேன் பிரதேசத்தில் முன்னர் 15 சர்வகலாசாலைகள் இருந்தன; இப்பொழுது 139 இருக்கின்றன. முன்னர் அநேக பாஷைகள் பேச்சு வழக்கில் மட்டும் இருந்தன; எழுத்துக்களில்லை. இவைகளுக்கெல்லாம் இப்பொழுது எழுத்துக்கள் சிருஷ்டிக்கப்பட்டு நூல்களும் வெளியாகி யிருக்கின்றன. வாழ்க்கையிலே ஒரு சுதந்திரம் ஏற்பட்டுவிட்டபடியால், ஜனங்களுடைய சிருஷ்டி சக்தி அதிகரித்துக்கொண்டு வருகிறது. புதிய புதிய கவிஞர்களும்,

புதிய புதிய ஆசிரியர்களும் தோன்றிக்கொண் டிருக்கிறார் கள். விவசாயப் பண்ணைகளுக்குப் போட்டியாக இலக் கியப் பண்ணைகள் செழுமையடைந்து வருகின்றன.

இப்படி ஒவ்வொரு ஜாதியாருக்கும், அவரவருடைய பாஷை, கலை, நாகரிகம் முதலியவற்றைப் போற்றி வளர்க் கும் விஷயத்தில் பரிபூர்ண உரிமை அளித்துவிட்டு, அதே சமயத்தில் எல்லோரையும் ஒரே மாதிரியான அரசியலில் ஐக்கியப்பட்டிருக்கும்படி செய்துவிட்டதன் மூலமாக, சோவியத் அரசாங்கத்தார், சிறுபான்மைச் சமூகத் தினரைப் பற்றிய சிக்கலான பிரச்னையைச் சுலபமாகத் தீர்த்து விட்டிருக்கின்றனர். அதுமட்டுமல்ல; ஸ்திரமான தோர் ஐக்கிய ராஜ்யத்தையும் ஸ்தாபித்திருக்கின்றனர்.

ருஷ்யாவிலே ருஷ்யர்கள்தான் அதிகம். எல்லோ ரையுமே, சிறுபான்மைச் சமூகத்தினர் அத்தனை பேரை யுமே, ருஷ்ய நாகரிகத்தை அநுசரிக்கும்படி செய்து, தேசமுழுவதையும் ருஷ்யமயமாக்கி யிருக்கலாம். ஆனால், சோவியத் தலைவர்கள் அப்படிச் செய்யவில்லை. ராஜ்யத் தின் பெயரோடு ருஷ்யா என்ற வார்த்தையைச் சேர்ப் பதற்குக்கூட அவர்கள் விரும்பவில்லை. அப்படிச் சேர்ப் பதனால் ருஷ்ய மக்களுக்கு ஒரு முக்கியத்துவமோ முதன் மையோ கொடுத்த மாதிரியாகுமென்று கருதி, சோவியத் ஐக்கிய ராஜ்யம் என்றே அழைக்கத் தொடங்கினார்கள். இந்த ராஜ்யத்தில், ஜாதி, மத, சமூக வேற்றுமைகளின்றி எல்லோருக்கும் ஒரே மாதிரியான உரிமை, கடமை, சந் தர்ப்பம் முதலியன வெல்லாம் உண்டு. உண்டு என்று சொன்னால், ஏட்டளவோடு மட்டுமல்ல; நடைமுறையிலும் கூட. உலகத்திலே வேறெந்த நாட்டிலும், இந்தமாதிரி யான சம உரிமை அநுபவம் கிடையாது. வட மகா சமுத் திரத்திலிருந்து தெற்கே கருங்கடல் வரையில் விசாலித் திருக்கும் சோவியத் ஐக்கிய ராஜ்யத்தில்தான், நிறபேதம், பாஷை வித்தியாசம், பழக்க வழக்க வேற்றுமை முதலிய

எதனேயும் பாராட்டாமல் யாரும் யாருடனும் தாராள மாகக் கலந்து பழுகலாம்; ஒரேமாதிரி உரிமையோடு ரெயில் முதலியவற்றில் பிரயாணம் செய்யலாம்; ஹோட்டலில் சாப்பிடலாம்; பள்ளிக் கூடங்களிலாகட்டும், நாடகக் கொட்டகைகளிலாகட்டும், யாரும் யார் பக்கத்திலும் உட்காரலாம்; பரஸ்பரக் காதல் இருக்குமானல், யாரும் யாரையும் விவாகம் செய்துகொள்ளலாம்; திறமைக்குத் தகுந்தபடி யாரும் எந்தத் தொழிலேயும் செய்யலாம். வரி செலுத்துவது முதல் தேவாலயத்தில் தொழுவது வரை எல்லோருக்கும் ஒரேவிதமான உரிமை உண்டு. உத்தியோக நியமன விஷயத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது அங்குக் கிடையாது. உலகத்திலே வேறெந்த நாட்டில், இந்த மாதிரி சமத்துவ உரிமை அளிக்கப்பட் டிருக்கிறதென்று சோவியத் தலேவர்கள் பெருமையோடு மற்ற நாட்டினரைப் பார்த்துக் கேட்பார்களானல், அதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது.

சோவியத் அரசியல் அமைப்பானது, பரிபூர்ண ஜன நாயகத்தை அடிப்படையாகக் கொண்டதென்று ஏற்கனவே கூறியுள்ளோம். வயது வந்த, அதாவது பதினெட்டு வயதான யாருக்கும் அங்கு ஓட்டுரிமை உண்டு. இவ்வளவு ஆஸ்தி மதிப்புடையவர்கள்தான், இத்தனேயாவது வகுப்புவரை படித்தவர்கள்தான், இவ்வளவு தொகை வரி செலுத்துகிறவர்கள்தான், ஓட்டுக் கொடுக்கலாம் என்கிறமாதிரியான நிர்ப்பந்தங்கள் ஒன்றுமே கிடையாது. தவிர, ஒவ்வொருவரும் நேர்முகமாக ஓட்டுக் கொடுத்து, தங்களுக்கு இஷ்டப்பட்டவரைப் பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்கலாம். இப்படி ஓட்டுக் கொடுத்துவிட்டதன் மூலமாகத் தங்களுடைய கடமையைச் செய்துவிட்டதாகவோ, உரிமையைச் செலுத்தி விட்டதாகவோ எந்த ஒரு பிரஜையும் திருப்தி யடைந்துவிட முடியாது. அரசாங்கத்திற்குப்

பிரஜைகள் செய்யவேண்டிய கடமைகளும், பிரஜைகளுக்கு அரசாங்கத்தார் செய்ய வேண்டிய கடமைகளும் முறையே சட்ட பூர்வகமாக நிர்ணயிக்கப்பட் டிருக்கின்றன. வரி செலுத்துகிற கடமையை ஒழுங்காகச் செய்து கொண்டுவருகிற ஒரு பிரஜை, அரசாங்கத்தினிட மிருந்து சில உரிமைகளையும் எதிர்பார்க்கலா மல்லவா? இந்த உரிமைகளும் கடமைகளும் சட்டத்தில் இடம் பெற்று புனிதத் தன்மை அடைந் திருக்கின்றன. இவற்றின் சாரத்தைக் கீழே தருகிறோம்.

1. சோவியத் ராஜ்யத்தில் ஒவ்வொரு வருக்கும் அவரவர் மனப்போக்கின்படி வேலைசெய்ய உரிமையுண்டு. தேகதிடமுள்ள எல்லோருக்கும் வேலை அமர்த்திக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமை. ஆனால், எந்த ஒரு தனி நபரும், மற்றவர்களை வேலைக்கமர்த்தி அதன் மூலமாகச் சம்பாதிக்கக் கூடாது.

2. வேலை செய்கிற ஒவ்வொருவருக்கும் ஓய்வு பெற உரிமை உண்டு. இதற்காக, காரியாலயங்கள், தொழிற்சாலைகள் முதலியவற்றில் இத்தனை மணி நேரந்தான் ஒவ்வொருவரும் வேலை செய்ய வேண்டும், இவ்வளவு காலம் சம்பளத்துடன் ரஜா பெறவேண்டும் என்று சட்ட பூர்வகமாக நிர்ணயிப்பதும், அப்படி ரஜா பெற்றுக்கொண்ட காலத்தை உபயோகமான முறையில் செலவழிப்பதற்கு ஏற்பாடுகள் செய்வதும் அரசாங்கத்தின் கடமைகள்.

3. மூப்பினாலோ, நோய் காரணமாகவோ, தேகபலமின்மையினாலோ வேலை செய்யமுடியாதவர்களாகி விடுகிறவர்கள், அரசாங்கத்தின் பாதுகாப்பை எதிர்பார்க்க உரிமையுடையவர்கள். இதற்காக ஆஸ்பத்திரிகள், ஆரோக்கிய ஸ்தலங்கள் முதலியவைகள் ஏற்படுத்துவதும், நோயாகிவிட்ட காலத்தில் ஜீவனத்திற்குப் போதுமான அளவு திரவிய சகாயம் செய்வதும், புஷ்டி தரும்படியான ஆகாரவகைகள் ஜனங்களுக்குப் போதுமான அளவு கிடைக்கும்படி

செய்வதும், வயோதிகர்களுக்கு உபகாரச் சம்பளம் ஏற்படுத்திக் கொடுப்பதும் அரசாங்கத்தின் கடமைகளாகும்.

4. ஒவ்வொருவருக்கும் கல்வியறிவு பெறுவதற்கு உரிமை உண்டு. இதற்காகக் கல்விச் சாலைகளை ஏற்படுத்துவதும், கல்விச் சாலைகளுக்குச் சென்று படிக்க முடியாதவர்களுக்கு வேறுவிதமான கல்வி வசதிகள் செய்து கொடுப்பதும் அரசாங்கத்தின் கடமைகள்.

5. ஆண்களைப் போலவே பெண்களுக்கும் அரசியல், பொருளாதாரம், சமுதாய வாழ்வு முதலிய எல்லாத் துறைகளிலும் ஒரேவிதமான உரிமைகள் உண்டு. தாய்மைக் கடமையை நிறைவேற்றுவதற்கான சௌகரியங்களைப் பெண்களுக்குச் செய்து கொடுத்தல், சிசுபோஷண சாலைகள் ஏற்படுத்துதல் முதலியவற்றைச் செய்வது அரசாங்கத்தின் கடமைகள்.

6. ஜாதி, நிற, மத, சமூக வேற்றுமைகளில்லாமல் எல்லாப் பிரஜைகளுக்கும் ஒரேவிதமான உரிமை உண்டு. மேற்படி ஜாதி, நிற, மத, சமூக வேற்றுமைகளை வளர்க்கக் கூடிய மாதிரியாகவோ, ஒரு சாராருக்கும் மற்றொரு சாராருக்கும் துவேஷம் உண்டு பண்ணக் கூடிய மாதிரியாகவோ செய்யப்படுகிற எந்த முயற்சியையும் அடக்குவது அரசாங்கத்தின் கடமை.

7. தங்களுக்கிஷ்டப்பட்ட மதத்தை அநுசரிப்பதற்கோ அல்லது எந்த மதத்தையும் அநுசரிக்காம விருப்பதற்கோ ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. இதற்காக, மதத்தினின்று அரசியலைப் பிரித்து விடுவதும், பள்ளிக்கூடங்களில் மதபோதனைகள் இல்லாமற் செய்து விடுவதும், அரசாங்கத்தின் கடமைகளாகும்.

8. பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டம் கூடுகிற உரிமை, ஊர்வலமாகச் சேர்ந்து செல்கிற உரிமை ஆகிய உரிமைகள் எல்லாருக்கும் உண்டு. இதற்காகப் பொது மண்டபங்களை நிர்மாணித்துக் கொடுப்பதும், பத்திரிகைகள், புத்தகங்கள் முதலியவற்றை வெளியிடுவதற்குத் தேவையான

அநுகூலங்களைச் செய்துகொடுப்பதும், மேற்படி உரிமைகளை அநுபவிப்பதற்கு இன்னும் என்னென்ன சௌகரியங்கள் வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து கொடுப்பதும் அரசாங்கத்தின் கடமைகளாகும்.

9. தங்களுடைய அபிப்பிராயங்களை ஒரு முகப்படுத்தி வெளியிடுவதற்கும், அரசியல் சம்பந்தமான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் அநுகூலமாகச் சங்கங்களை ஏற்படுத்திக்கொள்ள எல்லா ஜனங்களுக்கும் உரிமையுண்டு. இதற்காகத் தொழிற்சங்கங்கள், இலக்கிய சபைகள், விஞ்ஞானக் கழகங்கள் முதலியவற்றை ஏற்படுத்திக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமை. சமதர்மத்தை வளர்ப்பதற்காக, சமதர்மக் கட்சியொன்றை ஆதரிப்பது அரசாங்கத்தின் கடமை.

10. கோர்ட்டு உத்திரவில்லாமல் யாரும் கைது செய்யப்படக் கூடாது.

11. பிரஜைகளின் வாசஸ்தலங்களுக்கு இடையூறு ஏற்படாமல் பாதுகாப்பதும் அவர்களுடைய கடிதப் போக்குவரத்துகள் ரகசியமாக இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதும் அரசாங்கத்தின் கடமைகள்.

12. ஒரு குடும்பத்தைப் போஷித்துக் காப்பாற்றி வருகிறவர் இறந்து விட்டால், அந்தக் குடும்பத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்வது அரசாங்கத்தின் கடமை.

13. சமுதாய சொத்துக்களைப் பாதுகாப்பது ஒவ்வொரு பிரஜையினுடைய கடமை.

14. தாய்நாட்டைப் பாதுகாப்பது ஒவ்வொரு பிரஜையினுடைய புனிதமான கடமை. அப்படியே, தேசத்துரோகிகள், தேசத்தின் ராணுவ பலத்தைப் பற்றி இகழ்ச்சியாகப் பேசுகிறவர்கள், சத்துருக்களுக்கு உளவு சொல்கிறவர்கள் முதலியவர்களைக் கடுமையாகத் தண்டிப்பது அரசாங்கத்தின் கடமை.

## 7. பொருளாதாரத் திட்டம்

சோவியத் ஆட்சியில் காணப்படுகிற விசேஷ அமிசம் என்னவென்றால், தேசத்தின் பொருளாதார வாழ்க்கையை ஒரு திட்டத்திற்குட்படுத்தி ஒழுங்காக வளர்த்து வருவதுதான். அதாவது பொருள்களை உற்பத்தி செய்வது, அவைகளை விநியோகிப்பது, ஒரு பொருளைக் கொடுத்து மற்றொரு பொருளை வாங்குவது முதலிய எல்லா விவகாரங்களையும் இன்னின்னமாதிரிதான் செய்யவேண்டுமென்று திட்டம் போட்டுக் கொண்டு அதன் பிரகாரம் நடத்திக்கொண்டு வருதலையே இது குறிக்கிறது. இப்படித் திட்டம் போட்டுக் கொண்டு வேலைசெய்வதன் நோக்கமென்னவென்றால், ஜனங்களுடைய தேவைகளைச் சுலபமாகவும் மலிவாகவும் பூர்த்தி செய்விக்க வேண்டுமென்பது தான். முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட நாடுகளில் ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதாகச் சொல்லிக் கொண்டு, ஒரு சிலர் கொழுத்த பணக்காரர்களாகிறார்கள். சோவியத் பொருளாதாரத் திட்டமுறையானது இதைத் தடுக்கிறது.

சென்ற பதினைந்து வருஷ காலமாக, உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் பொருளாதார மந்தம், வியாபார நெருக்கடி, வேலையில்லாத் திண்டாட்டம் முதலிய சொற்றொடர்களை அடிக்கடி கேட்டு வருகிறோம். சமுதாயத்தின் பலதரத்தினரும் இந்த நெருக்கடிகளினால் அவதிப்பட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்தும் வருகிறோம். அரசியல் பண்டிதர்கள், பொருளாதார நிபுணர்கள் முதலியோர் இவற்றிற்குப் பரிகாரம் காணமுடியாமல் திகைக்கிறார்கள். ஒரு பிரதேசத்தில் நெல் ஏராளமாக உற்பத்தியாகிறது. அதே பிரதேசத்தின் மற்றொரு மூலையில் ஜனங்கள்

சாப்பாட்டுக்கில்லாமல் திண்டாடுகிருர்கள். அழையாத விருந்தினர்களாக அவ்வப்பொழுது வந்து கொண்டிருக்கும் வெள்ளப்பெருக்கு, பஞ்சம் முதலியவைகளைச் சமாளிக்க முடியாமலும் அந்தக் காலங்களில் வயிற்றுக்கில்லாமலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் மடிந்து போவதை நாம் கவனித்துக்கொண்டுதான் வருகிறோம். இவற்றிலிருந்து விமோசனம் பெறுவதற்கு வழி தெரியவில்லை. கடைசியில் கர்மம், தலைவிதி என்ற சொற்களில் தஞ்சம் புகுந்து ஆறுதலடைகிறோம். ருஷ்யாவில் இந்த மாதிரியான அவஸ்தைகளுக் கெல்லாம் பரிகாரம் கண்டு பிடித்திருக்கிருர்கள். அதுதான் பொருளாதாரத் திட்டம்.

சோவியத் அரசியல் சட்டத்தில் இந்தப் பொருளாதாரத் திட்டம், அதாவது தேசத்தின் பொருளாதார வாழ்க்கையை ஒரு திட்டப்படி வளர்த்து வர வேண்டுமென்பது, நிரந்தரமான இடம் பெற்றிருக்கிறது. மேற்படி அரசியல் சட்டத்தின் பதினோராவது பிரிவு பின் வருமாறு கூறுகிறது:—

"தேசத்தின் செல்வத்தைப் பெருக்கவேண்டும், தொழிலாளர்களுக்கு அதிகமான சௌகரியங்கள் ஏற்படுத்திக் கொடுத்து அதன் மூலமாக அவர்களுடைய வாழ்க்கையைப் பண்பட்ட நிலைக்கு உயர்த்த வேண்டும், தேசத்தின் சுதந்திரத்தை வலுப்படுத்தி அதன் தற்காப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்யவேண்டும், ஆகிய இந்த மாதிரியான நோக்கங்களை அடைவதற்காகத் தேசியப் பொருளாதாரத் திட்டம் வகுக்கப்படுகிறது. அந்தத் திட்டத்தின் அநுஷ்டானத்தையொட்டியே சோவியத் ஐக்கிய ராஜ்யத்தின் பொருளாதார வாழ்க்கை நிர்ணயிக்கப்படுகிறது."

1917-ஆம் வருஷம் போல்ஷ்வெக்கர்கள் அரசாங்க நிருவாகத்தைக் கைப்பற்றிக் கொண்டபோது, தேசத்தின் பொருளாதார நிலைமை மிகவும் கேவலமாயிருந்தது. தொழிற்சாலைகள் சீரழிந்து கிடந்தன. அவற்றிலிருந்து

உற்பத்தியாகிற பொருள்கள் ஒன்றுக்குக் கால்வாசியாகக் குறைந்துவிட்டன. உணவுப் பஞ்சம் வந்து லட்சக்கணக்கான பேரைப் பலி வாங்கிக்கொண்டு விட்டது. இந்த நிலைமையிலிருந்து சமாளிக்க வேண்டுமானல், ஒரு திட்டம் வகுத்துக்கொண்டு அதன் பிரகாரம் பொருளுற்பத்தி, பொருள் விநியோகம் முதலியவற்றைச் செய்துவரவேண்டுமென்று லெனினும் அவனுடைய சகாக்களும் தீர்மானித்தார்கள். அப்படிப் போடுகிற திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு, தேசத்தின் நிலபுலங்கள், பொருளுற்பத்திச் சாதனங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் முதலிய அனைத்தையும் பொதுவுடைமைக ளாக்குவது அவசியமா யிருந்தது. அப்படியே ஆக்கினர்கள். முதலில் தேசத்தை மின்சார மயமாக்க வேண்டுமென்று திட்டம் போட்டு ஆங்காங்கு மின்சார உற்பத்தி நிலையங்கள் நிறுவினர்கள். இவற்றின் துணைகொண்டு, தொழிற்சாலைகள் ஸ்தாபித்து பொருளுற்பத்தியை விருத்திசெய்து, யுத்தத்திற்கு முன்னிருந்த அளவுக்குக் கொண்டுவந்தார்கள். இதற்குச் சுமார் ஏழு வருஷகாலம் பிடித்தது. இந்தக் காலத்தைத்தான் புதிய பொருளாதாரத் திட்டகாலம் என்று சொல்வது. இதற்குப் பிறகு, ஐந்து வருஷத்திற்கொரு திட்டம் வகுத்துக்கொண்டு அதன்படி பொருளுற்பத்தியை அதிகரிக்கச் செய்து ஜனங்களுடைய தேவைகளையும் பூர்த்தி செய்து வருகிறார்கள். 1928-ஆம் வருஷத்திலிருந்து 1932-ஆம் வருஷம் வரை முதல் ஐந்து வருஷத் திட்டம்; 1933-ம் வருஷம் முதல் 1937-ஆம் வருஷம் வரை இரண்டாவது ஐந்து வருஷத் திட்டம்; 1938-ஆம் வருஷத்திலிருந்து 1942-ஆம் வருஷம் வரை மூன்ருவது ஐந்து வருஷத் திட்டம். இது தீவிரமாக நிறைவேற்றப்பட்டு வந்துகொண்டிருக்கிற தருணத்திலேயே துரதிருஷ்டவசமாக ருஷ்ய - ஜெர்மானிய யுத்தம் ஏற்பட்டு விட்டது.

இங்ஙனம் திட்டங்கள் போட்டு வேலே செய்வது ஆச்சரியமில்லே. எந்தெந்தக் காலத்தில் எது எது தேவை, எந்தச் சந்தர்ப்பத்தில் எதைச் செய்ய முடியும் என்பவைகளே அநுசரித்தும், தேசத்தின் பாதுகாப்பு, ஜனங்களுடைய சக்தி, கையிலிருக்கப்பட்ட சாதனங்கள், எதிர்பார்க்கிற சாதனங்கள் முதலியவைகளே அநுசரித்தும் இந்தத் திட்டங்கள் வகுக்கப் படுகின்றனவே அதுதான் ஆச்சரியம். உதாரணமாக, முதல் ஐந்து வருஷத் திட்டத்தின்போது, ஜனங்களுடைய அன்றுட உபயோகத்திற்கான சாமான்கள் உற்பத்தி செய்வதை ஓர் அளவுக்கு உட்படுத்திக்கொண்டு, நிலக்கரி உற்பத்தி, பூமியிலிருந்து எண்ணெய் உற்பத்தி முதலியவைகளே அதிகரிக்கச் செய்வதிலேயே சோவியத் தலேவர்கள் அதிக கவனம் செலுத்தினார்கள். இந்தப் பொருளுற்பத்தி விஷயத்தில் மட்டுமல்ல, மற்ற எல்லா விவகாரங்களிலுமே சோவியத் தலேவர்கள் இடம், பொருள், ஏவல்களே அநுசரித்து, நிதானமாகச் சென்றிருக்கிறார்கள்; படிப்படியாக ஒன்றை முடித்துக் கொண்டு மற்றென்றிற்குச் சென்றிருக்கிறார்கள். ஒரே காலத்தில் எல்லாவற்றையும் செய்து முடித்துவிட வேண்டுமென்ற பேராசையும் அவர்கள் கொள்ளவில்லே; அல்லது ஒரு தேசத்தினுடைய வாழ்விலே ஒரு தலேமுறைக் காலம் எவ்வளவு சொற்ப காலம் என்று சொல்லிக்கொண்டு நத்தை மாதிரி மெது மெதுவாக ஊர்ந்து செல்லவுமில்லே; சமுதாய நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு எந்த ஒரு விவகாரத்தையும் நடத்தி வந்திருக்கிறார்கள்.

இந்தப் பொருளாதாரத் திட்டங்கள் எப்படி வகுக்கப்படுகின்றன என்பதைப் பற்றிச் சிறிது கவனிப்போம். சோவியத் அரசாங்க மந்திரிச் சபை இருக்கிறதல்லவா, அதனேச் சேர்ந்தாற்போலவே, "பொருளாதாரத் திட்டக் கமிஷன்"* என்ற தனியான ஒரு சபை இருக்கிறது.

* U. S. S. R. State Planning Commission (Gosplan).

இது, மந்திரிகளால் நிருவகிக்கப்படுகிற மற்ற இலாகாக்களைப் போன்ற ஒன்று அல்ல. மந்திரிகளில் ஒருவர் அல்லது இருவர் இதில் அங்கத்தினரே தவிர, மற்ற விஷயங்களில் இது தனிப்பட்டது. இது நிபுணர்களடங்கிய ஒரு கழகம். விஞ்ஞான சாஸ்திரிகள், பொருளாதார நிபுணர்கள், தொழில் அறிஞர்கள், வியாபாரத் துறையிலே புலமை வாய்ந்தவர்கள் முதலிய சுமார் 160 பேர் இதில் அங்கத்தினர்கள்.

சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இதில் வேலை செய்கிறார்கள். இந்தக் கமிஷனுக்கு, அரசாங்க இலாகாக்கள், தொழிற்சாலைகள், கல்விக் கழகங்கள், ரெயில், தபால், தந்தி முதலிய போக்கு வரத்து இலாகாக்கள் ஆகிய யாவும், தாங்கள் சென்ற வருஷத்தில் இவ்வளவு வேலை செய்ய முடிந்தது, இந்த வருஷத்தில் இவ்வளவு வேலையைச் செய்ய முடியும் என்று உத்தேசமாக ஒரு திட்டம் போட்டு அனுப்பவேண்டும். இப்படி வருஷவாரி அனுப்புவதோடு, மாதவாரியாகவும், மூன்று மாத வாரியாகவும், ஆறுமாத வாரியாகவும் திட்டங்கள் போட்டு அனுப்பவேண்டும். இந்த மாதவாரி, வருஷவாரிப் புள்ளிகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு அடுத்த ஐந்து வருஷத்திற்கு எவ்வளவு செய்ய முடியும் என்பதையும் தெரிவிக்கவேண்டும். இந்தப் புள்ளி விவரங்களையெல்லாம் மேற்படி கமிஷன் ஒன்று திரட்டி, மொத்தமாகப் பரிசிலனை செய்து பார்க்கிறது; எந்தெந்தப் பொருள்கள் அதிகம் தேவையாயிருக்கின்றன, எவை எவற்றின் உற்பத்தி குறைவாயிருக்கிறது, இந்தக் குறைவை நிறைவுபடுத்த என்ன செய்யவேண்டும் என்பவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து, தேசப் பொதுவுக்கு மொத்தமாக ஒரு திட்டத்தைத் தயாரிக்கிறது.

இதில் விசேஷமென்னவென்றால், ஒரு தேவையைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்கிற உற்சாகத்திலே, அதனைச்

சார்ந்துள்ள மற்ற அமிசங்களைக் கவனியாமல் விட்டு விடுவதில்லை. அப்படியே ஒரு தேவைக்காக மற்றொரு தேவையைப் புறக்கணித்து விடுவதுமில்லை. உதாரணமாக, பிரஸ்தாப வருஷத்தில் ஈயக்கலப்புள்ள பொருள்கள் தேவையா யிருக்கின்றன, எனவே ஈயத்தை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டு மென்று திட்டம் போடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். ஈயத்தை மட்டும் உற்பத்தி செய்து விட்டால் போதுமா? அதனோடு என்னென்ன பொருள்கள் சேர்ந்தால், அஃது உபயோகப் படுமோ அந்தப் பொருள்களையும் விகிதாசாரப்படி உற்பத்தி செய்யவேண்டு மென்று திட்டம் போடுகிறார்கள். அடுத்த வருஷத்தில் பள்ளிக்கூடத்தில் படிக்கிற பிள்ளைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய வேண்டு மென்று திட்டம் போட்டால், அதற்கு அநுசரணையாக, அதிகமான பிள்ளைகளுக்கு வேண்டிய கட்டிட வசதிகள், வைத்திய உதவிகள், புஸ்தகங்கள், ஆசிரியர்கள், விளையாட்டு மைதானங்கள் இவ்வளவும் தேவையில்லையா? இந்த மாதிரி ஒன்றை யொன்று தொட்டுக்கொண்டிருக்கிற எல்லா அமிசங்களையும் இணைத்துப் பார்த்தே, மேற்படி கமிஷன், பொருளாதாரத் திட்டத்தைத் தயாரிக்கிறது.

இப்படித் தயாரித்து, உடனே அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரவேண்டு மென்று உத்திரவிட்டு விடுவதில்லை. சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள், கல்வி ஸ்தாபனங்கள் முதலிய அனைத்திற்கும் மேற்படி திட்டத்தை அனுப்பி, அதன்படி வேலை செய்ய முடியுமா என்று அபிப்பிராயம் கேட்கிறது. அவை, அதாவது அந்தத் தொழிற்சாலைகள் முதலியன, மேற்படி திட்டத்தில் இவ்வளவு முடியும், இவ்வளவு முடியாது, அல்லது அதிகமாகச் செய்யமுடியும் என்று தங்களுடைய அபிப்பிராயங்களுடன் மேற்படி திட்டத்தைத் திருப்பி அனுப்புகின்றன. இவற்றை யெல்லாம் திரட்டி வைத்துக்கொண்டு பொருளாதாரத் திட்டக்

கமிஷன் புனராலோசனைசெய்து, கடைசியாக ஒரு திட்டத்தைத் தயாரித்து, அதனை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரச் செய்கிறது. இப்படிச் செய்வதன் நோக்கமென்ன வென்றால், தேவையானதை மட்டும் கவனித்துக்கொண்டு போகாமல், சாத்தியமானதையும் கவனித்துக்கொண்டு போகவேண்டு மென்பதுதான்.

மற்றும், இந்தத் திட்டங்களை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரும் விஷயத்தில் விஞ்ஞானத்தின் துணையைப் பெரிதும் நாடுகிறார்கள் சோவியத் தலைவர்கள். உலகத்திலேயே சோவியத் ராஜ்யத்தில்தான், விஞ்ஞான சாஸ்திரத்திற்கு, அதற்குரிய மதிப்புக் கொடுக்கப் படுகிறதென்று சொல்ல வேண்டும். அங்கு, ஜனங்களுடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவும், சர்வஜனங்களுடைய சந்தோஷத்தை அதிகரிக்கச் செய்வதற்காகவும் விஞ்ஞானம் உபயோகிக்கப்படுகிறது; ஆனால் மற்ற நாடுகளில், ஒரு சிலருடைய லாபத்திற்காகவும், சுக சௌக்கியத்திற்காகவுமே உபயோகிக்கப் படுகிறது. மற்றும், விஞ்ஞானமானது மனிதனுடைய வளர்ச்சிக்காகவே தவிர, அவனுடைய அழிவுக்காக அல்ல என்ற உண்மையை, சோவியத் தலைவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். இதனால் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமோ அவ்வளவும் செய்துகொடுத்து, அந்த ஆராய்ச்சியின் முடிவுகளை ஜனங்களுடைய நன்மைக்குப் பயன் படுத்துகிறார்கள். மற்றும், இந்த ஆராய்ச்சிகளெல்லாம் சிதறிப்போய்ப் பயனற்றுப் போகாமலிருக்க, எல்லா ஆராய்ச்சிக் கழகங்களையும் ஒரு மத்திய ஸ்தாபனத்தோடு இணைத்து, அதன் மூலமாக வரும் எந்த ஒரு புதிய கண்டு பிடிப்பையும், பொருளாதாரத் திட்டத்திற்கு உபயோகப் படுத்துகிறார்கள்.

விஞ்ஞான ஆராய்ச்சிக்கென்று ருஷ்யாவில் 1938-ஆம் வருஷத்துக் கணக்குப்படி 902 கழகங்கள் இருக்

கின்றன. இவற்றில் சுமார் எண்பதினுயிரம் பேர் ஆராய்ச்சி நடத்துகிறார்கள். இந்தக் கழகங்களினால் ஜனங்கள் அடைந்துவரும் சாதகங்கள் அதிகம். தவிர, ஆராய்ச்சி செய்து அதில் வெற்றி பெற்றவர்களை, அரசாங்கத்தாரும் பொது ஜனங்களும் பெரிதும் கௌரவிக்கிறார்கள்; அவர்களுடைய சுகவாழ்க்கைக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்கிறார்கள். இந்த விஞ்ஞான சாஸ்திரிகள் ஆராய்ச்சி செய்யாத துறைகள் இல்லை. குறைந்த செலவில் அதிகமான நேரத்திற்கு எப்படி விளக்கு எரிக்கலாம் என்பதுமுதல், பிரதியொரு மனிதனிடத்திலும் அடங்கிக் கிடக்கும் மேலான தன்மைகளை மேலுக்குக் கொணர்ந்து அவற்றை ஒருமுகப்படுத்தி எப்படி ஜன சமுதாயத்திற்குப் பயன்படுத்தலாம் என்பதுவரை, வட துருவத்தைக் கண்டு பிடித்து அதில் சோவியத் வெற்றிக் கொடியை நாட்டுவது முதல், கோதுமையை ஒரு தடவை விதைத்துவிட்டு அதிலிருந்து நிரந்தரமாகச் சாகுபடி செய்துகொண் டிருப்பதற்கு வழியென்ன என்பதுவரை, எல்லாம் இவர்களுடைய ஆராய்ச்சியில் அடங்குகின்றன. எவ்வளவு நுணுக்கமான விஷயமாயிருந்தாலும் அதனைக் கூர்மையான ஆராய்ச்சிக் குட்படுத்தி அதிலிருந்து எவ்வளவு அதிகமான நன்மையைப் பெறலாம் என்பதுதான் ஒவ்வோர் ஆராய்ச்சியாளருடைய நோக்கமாய் இருந்து வருகிறது. இப்படிப் பெறுகிற ஒவ்வொரு நன்மையும் சொந்த நலனுக்காக உபயோகப் படுத்தப்படாமல் சமுதாய நலனுக்காக உபயோகப் படுத்தப் பெறுகிறது. இதனால் ஒவ்வொரு விஞ்ஞானியும், சமுதாயத்திலிருந்து ஒதுங்கி நிற்கிற துறவியாக இல்லாமல், சமுதாயத்தின் தொண்டனாயிருக்கிறான். இவன், மேற்படி பொருளாதாரத் திட்டம் ஒழுங்காக நிறைவேறுவதற்கு எல்லா வகையிலும் துணையாக நிற்கிறான்.

இப்படித் திட்டம் போட்டுக்கொண்டு தேசத்தின் பொருளாதார வாழ்க்கையை ஒழுங்காக வளர்த்து வருவதன் பரிணமம் என்னவென்றால், சோவியத் ராஜ்யத்தில் சென்ற பத்து வருஷகாலமாக வேலையில்லாத் திண்டாட்டம் என்ற கூக்குரல் எழவேயில்லை; உணவு அகப்படாமையினால் ஜனங்கள் மரித்துவிட்டார்கள் என்பது கிடையாது; பாங்கிகள் முறிந்துவிட்டன, அதனால் ஜனங்கள் தரித்திரர்களாகி விட்டார்கள் அல்லது பணப்புழக்கம் மந்தமாகி விட்டது என்பவையெல்லாம் அர்த்தமில்லாத பேச்சுக்களாகிவிட்டன. தவிர, இந்தப் பொருளாதாரத் திட்டம் அநுஷ்டானத்திற்கு வந்த பிறகு, சோவியத் ராஜ்யத்தின் பொருளுற்பத்தி சக்தியானது ஒன்றுக்கு ஒன்பது அல்லது பத்து மடங்கு விகிதம் பெருகியிருக்கிறது. உலகத்திலுள்ள எல்லா நாடுகளின் பொருளுற்பத்தியோடும், சோவியத் ராஜ்யத்தின் பொருளுற்பத்தியை ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த உண்மை விளங்கும். உதாரணமாக, 1913-ஆம் வருஷத்திலிருந்து 1941-ஆம் வருஷம்வரை சுமார் இருபத்தெட்டு வருஷ காலத்தில், உலகத்தில் கோதுமை உற்பத்தி, 100-க்கு 26 சதவிகிதம் அதிகப்பட்டிருக்கிறது. ஆனால் அதே காலத்தில், சோவியத் ருஷ்யாவில் 100-க்கு 114 சதவிகிதம் அதிகமாகி யிருக்கிறது. இங்ஙனமே பருத்தி உற்பத்தி, உலகத்தில் 100-க்கு 30 சதவிகிதமே அதிகப்பட்டிருக்க, சோவியத் ருஷ்யாவில் 100-க்கு 242 சதவிகிதம் அதிகப்பட்டிருக்கிறது.

இப்படிப் பொருளுற்பத்தியை அதிகப் படுத்திக்கொண்டு செல்வதிலே மட்டும் சோவியத் தலைவர்கள் திருப்தியடைந்து விடுகிறார்களில்லை. அதிகமாக உற்பத்தியாகும் பொருள்கள், எல்லா ஜனங்களுக்கும் எளிய முறையில் கிடைக்குமாறு செய்கிறார்கள். இதனால், இது காறும் சில பொருள்களின் தேவையை உணராமலே

வாழ்க்கையை நடத்திவந்தவர்கள், இப்பொழுது அந்தப் பொருள்களின் தேவையை உணர ஆரம்பித்திருக்கிறார்கள். பொருள்கள் அதிகமாகக் கிடைக்குமானால், தேவையும் அதிகரிக்கிற தல்லவா? இந்த அதிகத் தேவை பூர்த்தியடைகிறதனால், அவர்களுடைய வாழ்க்கை அந்தஸ்து உயர்கிறது. உயர்ந்த வாழ்க்கை அந்தஸ்து என்று சொன்னால், ஆடம்பர வாழ்க்கை என்று அர்த்தமல்ல; பண்பட்ட வாழ்க்கை யென்றுதான் அர்த்தம். சிறப்பாக, சோவியத் ருஷ்யாவில் இதுதான் அர்த்தம். அங்கு, பொருளாதார பரிபாஷையில் வாழ்க்கை அந்தஸ்து என்ற வார்த்தைக்கு இடமே கிடையாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஓரிரண்டு உதாரணங்களை எடுத்துக் காட்டுவது பொருத்தமா யிருக்குமென்று கருதுகிறோம். 1913-ஆம் வருஷம் ஜார் ஆட்சி நிலவி யிருந்த காலத்தில் ருஷ்யாவில் 170 லட்சம் ஜதை பூட்ஸ்கள் தயார் செய்யப்பட்டன. 1931-ஆம் வருஷம், அதாவது முதல் ஐந்து வருஷத் திட்டத்தின் மத்திய காலத்தில் 768 லட்சம் ஜதை பூட்ஸ்கள் தயாராயின. 1939-ஆம் வருஷம், அதாவது மூன்றாவது ஐந்து வருஷத்தின் முற்பகுதியில் 1,483 லட்சம் ஜதை பூட்ஸ்கள் தயாராயின. ஆயினும், ஜனங்களுடைய பூட்ஸ் தேவை அதிகரித்துக் கொண்டுதான் வந்தது. 1913-ஆம் வருஷம் ருஷ்யாவில் 94,000 டன் சோப்பு செய்யப்பட்டது. 1931-ஆம் வருஷம் 1,89,000 டன் சோப்பு தாயாரிக்கப்பட்டு ஜனங்களுக்கு விநியோகிக்கப்பட்டது. 1937-ஆம் வருஷம் சோப் உற்பத்தி 4,95,000 டன் ஆக அதிகரித்தது. இருந்தாலும், ஜனங்கள், சோப்பு போதவில்லை யென்றுதான் சொல்லிக்கொண்டு வந்தார்கள். இஃது எதைக் காட்டுகிறது? ஜனங்களுடைய வாழ்க்கையில் ஒருவித பண்பாடு ஏற்பட்டுக் கொண்டு வருகிறதென்பதையே காட்டுகிறது.

சோவியத் தலைவர்கள், முதல் ஐந்து வருஷத்திட்ட காலத்தில், சில பொருள்களின் உற்பத்தியை அதிகப் படுத்தினார்களே தவிர, அவற்றில் ஒரு பகுதியை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விட்டார்களென்றும், இதனால் ஜனங்கள், தங்களுடைய தேவைகள் சரியாகப் பூர்த்தியடையாமல் கஷ்டப்பட்டார்க ளென்றும் சிலர் இங்கே ஆட்சேபம் சொல்லலாம். உண்மை. ஆனால், அப்பொழுது, ஒரு பொருளைக் கொடுத்து மற்றொரு பொருளை வாங்குவது, சோவியத் ராஜ்யத்தின் பொருளா தார வளர்ச்சிக்கு அவசியமாயிருந்தது. எது இல்லையோ அதைப் பூர்த்தி செய்து கொள்வதிலும், எது இருக்கிறதோ அல்லது எதை நாம் சுலபமாகத் தயார் செய்துகொள்ள முடியுமோ அதை, அதாவது அதன் உபயோகத்தைத் தற்காலிகமாகக் குறைத்துக் கொள்வதிலும் சோவியத் தலைவர்கள் அந்தக் காலத்தில் அதிக புத்திசாலித் தனத் துடன் நடந்துகொண்டார்க ளென்பதுதான் நடுநிலைமை யுள்ள பொருளாதார நிபுணர்களின் அபிப்பிராயம். பொதுவாக நாம் பார்க்கிறபோது, சோவியத் தலைவர்கள், காலத்திற் கேற்ற முறையை அநுஷ்டித்து வந்திருக்கிறார் கள்; சந்தர்ப்பத்திற் கேற்றவாறு நடந்து வந்திருக் கிறார்கள். குறைந்த காலத்தில் அதிகமான நன்மையை அடைவதற்கு அதிகமான கஷ்டங்களை ஏற்றுக்கொள்ள, அவர்கள் எப்பொழுதுமே பின்வாங்கியதில்லை; ஜனங் களையும் அப்படியே பக்குவப்படுத்தி வந்தார்கள்.

இனி, இந்தப் பொருளாதாரத் திட்டங்களின் கீழ், சோவியத் ராஜ்யமானது, எந்தெந்த துறையில் எப்படி எப்படி வளர்ந்திருக்கிறது என்பதைப் பற்றிச் சுருக்க மாகக் கூறுவோம்.

## 8. விவசாயம்—தொழில்

ருஷ்யா ஒரு விவசாய நாடு. இதனால்தான் ருஷ்யவிவசாயிகள் பூமியைப்போல் பொறுமையும் நிதானமும் உறுதியுமுடையவர்களா யிருக்கிறார்கள். பொன்னையும் பெண்ணையும்கூட அவர்கள் துறந்துவிடத் தயார். ஆனால், மண்ணை மட்டும் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருப்பார்கள். ஆண்டையினுடைய சாட்டையடி, தேகத்திலிருந்து வழிகிற வியர்வை, கூரையில்லாக் குடிசை, வயிற்றுக்கில்லாமல் குழந்தைகள் போடுகிற சப்தம் ஆகிய எல்லாவற்றையும், மண்ணைப் பார்த்து மறந்து விடுவார்கள். அவர்களுடைய வாழ்க்கை மகா துக்ககரமானது. இந்தத் துக்கத்தின் மீதுதான் ருஷ்ய நிலச்சுவான்தார்கள், சுக வாழ்க்கையை நடத்திக்கொண்டு வந்தார்கள். போல்ஷ்வெக்கர்கள் அரசாங்க நிருவாகத்தைக் கைப்பற்றிக் கொண்டதும், இவர்களுடைய சுகத்திற்குப் பங்கம் ஏற்பட்டது. இதனால் தான் 1920—21-ஆம் வருஷங்களில், அந்நிய முதலாளித்துவ வல்லரசுகளோடு சேர்ந்துகொண்டு போல்ஷ்வெக்கர்களை எதிர்த்தார்கள் இந்த நிலப் பிரபுக்கள்.

ஒரு காலத்தில் இந்த நிலச்சுவான்தார்கள், ஏழை விவசாயிகளைப் படுத்தின பாட்டை நாம் நினைத்துப் பார்த்தோமானால் கூட உடல் நடுங்கும். விவசாயிகளை உயிருள்ள மனிதர்களாகக் கூட இவர்கள் கருதவில்லை: வாயில்லாப் பிராணிகளாகவே கருதி வந்தார்கள்: அப்படியே நடத்தியும் வந்தார்கள். சிறப்பாக மகா பீட்டர் மன்னனுக்குப் பிறகு, இவர்கள் புரிந்த அட்டூழியங்களுக்குக் கணக்கு வழக்கே யில்லை. ஆடு மாடுகளைப் போல் விவசாயிகளை, மொத்தம் மொத்தமாகவோ தனித்தனியாகவோ ஏலம் போட்டார்கள்;

கிரயஞ் செய்தார்கள். பாவம், விவசாயிகள், புருஷன் ஒருபக்கம், மனைவி ஒருபக்கம், மக்கள் ஒருபக்கம் இப்படி யாகப் பிரிந்து போனார்கள். விளையாட்டுப் பெயர்வழிக ளான சில நிலச்சுவான்தார்களுக்கு, வேட்டை நாய் ஒன்று வாங்க வேண்டுமென்று ஆசை தோன்றும்; உடனே தங்கள் கைவசமிருக்கும் சில விவசாய அடிமை களை விற்பார்கள்; ஒரு நாயை வாங்குவார்கள். தங்க ளுக்கு அதிக ஆட்கள் தேவையா யிருந்தால் தங்களிட முள்ள சப்பைக் குதிரை யொன்றை விற்பார்கள்; சில அடிமைகளை வாங்குவார்கள். சில சமயங்களில், அடிமை களைப் பந்தயமாக வைத்துச் சூதாடுவார்கள். அடிமை களில் யாரேனும் துணிச்சலாக எதிர்ப்புக் காட்டுவார்க ளானால், அவர்களை மனிதசஞ்சார மில்லாத தொலைதூரத் திற்கு அனுப்பிவிடுவார்கள்; அல்லது சித்திரவதை செய் வார்கள். இந்த மாதிரியான இம்சைகளிலிருந்து அவர் களை விடுவித்ததற்கு முக்கிய காரணபுருஷனா யிருந்தவன் லெனின். இதனால் அவனை ஒரு தெய்வம்போல விவசாயி கள் கொண்டாடி வருவதில் என்ன ஆச்சரிய மிருக்கிறது?

1918-ஆம் வருஷத்திற்கு முன்னர், அதாவது ஜார் ஆட்சிக் காலத்தில் விவசாயிகளுடைய நிலைமை எப்படி இருந்தது? கிராமங்கள் எவ்வாறு இருந்தன? ஒருவன் வருணிக்கிறான்:—"இந்தக் கிராமப் பிரதேசங்களில் நான் பார்க்கிற அறியாமையையும் பிற்போக்கையும் போல் வேறெங்கும் கண்டதில்லை. கிராமப் பிள்ளைகள், பள்ளிக் கூடத்தில் சென்று படிக்க வேண்டுமென்று ஆசைப்பட் டால், குறைந்த பட்சம் எட்டு மைல் தூரமாவது செல்ல வேண்டும். பெரும்பாலான கிராமங்களில் பள்ளிக்கூடங் கள் கிடையாது. கடவுள்கூட இந்தக் கிராமங்களைக் கைவிட்டு விட்டார் போலும். தங்கள் பெயரை எழுதத் தெரிந்தவர்களைக் கண்டு பிடிப்பது இங்கே மிகக் கஷ்டம்."

பெரும்பாலான கிராமங்கள் அழுக்குப் படிந்தும் பாழடைந்தும் கிடந்தன; வறுமை அங்குத் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. விவசாயிகளில் 100-க்கு 65 பேர் ஏழைகள்; குலாக்குகள் என்று சொல்லப்பட்ட நிலச்சுவான்தார்களுடைய நிலத்தில் உழைத்து வயிறு பிழைக்கிறவர்கள். மற்றவர்கள், ஏதோ அற்ப சொற்பமாக நிலம் வைத்துக்கொண் டிருந்தால், அவற்றைச் சரியானபடி உழுது பயிரிட, தேவையான விவசாயக் கருவிகள் இல்லாதவர்கள். அதற்காக, குலாக்குகளிடமிருந்து கடன் வாங்குவார்கள்; முடிந்தமட்டில் சாகுபடி செய்வார்கள். சாகுபடியானதும், குலாக்குகள் வந்து, தாங்கள் கொடுத்திருந்த பணத்திற்கு வட்டியும் முதலுமாகக் கணக்குப் பண்ணி அதற்கீடாக மகசூலை எடுத்துக் கொண்டு போய்விடுவார்கள். மறுபடியும் கடன் வாங்க வேண்டியதுதான்; உழைக்க வேண்டியதுதான்; அறுவடையை ஒப்புக்கொடுக்க வேண்டியதுதான். இந்தத் தீய சூழலிலேயே அநேக விவசாயிகள் வாழ்ந்துவந்தார்கள். கலப்படமில்லாத ஒரு ரொட்டித் துண்டைச் சுவைப்பது, இவர்களுக்கு ஒரு பெரிய விருந்தா யிருந்தது. வயிற்றுக்கில்லாமல் கிராமங்களில் இருந்துகொண்டு என்ன செய்வது? இதனால் எங்கே கூலிவேலை கிடைக்கிறதோ அங்கே விவசாயிகள், கூட்டம் கூட்டமாகப் படையெடுத்துச் செல்வது தினசரிக் காட்சியா யிருந்தது. கிராமங்கள் சீரழிந்துகொண்டு வந்ததில் என்ன ஆச்சரியம்?

ருஷ்யாவில் நிலச்சுவான்தார்களின் ஆதிக்கம் எவ்வாறு வலுத்திருந்த தென்பதைப் பின்வரும் புள்ளி விவரத்தினால் நன்கு தெரிந்து கொள்ளலாம். சாகுபடிக்கு லாயக்கான 16,70,00,000 ஏகரா நிலங்கள் 28,000 நிலச்சுவான்தார்கள் வசத்திலும், 1,00,00,000 மத்தியதர விவசாயக் குடும்பத்தினர் வசத்தில் 19,70,00,000 ஏகரா நிலங்

களும் முறையே இருந்தன. அதாவது சராசரி ஒரு நிலச் சுவான்தாருக்கு 5,964 ஏகரா நிலமும், ஒரு மத்தியதர விவசாயக் குடும்பத்திற்கு 20 ஏகரா நிலமும் முறையே இருந்தன. இது தவிர, விஸ்தீரணமாகவும் செழுமையாகவுமுள்ள பூப்பிரதேசங்கள் அரச குடும்பத்தினருக்கும் மடாதிபதிகளுக்கும் சொந்தமா யிருந்தன. ருஷ்யாவினுடைய மொத்த ஜனத் தொகையில் 100-க்கு 13 பேர் தான் நிலச்சுவான்தார்கள். ஆனால், தானிய வியாபாரத்தில் 100-க்கு 72 பங்கு இவர்கள் வசத்திலேயே இருந்தது.

1917-ஆம் வருஷத்திற்குப் பிறகு இந்த நிலைமை அடியோடு மாறிவிட்டது. விவசாயிகளுக்கு நல்வாழ்வு பிறந்தது. சோவியத் அரசாங்கத்தார், நிலங்களையெல்லாம் தேசீய சொத்தாக்கின விவரங்களைப் பற்றி ஏற்கனவே கூறியுள்ளோம். அரசாங்கத்தார் விவசாயிகளுக்கு எல்லாவகையிலும் உதவிசெய்து வந்தனர். யந்திரங்கள், விவசாயக் கருவிகள், விதைகள் முதலியவைகளை உதவி, அதிக உற்பத்திக்கு வழி காட்டிக் கொடுத்தனர். சிறிய சிறிய தளைகளில் பயிர் செய்வதனால் அதிகமான பயன் கிட்டாது என்பதை நிரூபித்துக் காட்டி, ஆங்காங்குக் கூட்டுப் பண்ணைகளை ஏற்படுத்தி இவற்றில் விவசாயிகளைச் சேருமாறு தூண்டினர். விவசாயிகளும், இந்தக் கூட்டுப் பண்ணைகளினால் உண்டாகிற அநுகூலத்தை நன்கு தெரிந்து, இவற்றைப் போற்றி வளர்த்தார்கள். சுலபமான முறையில் குறுகிய காலத்தில் நிலத்தை உழுவது, விதை விதைப்பது, அறுவடை செய்வது முதலியவற்றிற்காக, புதிய புதிய யந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டு விவசாயிகளின் உபயோகத்திற்குக் கொண்டுவரப்பட்டன. விஞ்ஞான சாஸ்திரத்தின் துணையினால் சாகுபடியின் விகிதம் அதிகரிக்கப்பட்டது. உதாரணமாக 1917-ஆம் வருஷத்தில், 8,00,00,000 டன் நிறையுள்ள தானியங்கள் உற்பத்தியாயின. ஆனால் 1937-ஆம் வருஷத்

தில் 12,02,90,000 டன் நிறையுள்ள தானியங்கள் உற்பத்தியாகி யிருக்கின்றன.

கூட்டுப் பண்ணை முறைகளினால் உண்டாகிற அநுகூலங்களை அறிந்த விவசாயிகள், தனித்தனியாக உழுது பயிரிட்டுக் கொண்டிருப்பதை விடுத்து, கூட்டுறவு முறையில் சாகுபடி செய்யத் தொடங்கினார்கள். இதனால் இத்தக் கூட்டுப் பண்ணைகளின் எண்ணிக்கை நாளாவட்டத்தில் அதிகமாகிக்கொண்டு வந்தது. இதனைக் கீழ்க்கண்ட புள்ளி விவரத்தினால் அறியலாம்:—

| விவரம் | 1929 | 1930 | 1934 | 1938 |
|---|---|---|---|---|
| கூட்டுப் பண்ணைகளின் எண்ணிக்கை. | 57,000 | 85,400 | 2,33,300 | 2,43,300 |
| மேற்படி கூட்டுப் பண்ணைகளில் சேர்ந்திருக்கிற விவசாய குடும்பங்கள். | 10,00,000 | 60,00,000 | 1,57,00,000 | 1,88,00,000 |

1929-ஆம் வருஷத்தில் 100-க்கு 4 குடும்பத்தினர்தான் கூட்டுப் பண்ணையில் சேர்ந்திருந்தனர். 1938-ஆம் வருஷத்தில் 100-க்கு 93½ குடும்பத்தினர் சேர்ந்திருக்கின்றனர். 1929-ஆம் வருஷம், மொத்த நிலத்தில் 100-க்கு 5 விகிதந்தான் கூட்டுப் பண்ணைகளா யிருந்தன. 1938-ஆம் வருஷத்தில் 100-க்கு 99 விகிதம் கூட்டுப் பண்ணைகளில் சேர்ந்திருக்கின்றன.

கூட்டுப் பண்ணை என்றால் என்ன? ஒரு கிராமத்தில் பத்துக் குடித்தனக்காரர்கள் இருக்கிறார்களென்று வைத்

துக் கொள்வோம். ஒவ்வொருவருக்கும் சராசரி இரண்டு ஏகரா நிலம் இருக்கிறது. இந்த இரண்டு ஏகரா நிலத்தை ஒவ்வொரு குடித்தனக்காரரும் தனித் தனியாகப் பயிரிட்டுச் சாகுபடி செய்யாமல், பத்து குடித்தனக்காரர்களும் ஒன்று சேர்ந்து, இருபது ஏகரா நிலத்தையும் மொத்தமாகப் பயிரிட்டுச் சாகுபடி செய்வதற்குத்தான் கூட்டுப் பண்ணை என்று பெயர். இப்படிக் கூட்டு முறையில் எல்லாரும் சேர்ந்து உழுது பயிரிடலா மாயினும், அவரவருக்கென்று தனியாகச் சொத்துச் சுதந்திரங்கள் உண்டு. அதாவது பொது நலத்தையும், தனி மனிதனுடைய நலத்தையும் ஐக்கியப் படுத்தியே இந்தக் கூட்டுப் பண்ணை முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கென்று தனியான விதிகள், அநுஷ்டான முறைகள் முதலியன உண்டு. எப்படி யென்றால், நிலங்கள், அந்த நிலத்திலிருந்து பொருள்களை உற்பத்தி செய்வதற்குச் சாதனமாயுள்ள கால்நடைகள், விவசாயக் கருவிகள், யந்திரங்கள், முதலியனவும், கால்நடைகளைக் கட்டி வைப்பதற்கான தொழுவங்கள், தானியக் களஞ்சியங்கள், கூட்டுறவுப் பண்டகசாலைகள் முதலியனவும் பொதுவுடைமைப் பொருள்கள். அந்தந்தக் குடும்பத்தினர் வசிக்கும் வீடு, அவர்கள் சொந்த உபயோகத்திற்குத் தேவையான கால்நடைகள், சாமான்கள் முதலியன தனிச் சொத்துக்கள்: அதாவது அவரவருடைய சொந்த சொத்துக்கள். இவை தவிர, ஒவ்வொரு குடும்பத்தினரும், தங்கள் சொந்தத் தேவைக்கான காய்கறிகள், பழவகைகள் முதலியனவற்றை விளைவித்துக் கொள்ள நிலங்கள் வைத்துக் கொள்ளலாம். இந்த முறையினால் அவரவருடைய சொந்த உரிமைகள் பாதுகாக்கப்படுவதோடு சமுதாய நலனும் வளர்க்கப் படுகிறது.

கூட்டுறவுப் பண்ணை முறையினால் கிராமங்கள் செழித்தோங்கி வருகின்றன. அரசாங்கத்தார், இந்தக்

கூட்டுறவுப் பண்ணைகளுக்கு வேண்டிய யந்திர வகைகள், விவசாயக் கருவிகள் முதலியவற்றைச் சொற்ப விலைக்கு விற்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். விவசாய நிபுணர்களை நியமித்து இந்தப் பண்ணைகளுக்கு வேண்டிய ஆலோசனைகளைச் சொல்லுமாறு செய்திருக்கிறார்கள். இந்த மாதிரியான முறைகளினால் கிராம விவசாயிகளின் வாழ்க்கை, பண்பாடடைந்து கொண்டு வருகிறது. ஒவ்வொரு கூட்டுப் பண்ணையிலும் இப்பொழுது ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம், ரேடியோ, பொதுமண்டபம், விளையாட்டு மைதானம், நாடகசாலை, தபால் தந்தி வசதிகள் ஆகிய எல்லாம் இருக்கின்றன. இப்பொழுதுள்ள ருஷ்ய கிராமத்துச் சிறுவர்களிடம் சென்று, அவர்களுடைய தகப்பனார், பாட்டனார் முதலியோர், குழாய் நீர், மின்சார விளக்குகள், மின்சார சிகிச்சை, ரேடியோ, மோட்டார் முதலியன இல்லாமல் வாழ்ந்தார்கள் என்று சொன்னால் ஆச்சரியமே படுவார்கள்; அவர்களால் எப்படி வாழ முடிந்தது என்று கேட்பார்கள். அதாவது, தற்போதைய தலைமுறையினருடைய வாழ்க்கை, அவர்களுடைய பழமையினின்று அவர்களை அடியோடு பிரித்துவிடக் கூடிய மாதிரியாக அமைந்திருக்கிறது.

தற்போதைய கிராமங்கள் சிலவற்றின் நிலைமையை அந்தந்தக் கிராமவாசிகளின் வாக்கு மூலத்தைக் கொண்டே வருணித்துக் காட்ட விரும்புகிறோம்:—

"இட்டோம்லியா என்பது ஒரு புராதனக் கிராமம். இது மிகவும் பிற்போக்கடைந்திருந்தது. எந்த விதத்திலும் இஃது உருப்படியாகாதென்று எல்லோரும் நினைத்தார்கள். இப்பொழுது இங்கே ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. இதில் 450 பிள்ளைகள் படிக்கிறார்கள். கிராமப் பொதுமண்டபம் ஒன்று கட்டியிருக்கிறோம். இதில் 800 பேர் உட்காருவதற்கு இடவசதிகள் இருக்கின்றன. ஓர் ஆஸ்பத்திரி உண்டு. தவிர, பிரசவ ஆஸ்பத்திரி வேறே இருக்கிறது. கால்நடை

களுக்கென்று சிகிச்சைச் சாலைகள் அமைத்திருக்கிறோம். விவசாய விஷயங்களில் ஆராய்ச்சி நடத்துவதற்காக, மாதிரிப் பண்ணை யொன்றை ஏற்படுத்தி யிருக்கிறோம். எங்கள் கிராமத்தில் ரேடியோ, டெலிபோன், மோட்டார் முதலிய வசதிகள் எல்லாம் இருக்கின்றன.''

*　　　　　　*

''ஸ்டாரோயே கிட்டோவோ என்பது ஒரு கிராமம். இதில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தக் கூடாதென்று கிராமப் பாதிரி தடுத்து விட்டிருந்தார் ஒரு காலத்தில். பள்ளிக்கூடம் ஏற்பட்டால் தமது செல்வாக்குப் போய்விடு மென்று அவருக்குப் பயம்! இப்பொழுது இந்தக் கிராமத்தில் ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடமும், ஒரு மத்தியதரப் பள்ளிக்கூடமும் இருக்கின்றன. கிராமத்தில், எழுதப் படிக்கத் தெரியாத ஒருவரைக்கூட இப்பொழுது பார்க்க முடியாது. ஒவ்வொரு வீட்டிலும் பத்திரிகை வரவழைக்கிறார்கள். ரேடியோவும், சிறிய ஒரு புத்தகசாலையும் இல்லாத வீட்டை இப்பொழுது பார்ப்பது மிகவும் அரிது.''

சுருக்கமாகச் சொல்லப் போனால், அறியாமை, நோய், வறுமை, கோழைத்தனம் முதலியவற்றின் மத்தியில் உழன்று கொண்டிருந்த கிராமவாசிகள் இப்பொழுது அறிவுப் பிரகாச முடையவர்களாய், அரோக திடகாத்திரர்களாய், வாழ்க்கையின் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் திறமையுடையவர்களாய், 'நாமிருக்கு நாடு நமது' என்ற வீர உணர்ச்சி யுடையவர்களாய், பூரண உரிமைபெற்ற பிரஜைகளாய், கடமையை உணர்ந்த சமுதாய அங்கத்தினர்களாய், சந்தோஷத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மேற்படி கூட்டுப்பண்ணைகளைத் தவிர, அரசாங்கத்தாரே, சில மாதிரிப் பண்ணைகள் வைத்து நடத்துகிறார்கள். விவசாயத் தொழிலைச் சாஸ்திர ரீதியாக ஆராய்ச்சி செய்து அந்த ஆராய்ச்சியை அநுஷ்டானத்திற்குக் கொண்டு

வருகிறபோது என்னென்ன சாதகங்கள் உண்டு என்பதை விவசாயிகளுக்குப் பிரத்தியட்சமாக எடுத்துக் காட்டுவதற்காகவே அரசாங்கத்தார் இந்த மாதிரிப் பண்ணைகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். யந்திரத்தின் உதவியைக் கொண்டு பெருவாரியான முறையில் இங்கே விவசாயஞ் செய்து அதிகமான கண்டு முதலை ஜனங்களுக்குக் கொண்டு வந்து காட்டுகிறார்கள். இந்த வகையான மாதிரிப் பண்ணைகள் இப்பொழுது ருஷ்யாவில் சுமார் நாலாயிரத்துக்கு அதிகமாக இருக்கின்றன. ஏறக்குறைய 16,80,00,000 ஏகராக்கள், இந்த மாதிரிப் பண்ணைகளைச் சேர்ந்தவை. இந்த மாதிரிப் பண்ணைகளில், உணவுப் பொருள்களைத் தவிர, தொழிலுற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள்களையும் விளைவிக்கிறார்கள். தவிர, கால் நடைகளைப் பக்குவமான முறையில் வளர்த்து விற்பனை செய்கிறார்கள். இவைகளின் மூலமாக அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்கிறது. ஆனால் இவைகளுக்காக அதிகமான பணத்தையும் செலவழிக்கிறார்கள். ஒவ்வொரு மாதிரிப் பண்ணையும் ஒவ்வோர் ஊர் மாதிரி அமைக்கப் பட்டிருக்கிறது. இங்குள்ளவர்களுக்கு எல்லா வசதிகளையும் அரசாங்கத்தார் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

சோவியத் ருஷ்யாவில் சென்ற பதினைந்து வருஷகாலமாக யந்திரத் தொழிலானது அதிக முன்னேற்றத்தை யடைந்திருக்கிறது. ஜார் காலத்து ருஷ்யாவில் உற்பத்தியான உணவுப் பொருள்களிற் பெரும்பாகம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டும், அதற்குப் பதிலாக பணக்காரர்களுக்கு உபயோகப்படக் கூடிய செய் பொருள்கள், ஆடம்பர வஸ்துக்கள் முதலியன இறக்குமதி செய்யப்பட்டும் வந்தன. ருஷ்யாவிலேயே இருந்த தொழிற்சாலைகளில் பெரும்பாலன, பிரிட்டிஷ், பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய அந்நிய முதலாளிகளின் ஆதீனத்தில் இருந்தன. இப்பொழுது இவை இருந்த இடம் தெரியா

மலே போய்விட்டன. எங்குப் பார்த்தாலும் புதிய தொழிற் சாலேகள் நவீனமுறையில் ஏற்பட்டிருக்கின்றன. ஜார் காலத்து ருஷ்யாவில், விவசாய யந்திரங்கள், மோட்டார் வண்டிகள், ஆகாயவிமானங்கள், யுத்த தளவாடங்கள், ரசாயனப் பொருள்கள் முதலியவைகள் உற்பத்தி செய்யப்படுவது கிடையாது. இப்பொழுது இவையெல்லாம் சிறந்த முறையில் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. நவீன முறையில் அமைக்கப்பட்டிருக்கும் தொழிற்சாலேகளிலிருந்து, 1914-ஆம் வருஷ யுத்தத்திற்கு முன்னர் எவ்வளவு பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தனவோ அதைவிட ஏழு மடங்கு அதிகமான பொருள்கள் 1937-ஆம் வருஷத்தில் உற்பத்தி செய்யப்பட்டன. இப்படிப் பிரதி வருஷமும் பிரதியொரு பொருளுற்பத்தியும் அதிகமாகிக் கொண்டுவருகிறது. உதாரணமாக, 1913-ஆம் வருஷம், ருஷ்யாவின் எல்லாப் பஞ்சாலேகளிலிருந்தும் 2,41,00,00,000 கஜம் நூல் உற்பத்தியாயிற்று. ஆனல் 1938-ஆம் வருஷம் இந்த நூலுற்பத்தி 3,78,70,00,000 கஜத்திற்கு அதிகப்பட்டது. இந்தப் பஞ்சாலேகளில் மட்டும் இப்பொழுது 5,83,200 தொழிலாளர்கள் வேலே செய்கிருர்கள்: இவர்களில் 100-க்குச் சுமார் 37 பேர் ஸ்திரீகள். இன்னெரு உதாரணம்: ஜார் காலத்து ருஷ்யா (1913-ஆம் வருஷத்தில்) 28 சட்டைகளேத் தயார் செய்தது என்று சொன்னல், சோவியத் ருஷ்யா (1937-ஆம் வருஷத்தில்) 3,158 சட்டைகளேத் தயாரித்திருக்கிறது.

இந்த மாதிரியான புள்ளி விவரங்களிலிருந்து, முந்திய ருஷ்யாவைக் காட்டிலும் இன்றைய ருஷ்யாவில், யந்திரத் தொழிலுற்பத்தி எவ்வளவு துரிதமாக முன்னேறி வருகிறதென்பதைத் தெரிந்து கொள்ளலாம். இங்ஙனம் பொருளுற்பத்தி அதிகரித்திருப்பதற்குச் சமதையாக, இந்தத் தொழிற்சாலேகளில் வேலே செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது. இதுதான், ருஷ்யப்

பொருளாதார அமைப்பின் முக்கிய விசேஷம். ஏனென்ருல், நவீன சாதனங்களைத் துணையாகக் கொண்டு, குறைந்த ஆட்களை வைத்து அதிகமான பொருளுற்பத்தி செய்வதென்ற முறையை, சோவியத் தலைவர்கள் அநுஷ்டிக்கவில்லை. அதற்குப் பதிலாக, நவீன சாதனங்களைத் துணையாகக்கொண்டு, அதிகமான ஆட்களை வைத்துக் குறைந்த காலத்தில் அதிகமான பொருளுற்பத்தி செய்வதென்ற முறையை அநுஷ்டிக்கின்றனர். இதனல் முதலாவது, வேலையில்லாத் திண்டாட்டம் என்பது இல்லாமற் போகிறது. இரண்டாவது, தொழிலாளர்களுடைய வேலை நேரம் குறைகிறது.* மூன்ருவது, வேலைநேரம் குறைவதால் தொழிலாளர்களுக்கு அதிகமான ஓய்வு கிடைக்கிறது. நான்காவது, இந்த ஓய்வு நேரத்தைத் தொழிலாளர்கள் உபயோககரமான வழியில் செலவழிக்கின்றனர். அரசாங்கத்தார் இதற்குத் துணை செய்கின்றனர். இதனல் சமுதாய யந்திரம் சரளமாக ஓடுவதற்கு ஏதுவுண்டாகிறது. 1933-ஆம் வருஷம், யந்திரவகைகளை உற்பத்தி செய்கிற பெரிய தொழிற்சாலைகளில் மொத்தம் 2,20,00,000 தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருந்தார்கள். 1938-ஆம் வருஷம், இவர்களுடைய எண்ணிக்கை 2,80,00,000-க்குப் பெருகியது. 1940-ஆம் வருஷம் இந்த எண்ணிக்கை 3,0,400,000 ஆக அதிகப்பட்டது. இங்ஙனமே ஜனங்களுடைய அன்ருட உபயோகத்திற்கான சாமான்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் 1931-ஆம் வருஷம் 7,94,900 பேர் வேலை செய்துகொண்டிருந்தார்கள். 1937-ஆம் வருஷக் கடைசியில் இவர்களுடைய எண்ணிக்கை 18,87,000 பேராகப் பெருகியது.

* ருஷ்ய-ஜெர்மானிய யுத்தத்தை முன்னிட்டுத் தொழிலாளர்களுடைய வேலை நேரம் தற்காலிகமாக அதிகரிக்கப்பட்டிருந்தது. தொழிற்சாலைகளில் பெரும்பாலன, யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்வதில் அதிகமாக முனைந்திருந்தன.

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் இங்குக் கவனிக்க வேண்டும். அதாவது, தொழிலாளர்களுடைய வேலை நேரம் குறைந்தாலும், அவர்களுடைய உற்பத்தி சக்தியும், கூலி விகிதமும் அதிகப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, 1913-ஆம் வருஷத்தில் சுமார் 2,540 ரூபாய் பெறுமானமுள்ள சாமான்களை உற்பத்தி செய்த ஒரு தொழிலாளி 1937-ஆம் வருஷத்தில் சுமார் 6,060 ரூபாய் பெறுமானமுள்ள சாமான்களை உற்பத்தி செய்கிறான். அவனுடைய தினசரி வேலை நேரமோ பதினேரு மணியிலிருந்து ஏழு மணியாகக் குறைந்திருக்கிறது. இதே பிரகாரம் அவனுடைய வருமானமும் பிரதி வருஷமும் அதிகரித்துக் கொண்டு வந்திருக்கிறது. 1933-ஆம் வருஷத்தில் எடுத்த கணக்குப்படி ஒரு தொழிலாளியினுடைய வருமானம் 945 ரூபாயாக இருந்தது. 1938-ஆம் வருஷத்தில் எடுத்த கணக்குப்படி அதே தொழிலாளியினுடைய வருமானம் 2,156 ரூபாயாக அதிகப்பட்டிருக்கிறது. இப்படித் தொழிலாளர்களுடைய வருமான விகிதம் அதிகரித்திருப்பதால், அவர்கள், தங்களுடைய வாழ்க்கைத் தேவைகளைச் சிரமப்படாமல் பூர்த்தி செய்துகொள்கிறார்கள்.

இஃது எப்படித் தெரிகிறதென்று கேட்டால், ஒன்று, அன்றாட உபயோகத்திற்கான சாமான்களின் விற்பனை அதிகரித்து வருவதைக் கொண்டு; மற்றொன்று பள்ளிக்கூடத்திற்குச் சென்று படிக்கும் பிள்ளைகளின் தொகை அதிகரித்து வருவதைக்கொண்டு. வயிற்றுப் பசிக்கும் அறிவுப் பசிக்கும் எப்பொழுது ஆகாரம் கிடைத்து விடுகிறதோ அப்பொழுதே மனிதன், வாழ்க்கையின் மேல் படிகளில் ஏறிச் செல்லத் தொடங்குகிறான். 1933-ஆம் வருஷத்தில், கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலமாக 38,30,57,50,000 ரூபாய் மதிப்புள்ள சில்லரைச் சாமான்கள் விற்பனையாயின. 1938-ஆம் வருஷத்தில் இந்த விற்பனைத் தொகையானது 1,01,85,84,37,500 ரூபாய்க்கு அதிகரித்திருக்

கிறது. மற்றும், ஆரம்ப, மத்தியதர, உயர்தரப் பள்ளிக் கூடங்கள் ஆகிய மூவகைத்தரத்துப் பள்ளிக்கூடங்களி லும் படிக்கிற மாணக்கர்களின் எண்ணிக்கை 1933-34-ஆம் வருஷத்தில் 2,38,14,000 ஆக இருந்தது 1938-39-ஆம் வருஷம் 3,39,65,400 ஆக அதிகரித்திருக்கிறது.

தொழில் அபிவிருத்திக்கு முக்கிய துணையா யிருப்பது போக்கு வரத்துச் சாதனங்கள். இவற்றையும் விருத்தி செய்திருக்கிறார்கள் சோவியத் தலைவர்கள். 1913-ஆம் வருஷம் 36,000 மைல் நீளமே இருந்த ரெயில் பாதை யானது 1940-ஆம் வருஷம் சுமார்—64,000 மைல் நீளத் திற்கு அதிகரித்திருக்கிறது. இதற்குத் தகுந்தாற்போல் சாமான்களின் போக்கு வரத்தும் அதிகப்பட்டிருக்கின் றது. இஞ்சின்கள், ரெயில் வண்டிகள், தண்டவாளங் கள் முதலிய யாவும் இப்பொழுது ருஷ்யத் தொழிற்சாலை களிலேயே தயாரிக்கப்படுகின்றன.

ஆற்று மார்க்கத்துப் போக்குவரத்தும் ருஷ்யாவில் அதிகம். இந்த ஆற்று மார்க்கத்தின் நீளம் 1913-ஆம் வருஷம் 47,000 மைல்கள். 1938-ஆம் வருஷம் இது 83,000 மைல்களுக்கு நீண்டிருக்கிறது. இன்னும் பல நீர்ப் பெருக்குகளைப் போக்கு வரத்துக் குரியனவாகச் செய்ய, சோவியத் தலைவர்கள் திட்டங்கள் போட்டு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

ருஷ்யா, விஸ்தீரணமுள்ள ஒரு தேசமாகையால் ஓரி டத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்வதென்றால் முன் னெல்லாம் நாட்கள் கணக்காக ஆகும். இப்பொழுது ஆகாய விமானங்கள் ருஷ்யாவின் மூலை முடுக்குகளுக் கெல்லாம் செல்கின்றன. மொத்தம் 7,100 மைல் நீளத் திற்கு ஆகாயவிமானப் போக்கு வரத்துகள் இருக்கின் றன. இதனால் நாட்கணக்கில் நடைபெற்ற பிரயாணம் இப்பொழுது மணிக்கணக்கில் முடிந்துவிடுகிறது.

## 9. பெண்ணுரிமை

தேசத்தின் செல்வத்தை அதிகரித்து அதன் மூலமாக ஜனங்களுடைய பொருளாதார அந்தஸ்தை உயர்த்தி விடுவதோடு மட்டும் சோவியத் தலைவர்கள் திருப்தி யடையவில்லை. அப்படித் திருப்தி யடைந்து விடுவதும் அவர்கள் நோக்கமன்று. அவர்களுடைய நோக்கம் ஏற்றத் தாழ்வுகளில்லாத ஒரு சமுதாயத்தை அமைக்க வேண்டு மென்பது. அந்த மாதிரியான ஒரு சமுதாயம் அமைய வேண்டுமானல் ஆணுக்கொரு நீதி பெண்ணுக் கொரு நீதி என்று இருக்கலாமா? கடமையைச் செய் வதிலேயோ, உரிமையை அநுபவிப்பதிலேயோ ஆணுக்கு எல்லாச் சந்தர்ப்பங்களையும் அளித்து விட்டு, பெண்ணுக்கு அந்தச் சந்தர்ப்பங்களை அளிக்க மறுக்கலாமா? தேக அமைப்பிலே ஏற்பட்டிருக்கிற ஒரு வித்தியாசத்தைத் தவிர, அந்த வித்தியாசமான அமைப்பின் காரணமாக நிறைவேற்ற வேண்டிய வித்தியாசமான சில கடமைகளைத் தவிர, மற்றெல்லா வகையிலும் ஆணும் பெண்ணும் ஒன்று தானே? ஒரே மாதிரியான உரிமைகளை அநுபவிப்ப தற்கும் ஒரே மாதிரியான கடமைகளைச் செய்வதற்கும் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் தானே? மானிடஜாதி யென்று சொன்னலும், சமுதாயம் என்று சொன்னலும், குடும்பம் என்று சொன்னலும் ஆணும் பெண்ணும் சேர்ந்த ஓர் அமைப்பைத்தானே குறிக்கிறது? இந்த மாதிரியான கருத்துக்களை வைத்துக் கொண்டு, சோவியத் தலைவர்கள் பெண் சமுதாயத்தைப் புனர் நிர்மாணம் செய்யத் தொடங்கினர்கள். அப்படிப் புனர் நிர்மாணம் செய்வ தற்கு முன்னர், அவர்களை அடிமைத் தளையினின்று விடு தலை செய்வித்தார்கள். இதற்காக, மதக் கட்டுப்பாடுகள்,

மூட நம்பிக்கைகள், பரம்பரைப் பழக்க வழக்கங்கள் முதலியவற்றோடு அவர்கள் போராட வேண்டி யிருந்தது. போராடினார்கள். வெளிப்பகைகளோடு போராடி வெற்றி பெற்றவர்கள், உட்பகைகளை வைத்துக் கொண்டு சும்மா இருப்பார்களா? போராடிக் கடைசியில் வெற்றி பெற்றார்கள்; பெண் சமுதாயத்திற்குப் புதிய வாழ்வை அமைத்துக் கொடுத்தார்கள். "இதுகாறும் மற்ற நாடுகளிலே கனவுகூடக் காண முடியாதபடி, ருஷ்யாவில் பெண்களின் சீர்திருத்த இயக்கம் வெற்றி பெற்றிருக்கிறது" என்று ஒரு பெண்மணி கூறுகிறாள்.

ஜார் காலத்து ருஷ்யாவில், பெண்கள், ஆடு மாடுகளைப் போல் ஜங்கம சொத்துக்களாகக் கருதப்பட்டார்கள். அநேகம் பிரதேசங்களில் பெண்கள், விக்கிரயஞ் செய்யப்பட்டார்கள். கணவனை இழந்த மனைவி, அந்தக் கணவனுடைய சொத்துக்கள் யாருக்குப் போய்ச் சேருமோ அவரிடத்தில் அந்தச் சொத்துக்களோடு போய்ச் சேர வேண்டியவளானாள். அப்படி அந்தச் சொத்துக்களைப் பெற்றுக் கொண்டவர், அவைகளை அந்த விதவையோடு சேர்த்து யாருக்கேனும் நல்ல விலைக்கு விற்று விடலாம். சிவில் சட்டப்படி, "புருஷனுடைய சொல்லுக்கு எல்லா வகையிலும் கீழ்ப்பட்டு நடக்க வேண்டியது மனைவியின் கடமை. எந்த விதத்திலும் அவனுடைய அதிகாரத்தைப் புறக்கணிக்கக் கூடாது." "புருஷனுடைய உத்திரவில்லாமல், மனைவி, கூலிக்கோ சம்பளத்திற்கோ எந்த விதமான வேலையும் ஒப்புக்கொள்ளக் கூடாது." ஆஸ்பத்திரியில் நர்ஸாகவோ, பள்ளிக்கூடத்தில் ஆசிரியையாகவோ, வேறெந்த உத்தியோகத்திலோ வேலை செய்துகொண்டிருக்கிற ஒரு ஸ்திரீ, விவாகம் செய்துகொண்டு விட்டால், அந்த உத்தியோகத்தினின்று விலக்கப்பட்டு விடுவாள். விவாகமான ஸ்திரீகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பிரயாணஞ் செய்ய வேண்டுமானால், இவர்களுக்

கென்று தனியாக 'பாஸ்போர்ட்' கிடையாது; புருஷ னுடைய 'பாஸ்போர்ட்'டில் தான் இவர்கள் பிரயாணஞ் செய்ய முடியும். அப்படிப் புருஷனுடைய அநுமதி யில்லாமல் எந்த ஸ்திரீயேனும் பிரயாணஞ் செய்து விட் டால், போலீசாரால் கைது செய்யப்பட்டுத் திருப்பி அழைத்து வரப்படலாம். வளர்த்த தந்தையோ, கட்டின புருஷனோ எவ்வளவு கொடியவர்களா யிருந்தாலும் அவர் களிடமிருந்து ஸ்திரீகளுக்கு விமோசனமே கிடையாது. இவை யெல்லாவற்றிற்கும் மேலாக, பெரும்பாலான பெண்களுக்கு எழுத்து வாசனை என்பதே தெரியாது.

இப்படிப்பட்ட நிலைமையிலிருந்து ஸ்திரீகளை மேலுக் குக்கொண்டு வருவது, சோவியத் தலைவர்களின் முதற் கடமையா யிருந்தது. இதனுல் இவர்கள் அரசாங்க நிரு வாகத்தை ஏற்றுக் கொண்டதும், ஆண்களும் பெண்களும் எல்லா வகையிலும் சமமானவர்களே என்ற கோட் பாட்டை அடிப்படையாகக் கொண்டு எல்லா உத்திரவு களையும் பிறப்பித்தார்கள்; எல்லாச் சட்டங்களையும் இயற்றினுர்கள். இவற்றின் விளைவாக, ஆண்களைப் போலவே பெண்களும்—விவாக மானவர்களானுலும் சரி, விவாக மாகாதவர்களானுலும் சரி—சட்டசபை முதலிய வற்றிற்கு ஓட்டுக் கொடுத்தார்கள்; அபேட்சகர்களாக நின்று வெற்றி பெற்றுர்கள்; தொழிலாளர் சங்கங்க ளென்ன, கூட்டுறவு ஸ்தாபனங்களென்ன இவையனைத் திலும் அங்கத்தினர்க ளானுர்கள். திறமைக்குத் தகுந்த படி இவர்களுக்கு உத்தியோகம் கிடைத்தது. கூலியோ சம்பளமோ எல்லாம் ஒரே மாதிரி. விவாகஞ் செய்து கொள்வதற்கு முன்னரும், கொண்டதற்குப் பின்னரும், இவர்களுடைய சம்பாத்தியம் இவர்களுடைய சுவாதீனத் திலேயே இருந்தது. விவாக ரத்து செய்து கொள்ளும் விஷயத்தில், ஆண்களுக்கு என்ன உரிமைகளும் கடமை களும் இருந்தனவோ அதே உரிமைகளும் கடமைகளும்

பெண்களுக்கும் ஏற்பட்டன. சட்டத்தின் முன்னர் ஆணும் பெண்ணும் சரிசமானமாகவே கருதப்பட்டார்கள். 1937-ஆம் வருஷத்து அரசியல் சட்டத்தில் பெண்களின் உரிமைகள் பின் வருமாறு விளக்கப்பட்டிருக்கின்றன :—

"சோவியத் ராஜ்யத்தில், பொருளாதாரம், ராஜ்ய விவகாரம், கலாசாரம், சமுதாயம், அரசியல் முதலிய எல்லாத் துறைகளிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை உண்டு."

—122-ஆவது பிரிவு.

"சட்டசபை முதலிய பொது ஸ்தாபனங்களுக்கு, ஆண்கள் என்னென்ன நிபந்தனைகளின் மீது ஓட்டுக் கொடுக்கிறார்களோ அல்லது பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்களோ அதே நிபந்தனைகளின்மீது ஓட்டுக் கொடுக்கவும் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கப் படவும் பெண்கள் உரிமையுடையவர்கள்."

—137-ஆம் பிரிவு.

இங்ஙனம் உரிமைகள் வழங்கி யிருப்பதோடு மட்டுமல்லாமல், இவற்றை உபயோகப்படுத்துவதற்கு வேண்டிய எல்லாச் சந்தர்ப்பங்களையும் அளித்திருக்கிறார்கள். வாழ்க்கையின் எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், அதில் ஸ்திரீகள் பிரவேசித்து வெற்றிகரமாகக் காரியங்கள் செய்து வருவதை இப்பொழுது பார்க்கலாம்.

சோவியத்துகளின் பிரதிநிதிச் சபை, ஜாதிய சபை ஆகிய இரண்டும் சேர்ந்த சுப்ரீம் சோவியத்தில் 189 ஸ்திரீகள் அங்கத்தினர்களா யிருக்கிறார்கள். இவர்கள் தவிர எல்லா மாகாண சட்ட சபைகளிலும் சேர்த்து மொத்தம் 1,426 ஸ்திரீகள் அங்கத்தினர்களா யிருக்கிறார்கள். இங்ஙனம். அங்கத்தினர்களா யிருப்பதைத் தவிர அநேக ஸ்திரீகள் பொறுப்பான பதவிகளை வகிக்கிறார்கள். உதாரணமாக சுப்ரீம் சோவியத்தின் பிரெசிடியத்தில் இப்

பொழுது இரண்டு ஸ்திரீகள் அங்கத்தினர்களா யிருக்கிருர்கள். ஜாதிய சட்டசபையின் உபதலைவர் அஸ்லனேவா என்ற அஜெர்பைஜானிய மாகாணத்து ஸ்திரீ. அந்தந்த மாகாணங்களிலுள்ள சட்ட சபைகளின் தலைவர்கள், உபதலைவர்கள் ஆகிய இப்படிப் பட்டவர்களுடைய மொத்த எண்ணிக்கையில் 100-க்கு 37 சதவிகிதம் ஸ்திரீகளாகவே இருக்கிருர்கள். அநேக ஸ்திரீகள் மாகாணங்களிலும் ஜில்லாக்களிலும் நீதிபதிகளாக இருந்து நீதி நிருவாகத்தைத் திறம்பட நடத்துகிருர்கள். கூட்டுப்பண்ணைகள் முதலிய ஸ்தாபனங்களின் தலைவர்களாகவோ, உபதலைவர்களாகவோ, காரியதரிசிகளாகவோ இருந்து காரியங்களை ஒழுங்காகச் செய்து கொண்டுபோகிற ஸ்திரீகளின் எண்ணிக்கை (1940-ஆம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதி எடுத்த ஒரு கணக்குப்படி) 54,200.

ஜெர்மனிக்கு விரோதமாக நடைபெற்ற போரில் ருஷ்ய ஸ்திரீகள் காட்டியிருக்கிற வீரம் மகத்தானது; ருஷ்ய சரித்திரம் உள்ளளவும் இவர்களுடைய வீரம் வாழ்ந்து கொண்டிருக்கும். தங்கள் தாய் நாட்டைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஒரே லட்சியத்திற்காக எத்தனையோ ஸ்திரீகள் தங்கள் உயிரைப் பலிகொடுத்திருக்கிருர்கள்; அப்படியே சத்துருக்களின் உயிரையும் பலி வாங்கியிருக்கிருர்கள். பல போர்முகங்களில் வீரங்காட்டியதற்காக 1945-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் முதல் தேதிவரை 10,55,000 ஸ்திரீகள் பலவகையான கௌரவங்களைப் பெற்றிருக்கிருர்கள். ஆகாய விமானப் படையைச் சேர்ந்த இடோகியா நிஜு-லினு என்ற ஒரு ஸ்திரீ அறுநூறு தடவை பறந்து சென்று சத்துருக்களைத் தாக்கிப் பலஹீத சேதங்களை உண்டுபண்ணி யிருக்கிருள்; "சோவியத் யூனியனின் வீரர்" * என்ற மேலான கௌரவப்பட்டத்தையும் பெற்றிருக்கிருள். இதே மாதிரியான கௌர

* Hero of the Soviet Union.

வத்தை யடைந்தவர் இன்னும் 49 ஸ்திரீகள் இப்பொழுது ருஷ்யாவில் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட வீரமாதர் களைக்கொண்ட ருஷ்யா, ஜெர்மனி மீது வெற்றி கொண்ட தில் என்ன ஆச்சரியம்?

இங்ஙனம் அரசியல் துறையிலும் போர்க்களத்திலும் ஸ்திரீகள் பங்கெடுத்துக் கொண்டிருப்பதோடு, வேறு பல்வகைத் துறைகளிலும் இவர்களுடைய அறிவும் திறமை யும் பிரகாசிக்கின்றன.

உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் சேர்ந்து மொத் தம் பதினாயிரம் ஸ்திரீ இஞ்சினீர்களே இருக்கிறார்கள். ஆனால் சோவியத் ருஷ்யாவில் மட்டும் சுமார் ஒரு லட்சம் பேருக்கு மேற்பட்ட ஸ்திரீ இஞ்சினீர்கள் முக்கியமான தொழில் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். மற்றும் சுமார் 66,000 டாக்டர்கள், 1,800 ஸ்டேஷன் மாஸ்டர்கள், 10,000 ரெயில்வே இஞ்சினீர்கள், 150,000-க்கு மேற்பட்ட மோட்டார் டிரைவர்கள், 12,500 விஞ்ஞான சாஸ்திரிகள் இவர்களெல்லாரும் ஸ்திரீகள்தான். ஒரு கணக்குப்படி 1929-ஆம் வருஷத்தில் 33,00,000 ஸ்திரீகள் உபயோககர மான தொழில்களில் ஈடுபட்டிருந்தார்கள். 1937-ஆம் வருஷத்தில் இந்த எண்ணிக்கையானது 94,00,000 ஆக அதிகப்பட்டது. இவர்கள் தவிர கூட்டுப் பண்ணைகளில் வேலை செய்கிற மொத்த ஸ்திரீகளின் எண்ணிக்கை சுமார் 190 லட்சம். இங்ஙனம் ஆகாய விமானங்கள் ஓட்டுவது முதல் நிலத்திலே உழுது பயிரிடுவது வரை எல்லா வேலை களிலும் ஸ்திரீகள் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள்.

ஸ்திரீகளுக்கு ஒரே மாதிரியான வேலை செய்யவும், ஒரே மாதிரியான கூலி பெறவும் சந்தர்ப்பம் அளித்து விட்டதோடு சோவியத் அரசாங்கத்தினர் சும்மா இருக்க வில்லை. அவர்கள் தங்கள் வேலையை எவ்வித இடையூறுகளு மில்லாமல் செய்வதற்கு என்னென்ன அநுகூலங்களைச் செய்து தர வேண்டுமோ அவை யனைத்தையும் செய்து

கொடுத்திருக்கிறார்கள். இதுதான் விசேஷம். உதாரணமாக, தொழிற்சாலைகள் முதலியவற்றில் வேலை செய்து கொண்டிருக்கிற தாய்மார்கள், வேலை நேரத்தில் தங்கள் குழந்தைகளைப் பற்றிக் கவலைப்படாம லிருக்கும் பொருட்டு, அவர்கள் வேலை செய்யும் ஸ்தாபனங்களிலேயே, குழந்தைப் பாதுகாப்பு ஸ்தலங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதாவது ஒரு தாயார், வேலைக்கு வரு முன்னர், தன்னுடைய குழந்தையை இந்தப் பாதுகாப்பு ஸ்தலத்தில் விட்டுவிட்டு வரலாம். அந்தக் குழந்தை, தாய்ப்பாலில் வளர்கிற குழந்தையா யிருந்தால், மூன்றரை மணி நேரத்திற் கொருமுறை, தாயாருக்கு அரைமணி நேரம் ரஜா கொடுக்கப்படுகிறது. அந்த நேரத்தில் அவள், குழந்தைக்குப் பால் கொடுத்துவிட்டு வரலாம். பால் குடியாத குழந்தைகளா யிருந்தால் அவற்றைக் கவனித்துக் கொள்வதற்கென்று தாதிமார் முதலியோர் நியமிக்கப்பட் டிருக்கிறார்கள். விளையாடுகிற குழந்தைகளுக்கு விளையாட்டு ஸ்தலங்கள் வேறே ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. இந்த மாதிரியான குழந்தைப் பாதுகாப்பு ஸ்தலங்களில் சுமார் ஒரு கோடி குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வளர்கின்றன. மற்றும், தாய்மார்கள், தொழிற்சாலைகளில் வேலை செய்துவிட்டு வீடு திரும்புகிறபோது களைத்துப் போவார்களல்லவா? இந்தக் களைப்பில் எப்படிச் சமையல் செய்து சாப்பிட முடியும்? இதற்காக உணவுச் சாலைகள் பல ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றன. இவற்றில் சொற்ப விலை கொடுத்து, தேவையான உணவை வாங்கிக் கொள்ளலாம். நன்றாகப் பக்குவம் செய்யப்பட்டு உடனே சாப்பிடக்கூடிய மாதிரியே இவை விற்கப்படுகின்றன. இந்த மாதிரியான உணவுச் சாலைகள் சுமார் 30,000-க்கு மேல் இருக்கின்றன.

பெண்களின் தேக அமைப்பை உத்தேசித்து, அவர்களுக்குச் சில வேலைகள் கொடுக்கப்படுவதில்லை. கர்ப்ப

ஸ்திரீகள், பிரசவித்துக் கைக்குழந்தையோ டிருக்கிற தாய்மார்கள் முதலியோர் இரவு நேரங்களில் வேலை செய்யக் கூடாதென்று கட்டாயமாகத் தடுக்கப்பட் டிருக்கிறார்கள். வருஷத்தில் சம்பளத்தோடு இரண்டு வார ரஜா பெற ஒவ்வொரு ஸ்திரீ தொழிலாளிக்கும் உரிமை உண்டு. இது தவிர, பிரசவ ரஜா என்று சொல்லி, பிரசவத்திற்கு முந்தி சுமார் ஆறு வாரமும் பிரசவத்திற்குப் பின்னர் சுமார் ஆறு வாரமும் முழுச் சம்பளத்துடன் ரஜா கொடுக்கப் படுகிறார்கள். 1944-ஆம் வருஷம் ஜூலை மாதம் எட்டாந்தேதி நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தின்படி இந்தப் பிரசவ ரஜா எழுபத்தேழு நாட்களாக அதிகரிக்கப் பட்டிருக்கிறது.

பொதுவாகவே சோவியத் ராஜ்யத்தில் கர்ப்ப ஸ்திரீ களை அதிக சிரத்தையுடன் கவனிக்கிறார்கள். இதைப்பற் றிச் சிறிது விளக்கமாகக் கூறவேண்டியது அவசியம் என்று கருதுகிறோம். ஏனெனில், புதியதொரு சந்ததியைச் சிருஷ்டிப்பதில் சோவியத் தலைவர்கள் எவ்வளவு நுணுக்க மாகக் கவனஞ் செலுத்தியிருக்கிறார்கள் என்பதை இதனின்று நன்கு தெரிந்துகொள்ளலாம். ஒரு ஸ்திரீ கர்ப்பந் தரித்தவுடனே அவளுடைய போஷணையை அரசாங்கத்தார் ஏற்றுக் கொண்டு விடுகிறார்கள். தாய்மை என்னும் புனிதமான கடமையை, அவள் ராஜ்யத்தின் க்ஷேமத்தை உத்தேசித்தே நிறைவேற்றுகிறாள். அதனால் அவள் அடைகிற தேகசிரமத்தை வேறு யாரும் ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும், அது சம்பந்தமான மனோ வேதனையை அநுபவியாமல் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மற்றவர்கள் செய்துகொடுக்க முடியு மல்லவா? அதாவது கர்ப்பமாயிருக்கிற காலத்தில், சரி யான ஆகாரவகைகளை உட்கொள்வதற்கோ, வேறு சௌகரியங்களைச் செய்து கொள்வதற்கோ பண மில்லையென்றோ அல்லது வேறுவிதமான உதவிகளைப்

பெற முடியவில்லை யென்றோ எந்த ஒரு ஸ்திரீயும் கவலைப்படக் கூடாது. இப்படிக் கவலைப்படுவது, வயிற்றிலே இருக்கிற சிசுவுக்குக் கெடுதல். இதனை உணர்ந்து, சோவியத் அரசாங்கத்தார், ஒரு கர்ப்ப ஸ்திரீக்கு வேண்டிய எல்லாச் சௌகரியங்களையும் செய்து கொடுத்திருக்கிறார்கள். சமுதாய நன்மைக்காக அவள் பிரஜைகளை உற்பத்தி செய்து கொடுக்கிறாள். அந்தக் கடமையை அவள் ஒழுங்காகச் செய்து வருவதற்காக அவளைக் காப்பாற்ற வேண்டியது தனது பொறுப்பு என்பதை, சோவியத் அரசாங்கம் நன்றாக உணர்ந்திருக்கிறது. அதாவது சோவியத் ராஜ்யத்தின் ஒவ்வொரு வருங்காலத்துப் பிரஜையும், தாயின் கர்ப்பத்தி லிருக்கிற காலத்திலிருந்தே, அரசாங்கத்தின் உதவி பெற்று வளர்ச்சியடைகிற தென்பது பெறப்படுகிறது.

சமதர்மத்தின் முக்கியமான கோட்பாடுகளில் ஒன்று தாய்மையைப் போற்றி வளர்ப்பது. கார்ல் மார்க்ஸ், 1864-ஆம் வருஷத்தில் நடைபெற்ற முதலாவது சர்வதேச சமதர்ம மகாநாட்டில் இதைப்பற்றி விஸ்தரித்துச் சொல்லி யிருக்கிறான். இதனைச் சோவியத் அரசாங்கம் அப்படியே பின்பற்றி நடக்கிறது. சோவியத் ருஷ்யாவில் வருஷந்தோறும் ஏறக்குறைய 60 லட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. இதற்காக ஏற்படுகிற செலவுகளனைத்தையும் அரசாங்கமே செய்கிறது. தனிப்பட்டவர்களுடைய தர்ம கைங்கரியத்திற்கு இதனை விடவில்லை.

ருஷ்யாவில் பிரசவ ஆஸ்பத்திரிகளைத் தவிர, கர்ப்ப ஸ்திரீகளைப் பரிசோதனை செய்து அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளைச் சொல்வதற்கும், உதவிகளைச் செய்வதற்கும் தனியான ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்டதொரு ஸ்தாபனத்திற்குச் சென்று பிரதியொரு கர்ப்ப ஸ்திரீயும் தன் பெயரைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். உடனே அவளை, அங்குள்ள ஸ்திரீ வைத்தியர்

கள் பரிசோதனை செய்து ஒரு சீட்டுக் கொடுக்கிறார்கள். இந்தச் சீட்டைக் காட்டினால், டிராம், பஸ், ரெயில் முதலிய போக்குவரத்துச் சாதனங்களிலும், மற்றப் பொது ஸ்தலங்களிலும், முந்தின இடம், அதாவது சௌகரியமான இடம் கொடுப்பார்கள். சாமான் வாங்கக் கடைக்குச் சென்றால், அதிக நேரம் காக்கவைக்காமல் சீக்கிரமாகச் சாமான் கொடுத்தனுப்பி விடுவார்கள். சாதாரணமாக எல்லாருக்கும் கிடைக்கிற அளவைக் காட்டிலும் கொஞ்சம் அதிகமான அளவுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்கும். தொழில்செய்கிறஇடங்களில்லேசான வேலையைக்கொடுப்பார்கள். தவிர, பிரசவத்திற்கு முந்திச் சுமார் ஆறுவார காலம் முழுச் சம்பளத்துடன் ரஜா கொடுப்பார்கள்.*

இவை தவிர, மேற்படி கர்ப்ப பரிசோதனை ஸ்தலங்களைச் சேர்ந்தாற்போல், சட்ட சம்பந்தமான ஆலோசனைகள் சொல்வதற் கென்று தனியான ஓர் இலாகா இருக்கிறது. இங்கு எந்த ஒரு கர்ப்ப ஸ்திரீயும் சென்று, தான் கர்ப்பம் தரித்த விஷயமாகத் தன்னிடத்தில் எந்த ஒரு புருஷனாவது தவறுதலாக நடந்துகொண் டிருந்தாலும் சரி, அல்லது தான் கர்ப்பமா யிருக்கிற காரணத்திற்காகத் தன்னுடைய நியாயமான உரிமைகளை, தான் தொழில் செய்கிற இடத்து அதிகாரிகள் பறிமுதல் செய்திருந்தாலும் சரி, அல்லது தனக்கோ தன்னுடைய குழந்தைகளுக்கோ யாரேனும் தீங்கிழைத்திருந்தாலும் சரி, எல்லாவற்றிற்கும் பரிகாரந் தேடிக்கொள்ள ஆலோசனைகள் கேட்கலாம்.

---

* 1944-ஆம் வருஷம் ஜூலை மாதம் எட்டாந்தேதி நிறைவேற்றப் பட்ட சட்டப்படி கர்ப்ப ஸ்திரீகளுக்கும் பிரசவித்த ஸ்திரீகளுக்கும் கிடைக்கிற உணவுப் பொருள்கள் இரட்டிப்பு மடங்காக்கப் பட்டிருக்கிறது. இங்ஙனமே பிரசவத்திற்கு முந்தின ரஜா எழுபத்தேழு நாட்களாக அதிகரிக்கப் பட்டிருக்கிறது.

பின்னர், பிரசவ காலத்தின்போது ஆஸ்பத்திரிகளில் ஸ்திரீகளுக்கு எல்லாவிதமான சௌகரியங்களும் செய்து கொடுக்கப்படுகின்றன. "மாஸ்கோவிலுள்ள ஆஸ்பத்திரியைத் தவிர, உலகத்திலே வேறெந்தப் பிரசவ ஆஸ்பத்திரியிலாவது, ஒவ்வொரு ஸ்திரீயினுடைய படுக்கைக்குப் பக்கத்திலும் காதோடு கேட்கிற ரேடியோ வசதியும், தன்னுடைய குடும்பத்தினருடன் நினைத்த போது பேசுவதற்கான டெலிபோன் வசதியும் இலவசமாகச் செய்து கொடுக்கப்பட் டிருக்கின்றனவா?" என்று, சோவியத் நாகரிகத்தைப் பாராட்டி எழுதியிருக்கிற சிட்னி வெப் தம்பதிகள் ஆச்சரியத்துடன் கேட்கிறார்கள்.* பிரசவித்த பிறகு, குழந்தையின் துணி மணிகளுக்கென்று ஒரு தொகையும், (சுமார் 28 ரூபாய்) குழந்தையின் ஆகார வகைக்காக முதல் ஒரு வருஷத்திற்கு மாதவாரியாக ஒரு தொகையும் (மாதம் சுமார் ஆறு ரூபாய் விகிதம்) பிரதியொரு ஸ்திரீக்கும் அளிக்கப்படுகின்றன. இந்த உதவிகள் யாவும், அதாவது கர்ப்ப பரிசோதனை ஸ்தலத்தில் பெயரைப் பதிவு செய்து கொள்வதிலிருந்து, பிரசவித்த பிறகு ஒரு வருஷம் வரை குழந்தைக்கு ஆகாரம், துணிமணிகள் முதலியன அளிப்பது வரை எல்லாம் இலவசமாகவே செய்யப்படுகின்றன என்பது இங்கு முக்கியமாகக் கவனிக்கத் தக்கது. இவை தவிர, ஒரு தாயாருக்கு ஆறு குழந்தைகளுக்கு மேல் இருக்குமானால் அல்லது இனிப் பிறக்குமானால், அப்படி இருக்கிற அல்லது பிறக்கிற அதிகப்படியான ஒவ்வொரு குழந்தைக்கும் வருஷத்திற்கு 1,250 ரூபாய் வீதம் குழந்தையின் ஐந்தாவது வயதுவரை இனாம் கொடுக்கப் படுகிறது. பத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் இருக்குமானால், அதிகப்படியான ஒவ்வொரு குழந்தைக்கும் முதல் வருஷத்திற்கு 3,125 ரூபாயும்,

* Soviet Communism - A New Civilization by Mr. and Mrs. Sidney Webb.

அடுத்த நான்கு வருஷத்திற்கு வருஷ மொன்றுக்கு 1,875 ரூபாய் விகிதமும் இனம் கொடுக்கப்படுகிறது.* 1936-ஆம் வருஷம் ஜூன் மாதக் கடைசியிலிருந்து 1941-ஆம் வருஷம் ஜூன் மாதக் கடைசிவரை ஐந்து வருஷ காலத்தில் இந்த மாதிரி இனம் தொகையாகச் சுமார் 1,25,00,00,000 ரூபாய் அரசாங்க பொக்கிஷத்திலிருந்து கொடுக்கப் பட்டிருக்கிறது.

குடும்பத்தினுடைய பரிணமம் தேசம். தேசத்தினுடைய நல்வாழ்வுக்கு அடிப்படையாயுள்ளது குடும்பத்தினுடைய நல் வாழ்வு. எனவே, இந்தக் குடும்பத்திலுள்ள தம்பதிகள் ஒத்த நலனும் ஒத்த பண்பும் உடையவர்களாய், சம அந்தஸ்தும் சம உரிமையும் உடையவர்களாய் இருத்தல் வேண்டும். இதற்கான எல்லா ஏற்பாடுகளையும் சோவியத் அரசாங்கத்தார் செய்திருக்கின்றனர்; குடும்ப வாழ்க்கைக்கு ஒரு கௌரவம் கொடுத்திருக்கின்றனர். இதனால் விவாக ரத்துகள் குறைந்து கொண்டும், ஜனன விகிதம் அதிகரித்துக் கொண்டும் வருகின்றன. உதாரணமாக, மாஸ்கோ நகரத்தில் மட்டும் 1935-ஆம் வருஷத்தில் 16,182 விவாக ரத்துகள் பதிவு செய்யப்பட்டன. 1937-ஆம் வருஷம் இது 8,961-க்குக் குறைந்து விட்டது. இதற் கெதிராக அதே மாஸ்கோ நகரத்தில் 1936-ஆம் வருஷம் 71,073 குழந்தைகள் பிறந்தன. 1937-ஆம் வருஷத்தில் இந்த எண்ணிக்கையானது 1,35 848-க்கு அதிகப்பட்டிருக்கிறது.

சோவியத் ருஷ்யாவில் குடும்ப வாழ்க்கை ஸ்திரப் பட்டுக் கொண்டும் புனிதமடைந்து கொண்டும் வருகின்

---

* அதிகமான குழந்தைகளையுடைய தாய்மார்களுக்கு அளிக்கப் படுகிற இனம் தொகை அதிகரிக்கப் பட்டிருக்கிற தென்றும், இவர்களுக்குக் கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட வேண்டுமென்றும் 1944-ஆம் வருஷம் ஜூலை மாதம் எட்டாந்தேதிச் சட்டம் கூறுகிறது. தாய் மார்களுக்கு வழங்கப்படுகிற இந்தக் கௌரவப் பட்டங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட் டிருக்கின்றன.

றது. ஒரே மாதிரியான மனப்பான்மையும் அந்தஸ்துமுடைய இளைஞர்கள் விவாகம் செய்துகொண்டு குடும்ப வாழ்க்கையை நடத்துமாறு தூண்டப் படுகிறார்கள். விவாகம் என்பது மதத்தோடு ஒட்டிய ஒரு சடங்கன்று. மனமொத்த இரண்டு பேர், குடும்ப வாழ்க்கையை நடத்துவதற்காக, தாங்களே இஷ்டப்பட்டுச் செய்து கொள்கிற ஓர் ஒப்பந்தம். இந்த ஒப்பந்தத்திற்குப் பங்கம் ஏற்படாமல் நடந்து கொள்வது தம்பதிகளின் கடமை. இப்படிப்பட்ட கருத்துக்கள்தான் இன்றைய ருஷ்யாவில் நிலவுகின்றன. ஆனால் சட்டத்தின் முன்னர், ஒப்பந்தப்படி விவாகம் செய்து கொள்கிற தம்பதிகளும், ஒப்பந்தமில்லாமல் புருஷனும் மனைவியுமாக வாழ்கிறவர்களும் ஒரே மாதிரிதான். யாருக்கும் எவ்வித விசேஷ சலுகையும் கிடையாது. அப்படியே, ஒப்பந்தப்படி விவாகம் செய்து கொள்ளாத புருஷனுக்கும் மனைவிக்குமாகப் பிறந்த குழந்தைகள் என்பது கிடையாது. ஒரு தாய் வயிற்றிலிருந்து குழந்தை பிறந்து விட்டால், அது யார் மூலமாகப் பிறந்தது, எப்படிப் பிறந்தது என்பதைப்பற்றிக் கேள்வியே இல்லை. பிறந்த குழந்தையைப் பராமரிப்பது அரசாங்கத்தின் கடமை.

தம்பதிகளின் பரஸ்பர சம்மதத்தின் பேரிலாவது அல்லது தம்பதிகளில் யாரொருவருடைய விருப்பத்தின் பேரிலாவது விவாகம் ரத்து செய்யப்பட்டு விடலாம். இந்த விவாக ரத்தைப் பதிவு செய்துகொள்கிற அரசாங்க அதிகாரிகள், குழந்தைகளின் போஷணைக்குப் புருஷனோ மனைவியோ யார் எவ்வளவு தொகை கொடுத்து வர வேண்டுமென்பதையும், குழந்தைகள் யாரிடத்தில் வசித்து வர வேண்டுமென்பதையும் நிர்ணயிப்பார்கள்.

தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று தெரிந்தாலோ அல்லது பெற்றோர்களின் நோய், பிறக்கிற குழந்தைக்குத் தொற்றும் என்று தெரிந்தாலோ அல்லாமல்,

கர்ப்பத்தைச் சிதைவு செய்வது, சோவியத் ராஜ்யத்தில் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுகிறது.

பெண்களின் கல்வி முன்னேற்றம் ருஷ்யாவில் வெகு துரிதமாக நடைபெறுகிறது. 1917-ஆம் வருஷத்திற்குப் பிறகு பிறந்த குழந்தைகள் அத்தனை பேரும் கல்வி ஞானம் உடையவர்களாகவும், சுய முயற்சியினால் பிழைப்பு நடத்தக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். உயர்தரக் கல்வி பயிலும் மாணாக்கர்களில் 100-க்கு 43 பேர் பெண்களே. இங்ஙனம் சிறுமிகளுக்குக் கல்விப் பயிற்சி அளிப்பதோடு கூட, வயது வந்த ஸ்திரீகளுக்கும் கல்வி பயிலுவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ருஷ்யாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஞான விளக்கை ஏற்றி வைத்திருக்கிறார்கள் சோவியத் தலைவர்கள். காம்ஸோமால் இயக்கத்தைச் சேர்ந்த சிறுவர் சிறுமிகளும், ராணுவப் பயிற்சி பெற்றுவிட்டுக் கிராமங்களுக்குத் திரும்பி வருகின்ற இளைஞர்களும், வயது வந்த தாய்மார்களுக்கு இலவசமாகக் கல்வி யறிவைப் புகட்டுகிறார்கள். அறியாமையிலும் மூட நம்பிக்கைகளிலும் ஆழ்ந்துகிடந்த தாய்மார்கள் இப்பொழுது கண் திறந்து உலகத்தைப் பார்க்கிறார்கள்; சமுதாய வாழ்வில் தங்களுக்குரிய நியாயமான பங்கை அநுபவித்து வருகிறார்கள்.

# 10. கல்வி — கலை

"கல்வியறிவு இல்லாமற் போனால் அரசியல் அறிவு உண்டாகாது. அதற்குப் பதிலாக வதந்திகள், சில்லரைப் பேச்சுகள், துவேஷங்கள் முதலியனவே உண்டாகும்" என்று லெனின் கூறினான். ஜனங்கள் தங்களுடைய பிரஜா உரிமைகளை அநுபவிக்க வேண்டுமானல், அவர்கள் முதலில் கல்வி ஞானம் பெற வேண்டும். இந்த ஞானப் பாலைப் புகட்டுவது தங்களுடைய முதற் கடமையென்பதை, சோவியத் தலைவர்கள் ஆரம்பத்திலேயே உணர்ந்திருந்தார்கள். இவர்கள் 1918-ஆம் வருஷம் அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக்கொண்ட காலத்தில், ருஷ்ய மகாஜனங்களில் 100-க்கு 73 பேர் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாயிருந்தார்கள். இருபது வருஷங்களுக்குப் பிறகு இந்த நிலைமை அடியோடு மாறிவிட்டது. கீழ்க் கண்ட புள்ளி விவரங்களிலிருந்து இதனை நன்கு தெரிந்து கொள்ளலாம்:—

| | விவரம் | 1913-ஆம் வருஷத்தில் | 1940-41-ஆம் வருஷத்தில் | 1941-42 ஆம் வருஷத்தில் |
|---|---|---|---|---|
| 1. | பள்ளிக்கூடங்களில் படிக்கிற பிள்ளைகள் | 78 லக்ஷம் | 350 லக்ஷம் | 362 லக்ஷம் |
| 2. | கலாசாலைகளில் படிக்கிற பிள்ளைகள் | 112 ஆயிரம் | 601 ஆயிரம் | 657 ஆயிரம் |
| 3. | தொழிற் பள்ளிக்கூடங்களில் படிக்கிற பிள்ளைகள் | 35,800 | 9,51,900 | — |
| 4. | சர்வ கலாசாலைகளின் எண்ணிக்கை | 71 | 716 | — |

இங்ஙனம் பள்ளிக்கூடங்களில் சென்று படிக்கிறவர்கள் தவிர, கல்வியறிவு இல்லாமலே பல தொழில்களிலும் ஈடுபட்டிருக்கிற வயது முதிர்ந்தவர்களுக்கும் படிப்புச்

சொல்லிக் கொடுக்க, அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்பொழுது சுமார் நான்கு கோடி பேர் இந்த மாதிரி கல்வியறிவு பெற்றிருக்கிறார்கள்.

சோவியத் பிரஜைகள், அரசாங்கத்தினிட மிருந்து கல்வி வசதிகளைப் பெற உரிமையுடையவர்கள். சோவியத் அரசியல் சட்டத்தின் **121**-ஆவது பிரிவின் மூலமாக இந்த உரிமை ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த விதியின்படி, ஆரம்பக் கல்வியைக் கட்டாயப்படுத்தி இலவசமாகப் புகட்டுவதும், உயர்தரக் கல்வியை இலவசமாக அளிப்பதும்,* தொழிற்சாலைகள், விவசாயப் பண்ணைகள் முதலிய வற்றில் வேலை செய்கிறவர்களுக்கு இலவசமாகத் தொழிற் கல்வி, விவசாய ஞானம் ஆகிய அவரவருக்குத் தேவையான முறையில் போதனை ஏற்பாடுகள் செய்து கொடுப்பதும் அரசாங்கத்தின் அவசியமான கடமைகள். இந்தக் கடமைகளை அநுசரித்து அரசாங்கத்தார் பிரதி வருஷமும், கல்வி இலாகாவின் செலவை அதிகப்படுத்திக் கொண்டு வருகின்றனர்; புதிய பள்ளிக்கூடங்களையும், ஆராய்ச்சிக் கழகங்களையும் ஸ்தாபித்து வருகின்றனர்.

ருஷ்யக் கல்வி முறையின் விசேஷ அமிசம் என்னவென்றால், தாய்மொழி மூலம் பாடங்களைப் போதித்தலேயாம். ஜார் அரசாங்கத்தினர் எல்லாவற்றையும் ருஷ்யமயமாக்க வேண்டுமென்று பார்த்தார்கள். இப்பொழுது சோவியத் ஆட்சி முறையில் அவரவருடைய தாய்ப் பாஷையிலேயே அவரவருக்கும் கல்வி புகட்ட வேண்டுமென்பது கட்டாய விதியாக அநுஷ்டிக்கப்படுகிறது.

---

*1940-ஆம் வருஷம் அமுலுக்குக்கொண்டு வரப்பட்ட ஒரு சட்டத்தின்படி செகண்டரி பள்ளிக்கூடங்களில் மேல் மூன்று வகுப்புகளில் படிக்கும் மாணுக்கர்களுக்கும், அதற்கு மேற்பட்டு உயர்தரக்கல்வி பயிலும் மாணுக்கர்களுக்கும் ஒரு சிறுதொகை கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. ஆனுல் அநாதைகள், பரம ஏழைகளாயுள்ள பிள்ளைகள் இப்படிப்பட்டவர்களிட மிருந்து எவ்வித கட்டணமும் வசூலிக்கப் படுவதில்லை. இவர்களுக்கு எப்பொழுதும்போல் இனமாகவே கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. இந்தக் கட்டணம் வசூலிப்பது தற்காலிக ஏற்பாடுதான்.

ருஷ்யாவிலே பல பாஷை பேசுவோர் உண்டல்லவா? இப்படிப் பேச்சு வழக்கில் மட்டும் இருந்த அநேக பாஷைகளுக்கு எழுத்துக்கள் கண்டு பிடித்து அவற்றில் புஸ்தகங்களை எழுதச் சொல்லி வெளியிட்டார்கள். இந்த மாதிரி சுமார் 35 பாஷைகளுக்கு எழுத்துக்கள் தயாரிக்கப்பட்டு அவற்றில் முறையே நூல்கள் அச்சாயின. ருஷ்யாவில் மொத்தம் 90 விதமான பாஷைகளில் நூல்கள் வெளியாகின்றன. 80 விதமான பாஷைகளில் பிள்ளைகளுக்குப் பாடங்கள் போதிக்கப்படுகின்றன. இவை தவிர, புத்தகசாலைகளென்ன, பத்திரிகைகளென்ன, பொருட்காட்சிசாலைகளென்ன இவையெல்லாம் ஒன்றுக்குப் பன்மடங்காகப் பெருகி, ஜனங்களுடைய அறிவு வளர்ச்சிக்குத் துணைசெய்கின்றன.

| எத்தனை ? | 1914-ஆம் வருஷத்தில் | 1933-ஆம் வருஷத்தில் | 1938-ஆம் வருஷத்தில் | 1940-ஆம் வருஷத்தில் |
|---|---|---|---|---|
| 1. புஸ்தகசாலைகள் ... | 12,600 | 40,300 | 70,000 | — |
| 2. ஷை புஸ்தகசாலைகளில் உள்ள புஸ்தகங்கள் ... | — | 860 லட்சம் | 1,260 லட்சம் | — |
| 3. பத்திரிகைகள் ... | 859 | — | 8,550 | — |
| 4. ஷை பத்திரிகைகளின் பிரதிகள் ... | 27 லட்சம் | — | 375 லட்சம் | 380 லட்சம் |
| 5. வெளியான நூல்கள் ... | 867 லட்சம் | — | — | 7,010 லட்சம் |
| 6. பொருட்காட்சி சாலைகள் ... | 180 | — | — | 761 |

சமுதாயத்தின் அறிவு வளர்ச்சிக்கு ஆசிரியர்கள் பெரிதும் துணை செய்கிறார்க ளல்லவா? இதனால் இவர்களுக்கு இப்பொழுது ஒரு கௌரவமான ஸ்தானம் ஏற்பட்டிருக்கிறது. முன்போல் இவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக இந்த உபாத்திமைத் தொழிலை நடத்துவதில்லை. இவர்களுடைய சம்பள விகிதம் அதிகரித்திருக்கிறது; வேலை நேரம் குறைந்திருக்கிறது. சமுதாயத்தில் இவர்களுடைய செல்வாக்கு மிக அதிகம். 1911-ஆம் வருஷம் ருஷ்யா முழுமைக்கும் மொத்தம் 92,400 ஆசிரியர்களே இருந்தார்கள்; இப்பொழுது சுமார் பத்து லட்சம் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். சோவியத்துகளின் பிரதிநிதிச் சபையில் 19 ஆசிரியர்கள் அங்கத்தினரா யிருக்கிறார்கள்.

குழந்தைகளின் பராமரிப்பு விஷயத்தில் சோவியத் அரசாங்கத்தார் அதிக கவனஞ் செலுத்தி வருகின்றனர் என்பதைப்பற்றி ஏற்கனவே கூறியுள்ளோம். குழந்தைகளுக்குச் சிறு பருவத்திலிருந்தே விளையாட்டின் மூலமாகக் கல்வி கற்றுக்கொடுப்பதற்கான "கிண்டர் கார்டன் பள்ளிக்கூடங்கள்" ஆயிரக்கணக்கில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. 1936-ஆம் வருஷம் எடுத்த ஒரு புள்ளி விவரப்படி இந்தப் பள்ளிக்கூடங்களில் 10,56,800 குழந்தைகள் படித்துக் கொண்டிருந்தன. இவை தவிர, குழந்தைகளுக்கென்று விளையாட்டு மைதானங்கள், பாதுகாப்பு ஸ்தலங்கள், ஆஸ்பத்திரிகள் முதலிய பலவும் தனியாக நிறுவப்பட் டிருக்கின்றன.

சமதர்ம சமுதாயத்தைச் சேர்ந்த ஒவ்வொரு பிரஜையும், அக்கிரமங்களைச் சகித்துக்கொண்டிருக்கிற கோழையல்ல; அவைகளை எதிர்த்துப் போராடுகிற வீரன்; கர்மயோகி; வர்க்கப் பிரிவினைகள் இல்லாத சமுதாயத்தில் நம்பிக்கையுடையவன்; உழைப்புக்குப் பெருமை தருகிறவன்; பரலோக வாழ்க்கையை மறந்து இகலோக வாழ்க்கையில் முழுக்கவனத்தையும் செலுத்துகிறவன்;

ஜாதி, சமூக, நிற வேற்றுமைகளைப் பாராட்டாதவன்; உலகனைத்தையும் ஒரு தொகுப்பாக நோக்குகிறவன்; திடமான தேகத்திலேதான் உறுதியான மனம் இருக்க முடியும் என்பதை அநுஷ்டானத்தில்கொண்டுவருகிறவன்; பால் வேற்றுமை பாராட்டாமல் ஆணையும் பெண்ணையும் சரிசமானமாக நோக்குகிறவன்; ஒழுக்கத்திற்கும் உயிருக்கும் ஒரே மாதிரியான மதிப்பு வைக்கிறவன். இந்த மாதிரியான தன்மைகளை வளர்க்கக்கூடிய மாதிரி சோவியத் கல்விமுறை அமைக்கப்பட் டிருக்கிறது. பிரதியொரு குழந்தையும் சுயமாகச் சிந்திக்குமாறு செய்யப் படுகிறது. தாய் மொழியின் மீதும் தாய்நாட்டின் மீதும் ஒரு பற்றுதல் உண்டாகுமாறு பாடமுறைகள் வகுக்கப் பட்டிருக்கின்றன. இதற்காகச் சரித்திரம், பூகோளம் ஆகிய இரண்டின் மீதும் பிள்ளைகள் அதிக கவனஞ் செலுத்துமாறு தூண்டப்படுகிருர்கள். சுருக்கமாகச் சொல்கிறபோது, "சோவியத் கல்வி முறையின் நோக்கம் உண்மையான கலையை வளர்ப்பது, புதிய சமுதாயத்தை அமைப்பது, புதிய மனிதனைச் சிருஷ்டிப்பது ஆகிய இவையேயாம்."

ஜனங்களுடைய அறிவு வளர்ச்சிக்கு, சினிமா, நாடகம், ரேடியோ முதலியவை இன்றியமையாத சாதனங்களென்பது சோவியத் அரசாங்கத்தாரின் கொள்கை. சினிமாப் படங்கள் எடுக்கிற விஷயத்திலாகட்டும், நாடகங்கள் நடிக்கிற விஷயத்திலாகட்டும், அரசாங்கத்தாரும் பொதுஜனங்களும் ஒரே விதமான சிரத்தை எடுத்துக் கொள்கிருர்கள். ஜனங்களுடைய கீழான எண்ணங்களைத் தூண்டிவிடக்கூடிய சினிமாக்களுக்கோ நாடகங்களுக்கோ அங்கு இடமில்லை. சரித்திர சம்பந்தமான படங்களுக்கும் நாடகங்களுக்குமே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. உதாரணமாக, லெனின், ஸ்டாலின் போன்ற தலைவர்களுடைய வாழ்க்கையிலிருந்து சில

சம்பவங்கள், 1917-ஆம் வருஷத்து அக்டோபர் புரட்சி, மகா பீட்டருடைய வரலாறு, ருஷ்ய - ஜப்பானிய யுத்தம், இப்படிப் போன்ற படங்களுக்கும் நாடகங்களுக்குமே ஜனங்கள் அதிக உற்சாகம் காட்டுகிறார்கள். இதற்குக் காரணம் இவை ஜனங்களுடைய வாழ்க்கையோடு ஒட்டிய சம்பவங்களா யிருப்பதுதான். தவிர, மேற்படி தொழில்களில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு அரசாங்கத்தார் எல்லாவித ஆதரவுகளையும் அளித்து வருகின்றனர். இன்னொரு விஷயம் என்னவென்றால், ருஷ்யாவில், சினிமா வளர்ச்சிக்காக நாடகம் பலியிடப்பட்டு விடவில்லை. பொருளாதாரம், அரசியல் முதலியவற்றில் சம அந்தஸ்து, சம உரிமை வழங்கப்பட்டிருப்பது போல் சினிமாவுக்கும் நாடகத்திற்கும் சம அந்தஸ்தும் சம உரிமையும் அளிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டும் கை கோத்துக்கொண்டே முன்னேற்றமடைந்து வருகின்றன.

## 11. சுகாதாரம் - ஓய்வு

"சோவியத் ராஜ்யத்தின் பிரஜைகள், வயோதிக காலத்திலும், நோயாகிவிட்ட தருணத்திலும், வேலை செய்யும் சக்தியை இழந்துவிட்ட பொழுதும் அரசாங்கத்தின் பாதுகாப்புக் குரியவர்கள்."

—சோவியத் அரசியல் சட்டம் 120-ஆவது பிரிவு.

உலகத்திலுள்ள எல்லா நாடுகளையும் போலவே சோவியத் ருஷ்யாவிலும் ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன; வைத்தியர்கள் இருக்கிறார்கள்; தனிப்பட்டவர்களால் நடத்தப்பெறும் ஔஷத சாலைகள் இருக்கின்றன. ஆனால் அடிப்படையில் ஒரு வித்தியாசம் உண்டு. என்னவென்றால், மற்றநாடுகளில், சிகிச்சைக்கு வருகிற அந்தந்த மனிதர்களுடைய நோய்கள் தீர்க்கப்படுகின்றன. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளாகவே மேற்படி ஆஸ்பத்திரிகள் முதலியன இருக்கின்றன. ஆனால் சோவியத் நாட்டில் அரோக திடகாத்திரமுள்ள ஒரு சமுதாயத்தை நிர்மாணம் செய்யவேண்டு மென்னும் நோக்கத்துடன் மேற்படி சிகிச்சை சாலைகள் முதலியன இருக்கின்றன. சமதர்ம வார்ப்படத்திலிருந்து கடைந்தெடுக்கப்பட்ட பிரதிபொரு பிரஜையும் நோயற்ற வாழ்வை நடத்த வேண்டு மென்பது சோவியத் தலைவர்களின் நோக்கம்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றத்திற்குக் கொண்டு வருவதற்கு முன்னர் அவர்கள் மகத்தான தடங்கல்களைக் கடக்கவேண்டி யிருந்தது. "ஜார் அரசாங்கமானது, சுகாதாரமற்ற சூழலிலே இருந்த ஒரு பரம்பரையை, சோவியத் ஆதிக்கத்தினிடம் ஒப்புவித்துவிட்டது. கிராமங்களிலும் நகரங்களிலும் வசித்துக் கொண்டிருந்த ஏழை

மக்களின் வாழ்க்கை நிலைமை மகா மோசமா யிருந்தது. பொதுஜன சேவை செய்வதாக யாரேனும் முன்வந்தால், அவர்களைப் போலீசார் பயமுறுத்தி அடக்கி வந்தனர். சிறிதுகூடக் கருணையின்றி, தொழிலாளர்களும் விவசாயிகளும் சுரண்டப்பட்டு வந்தார்கள். அறியாமை காரணமாகவும், சுகாதார வசதிகளின்மையாலும் ஜனங்கள் பலவித நோய்களுக்கு ஆளானார்கள். வருஷந்தோறும் லட்சக்கணக்கான மக்கள் இறந்து போனார்கள். 1914-ஆம் வருஷ யுத்தத்திற்கு முந்தின பத்து வருஷ காலத்தில், சராசரி ஆயிரத்துக்கு முப்பது பேர் விகிதம் வியாதிகளினால் அவதிப்பட்டு இறந்து போனார்கள். யுத்தம் வந்தது. ஜனங்களுடைய உடல் நலம், வைத்திய வசதிகள் எல்லாம் குன்றிப் போய்விட்டன.''

இப்படிப்பட்ட ஒரு நிலைமையில், தேசத்தின் சுகாதாரத்தைச் சீர்படுத்த வேண்டிய பொறுப்பு, சோவியத் தலைவர்களுக்கு ஏற்பட்டது. இதற்காக விரிவானதொரு திட்டம் வகுத்தனர். இந்தத் திட்டப்படி, பிரதியொரு சோவியத் பிரஜையும், தாயின் கர்ப்பத்தில் சிசுவாகத் தோன்றுகிறது முதல், சமாதியில் அடக்கமாகிறது வரை ஆயுள் முழுதும் அரசாங்கத்தினிட மிருந்து வைத்திய உதவிகளையும் சுகாதார வசதிகளையும் இலவசமாகப் பெற உரிமையுடையவனாகிறான். தர்ம கைங்கரியமாகவோ அல்லது ஜனங்களின் மீதுள்ள கருணையினாலோ அரசாங்கத்தார் இந்த வைத்திய உதவிகளைச் செய்யவில்லை; சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. ஆளப்படுவோருக்கு ஆள்வோர் செய்துகொடுக்க வேண்டிய இன்றியமையாத கடமையாகக் கருதியே இவைகளைச் செய்கின்றனர். தவிர, மொத்த ஜனசமுதாயத்தின் சுகாதார நிலைமையை உயர்த்துவதையே தங்களுடைய நோக்கமாகக் கொண்டனர்; தனிப்பட்டவர்களுடைய நோயைத் தீர்த்துவிட்டுச் சும்மா யிருப்பதையல்ல.

பொதுவாக, எந்த ஒரு சோவியத் பிரஜையும், தன்னுடைய நோய்க்குச் சரியான பரிகாரம் கொடுக்கப்படவில்லை யென்றே, சுகாதார மில்லாத ஒரு சூழலின் மத்தியில், தான் வாழவேண்டி யிருக்கிறதே யென்றே ஏங்கிக்கொண்டு தன் வாழ்நாளை வீணாகக் கழித்துவிடக் கூடாது. அவனுடைய வாழ்நாள் உபயோககரமான வழியில் செலவழிவதற்கு அவனுடைய தேகமோ மனமோ இடங்கொடுக்க வில்லை யென்று சொன்னால், அதற்குக் காரணம் அரசாங்கந்தான். அவனுடைய தேகத்தையும் மனத்தையும் சீர்திருந்திய நிலையில் வைக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அப்படிச் செய்யாவிட்டால் அஃது, அதன் குற்றம். நோய்க்குச் சிகிச்சை செய்வது மட்டுமல்ல, நோய் வராமல் தடுப்பதும் அரசாங்கத்தின் கடமை. இந்தமாதிரியான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டே சோவியத் ருஷ்யாவில் வைத்திய - சுகாதார வசதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சோவியத் ராஜ்யத்தில் வைத்திய - சுகாதார சம்பந்தப்பட்ட எல்லா விவகாரங்களும், அதாவது ஆஸ்பத்திரிகள், பரிசோதனை ஸ்தலங்கள், வைத்திய சம்பந்தமான ஆராய்ச்சிக் கழகங்கள், சுகாதார நிலையங்கள் முதலியன யாவும் அரசாங்கத்தின் வசத்திலேயே இருக்கின்றன. வைத்தியர்கள், நர்ஸ்கள், ஆராய்ச்சியாளர், மருந்துகள் தயாரிப்போர், வைத்திய சாஸ்திரத்தைப் போதிக்கிறவர்கள், சுகாதார அதிகாரிகள் முதலிய அனைவரும் அரசாங்கத்தின் ஊழியர்கள். மேற்படி ஸ்தாபனங்களுக்கும் இந்த ஊழியர்களுக்கும் அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்தே பணம் செலவழிக்கப்படுகிறது. ஜனங்களுடைய குடியிருப்பு வசதி, குடிநீர், உணவு வகை முதலிய அனைத்தையும் கவனிக்கவேண்டியது இந்த ஊழியர்களின் பொறுப்பு. நகரங்கள், கிராமங்கள், தொழிற்சாலைகள்,

விவசாயப் பண்ணைகள் முதலிய எல்லா இடங்களிலும் இந்த ஊழியர்கள் பரவியிருக்கிறார்கள். இவர்கள், தங்களுடைய நிருவாக எல்லைக்குள்ளிருக்கிற குழந்தைகளையும், வாலிபர்களையும் வருஷத்திற்கொரு முறை பரிசோதனை செய்கிறார்கள்; குறைநிறைகளைக் கவனித்து வேண்டுவன செய்கிறார்கள்.

மனிதன், வளர்கிற காலத்தில்தான் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டுமென்பது அரசாங்கத்தின் கருத்து. தொழிலாளர் சம்பந்தமாக அவர்கள் செய்திருக்கிற சட்டங்களைக் கொண்டு இதனைத் தெரிந்து கொள்ளலாம். உதாரணமாக, பதினான்கு வயதுக்குட்பட்ட சிறுவர்களை எந்த ஒரு தொழிலிலும் அமர்த்தக் கூடாது. 14 வயதுக்குமேல் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு நான்கு மணி நேர வேலையும், 16 வயதுக்குமேல் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு ஆறு மணி நேர வேலையுமே கொடுக்கப்பட வேண்டும். இவர்கள், ஒரு தொழிலில் சேர்வதற்கு முன்னர் அந்தத் தொழிலைச் செய்யத் தகுதியுடையவர்களா வென்று வைத்தியர்களால் பரிசோதனை செய்யப்படுகிறார்கள். இந்த மாதிரி கண்டிப்பான முறைகளை அநுஷ்டித்து, இளைஞர் உலகத்தை, வருங்கால சந்ததியை வளர்த்து வருகிறார்கள் சோவியத் அரசாங்கத்தார்.

நோய்வாய்ப் பட்டிருந்தவர்களோ, அல்லது தேகத்தினாலும் மூளையினாலும் அதிகமாக உழைத்துக் களைத்துப் போயிருக்கிறவர்களோ அமைதியாக இருந்து ஓய்வு பெறுவதற்கான ஆரோக்கிய ஸ்தலங்கள் பல, ராஜ்யத்தின் எல்லாப் பாகங்களிலும் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. இங்குச் சென்று வசிக்க யாருக்கும் உரிமை உண்டு. தொழிலாளர்கள், விவசாயிகள், நோயாளிகள், வயோதிகர்கள் முதலியோர் இங்கு ரெயில் மார்க்கமாகவோ கப்பல் மார்க்கமாகவோ செல்வதற்கும், இங்குச் சென்று

வசிப்பதற்கும் இலவச வசதிகள் செய்துகொடுக்கப் பட்டிருக்கின்றன.

இங்ஙனம் வைத்திய உதவிகள், சுகாதார வசதிகள் முதலியன ஏற்படுத்திக் கொடுத்திருப்பதன் பயன் என்ன? ஜனங்கள், சிறப்பாகத் தொழிலாளர்கள், விவசாயிகள் முதலியோர், சத்தான உணவை ஒன்றுக்கு இரண்டு மடங்கு அதிகமாகச் சாப்பிடுகிறார்கள்; புதிய புதிய முறையில் கண்டுபிடிக்கப்பட்ட, பக்குவம் செய்யப் பட்ட ஆகாரவகைகளையும் சாப்பிடுகிறார்கள். காற்றோட்ட முள்ள, துர்நாற்ற மில்லாத இடங்களில், நவீன நாகரிக வசதிகளுடன் வசிக்கிறார்கள். குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கிடைக்கிறது. 1917-ஆம் வருஷத்திற்கு முன்னர் குடிநீர் வசதிகளுள்ள நகரங்கள் 222; சாக்கடை வசதிக ளுள்ள நகரங்கள் 33. 1938-ஆம் வருஷத்தில் குடிநீர் வசதிகளுள்ள நகரங்கள் 384; சாக்கடை வசதிகளுள்ள நகரங்கள் 112. ஒவ்வொரு நகரத்திற்கும் அல்லது பெரிய கிராமத்திற்கும் திருஷ்டி பரிகாரம் மாதிரி சில நாடுகளில் சேரிகள் இருக்கின்றனவே அந்த மாதிரியான சேரிகள் ருஷ்யாவில் கிடையாது. ஒதுக்கப்பட்டவர்கள் இருந்தா லல்லவோ ஒதுக்கப்பட்ட பிரதேசங்கள் இருக்கப் போகின் றன? குழந்தை மரணம் குறைந்திருக்கிறது. முந்தியதை விட இப்பொழுது குழந்தைகளின் மார்பு அகலம் ஓர் அங்குலம் அதிகப்பட்டிருக்கிறது. சராசரி $1\frac{1}{4}$ அங்குலம் விகிதம் உயரத்தில் வளர்ந்திருக்கிறார்கள். தேக நிறையும் சராசரி $11\frac{1}{2}$ பவுண்ட் விகிதம் கூடியிருக்கிறது. க்ஷயரோகம், 100-க்கு 83-விகிதம் குறைந்திருக்கிறது. முன்னர், பெரிய நகரங்களில் மேற்படி க்ஷயரோகத்தினால் நூறு பேர் இறந்து கொண்டிருந்தார்களானால், இப்பொழுது ஐம்பது பேர்தான் இறந்து போகிறார்கள்.

ஜார் காலத்துக் கிராமங்களில், ஒரு டாக்டரைப் பார்ப்பது தேவதூதனைப் பார்ப்பதுமாதிரி; ஆஸ்பத்திரி

என்பது குதிரைக் கொம்பு. இப்பொழுது மூலை முடுக்கு களிலுள்ள எந்தக் கிராமத்திலும் வைத்திய வசதிகள் கிடைக்கின்றன. நவீன முறையில் சிகிச்சைகள் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. போக்கு வரத்து வசதிகள்கூட இல்லாமலிருந்த அஸெர்பைஜான் என்ற ஒரு பிரதேசத்தில் 291 டாக்டர்களும், தாஜிகிஸ்தான் என்ற பிரதேசத்தில் 13 டாக்டர்களும் முன்னர் இருந்தார்கள். இப்பொழுது அஸெர்பைஜானில் 2,480 டாக்டர்களும் தாஜிகிஸ்தானில் 372 டாக்டர்களும் இருக்கிறார்கள்.

இங்ஙனம் ஆங்காங்கு ஆஸ்பத்திரிகளும், ஔஷதாலயங்களும், சுகாதார நிலையங்களும் ஸ்திரமாக ஏற்படுத்தப்பட் டிருப்பதோடு, ஊர்தோறும் சதா சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருக்கிற ஆஸ்பத்திரிகள், ஔஷதாலயங்கள் முதலியன இருக்கின்றன. இவைகளோடு டாக்டர்கள், நர்ஸ்கள் முதலியோர் செல்கிறார்கள். திடீரென்று தோன்றிப் பரவுகிற மலேரியா, காலரா, பிளேக், அம்மை முதலிய தொத்து நோய்களைச் சமாளிக்கவும், எதிர்பாராத ஆபத்துக்கள் எந்த இடத்திலேனும் ஏற்பட்டால் அதனைச் சமாளிக்கவும் இந்தப் பிரயாண ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. இந்தப் பிரயாண ஆஸ்பத்திரி கோஷ்டி, எந்த ஊரில் நோய் பரவியிருக்கிறதோ அந்த ஊருக்கு வந்து, நோயாளிகளுக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்கிறது; சுகாதாரப் பிரசங்கங்கள் செய்கிறது; துர்நாற்றம், அழுக்கு முதலியன எங்கிருந்து வருகின்றன, எப்படிப் பரவுகின்றன என்பதைக் கண்டு பிடித்து அவற்றைப் போக்குகின்றது; நீண்டகால சிகிச்சை பெற வேண்டியவர்களை, பெரிய ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்புகிறது; உடனே கவனிக்கவேண்டிய 'கேசு'களாயிருந்தால், நோயாளிகளை ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதற்கும், தேவையான மருந்துகளைத் தருவிப்பதற்கும் ஆகாய விமானங்களை உபயோகிக்கிறது. இந்தப் பிரயாண ஆஸ்பத்திரி

களைக் கிராமவாசிகள் வரப்பிரசாதம் மாதிரி கொண்டாடுகிறார்கள்.

பொதுவாகவே, ஜனங்கள் முன் மாதிரி நோய்களினால் கஷ்டப்படுவதில்லை. அப்படி ஏதேனும் வியாதி வந்தால், அதற்கு உடனே பரிகாரம் கிடைத்து விடுகிறது. 1913-ஆம் வருஷம், ருஷ்யா முழுமைக்கும் 19,785 டாக்டர்களே இருந்தார்கள்; 1937-ஆம் வருஷத்தில் 1,32,000 டாக்டர்கள் இருக்கிறார்கள். ஜனங்களுடைய சுகாதாரத்திற்காக அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து 1913-ஆம் வருஷம் ஒரு ரூபாய் விகிதம் செலவழிக்கப்பட்டது என்று சொன்னால் 1937-ஆம் வருஷம் 75 ரூபாய் விகிதம் செலவழிக்கப் பட்டது. நூற்றுக்கணக்கான ஆரோக்கிய ஸ்தலங்கள் இப்பொழுது ருஷ்யாவில் கிளம்பி யிருக்கின்றன. 1937-ஆம் வருஷத்தில் மட்டும் இவற்றில் சுமார் ஐந்து லட்சம் பேர் ஓய்வுச் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள்.

சோவியத் ருஷ்யாவில் மொத்தம் 72 வைத்தியக் கல்லூரிகள் இருக்கின்றன. இவற்றில் சுமார் ஒரு லட்சம் பேருக்குமேல் பயிற்சி பெறுகிறார்கள். இலவசமாகவே இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பெரும்பாலான மாணவர்களுக்கு அரசாங்கத்தார் உபகாரச் சம்பளம் வேறே கொடுக்கிறார்கள். இந்த வைத்தியக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்கிறபோதே, யாராருக்கு எந்தெந்தத் துறையில் மன ஈடுபாடு இருக்கிறதோ, அதாவது எந்தத் துறையில் பிரவேசித்தால் அவர்கள் பிரகாசிக்க முடியுமோ அந்தத் துறையிலேயே அவர்களுக்கு விசேஷப் பயிற்சி கொடுத்துச் சிறப்பிக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய துறையில் நிபுணர்களாகி, மேலும் மேலும் தங்கள் தொழில் அறிவை அபிவிருத்தி செய்து கொள்கிறார்கள். மற்றும், ருஷ்யாவில், வைத்தியத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் நெருங்கிய தொடர்பு வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வியாதியின் கூறுபாடுகளையும்

நன்கு ஆராய்ச்சி செய்து அவற்றிற்கு எளிய முறையில் பரிகாரம் என்னவென்பதைக் கண்டு பிடிப்பதில் அநேக அறிஞர்கள் முனைந்திருக்கிறார்கள். மருந்துகள் தயாரிப்பது, அவற்றைப் பிரயோகம் செய்வது முதலிய அனைத்தையும் ஓர் ஆராய்ச்சிக்குட்படுத்தி ஒழுங்கான முறையில் செய்து வருகிறார்கள். பொதுவான நோக்கம், எந்த ஓர் ஆராய்ச்சியும் ஜனங்களுக்கு அதிகமான நன்மையைத் தரவேண்டு மென்பதுதான்.

"இளமைக்குச் சந்தர்ப்ப வாயில்கள் எங்கும் திறந்து விடப்பட்டிருக்கின்றன; முதுமை எங்கும் கௌரவிக்கப் படுகிறது" என்பது ஒரு ருஷ்யப் பாட்டின் சாரம். இளமனம் படைத்தவர்களும் தேக திடமுடையவர்களும் எப்படி அதிகமாக உழைக்கக் கடமைப் பட்டவர்களோ, அப்படியே வயோதிகர்கள் பரிபூரணமான ஓய்வு எடுத்துக் கொள்ள உரிமையுடையவர்கள். இது, சோவியத் ராஜ்யத்தின் சட்ட ரீதியான நீதி. 60 வயதான ஆண்களும் 55 வயதான பெண்களும் அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து உபகாரச் சம்பளம் பெற உரிமையுடையவர்கள். ஆனால் ஆண்கள் 25 வருஷமும் பெண்கள் 20 வருஷமும் குறைந்த பட்சம் உழைத்திருக்க வேண்டும். உழைத்துக் கொண்டிருக்கிற காலத்தில் ஏதேனும் ஆபத்து ஏற்பட்டு விட்டாலும் சரி, அல்லது மேற்கொண்டு வேலை செய்வதற்குத் தகுதியற்றுப் போய்விட்டாலும் சரி, மேலே சொன்ன 25 அல்லது 20 வருஷ உழைப்புக் காலம் முடியா விட்டாலும், 60 அல்லது 55 வயது ஆகாவிட்டாலும் உபகாரச் சம்பளம் உண்டு. கடினமான தொழில்களிலே, அதாவது சுரங்கங்களிலே இறங்கி வேலை செய்தல், காடு மேடுகளிலே ஆராய்ச்சி நிமித்தம் சுற்றுதல் முதலிய வேலைகளிலே ஈடுபட்டிருக்கிறவர்கள், தாங்கள் பெற்று வந்த சம்பளத்தில் 100-க்கு 60 விகிதமும், யந்திரங்கள் முதலிய பெரிய சாமான்களை உற்பத்தி செய்கிற தொழிற் சாலை

களில் வேலை செய்கிறவர்கள் 100-க்கு 55 விகிதமும், ஆசிரியத் தொழில், வைத்தியத் தொழில் உள்பட்ட மற்றத் தொழில்களில் ஈடுபட்டிருக்கிறவர்கள் 100-க்கு 50 விகிதமும் உபகாரச் சம்பளம் அளிக்கப்படுகிறார்கள். விஞ்ஞான ஆராய்ச்சியிலே ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு மட்டும் விசேஷ உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுகிறது.

இப்படி அனைவருக்கும் உபகாரச் சம்பளம் கொடுத்து விடுவதோடு மட்டும் அரசாங்கம் திருப்தியடைந்து விடுவதில்லை. இவர்கள் நோயாகி விட்டால், இலவசச் சிகிச்சை பெறுவதற்கான ஸ்தலங்கள், தேக திடமற்றுப் போனவர்கள் தங்குவதற்கென்று தனி விடுதிகள் முதலியன ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பல் விழுந்துபோனவர்களுக்குப் பல் கட்டப்படுகிறது. காயமடைந்தவர்களுக்கு ரண சிகிச்சை செய்யப்படுகிறது. உட்கார்ந்தபடியே ஏதேனும் தொழில்கள் செய்து பணம் சம்பாதிப்பதற்கான வழிகள் சொல்லிக் கொடுக்கப் படுகின்றன. எல்லாம் இலவசந்தான். முன்னர், பணக்காரப் பிரபுக்கள் வசித்துக்கொண்டிருந்த மாளிகைகள் இப்பொழுது வயோதிகர்களின் விடுதிகளாக மாறி யிருக்கின்றன. இந்த விடுதிகளில், சுகமாக, ஆனால் பயன்படக் கூடிய மாதிரி, பொழுது போக்குவதற்கான எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட் டிருக்கின்றன. பத்திரிகைகளை வரவழைத்து விநியோகிப்பது முதல் நாடகங்கள் நடித்துக் காட்டுவது வரை, இங்கு எல்லாவிதப் பொழுது போக்குகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கிராமத்திலே வசிக்கிற விவசாயி கூட உபகாரச் சம்பளமும் ஓய்வும் பெற உரிமையுடையவன். அந்தந்தக் கிராம சோவியத்தின் பொது நிதியிலிருந்து அல்லது கூட்டுறவு ஸ்தாபனத்தின் பொது நிதியிலிருந்து ஒரு சிறு தொகை, அந்தந்தக் கிராமத்து வயோதிகர்களுக்கு உப

காரச் சம்பளமாக அளிக்கப்படுகிறது. இந்தப் பொது நிதியிலிருந்து ஆரோக்கிய ஸ்தலங்கள் முதலியன அநேக கிராமங்களில் நிறுவப்பட்டிருக்கின்றன. இவற்றில் சென்று விவசாயிகள் ஓய்வு பெறுகிறார்கள்; பொழுது போக்குகிறார்கள். இவைகளுக்கு எவ்விதக் கட்டணமும் இல்லை.

இவை தவிர, பொது ஜனங்களுக்கு உபயோகப்படக் கூடிய அநேக 'பார்க்கு'களை சோவியத் அரசாங்கத்தார் பல இடங்களில் அமைத்திருக்கின்றனர். ஜனங்கள் பிரயோஜனகரமான முறையில் பொழுது போக்குவதற்காகவே இவை ஏற்பட்டிருக்கின்றன. "கலா ஞானத்தையும் ஓய்வையும் அளிக்கின்ற பார்க்குகள்" என்றே இவைகளுக்குப் பெயர்.* இவை பெரிய பூந்தோட்டங்கள். இங்கு விளையாட்டுப் போட்டிகள் என்ன, நாடகங்களென்ன, சினிமாக்களென்ன, பிரசங்கங்களென்ன எல்லாம் நடைபெறும். சூரிய ஸ்நானத்திற்கும் தண்ணீர் ஸ்நானத்திற்கும் இங்கு ஏற்பாடுகள் இருக்கின்றன. இந்த மாதிரியான பார்க்குகள் இப்பொழுது சுமார் 600-க்கு மேல் இருக்கின்றன. இவற்றிலே சிறந்தது மாஸ்கோவிலுள்ள 'கோர்க்கி பார்க்.' பிரபல ருஷ்ய ஆசிரியனை மாக்ஸிம் கோர்க்கி† யின்பெயரால் இது நிறுவப்பட்டிருக்கிறது. சுமார் நாலரை மைல் நீளமுள்ள இந்தப் பார்க்கில் தினந்தோறும் எழுபதினாயிரம் பேருக்கு மேல் வந்து ஓய்வு பெறுகிறார்கள்; இங்கு நடக்கிற காட்சிகளை அநுபவிக்கிறார்கள். இந்தப் பார்க்கைப் பார்ப்பதற்கென்றே வெளியூர்களிலிருந்து ஆயிரக் கணக்கானபேர் விடுமுறை நாட்களில் வந்து போகிறார்கள். "நான் இறந்துபோய் மறுபடியும் பூலோகத்தில் பிறக்கும்படி நேரிடுமாயின்,

* Parks of Culture and Rest.

† Maxim Gorky—*1868—1936.*

மாஸ்கோ பார்க்கிலேயே பிறக்க விரும்புவேன்'' என்று ஆங்கில அறிஞனாகிய எச். ஜி. வெல்ஸ் கூறியிருக்கிறான். இதனால் இந்தப் பார்க்கின் மகிமையை நாம் ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். பொதுவாக, ருஷ்ய மகா ஜனங்கள், தங்களுடைய ஓய்வுப் பொழுதை, கலைச் சூழலின் மத்தியில் கழிக்கிறார்கள் என்பதற்கு, இந்தப் பார்க்குகள் சிறந்த அத்தாட்சிகளாயிருக்கின்றன.

# 12. அந்நிய நாட்டுக் கொள்கை

சோவியத் அரசாங்கத்தார், ஆரம்ப காலத்திலிருந்தே, உள்நாட்டு விவகாரங்களில் ஜனங்களுடைய மூட நம்பிக்கைகளையும், வெளி நாட்டு விவகாரங்களில் அந்நிய வல்லரசுகளின் அவநம்பிக்கைகளையும் சமாளித்துக் கொண்டு போகவேண்டியவர்களானார்கள். இது விஷயத்தில் இவர்கள் மலை போன்ற உறுதியும் மண் போன்ற பொறுமையும் காட்டினார்கள். ஏற்கனவே இருந்த அரசியல் கட்டிடத்தை ஆங்காங்குப் பழுது பார்த்து அழகான வர்ணம் பூசி அப்படியே அமைத்திருப்பார்களானால், அல்லது பழைய அஸ்திவாரத்தின் மீது புதிய கட்டிடத்தைக் கட்டி யிருப்பார்களானால், இவர்களுக்கு எதிர்ப்பே ஏற்பட்டிராது. ஆனால், இவர்கள் அரசியல் அமைப்பு, சமுதாய ஒழுங்கு, பொருளாதார அந்தஸ்து முதலிய எல்லாவற்றையும் அடியோடு பெயர்த்தெறிந்துவிட்டு, புதிய அமைப்பு, புதிய ஒழுங்கு, புதிய அந்தஸ்து முதலியவற்றை ஏற்படுத்தத் தொடங்கினார்கள். பழமையிலே வாழ்ந்து கொண்டிருந்தவர்களுக்கு, மற்றவர்களுடைய அடிமைத்தனத்திலே தங்களுடைய சுதந்திரத்தை நுகர்ந்து கொண்டிருந்தவர்களுக்கு வெறுப்பு ஏற்படாமலிருக்குமா? அவர்கள் எதிர்ப்புத் தான் காட்டாம லிருப்பார்களா? சோவியத் ஆட்சி நிலைபெற்று ஏறக்குறைய ஒருதலைமுறையாகி யிருக்கிற இப்பொழுதுகூட, சமதர்மம் என்பது வெறும் ஏட்டுத் தத்துவமல்ல, அநுபவத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிற வாழ்க்கை முறை என்ற உண்மையை உலக அறிஞர்கள் அங்கீகரித்திருக்கிற இப்பொழுதுகூட, அநேக நாட்டுப் பத்திரிகைகள், சோவியத் தலைவர்களை ராட்சதர்களாகவும், சமதர்மமானது தனி மனிதனிடத்

திலே யுள்ள இச்சா சக்தி, கிரியா சக்தி முதலியவற்றை அழித்து விடுவதாகவும் சித்திரித்துக் காட்டுவதில் மகிழ்ச்சி யடைகின்றன. அப்படியானல் ஆரம்பத்தில் சோவியத் அரசாங்கத்திற்கு, அந்நிய வல்லரசுகளிடமிருந்து ஏற்பட்ட எதிர்ப்பு எவ்வளவு சக்தி பொருந்தியதாய் இருந்திருக்க வேண்டு மென்பதை இந்தத் தலைமுறையினர் சுலபமாக ஊகித்துக்கொள்ள முடியுமல்லவா?

1914-ஆம் வருஷ யுத்தத்தின்போது, நேசக் கட்சி யினருக்கு மேற்குப் போர் முனையில் சமாளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டு விட்ட காலத்தில், ருஷ்யர்கள், கிழக்குப் பக்கத்தில் இரண்டாவது போர் முனையை உண்டுபண்ணி, ஜெர்மானியர்களின் தாக்குதலைத் தங்கள் பக்கம் இழுத்துக் கொண்டார்கள்; லட்சக் கணக்கான உயிர்களைப் பலி கொடுத்தார்கள். நேசக் கட்சியினருக்குச் சிறிது ஆறுதல் கிடைத்தது; மீண்டும் தங்கள் படைகளை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு அவகாசம் கிடைத்தது. ஆனல் இதே நேசக் கட்சியினர், யுத்தம் முடிந்த சில மாதங்களுக்குள், ருஷ்யாவை அழித்து விடுவதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டனர்!

இதற்குக் காரணம், ப்ரெஸ்ட்-லிடோவ்ஸ்கில், ஜெர் மானியர்களுடன் ருஷ்யர்கள் தனித்து ஒப்பந்தம் செய்து, நேசக் கட்சியினரைக் கைவிட்டு விட்டதுதான் என்று சொல்லப்பட்டது. ஆனல், உண்மையில், ருஷ்யாவில் சம தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி முறை ஸ்தாபிக்கப்படுவதை, எந்த மேற்கு வல்லரசும் விரும்ப வில்லை. முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த வல்லரசுகள், மேற்படி சமதர்ம ஆட்சி முறை நன்ருக வேரூன்றிக் கொள்வதற்கு முன்னர் அதனை அடி யோடு அழித்துவிடத் தீர்மானித்து, அப்படியே செய்து காட்டின. ஆனல், சோவியத் அரசாங்கம் இந்த ஒருமுக மான எதிர்ப்பைச் சமாளித்து, தன்னை ஊர்ஜிதம் செய்து

கொண்டு விட்டது. எதிர்ப்பைக் காட்டமுடியாத நிலைமையிலே, நேச தேசங்கள் பின்னர் வெறுப்பைக் காட்டத் தொடங்கின; ருஷ்யாவை அலட்சியப் படுத்தியும் வந்தன. வார்சேல் சமாதான மகாநாட்டிற்குப் பிறகு, "வீரர்கள் வசிப்பதற்குத் தகுதியுடையதாக இந்த உலகத்தை ஆக்கி விடுவதாகச்" சொல்லிக் கொண்டு எத்தனையோ மகாநாடுகள் கூட்டப்பட்டன அல்லவா, அந்த மகாநாடுகளில் ருஷ்யாவுக்கு இடம் அளிக்கப்படவில்லை. சர்வதேச சங்கத்தைப் பொறுத்த மட்டில், ருஷ்யா ஒரு தீண்டப்படாத நாடாகக் கருதப் பட்டது. ஜெர்மனியும் இப்படியே. இதனால், ஒதுக்கப்பட்ட இந்த இரண்டு நாடுகளும் 1922-ஆம் வருஷம் ராபெல்லோ ஒப்பந்தத்தின்* மூலமாக ஒன்று சேர்ந்துகொண்டன. 1933-ஆம் வருஷம் ஜெர்மனியில் ஹிட்லர், அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டது வரையில் இந்தச் சிநேகம் நீடித்து வந்தது. ராணுவ சம்பந்தமான ஆலோசனைகளையும், தொழில் அபிவிருத்திக்குத் தேவையான பொருள்களையும் பரஸ்பரம் இரண்டு நாடுகளும் பரிமாறிக் கொண்டன.

இப்படி ஜெர்மனியும் ருஷ்யாவும் சேர்ந்து கொண்டது மேற்கு வல்லரசுகளுக்கு ஆச்சரியமா யிருந்தது; பிடிக்கவுமில்லை. இதனால், ருஷ்யாவை மட்டந்தட்டி ஜெர்மனியைத் தூக்கிவிட ஆரம்பித்தன. ருஷ்யா சம்பந்தப்பட்ட எந்த ஒரு சிறு சம்பவத்தையும் மிகைப் படுத்தியோ அல்லது திரித்தோ பிரசாரம் செய்வதும், ஜெர்மனி விஷயத்தில் அநுதாபங் காட்டுவதும் சர்வ சாதாரணமாக நடைபெற்றன. இங்கிலாந்தில் தொழிற்கட்சி அரசாங்கம் ஏற்பட்ட பொழுது, அது, ருஷ்யாவுடன் நட்புக் கொள்ள முயன்றது. ஆனால், முதலாளிக் கூட்டம், அந்த அரசாங்கத்தையே கவிழ்த்துவிட்டது. லண்டனிலிருந்த ருஷ்ய ஸ்தானீகருடைய காரியாலயம் பரிசோதனை செய்யப்பட்டது.

* Treaty of Rapallo.

இங்ஙனமே, இன்னும் சில நாடுகளில் ருஷ்ய அரசாங்கப் பிரதிநிதிகள் அவமரியாதையாக நடத்தப்பட்டார்கள். ஆனால், ருஷ்யா இவைகளை யெல்லாம் பொருட் படுத்த வில்லை. புதிய பொருளாதாரத் திட்டத்தின் கீழ், தனது உள்நாட்டு விவகாரங்களில் மும்முரமாகக் கவனஞ் செலுத்திக் கொண்டு வந்தது. அதே சமயத்தில், எந்த நாட்டுடனும் விரோதம் கூடாதென்ற ஒரே கொள்கை யுடன், தன்னால் முடிந்தவரையில் எங்கெந்த நாட்டுடன் சிநேக ஒப்பந்தம்செய்து கொள்ள முடியுமோ அந்தந்த நாட்டுடனும் சிநேக ஒப்பந்தம் செய்து கொண்டு வந்தது.

1924-ஆம் வருஷத்திலிருந்து 1932-ஆம் வருஷம் வரை யில், ஐரோப்பாவிலுள்ள எல்லாச் சிறிய பெரிய நாடு களும் ஜினீவாவில் ஸ்தாபிக்கப் பட்ட சர்வதேச சங்கக் கோவிலைத் தொழுத வண்ணமா யிருந்தன. ஐரோப்பிய ராஜதந்திரிகள் இந்தச் சர்வதேச சங்கக் கோயிலை வெகு பிரயாசைப்பட்டுக் கட்டினார்கள் என்பது வாஸ்தவம். ஆனால், இதில் சமாதான தேவதையைப் பிரதிஷ்டை செய்ய மறந்து விட்டார்கள். இவர்களுடைய வாய், சமாதான மந்திரத்தை முணு முணுத்துக் கொண்டிருந்தது. ஆனால் இவர்களுடைய பார்வை, மற்றவர்களுடைய சட்டைப் பையில் என்ன இருக்கிற தென்பதைப் பார்த்துக்கொண் டிருந்தது. இவர்களுடைய கைகளோ, தற்காப்பு என்று சொல்லிக்கொண்டு சுருங்கிய காலத்தில் அதிகமான பேரைக் கொல்வதற்கான நவீன ஆயுதங்களைத் தயாரித்துக் கொண்டு வந்தன. இந்த எட்டு அல்லது பத்து வருஷ காலத்தைச் சமாதான காலம் என்று சொல்வார்கள்; உண்மையில் இது யுத்தத் தயாரிப்புக் காலம்.

ருஷ்யா, இந்தக் காலத்தில் எல்லா நாடுகளுடனும் சிநேக ஒப்பந்தம் செய்துகொண்டு வந்தது என்று சொன்னோமல்லவா? அப்படிச் செய்து கொள்வது அதற்கு அவசியமா யிருந்தது. ஏனென்றால், அதனுடைய

தொழில் முயற்சிகளுக்கு மேனடுகள் பலவற்றின் உதவி தேவையாயிருந்தது. இதற்காக, இத்தலி, பிரான்ஸ், பெல்ஜியம், துருக்கி, போலந்து, ருமேனியா முதலிய எல்லா நாடுகளுடனும் சிநேக ஒப்பந்தம் செய்துகொண்டது. இந்தக் காலத்தில் லிட்வினேவ் * என்பவன் ருஷ்யாவின் அந்நிய நாட்டு மந்திரியாக இருந்தான். இவன் நாடு நாடாகப் பிரயாணஞ் செய்து, ருஷ்யாவின் நல்லெண்ணத்தை எடுத்துச் சொல்லி, ஒவ்வொரு நாட்டுடனும் சிநேக ஒப்பந்தங்கள் நிறைவேற்றிக் கொண்டு வந்தான். உலகத்தில் யுத்தம் ஏற்படாதிருக்க வேண்டுமானல், எல்லா நாடுகளும் தங்கள் தங்கள் ஆயுத பலத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு கூட்டப்பட்ட மகா நாட்டில், ருஷ்யா தீவிரமாகக் கலந்து கொண்டது. எல்லா நாட்டு ஸ்தானீகர்களும் மாஸ்கோவில் தங்கள் காரியாலயங்களை ஏற்படுத்திக்கொண்டு, ருஷ்யாவின் வளர்ச்சியைத் திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். அனுக்கிரமிப்பு ஒப்பந்தங்களென்றும், சமாதான ஒப்பந்தங்களென்றும் பேர் கொண்ட பல காகிதச் சுருள்கள், ஒவ்வொரு தேசத்து அந்நிய நாட்டிலாகா காரியாலயத்தின் அலமாரிகளிலும் அலங்காரப் பொருள்களாகக் காட்சியளித்தன.

ருஷ்யா இப்படிப் பொதுவாக ஐரோப்பிய நாடுகளுடன் சிநேக ஒப்பந்தம் செய்து கொண்டு சமாதானமாக வாழவேண்டு மென்பதில் சிரத்தை காட்டி வந்ததேயானலும், ஆசியா கண்டத்து நாடுகளின் விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்தி வந்தது. ஏனென்ருல், ருஷ்யாவில் பெரும்பகுதி ஆசியா கண்டத்தைச் சேர்ந்தது தானே? 1920-ஆம் வருஷத்திலிருந்தே, இந்த விசேஷ கவனம் இருந்து கொண்டு வந்திருக்கிறது. மேற்படி வருஷத்தில்

* Litvinov.

துருக்கிக்கும் கிரீஸுக்கும் யுத்தம் மூண்டபொழுது, ருஷ்யா, துருக்கிக்குப் பலவகையிலும் உதவி செய்தது. கமால் அத்தாதுர்க் வெற்றி யடைந்ததற்கு ருஷ்ய உதவி ஒரு முக்கிய காரணமா யிருந்தது. 1920-ஆம் வருஷத்திலிருந்து 1927-ஆம் வருஷத்திற் கிடையில், ஆப்கானிஸ்தானம், ஈரான், ஜப்பான், சீனு முதலிய ஆசிய நாடுகள் பலவற்றுடன் ருஷ்யா, சிநேக ஒப்பந்தம் செய்து கொண்டு தன் செல்வாக்கை வளர்த்து வந்தது.*

1933-ஆம் வருஷம் ஜெர்மனியில் ஹிட்லர் பதவி ஏற்றுக்கொண்ட பிறகு, ஐரோப்பிய அரசியலில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. ஏற்கனவே 1931-ஆம் வருஷம், ஜப்பான், மஞ்சூரியாவில் பிரவேசித்து அதனை ஆக்கிரமித்துக் கொண்டதை, சர்வதேச சங்கமோ வேறெந்த வல்லரசோ தடுக்க முடியவில்லை யென்ற காரணத்தினுல், ஐரோப்பிய அரசியல் அரங்கத்தில் ஒருவிதத் திகைப்பு ஏற்பட்டிருந்தது. மற்றும் 1930—31-ஆம் வருஷத்து உலகப் பொருளாதார மந்தம், முதலாளித்துவ நாடுகளின் மனதில் ஒருவித ஏக்கத்தை உண்டுபண்ணி யிருந்தது. இந்தத் திகைப்பு, ஏக்கம் முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டுதான் ஹிட்லர் பதவிக்கு வந்தான் என்பதை ருஷ்யா தெரிந்து கொள்ளாமலில்லை. ஹிட்லர், பதவி ஏற்றுக்கொண்டு தனது நாடு பெருக்குகிற யோசனையைச் சிறிது சிறிதாக வெளியிடத் தொடங்கிய பிறகு, ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் ஏற்பட்டிருந்த சிநேகிதத்தில் ஒரு மாறுதல் உண்டாயிற்று. இரண்டு நாடுகளும் பொருள்களைப் பரிமாறிக் கொண்டிருந்ததற்குப் பதிலாக, இப்பொழுது அவநம்பிக்கையைப் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டன. ஹிட்லரும், வார்சேல் ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்த ஷரத்துக்களை மீறி, தனது ராணுவ பலத்தைப்

* இந்த ஒப்பந்தங்கள் பின்னர் பல சந்தர்ப்பங்களில் புதுப்பிக்கப்பட்டு வந்தன வென்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

பெருக்கிக்கொண்டு வந்தான். இதைக்கண்டு ஐரோப்பாவின் மேற்கு வல்லரசுகள் சிறிது யோசிக்க ஆரம்பித்தன. ஆக, ஜெர்மனியின் மீது எல்லா வல்லரசுகளும் அவநம்பிக்கை கொண்டன. புதிய எதிரிதோன்றியிருக்கிறபோது, பழைய பகைமை மறந்து போகுமல்லவா? ருஷ்யாவும் மேற்கு வல்லரசுகளும் தோளோடு தோள் தழுவிக்கொண்டன. தீண்டாததாகக் கருதப்பட்டு வந்த ருஷ்யா, இப்பொழுது (1934) சர்வதேச சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இப்படி ருஷ்யாவைச் சேர்த்துக் கொண்டதற்கு, அதன் மீது மேற்கு வல்லரசுகளுக்குத் திடீரென்று ஏற்பட்ட நம்பிக்கை காரணமல்ல; அப்படி மனப்பூர்வமான நம்பிக்கை ஏற்படவுமில்லை. ஹிட்லரின் கையை ஓங்கவிடக் கூடாதென்பதுதான் காரணம். ருஷ்யாவும், சர்வதேச சங்கத்தில் சேர்ந்து வாய்ப்பந்தல் போட்டுக்கொண் டிருக்கவில்லை. அக்கிரமம் செய்தவர்கள் யாராயிருந்தாலும், அவர்கள் மீது கண்டிப்பான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி வந்தது. கேட்பார் யார்? இத்தலி, அபிசீனியாவில் அக்கிரமமாகப் பிரவேசித்ததையும், ஸ்பெயினில் ஏற்பட்ட நியாயமான அரசாங்கத்தைக் கவிழ்க்கச் செய்யப்பட்ட குழப்பத்தையும் மேற்கு வல்லரசுகள் தடுக்கவில்லை; வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்தன. ருஷ்யாவுக்கு இவை யெல்லாம் பிடிக்கவில்லை. சர்வதேச சங்கத்தையோ, மேற்கு வல்லரசுகளையோ நம்பி, தான் நிம்மதியாக வாழ முடியாதென்பதை நன்கு தெரிந்துகொண்டது. எனவே, தற்காப்பு முறைகளை அநுஷ்டிக்க ஆரம்பித்தது.

இங்ஙனம் ருஷ்யா, மேற்கு வல்லரசுகளோடு சேர்ந்துகொண்டதற்கு விரோதமாகவும், உலகத்தில் போல்ஷ்வெஸத்தைப் பரவவிடக் கூடாதென்பதைக் காரணமாக வைத்துக் கொண்டும் ஜெர்மனியும், ஜப்பானும், இத்தலியும் சேர்ந்து ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டன. (1936—

1937) இதற்கு "கோமிண்டர்னுக்கு விரோதமான ஒப்பந்தம்" * என்று பெயர். நிலைமை எப்படியிருந்ததென்றால், ஒரு புறத்தில் பிரான்சும் பிரிட்டனும், மற்றொரு புறத்தில் ருஷ்யாவுமாகச் சேர்ந்து ஜெர்மனியைச் சூழ்ந்து கொண்டன. ஜெர்மனியும் ஜப்பானும் ருஷ்யாவை வளைத்துக் கொண்டன. ருஷ்யாவும் அமெரிக்காவும் ஜப்பானைச் சுற்றிக்கொண்டன. இப்படி ஒவ்வொரு தேசமும் மற்றத் தேசங்களினால் சூழப்பட்டு விட்டதாக மருண்டு கிடந்தன. இந்த மருட்சியின் முடிவென்ன? கோர யுத்தம். அது தான் 1939-ஆம் வருஷத்திலிருந்து 1945-ஆம் வருஷம் வரை நடை பெற்று முடிந்தது.

ஜெர்மனி, ஜப்பான், இத்தலி ஆகிய மூன்று நாடுகளும் தனக்கு விரோதமாக ஒன்று சேர்ந்திருப்பதைக் கண்டு ருஷ்யா சிறிது கவலை கொண்டது. அப்படி ஒன்றுபட்டதோடல்லாமல், அவை மூலமாக உலகத்தில் பாசிஸ சக்திகள் வலுத்தும் வந்தன; போல்ஷ்வெஸத்திற்கு அற்ப சொற்பமாக இருந்த செல்வாக்கும் மங்கிக்கொண்டு வந்தது. மேற்கு வல்லரசுகளோ, இந்தப் பாசிஸ சக்திகளோடு சமரஸம் செய்து கொள்வதில் முனைந்து நின்றனவே தவிர, அவைகளை எதிர்த்துப் போராட மனங்கொள்ள வில்லை. 1938-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் ஜெர்மனி, ஆஸ்திரியாவை விழுங்கிவிட்டது. இஃது, அடுத்த உலக யுத்தத்திற்கு முன்னெச்சரிக்கையாயிருந்தது. ஆனால், பிரான்சும் பிரிட்டனும் சும்மா இருந்துவிட்டன. ஆஸ்திரியா விழுங்கப்பட்ட உடனே, இந்த ஆக்கிரமிப்பை எதிர்த்து நிற்கிற, சமாதானத்தைக் கோருகிற எல்லா நாடுகளும் சேர்ந்த ஒரு மகாநாடு கூட்ட வேண்டுமென்று ருஷ்யா கூறியது. ஆனால், பிரிட்டன், இஃது அநுபவ சாத்தியமற்ற பிரச்னை என்று நிராகரித்துவிட்டது. ஜெக்கோஸ்லோவேகியாவின் மீது ஹிட்லர் படை

* Anti-Comintern Pact.

யெடுத்த போதும் (1938), பிரிட்டனும் பிரான்சும் சும்மா இருந்து விட்டன. ஜெக்கநாட்டின் ஒரு பகுதியை, அதன் சம்பந்தமில்லாமலே ஜெர்மனிக்குக் கொடுத்து விடுவதென்று தீர்மானிப்பதற்காக ம்யூனிக் நகரத்தில் கூட்டப்பட்ட மகாநாட்டுக்கு ருஷ்யா அழைக்கப்பட வில்லை. பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தலி ஆகிய நான்கு நாடுகள் மட்டும் சேர்ந்து ஜெக்கோஸ்லோவேகி யாவைத் துண்டுபோட்டு விட்டன. இப்படித் துண்டு போட்ட அடுத்த வருஷத்திலேயே (1939), ஜெக்கோஸ்லோ வேகியா முழுவதையும் ஜெர்மனிக்குள் ஐக்கியப்படுத்திக் கொண்டு விட்டான் ஹிட்லர். இதற்குப் பிறகு, ருஷ்யா, தான் முன்னர் அலட்சியப்படுத்தப்பட்டு விட்டதைக் கூடப் பொருட்படுத்தாமல், சமாதானம் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு, மற்றொரு மகாநாடு கூட்டி, இனியும் இந்த ஆக்கிரமிப்பு முறைகள் ஏற்படா வண்ணம் தடுக்கவேண்டு மென்று கேட்டது. இதற்குப் பிரிட்ட னும் பிரான்சும் மறுத்துவிட்டன.

மேற்கு வல்லரசுகளும் ருஷ்யாவும் ஒன்றுபட்டு ஒரு காரியத்தைச் செய்யாது என்பதை நன்கு தெரிந்து கொண்டுவிட்ட ஹிட்லர், போலந்தின்மீது படையெடுக் கத் துணிந்தான். அப்பொழுதுதான் மேற்கு வல்லரசு களுக்கு விழிப்பு ஏற்பட்டது; போலந்தின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காக, ருஷ்யாவின் நட்பை நாடின. பால்டிக் நாடுகள், போலந்து, ருமேனியா ஆகியவற்றின் மீது ஜெர்மனி தாக்கா வண்ணம் அவைகளைப் பாதுகாக்க வேண்டுமென்றும், இதற்காக, பிரிட்டன், பிரான்ஸ், ருஷ்யா ஆகிய மூன்று வல்லரசுகளும் சேர்ந்தாற்போல் மேற்படி நாடுகளுக்கு உறுதிமொழி கொடுக்க வேண்டு மென்றும் ருஷ்யா கேட்டது. இதற்கு, பிரிட்டனே, பிரான்ஸோ சரியான பதில் அளிக்க வில்லை. இது ருஷ் யாவை உறுத்தியது. இதே சமயத்தில், ஹிட்லர், ருஷ்யா

வுடன் சமரஸப் பேச்சுகள் தொடங்கினன்; கூடவே போலந்தின் மீது விரோதமான பிரசாரத்தைப் பலமாகக் கிளப்பி விட்டான். இதற்கு முன்னர், ருஷ்யாவுக்கு விரோதமாகத் தன்னோடு சேர்ந்துகொள்ளும்படி போலந்தை ஹிட்லர் வற்புறுத்திக்கொண் டிருந்தான். அது, ஜெர்மனியுடனும் சேராமல் ருஷ்யாவுடனும் சேராமல் தயங்கிக்கொண் டிருந்தது; மேற்கு வல்லரசுகளின் உறுதி மொழிகளில் நம்பிக்கை வைத்திருந்தது. எப்பொழுது தன் பக்கம் சேர்ந்துகொள்ள வில்லையோ அப்பொழுதே அதனை, அந்த போலந்தை, அழித்து விடுவதென்று தீர்மானித்து, ருஷ்யாவுடன் சமரஸம் பேசினன் ஹிட்லர். இவனுடைய கருத்தெல்லாம், போலந்தின் மீது தான் படையெடுத்தால், ருஷ்யா நடுநிலைமை வகிக்க வேண்டு மென்பதுதான். மேற்கு வல்லரசுகளோ, ருஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்து கொள்கிற விஷயத்தில் பரிபூர்ண சிரத்தை காட்டவில்லை. ருஷ்யாவுக்கும், ஜெர்மனியை அடியோடு விரோதித்துக் கொள்ள விருப்பமில்லை. ஏனென்றல், ஏற்கனவே ஒப்பந்தத்தினல் கட்டுப்பட்டுள்ள ஜெர்மனியும் ஜப்பானும் ஒன்று சேர்ந்து ஒரே சமயத்தில் தன்னை இரண்டு பக்கத்திலும் தாக்குமானல், அதனைச் சமாளிப்பது கடினமென்பதை ருஷ்யா நன்கு தெரிந்துகொண் டிருந்தது. இதனல்தான், ஜெர்மனியையும் ஜப்பானையும் ஒரே சமயத்தில் விரோதித்துக்கொள்ளக் கூடாதென்ற கொள்கையை ருஷ்யா நீண்ட காலமாக அநுசரித்துக் கொண்டு வந்தது. கடைசியில், மேற்கு வல்லரசுகளின் திகைப்புக்கு மத்தியில் 1939-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 23-ஆம் தேதி ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் ஓர் அனக்கிரமிப்பு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன் ஷரத்துக்கள் வருமாறு:—

ஜெர்மனிக்கும், சோவியத் சமதர்மக் குடியரசு ஐக்கிய நாட்டுக்கும் ஏற்கனவேயுள்ள சமாதான நிலைமையை வலுப்

படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன், 1926-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் ஏற்பட்ட சமரஸ ஒப்பந்தத்தை * அடிப்படையாகக் கொண்டு, ஜெர்மன் ரீச் † சும் சோவியத் சமதர்மக் குடியரசு ஐக்கிய நாடும் கீழ்க்கண்ட ஒப்பந்தத்திற்கு வந்திருக்கின்றன :—

1. ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட உபய கட்சியினரும், எந்தப் பலாத்காரச் செயல்களினின்றும், எந்த ஆக்கிரமிப்புச் செயல்களினின்றும், பரஸ்பரம் ஒருவரை யொருவர் தாக்கிக் கொள்வதினின்றும், தனிப்பட்டோ சேர்ந்தோ மற்ற அரசுகளைத் தாக்குவதினின்றும் தங்களைத் தவிர்ந்து கொள்கிறார்கள்.

2. உபய கட்சியினருள் எவரேனும் ஒரு கட்சியினர், வேறொரு மூன்றாவது வல்லரசின் யுத்தச் செயலுக்கு இலக்காவாரானால், மற்றொரு கட்சியினர், அந்த மூன்றாவது வல்லரசுக்கு எந்த விதத்திலும் உதவி செய்யக்கூடாது.

3. உபய கட்சியினருடைய அரசாங்கங்களும், இரு தரப்பினருடைய நலன்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் அடிக்கடி கலந்தாலோசிக்கும் படியான கூட்டுறவை வைத்துக்கொள்ள வேண்டும்.

4. உபய கட்சியினரில் எவரேனும் ஒரு கட்சியினருக்கு விரோதமாக மற்ற வல்லரசுகள் ஒரு குழுவாகச் சேர்ந்து கொள்ளுமானால், அந்தக் குழுவுடன் (கூட்டத்துடன்) உபய கட்சியினரும் சேரக்கூடாது.

5. உபய கட்சியினருக்குள்ளும் எந்த விஷயத்தைப் பற்றியேனும் தகராறோ, அபிப்பிராய வேற்றுமையோ ஏற்பட்டால், இரண்டு கட்சியினரும், அந்தத் தகராறுகளையும் அபிப்பிராய வேற்றுமைகளையும் ஒருவருக்கொருவர் கலந்துபேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும்; அல்லது

* இதற்கு 1926-ஆம் வருஷத்துப் பெர்லின் உடன்படிக்கையென்று பெயர். 1921-ஆம் வருஷத்திலிருந்து 1929-ஆம் வருஷம் வரை, இரண்டு நாடுகளுக்கும் ஏற்பட்ட பல முக்கியமான ஒப்பந்தங்களுள் இதுவும் ஒன்று,

† ரீச் என்றால் ராஜ்யம்.

மத்தியஸ்தக் கமிட்டிகள் வைத்துத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

6. இந்த ஒப்பந்தம் பத்து வருஷ காலத்திற்குச் செல்லுபடியானதா யிருக்கும். இந்தக் கால வரையறை முடிவதற்கு ஒரு வருஷம் முன்னர், உபய கட்சியினருள் எவரேனும் ஒரு கட்சியினர் இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப் பட வேண்டு மென்று நோட்டீஸ் கொடுத்தாலொழிய, இந்த ஒப்பந்தம் இந்தப் பத்து வருஷத்திற்குப் பின்னர் தொடர்ந் தாற்போல் ஐந்து வருஷம் அமுலில் இருக்கும்.

7. இந்த ஒப்பந்தம் கூடிய சீக்கிரத்தில் ஊர்ஜிதம் செய்யப்படும். இந்த ஊர்ஜிதப் பத்திரம் பெர்லினில் உபய கட்சியினராலும் ஏற்றுக்கொள்ளப் பெறும். ஒப்பந்தம் கையெழுத்தான உடனே அமுலுக்கு வரும்.

எதற்காக இந்த ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை அப்ப டியே இங்குக் கொடுத்திருக்கிறோ மென்று சொன்னால், இந்த ஒப்பந்தத்திற்கு அடிப்படையில் மன ஒற்றுமை என்பது லவலேசமும் இல்லையென்பதைத் தெளிவு படுத்து வதற்குத்தான். இந்த ஒப்பந்தத்தின் மீது படிந்திருந்த மை உலர்வதற்கு முன்னரேயே ஐரோப்பா வெங்கணும் யுத்த நெருப்பு மூண்டு விட்டது. பெர்லினில் ஒப்பந்தத்தை ஊர்ஜிதப் படுத்துவதற்காக சோவியத் பிரதிநிதிகளும் ஜெர்மன் பிரதி நிதிகளும் கூடிக் கையெழுத்துப் போடு வதற்குள்ளாகவே, ஜெர்மன் படைகள், எவ்வித முன் னெச்சரிக்கையும் இல்லாமல் (1—9—1939) போலந்தின் மீது படையெடுத்துவிட்டன. போலந்தினுடைய சுதந் திரத்தைக் காப்பாற்றுவதாகச் சொல்லிக்கொண்டு, பிரிட்டனும் பிரான்சும் சேர்ந்து, ஜெர்மனி மீது யுத்தம் தொடுத்திருப்பதாக இரண்டு நாள் கழித்து அறிக்கை வெளியிட்டன. ஆனால், போலந்துக்கு, பிரிட்டனிட மிருந்தோ பிரான்சினிட மிருந்தோ எவ்வித விசேஷ உதவியும் கிடைக்கவில்லை. ஜெர்மனியின் சேனபலத்திற்கு

முன்னர், போலந்து எப்படித் தனித்துப் போரிட முடியும்? சுமார் பதினைந்து நாட்களுக்குள் போலந்து வீழ்ந்துவிட்டது. போலந்தில், ஜெர்மனி முன்னேறிக் கிழக்குப் பக்கமாக வருவதைக் கண்ட ருஷ்யா, தற்காப்பை முன்னிட்டு, போலந்தின் கிழக்குப் பிரதேசத்தைத் தன் சுவாதீனத்திற்கு உட்படுத்திக்கொண்டு விட்டது. ஜெர்மனி அப்பொழுது இதனைத் தடுக்க முடியவில்லை. ஏனென்றால், மேற்கு வல்லரசுகளாகிய பிரிட்டனும் பிரான்சும் தம் மீது போர் தொடுத்துவிட்டன அல்லவா? அதனைச் சமாளிக்க வேண்டுமே? இதற்காக ருஷ்யாவுடன் சமரஸ முறையில் சேர்ந்து கொண்டு, போலந்தில் ஓர் எல்லை வகுத்துக் கொண்டது.

போலந்தின் கிழக்குப் பாகத்தைத் தன் சுவாதீனத்திற்குட்படுத்திக் கொண்டதோடு ருஷ்யா திருப்தியடையவில்லை. தன்னுடைய பாதுகாப்புக்கு அது போதாதென்று கருதியது. பால்டிக் கடலிலுள்ள துறைமுகப் பிரதேசங்களில் தன்னுடைய கடற்படை, ஆகாயப்படை முதலியவைகளை ஸ்தாபித்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக, பால்டிக் நாடுகளாகிய லாட்வியா, லிதுவேனியா, எஸ்தோனியா ஆகிய மூன்றுடனும் ஒப்பந்தம் செய்துகொண்டு, தன்னுடைய கடற்படை ஸ்தலங்களை அந்தத் துறைமுகப் பிரதேசங்களில் ஸ்தாபித்துக் கொண்டது. (அக்டோபர் 1939) முதலில் இப்படிச் செய்து, பின்னர் (ஜுன் 1940) அந்த மூன்று சிறிய நாடுகளையும் சோவியத் ராஜ்யத்திலேயே ஐக்கியப்படுத்திக் கொண்டுவிட்டது.* இவை, 1914-ஆம் வருஷ யுத்தத்திற்கு முன்னர் ருஷ்ய ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்தவையாகவே இருந்தன. வார்சேல் சமாதான ஒப்பந்தத்தைத் தயாரித்த ராஜதந்திரிகள், ருஷ்யாவுக்கு எந்தவிதமான கடல் தொடர்பும் இருக்கக் கூடாதென்று சொல்லி, இந்த

* 62-ஆம் பக்கம் பார்க்க.

மூன்று சிறிய பிரதேசங்களையும் சுதந்திர நாடுகளாகச் சிருஷ்டித்துக் குறுக்கே வைத்து, ருஷ்யாவின் மீது தங்களுக்கிருந்த வன்ம புத்தியைக் காட்டிக் கொண்டனர். இந்த மூன்று சிறிய பிரதேசங்களும் சுமார் பதினெட்டு வருஷ காலம் சுதந்திர மூச்சை விட்டுக் கொண்டிருந்து விட்டு, மறுபடியும் தங்களுடைய பழைய ருஷ்ய எஜமான னிடத்திலேயே அடைக்கலம் புகுந்து கொண்டு விட்டன.

இந்த மூன்று பிரதேசங்களையும் ஐக்கியப்படுத்திக் கொண்ட தோடு ருஷ்யா திருப்தியடைய வில்லை. அதனுடைய கடல் தொடர்புக்கு பின்லாந்து இன்னொரு முட்டுக்கட்டையாக இருந்தது. அங்குத் தனக்குச் சில கடற்படை ஸ்தலங்கள் இருக்கவேண்டு மென்று தீர் மானித்து, அவைகளுக்கு இடங்கொடுக்குமாறு பின் லாந்தைக் கேட்டது. அஃது இணங்கவில்லை; மறுத்து விட்டது. பின்லாந்து, ஏற்கனவே ருஷ்யாவின் வசத்தி லிருந்த நாடுதான். 1917-18-ஆம் வருஷம் ருஷ்யாவில் உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டிருந்ததை ஆதாரமாகக் கொண்டு, ஜெர்மனியின் தூண்டுதலினாலும் உதவியினாலும் சுதந்திரக் கொடியைத் தூக்கியது. அப்பொழுது, அதன் விஷயத்தில் ருஷ்யா தலையிடாமல் அதன் சுதந்திரத்தை அங்கீகரித்துக்கொண்டு விட்டது. இப்பொழுது தன் னுடைய வேண்டுகோளை மறுத்து விடவே, அதன் மீது (30—11—1939) யுத்தம் தொடுத்தது. பின்லாந்து தைரிய மாக எதிர்த்து நின்றது. தன் விஷயத்தில் நியாயம் செய்துகொடுக்க வேண்டுமென்று சர்வதேச சங்கத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டது. ஆனால், பின்லாந்து சர்வ தேச சங்கத்தில் ஓர் அங்கத்தினரில்லை யென்று மேற்படி சங்க நிருவாகிகள் தெரிவித்து விட்டார்கள்! ஜெர்மனி யின் உதவியும் அதற்குக் கிடைக்கவில்லை. ஏனென்றால் ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிற தல்லவா? அதை மீறி ருஷ்யாவுக்கு

விரோதமாக எப்படி ஜெர்மனி உதவி செய்ய முடியும்? சிறிது காலம் பின்லாந்து தனித்து நின்று வீரமாகப் போராடியது. முடிய வில்லை. கடைசியில் சரணாகதி யடைந்து விட்டது. ருஷ்யா, இந்தச் சந்தர்ப்பத்தில் சிறிது பெருந்தன்மையாகவே நடந்து கொண்டது. விரும்பியிருந்தால் அது, பின்லாந்தின் சுதந்திரத்தை அடியோடு அழித்து சோவியத் ஐக்கிய ராஜ்யத்தோடு அதனைச் சேர்த்துக் கொண்டிருக்கலாம். அப்படிச் செய்யாமல், பின்லாந்துடன் சமாதான ஒப்பந்தமே செய்து கொண்டது. (மார்ச்சு 1940) அது மட்டுமல்ல. சிறிது காலங்கழித்து, பின்லாந்து, மேற்படி சமாதான ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை ஒழுங்காக அநுசரித்து வந்ததைப் பாராட்டுவதற் கறிகுறியாக, வட மகா சமுத்திரத்திலிருந்த எந்த பெட்ஸாமோ துறைமுகத்தைச் சிறிது காலத்திற்கு முந்திப் பின்லாந்தின் ஆதீனத்திலிருந்து பறித்துக்கொண்டதோ அந்த பெட்ஸாமோ துறைமுகத்தை மீண்டும் பின்லாந்தின் ஆதீனத்திற்கே விட்டு விட்டது.

இங்ஙனம் ருஷ்யா தற்காப்பு முறைகளை அநுஷ்டிப்பதிலே தன் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கையில், ஹிட்லர், ஐரோப்பாவின் மேற்குப் பாகத்திலுள்ள நாடுகளின் மீது படையெடுத்தான். டென்மார்க், நார்வே, ஹாலந்து, பெல்ஜியம் முதலிய நாடுகள் ஒன்றன்பின் னொன்றாக, அடுக்கி வைக்கப்பட்ட பொம்மைச் சாமான்கள் மாதிரி விழுந்து விட்டன. பிரிட்டனுடைய பிரதம கூட்டாளியாக இருந்த பிரான்சும் சரணடைந்து விட்டது. இந்தச் சமயத்தில், கொள்ளைப் பொருளில் பங்கு பெறத் திடீரென்று தோன்றியவன்போல் இத்தலி, ஜெர்மனியுடன் சேர்ந்து கொண்டது. மேற்கு ஐரோப்பாவின் பெரும்பாகம் ஹிட்லருடைய சுவாதீனத்திற்கு வந்து விட்டது. சுவாதீனத்திற்கு வந்துவிட்ட தென்று

சொன்னல் என்ன அர்த்தம்? இவற்றின் பொருளாதார சக்தியனைத்தும் திரண்டு, ஜெர்மனியின் ராணுவ பலத்திற்குத் துணையாகப் போய்ச் சேர்ந்தது என்பதுதான்.

ருஷ்யா, இவைகளை யெல்லாம் மௌனமாகக் கவனித்துக்கொண்டு வந்தது. அனுக்கிரமிப்பு ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டு ஜெர்மனிக்கு விரோதமாக ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. ஆனல், அந்த ஒப்பந்தத்திற்கு அநுசரணையாக இரண்டு நாடுகளுக்கும் ஏற்பட வேண்டிய சாமான் பரிவர்த்தனைகள் முதலியன ஒன்றும் நடைபெறவில்லை. போலந்து, லாட்வியா, லிதுனியா, எஸ்தோனியா, பின்லாந்து முதலியவைகளின் விஷயத்தில் ருஷ்யா நடந்து கொண்டதைப்பற்றி ஜெர்மனிக்குப் பொருமை. மேற்கு ஐரோப்பாவில் ஜெர்மனி முன்னேறி வருவதைப் பார்த்து ருஷ்யாவுக்குச் சந்தேகம். இந்தப் பொருமை, சந்தேகம் இவைகளுக்கு மத்தியில் முஸோலினி குளிர்காயத் தீர்மானித்து, கிரீஸ் மீது படையெடுத்தான். இவனுக்குத் துணைசெய்ய, ஹிட்லர், ஹங்கேரியின் மீதும் ருமேனியா மீதும் தன் பார்வையைச் செலுத்தினன். அவையிரண்டும் அவனுக்கு வணங்கி விட்டன; அச்சு நாடுகளாகி விட்டன.

இங்ஙனம் அச்சு வல்லரசுகளின் முக்கியக் கூட்டாளிகளாகிய ஜெர்மனியும் இத்தலியும் கிழக்குப் புறமாகவும் தென்கிழக்குப் புறமாகவும் தன்னைச் சமீபித்து வருவதைப் பார்த்த ருஷ்யா, முன்னெச்சரிக்கையாக, அதாவது ருமேனியா ஜெர்மனியோடு சேர்ந்து கொள்வதற்கு முன்னதாக, ருமேனியாவின் கிழக்குப் பாகமாகிய பெஸ்ஸரேபியா பிரதேசத்தைத் தன் சுவாதீனப்படுத்திக் கொண்டு விட்டது. (ஜுலை 1940) இது ஹிட்லருக்கு மன வருத்தத்தை உண்டு பண்ணியது. ஹங்கேரியும் ருமேனியாவும் அவனுக்கு அடங்கின நாடுகளாகி விட்டபடியால், அவைகளின் மூலமாக ஏராளமான ஜெர்மன் துருப்புகளைக்

கருங்கடலோரமாகக் கொண்டு வந்து நிறுத்திவைத்தான். "ஐரோப்பாவின் தானியக் களஞ்சியம்" என்று அழைக்கப்பட்ட உக்ரேனுக்கு ஆபத்து நெருங்கிக் கொண்டு வந்தது. இதை ருஷ்யா தெரிந்து கொள்ளாமலில்லை.

கருங்கடலோரமாகத் தன் துருப்புகளை நிறுத்திவைத்ததோடு ஹிட்லர் சும்மா இருக்கவில்லை. முஸோலினி, கிரீஸ் மீது படையெடுத்திருந்தானல்லவா? அதை அவனால் சுலபமாக வெற்றிகொள்ள முடியவில்லை. கிரேக்கர்கள் காட்டிய வீரம் வியக்கத் தக்கதாயிருந்தது. முஸோலினி திணறிக்கொண்டிருந்தான். இவனை இந்தச் சிக்கலினின்று விடுதலை செய்யவேண்டியது ஹிட்லரின் கடமையாயிருந்தது. கிரீஸ் மீது ஜெர்மானியப் படைகளை எப்படி அனுப்புவது? யூகோஸ்லேவியா வழியாகவும் பல்கேரியா வழியாகவுமே அனுப்பவேண்டும். அதற்காக இந்த நாடுகளை அச்சுறுத்தியும் இவற்றில் உள்நாட்டுக் குழப்பங்களைக் கிளப்பிவிட்டும் அச்சுக் கூட்டாளிகளாகச் சேர்த்துக்கொண்டான். இந்த நாடுகளின் மூலமாக ஜெர்மானியப் படைகள் கிரீஸின் மீது சென்று தாக்கின. கிரீஸ் தோல்வியடைந்தது. இவை யாவற்றிற்கும் ருஷ்யா மௌனம் சாதித்தது. எங்கெந்த நாடு ஜெர்மனியினால் பயமுறுத்தப் பட்டு வந்ததோ அந்தந்த நாட்டுக்கு அவ்வப்பொழுது எச்சரிக்கை மட்டும் செய்து கொண்டிருந்தது.

ருஷ்யாவுக்கு விரோதமாக ஜெர்மனி, ஜப்பான், இத்தலி ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தன அல்லவா? 1940-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் இந்த ஒப்பந்தத்திற்குப் புதியதொரு மெருகு கொடுக்கப்பட்டது. ஆசியா, ஐரோப்பா, ஆப்ரிக்கா ஆகிய மூன்று கண்டங்களிலும் "புதியதோர் ஒழுங்கை" ஸ்தாபிப்பதற்காக ஒன்று சேர்ந்து வேலைசெய்ய வேண்டுமென்று இந்த மூன்று நாடுகளும் தீர்மானித்துக் கொண்டன. இந்தப் புதிய ஒழுங்கு ஸ்தாபிதத்தில்

சேருமாறு ருஷ்யாவைத் தூண்டியது ஜெர்மனி. ஆனல், அயல்நாட்டு விவகாரங்களில் எப்பொழுதுமே தலையிடுவதை விரும்பாத ருஷ்யா இதற்கு இணங்க மறுத்து விட்டது. இதனல் ருஷ்ய-ஜெர்மானிய அனுக்கிரமிப்பு ஒப்பந்தத்தின் மத்தியில் பிளவுவிட ஆரம்பித்தது. ஏதோ இஷ்டமிருக்கிறபோது, அல்லது தேவையா யிருக்கிற போது ஒருவருக்கொருவர் சாமான்களைப் பரிமாறிக் கொள்வது என்கிற அளவோடு மேற்படி அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் நின்றுவிட்டது. இந்தச் சாமான் பரிவர்த்தனையிலும் எதிர்பார்த்த அளவு இரண்டு நாடுகளும் நன்மையடையவில்லை. இதனல் மனக்கசப்பு ஏற்பட்டது. ஒன்றையொன்று சந்தேகிக்கத் தலைப்பட்டது. ருஷ்யா மீது ஜெர்மனி எந்த நிமிஷத்திலும் படையெடுக்கலாமென்று பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகளில் பேசப்பட்டது. இவைகளின் விருப்பம் எப்படி யிருந்ததோ அப்படியேதான் பேச்சும் எழுந்தது.

இந்தச் சமயம், ருஷ்ய அரசாங்க அமைப்பில் ஒரு முக்கியமான மாறுதல் ஏற்பட்டது. ருஷ்யாவின் சர்வாதிகாரி என்று அழைக்கப்படுகிற ஸ்டாலின் சில வருஷங்களாக அரசாங்க மந்திரிச் சபையில் எந்தப் பதவியும் ஏற்றுக் கொள்ளாமல் சமதர்மக் கட்சியின் பொதுக் காரியதரிசியாக மட்டும் இருந்தான். ஏற்கனவே நாம் கூறியுள்ளபடி, சமதர்மக் கட்சியின் மூலமாகவே எல்லா அரசாங்க விவகாரங்களும் நடைபெற்று வந்தன. மோலோடோவ் என்பவன் பெயரளவுக்குப் பிரதம மந்திரியா யிருந்தான். சர்வதேச நிலைமை சிக்கலாகிக்கொண்டு வருவதைக் கண்ட ஸ்டாலின், 1941-ஆம் வருஷம் மே மாதம் ஆறுந்தேதி, பிரதம மந்திரிப் பதவியைத் தானே ஏற்றுக்கொண்டான். மோலோடோவை உதவிப் பிரதம மந்திரியாகவும் அந்நிய நாட்டு மந்திரியாகவும் வைத்துக் கொண்டான். தேசத்திற்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறபோது, தேசிய விவகாரங்

15

கள் துரிதமாகவும் ஒருமுகப்பட்டும் நடைபெறுவதற்காகவே இந்தப் பதவி மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆனால், ஹிட்லர், இந்தப் பதவி மாற்றங்களைப் பார்த்துத் தனக்கு விரோதமாக ருஷ்யா யுத்த முஸ்தீப்புகள் செய்துகொண்டிருக்கிறது என்று நினைத்துவிட்டான். ஸ்டாலின், பிரதம மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்ட அடுத்த மாதத்திலேயே, 1941-ஆம் வருஷம் ஜூன் மாதம் 22-ந் தேதி, ஜெர்மனி, ருஷ்யாவின் மீது யுத்தம் தொடுத்து விட்டது. வடக்கே பால்டிக் கடலிலிருந்து தெற்கே கருங்கடல் வரை சுமார் 1800 மைல் நீளத்திற்கு ஜெர்மானியப் படைகள் அணிவகுத்துக் கொண்டு ருஷ்ய எல்லைக்குள் பிரவேசித்தன. மானிட ஜாதியின் சரித்திரத்திலேயே இதைப் போன்ற மகா யுத்தம் இதற்கு முன்னர் நடைபெற்றதில்லை யென்பது அறிஞர்களுடைய அபிப்பிராயம். இந்த யுத்தத்தின் முடிவைக் கடைசி அத்தியாயத்தில் காண்போம்.

சோவியத் தலைவர்கள் இப்படிப்பட்ட மகாயுத்தம் ஒன்று நடைபெறப் போகிறதென்பதை ஏற்கனவே தெரிந்துகொண் டிருந்தார்கள். ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்திலிருந்தே, அதாவது 1939-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதத்திலிருந்தே, இவர்கள், யுத்த சம்பந்தமான ஏற்பாடுகளை ஒழுங்காகச் செய்துகொண்டு வந்தார்கள். ஜனங்களையும், யுத்தத்திற்குத் தயாரா யிருக்கும்படி எச்சரிக்கை செய்து வந்தார்கள். அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில், ராணுவச் செலவு பிரதிவருஷமும் அதிகரித்துக் கொண்டு வந்தது. 1935-ஆம் வருஷம் எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விவரப்படி, உலகத்திலுள்ள மற்ற நாடுகளைக் காட்டிலும் ருஷ்யாவுக்குத்தான் அதிகமான தரைப்படை, ஆகாயப்படை, டாங்கிப்படை முதலியன இருக்கின்றன என்று சொல்லப்பட்டது. அப்பொழுது—1935-ஆம்

வருஷத்தில் — ருஷ்யாவின் ராணுவச் செலவு சுமார் 5,00,00,00,000 ரூபாயாக இருந்தது. இது 1939-ஆம் வருஷத்தில் ஐந்து மடங்காகவும், 1940-ஆம் வருஷத்தில் எழு மடங்காகவும், 1941-ஆம் வருஷத்தில் ஏறக்குறைய ஒன்பது மடங்காகவும் முறையே அதிகப்பட்டுக் கொண்டு வந்தது. யுத்தத்தில் ஈடுபடுவதற்கு முன்னர், ருஷ்யா எவ்வளவு தயாரிப்பில் இருந்துவந்ததென்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

ருஷ்யா, தனது அந்நிய நாட்டு விவகாரங்களில் எப்பொழுதுமே சமாதானத்தை லட்சியமாகக் கொண்டு நடந்து வந்திருக்கிறது; தற்காப்பு முறையை அநுஷ்டித்து வந்திருக்கிறது. எதிர்த்துப் போராடுகிற மாதிரி, அது தன் யுத்த ஏற்பாடுகளைச் செய்துகொள்ளவில்லை. பிறரால் தாக்கப்பட்டால் அதனைச் சமாளித்துக் கொள்ளக்கூடிய மாதிரியாகவே அதனுடைய யுத்த ஏற்பாடுகளும் ராணுவ நிருவாகமும் இருந்துவந் திருக்கின்றன. இதற்கு முக்கிய காரணம் என்னவென்றால், அதற்கு நாடுபிடிக்கிற ஆசை இல்லாததுதான். இதனை 1935-ஆம் வருஷம், அப்பொழுது அந்நிய நாட்டு மந்திரியா யிருந்த லிட்விநோவ் மிகத் தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறான் :—

“சோவியத் அரசாங்கத்தின் அந்நிய நாட்டுக் கொள்கை மூன்று அமிசங்களை அடிப்படையாகக் கொண்டது. முதலாவது, சோவியத் அரசாங்கத்திற்கு மற்றவர்களுடைய பூமியோ, சொத்துச் சுதந்திரங்களோ தேவையில்லை. இதனால் எந்த நாட்டுடனும் யுத்தம் செய்வது அதன் நோக்கமில்லை. இரண்டாவது, நவீன ஏகாதிபத்திய நிலைமையில், எந்த ஒரு யுத்தமும் உலக முழுவதிலும் பரவி எல்லா ஜனங்களுடைய அழிவையும் உண்டு பண்ணுவதா யிருக்கும். ஏனென்றால், தற்போதைய நிலைமையில், யுத்தத்தை ஒரு நாட்டுக்குள்ளே வரையறுத்துக்கொள்ள முடியாது. எந்த ஒரு நாடும், அஃது எவ்வளவு முயன்றாலும், நடுநிலைமை வகிப்பதாகச் சொல்லிக்

கொண்டு ஒதுங்கி யிருக்கமுடியாது. மூன்ருவது, எந்த ஒரு யுத்தத்திலும், பெரும்பான்மையோ ராயுள்ள பாமர ஜனங்களுக்குத்தான் அதிகமான துன்பமும் துயரமும் உண்டாகும். இதனுல், உழைப்பாளிகளான ஏழைமக்களின் அரசாங்கமா யிருக்கிற சோவியத் ராஜ்யம், யுத்தத்தை எதிர்க்கிறது; வெறுக்கிறது''

சோவியத் அரசாங்கம் சமாதானத்தையே முக்கிய நோக்கமாகக்கொண் டிருக்கிற தென்பதற்கு மற்ருேர் அத்தாட்சி என்னவென்ருல், பிறநாடுகளுக்கு விரோதமான எந்த ஒரு கட்சிக்கோ அல்லது இயக்கத்திற்கோ அது தனது நாட்டில் இடங்கொடுப்பதில்லை. சோவியத் அரசாங்கத்தின் அரசியல் அந்தஸ்தை 1934-ஆம் வருஷம் அமெரிக்கா அங்கீகரித்துக் கொண்டபோது, அமெரிக்காவுக்கு விரோதமான எந்த ஒரு ஸ்தாபனத்திற்கும் அல்லது கட்சிக்கும் அல்லது இயக்கத்திற்கும் தனது நாட்டெல்லைக்குள் இடங்கொடுப்பதில்லை யென்று சோவியத் அரசாங்கம் உறுதி கொடுத்ததை, இங்கு ஓர் உதாரணமாக எடுத்துக்காட்ட விரும்புகிருேம்.

இப்படி அந்நிய நாடுகளுக்கு விரோதமான இயக்கத்திற்கோ ஸ்தாபனத்திற்கோ இடங்கொடுப்பதில்லை யாயினும், அந்நிய நாடுகளிலிருந்து பிரஷ்டம் செய்யப்பட்ட தனி மனிதர்களுக்குத் தஞ்சம் கொடுப்பதில் சோவியத் அரசாங்கம் சிறிதுகூடப் பின் வாங்கவில்லை. அதனைத் தனது முக்கிய கடமையாகவும் கொண்டிருக்கிறது. அதன் அரசியல் சட்டத்தின் 129-வது பிரிவில் இந்தக் கடமை வலியுறுத்தப்பட் டிருக்கிறது.

"தொழிலாளர்களுடைய நன்மைக்காகப் போராடியதற்காகவோ, விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்ததற்காகவோ, சுய தேசவிடுதலைக்காகப் போராடியதற்காகவோ துன்புறுத்தப்படுகிற எந்த அந்நிய நாட்டுப் பிரஜைக்கும் சோவியத் ராஜ்யத்தில் அடைக்கலம் புக உரிமையுண்டு."

இங்ஙனம் அடைக்கலம் புகுந்தவர்கள் தனியாகவோ ஒன்று சேர்ந்தோ தங்களுடைய நாட்டுக்கு விரோதமாக எந்த ஒரு காரியத்தையும் செய்யக்கூடாதே தவிர, மற்றப் படி எல்லா வழிகளிலும் பூரண சுதந்திரத்தை அநுபவித்துக் கொண்டிருக்கலாம். அந்நிய நாட்டுப் பிரஜைகளுக்கு இந்தமாதிரியான உரிமை யளித்திருப்பது, சோவியத் அரசாங்கத்தின் மனத்தூய்மையையும் பெருந்தன்மையையும் காட்டுகிறது.

தவிர, மற்ற நாடுகளுடன் சமாதானமாக வாழ வேண்டு மென்பதற்காக ருஷ்யா எத்தனையோ அவமானங்களைச் சகித்துக்கொண் டிருந்திருக்கிறது. அதனுடைய பிரஜைகள் வெளிநாடுகளில் அகாரணமாகக் கொலை செய்யப்பட்ட காலத்தில்கூட, அது நிதானம் தவறுமல் காரியங்களை நடத்திவந்திருக்கிறது. சர்வதேச சங்கத்தில் அதன் அபிப்பிராயங்களுக்கு மதிப்புக் கொடுக்கப்படாமலிருந்தகாலத்திலும், ம்யூனிக் ஒப்பந்த காலத்தில் அது புறக்கணிக்கப் பட்டபோதும், இன்னும் அதன் சுயமரியாதைக்குப் பங்கம் ஏறபடக்கூடிய சம்பவங்கள் பல நடைபெற்ற சந்தர்ப்பங்களிலும் அது பொறுமையை இழக்கவில்லை. இவற்றிற்கெல்லாம் காரணம், சமாதானத்தில் அதற்கேற்பட்டிருந்த உறுதியான நம்பிக்கைதான்.

## 13. புதிய நாகரிகம்

இன்பம், துன்பம் என்னும் இரண்டு நிலைகளிலும் கண்களிலிருந்து நீர் வடிவது சகஜம். சிருஷ்டியின்போதும் அழிவின்போதும் வேதனை உண்டாவது இயல்பு. சாம்ராஜ்யங்கள் தோன்றுகிறபோதும் மறைகிறபோதும் புரட்சி ஏற்படுவது சரித்திர உண்மை. ருஷ்யா, இந்தச் சரித்திர உண்மைக்குப் புறம்பாகவில்லை. அங்கே முடிதரித்த மன்னர் பரம்பரை பிடிசாம்பலாய்ப் போன காலத்திலும், அந்தச் சாம்பலிலிருந்து புதிய ஜனசக்தி—சமதர்ம ராஜ்யம்—உதயமான காலத்திலும் புரட்சி உண்டாயிற்று. ஆம், புரட்சிக்கு எதிர்ப் புரட்சி கூட உண்டாயிற்று.

ஆனால், இந்த ஓர் அமிசத்தில் மட்டுந்தான் ருஷ்யப் புரட்சி, சரித்திர உண்மைக்குப் புறம்பாக வில்லையே தவிர, மற்ற எல்லா அமிசங்களிலும், இதர புரட்சிகளினின்று வேறுபட்டதாகவே இருந்தது. எப்படி?

உலகத்தில் இதுகாறும் ஒவ்வொரு காரணத்திற்காக ஒவ்வொரு புரட்சி நடைபெற்று வந்திருக்கிறது. முடிதரித்த மன்னர்கள் குடி தழுவி ஆளவேண்டு மென்பதற்காகப் புரட்சி; மதம் என்னும் மேட்டிலே குவிந்து கிடக்கும் குப்பைகளைச் சுட்டெரிக்க வேண்டுமென்பதற்காகப் புரட்சி; உண்கிற சோறு எல்லோருக்கும் கிடைக்க வேண்டு மென்பதற்காகப் புரட்சி; இப்படி ஒவ்வொரு காரணத்திற்காக ஒவ்வொரு புரட்சி. ஆனால் ருஷ்யப் புரட்சி பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டது. அரசியல், பொருளாதாரம், சமுதாயம், மதம் முதலிய எல்லாத் துறைகளையும் ஒரே சமயத்தில் மாற்றி யமைக்க வேண்டு மென்பதற்காக அது தோன்றியது; அழிவு வேலையையும் ஆக்க வேலையையும் ஒரே சமயத்தில் செய்து

முடித்தது. இதனாலேயே ருஷ்ய மகாஜனங்கள் அதிகமான வேதனையடைய வேண்டி யிருந்தது.

தவிர, மற்றப் புரட்சிகளினால் ஜனங்கள் அநுபவித்த துன்பங்கள் பல; அடைந்த ஆறுதல்கள் சில; பெற்ற பலனோ ஒன்று மில்லை. சில நாடுகளில் ஜனங்கள், ஒன்றைக் கோரிப் புரட்சி செய்தார்கள்; ஆனால் வேறொன்று அவர்களுக்குக் கிட்டியது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்று முழக்கம் செய்து அதிகார சக்தியை அப்புறப்படுத்தப் பார்த்தார்கள்; ஆனால், அந்த அதிகார சக்தியே அவர்களை ஆட்கொண்டு விட்டது. இன்னும் சில நாடுகளில் ஜனசக்திக்கு ஆடம்பரமான பூசை நடைபெற்றது. பூசை முடியுந் தருணத்தில் அதிகார சக்தியே ஜனநாயக வேஷந் தரித்துக் கொண்டு பூசாரிகளுக்குக் காட்சி யளித்தது. அவர்களும் அதைக் கண்டு திருப்தி யடைந்து விட்டார்கள். வேறு சில நாடுகளில் அவர்கள்—புரட்சி செய்தவர்கள்—அரசாங்க அதிகாரத்தை நிலச்சுவான்தார்களின் பிடியிலிருந்து விடுவிக்க முயன்றார்கள்; ஆனால், கடைசியில் தொழில் முதலாளிகளின் வசத்தில் அதனை ஒப்புக் கொடுத்து விட்டார்கள். இப்படி ஒவ்வொரு நாட்டிலும் புரட்சியின்போது ரத்த ஆறு பாய்ச்சினவர்கள் பெரும்பாலோரான பாமர ஜனங்கள்; அதிலிருந்து சட்டஞ் செய்யும் உரிமை, சுரண்டும் உரிமை, உழைப்பின்றி ஊதியம் பெறும் உரிமை முதலிய உரிமைப் பயிர்களைச் சாகுபடி செய்து கொண்டவர்கள் சிறுபாலோரான அறிஞர்கள். ஆனால், ருஷ்யப் புரட்சி எந்த நோக்கத்திற்காக நடைபெற்றதோ அந்த நோக்கத்தை யடைந்தது. ஜனங்களே ஜனங்களுக்காகப் புரட்சி செய்ததும் அதில் வெற்றி கண்டதும் இங்குதான்; இந்த ருஷ்யாவில்தான்.

பதினெட்டாவது நூற்றாண்டின் பிற் பாகத்திலும் பத்தொன்பதாவது நூற்றாண்டின் முற் பாகத்திலும் ஐரோப்பாவில் அநேகம் புரட்சிகள் நடைபெற்றன.

பிரான்சிலே புரட்சி; ஜெர்மனியிலே புரட்சி; இத்தலியிலே புரட்சி; இங்கிலாந்திலே கூடப் புரட்சி! ஆனால், இந்தப் புரட்சிகளில் ஒன்றாவது ஜனசமுதாயத்தின் அடிப் படியைத் தொடவேயில்லை. மேலெழுந்த வாரியாகத் தெரிந்து கொண்டிருந்த ஓரிரண்டு படிகளை மட்டும் சிறிது அசைத்துக் கொடுத்துவிட்டு உடனே அடங்கிப் போயின. சமுதாயத்தின் மேல் படியிலிருந்த புத்திசாலிகளான சில சந்தர்ப்ப வாதிகள், சமுதாயத்தின் கீழ்ப்படியிலிருந்தவர்களை, அதாவது பாமர மக்களைக் கைதூக்கி விடப்போகிறோம் என்று சொல்லிக்கொண்டு புரட்சி செய்தார்கள். ஒரு சிலர், அந்தப் பாமர மக்களின் மீது கருணை காட்டினார்கள்; அதற்காகக் கஷ்டமும் நஷ்டமும் பட்டார்கள். ஆனால், இவர்கள் அனைவரும் அந்தப் பாமர மக்களைத் தங்கள் கைப்பிடிக்குள் இறுக்கிப் பிடித்து வைத்துக் கொள்வதிலேயே முனைந்து நின்றார்கள். அப்படித் தங்கள் கைப்பிடியிலிருந்து அந்தப் பாமர ஜனங்கள் வெளியேறப் பார்ப்பார்களானால், அவர்களை அடக்குவதற்காக, தாங்கள் இதுகாறும் யாருக்கு விரோதமாகப் புரட்சி செய்து கொண்டிருந்தார்களோ அந்த அதிகாரவர்க்கத்துடன் சேர்ந்து கொண்டார்கள். ஐரோப்பியப் புரட்சிகளின் பெரும் பாகம் இந்தமாதிரியான துரோகப் படலங்கள் நிறைந்ததாகவே இருக்கிறது. ஆனால், ருஷ்யாவில் நடைபெற்ற புரட்சி இப்படியில்லை. சமுதாயத்தின் கீழ்ப்படியிலிருந்தவர்களே தங்களை இதுவரையில் நசுக்கிக் கொண்டு வந்திருந்த சக்திகளுக்கு விரோதமாகப்புரட்சி செய்தார்கள்; அந்தச் சக்திகளை அடக்கியும் விட்டார்கள்.

மற்ற நாடுகளில் நடைபெற்ற புரட்சிகள் சமுதாயத்தின் மீது படிந்திருந்த அழுக்குகளை மட்டும் அப்புறப்படுத்தின. ஆனால், ருஷ்யப் புரட்சியினால், புதிய சமுதாயம் அமைந்தது; புதிய மனிதர்கள் சிருஷ்டியானார்கள்; புதிய நாகரிகம் உதயமாயிற்று.

சமதர்மம் என்று சொன்னல், அது வெறும் தத்துவம், அடைய முடியாத லட்சியம், பகற் கனவு என்றெல்லாம் ஏகபோக உரிமைக்காரர்கள் பிரசாரம் செய்து வந்தார்கள். ருஷ்யப் புரட்சி இதைப் பொய்ப்படுத்தி விட்டது. சமதர்மத்தை நடைமுறையில் கொண்டுவரக் கூடுமென்பதை அது நிரூபித்துக் காட்டியது. உண்மையான ஒரு சமுதாயம், உயிர்ச் சக்தியோடு இயங்கிக் கொண்டிருக்க வேண்டுமானல், அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த எல்லா அங்கத்தினர்களும் நல் வாழ்வு நடத்த வேண்டுமானல், அது சமதர்மத்தையே கையாள வேண்டும். அரசாங்க நிருவாக மாகட்டும், அன்ருட வாழ்க்கையாகட்டும் எல்லாம் சமதர்மத்தைச் சுற்றியே வரவேண்டும். இப்படிப்பட்ட ஒரு நிலைமையை ருஷ்யப் புரட்சி அநுஷ்டான சாத்தியமாக்கியது.

இத்தகைய காரணங்களினலே ருஷ்யப் புரட்சி, மானிடஜாதியின் சரித்திரத்தில் அழியாத ஒரு முத்திரையை இட்டிருக்கிற தென்று அறிஞர்கள் கூறுகிருர்கள்.

இங்ஙனம் பல வகையிலும் விசேஷத் தன்மைவாய்ந்த ருஷ்யப் புரட்சியினின்று உதித்த சமதர்ம நாகரிகம், அல்லது சோவியத் நாகரிகம், மற்ற நாகரிகங்களைப் போலல்லாமல், தனித்தன்மை வாய்ந்ததென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ? இஃதொரு புதிய நாகரிகம். இதனல்தான் பழமையிலே தோய்ந் திருந்தவர்களுக்கு ஒரு புதிர் மாதிரி இருக்கிறது. மற்ற நாகரிகங்களில் மனம் லயித்துப் போனவர்களுக்கு இந்தச் சோவியத் நாகரிகத்தைப் புரிந்து கொள்வது கூடக் கடினமான விஷயம். இப்படித்தான் ஐரோப்பிய அறிஞர்கள் அபிப்பிராயப் பட்டிருக்கிருர்கள். சாதாரணமாக இப்பொழுது நாம் ஹிந்து நாகரிக மென்றும், இஸ்லாமிய நாகரிகமென்றும், கிறிஸ்துவ நாகரிக மென்றும் அந்தந்த மதத்தின் பெயரால் நாகரிகத்தை அழைக்கிறேம். ஏனென்ருல் இந்த நாகரிகங்

கள் மதத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை. இப்பொழுது, இந்த மாதிரி சொல்வதுகூட, அதாவது ஹிந்து நாகரிக மென்றும் இஸ்லாமிய நாகரிக மென்றும் சொல்வதுகூட, பழைய சம்பிரதாயமாகி விட்டது. பொது வாக, மேனாட்டு நாகரிக மென்றும் கீழ்நாட்டு நாகரிக மென்றுந்தான் இப்பொழுது உலகத்தில் நிலவுகின்ற நாகரிகங்களை இரண்டு கூறுக்கிச் சொல்கிறோம். உலக மார்க்கத்தில் சித்திகள் பெறுவது மேனாட்டு நாகரிகம்; பாரமார்த்திகத்தில் பண்பாடு பெறுவது கீழ்நாட்டு நாக ரிகம். இந்த மாதிரி தொகுப்பான ஒரு கருத்துத்தான் அறிஞர்களிடையில் உலவுகிறது. சோவியத் நாகரிகமோ, இந்த இரண்டு நாகரிகங்களின் சேர்க்கையிலிருந்து பிறந்த ஒரு புதிய சிருஷ்டி. இது, மற்ற நாகரிகங்களிலே காணப் படும் தீய அமிசங்களைப் புறக்கணித்து விட்டு, அவற்றினுள் உள்ள நல்லஅமிசங்களை மட்டும் தன்னகத்தே தாங்கிக் கொண்டிருக்கிறது; விஞ்ஞான சாஸ்திரத்தின் வளர்ச்சி யையும் பெரும்பாலோரான ஜனங்களுடைய நன்மையை யும் அநுசரித்துச் சில புதிய அமிசங்களையும் சேர்த்துக் கொண்டிருக்கிறது. இதுதான் இந்த நாகரிகத்தின் விசேஷம். பழமையை அடியோடு வெறுக்கவுமில்லை; புதுமையைக் கண்மூடித்தனமாக வரவேற்கவு மில்லை. எந்த ஒரு தீவிரத்திற்கும் செல்லாமல் நடுவான ஒரு பாதையில் மக்களைச் செலுத்துகிறது. விஞ்ஞானத்திற்கு அடிமைப்பட்டு மனிதனை யந்திரமாக்கி விடவுமில்லை; அப்படியே, மனிதனுடைய அறிவுக்கு எட்டாத சக்திகள் பல இருக்கின்றன என்று நம்பி அவற்றினிடம் தஞ்சம் புகுந்துகொண்டு, மனிதனை, அழுக்குகள் நிறைந்த ஒரு தண்ணீர்த் தேக்கமாக்கி விடவுமில்லை; மனிதனை மனித னாகவே வளர்க்கிறது.

மேனாட்டு நாகரிகத்தின் செல்வப் பிள்ளையாக வளர் கிறவன், இயற்கையைத் தன் அடிமையாக்கி வைத்திருப்ப

தாகச் சொல்லிக்கொண்டு, உலகத்திலுள்ள மனிதர்களை அடிமைப் படுத்தப் பார்க்கிறான். கீழ்நாட்டு நாகரிகத்தின் மைந்தன், இயற்கைக்கு அடிமைப்பட்டு மற்ற மக்களுக்கும் அடிமையாகி விடுகிறான். ஆனால், சோவியத் நாகரிகத்தின் மடியிலே வளர்ந்த மகன், இயற்கையோடு தோழமை பூண்டு அதனுடைய அந்தரங்கத்தில் தன் அறிவைச் செலுத்தி அதனையும் பிரகாசிக்கச் செய்கிறான்; தானும் வளர்கிறான். பொதுவாக அவன் கொடிய மிருகமாவது மில்லை; சாதுவான சுவராவது மில்லை; மனமும் அறிவும் கலந்த மனிதனாகவே ஆகிறான்.

மற்ற நாகரிகங்கள் எவை எவற்றிற்கு அதிகமான உயர்வு கொடுத்துப் பாராட்டி வருகின்றனவோ அவை அவற்றை சோவியத் நாகரிகம் இழிவாகவும் குற்றமாகவும் கருதுகிறது. மேனாட்டு நாகரிகக் கோயிலில் மேலான அந்தஸ்துப் பெற்றிருந்த சக்திகள் பல, சோவியத் நாகரிகத்தின் கீழ் கீழான நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, முதலாளித்துவ நாகரிகத்தின் கீழ், மாளிகைகளில் வசிக்கிறவர்களுக்குத்தான் அதிக மதிப்பு; சமதர்ம நாகரிகத்தின் கீழ், உழைப்பாளிகளுக்குத்தான் அதிக மதிப்பு. முந்திய நாகரிகத்தின்படி, வட்டிக்குக் கடன் கொடுத்துப் பணம் சம்பாதிப்பது, பிறர்க்கு உபகாரம் செய்து சம்பாதிக்கிற மாதிரி; பிந்திய நாகரிகத்தின்படி, வட்டித் தொழில் செய்து பணம் சம்பாதிப்பது ஒரு குற்றம். இத்தகைய காரணங்களினால்தான், மேனாட்டார் பலரும், சமதர்ம நாகரிகத்தை, சோவியத் ஆட்சி முறையை, ஒரு கோணிய பார்வையோடு பார்க்கிறார்கள்.

சமதர்ம நாகரிகத்தின் விசேஷ அமிசங்கள் அல்லது புதிய அமிசங்கள் என்னென்ன என்பதையும், அவை, ருஷ்யாவில் எந்த மாதிரியான தோற்றத்தில் காட்சியளிக்கின்றன என்பதையும் இங்குச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறோம்.

1. ருஷ்யாவில் நடைபெறுகிற ஒவ்வொரு காரியமும் சமுதாய நன்மைக்குத்தான்; பொது ஜனங்களுடைய உபயோகத்திற்குத்தான் : ஒரு சிலருடைய சுகத்திற்காக அல்ல. கல்வி, கலை, இசை, ஓவியம், காவியம் ஆகிய எல்லாம் சமுதாய புருஷனைப் போற்றுகின்றனவாகவும் அவனுடைய க்ஷேமத்தைக் காப்பாற்றுகின்றனவாகவும் இருக்கின்றன. *

2. மானிட சமுதாயம் புதிய பிறப்பெடுத்து ஜீவகளையோடு இயங்கவேண்டுமானால், ஆத்மா ஆத்மா என்று சொல்லிக்கொண்டு அதனுடைய வளர்ச்சியை மட்டும் நாடிக்கொண்டிருந்தால் போதாது; தனி மனிதர்கள் பலர் ஒரு சமுதாயமாகச் சேர்ந்து, விஞ்ஞானத்தின் துணையினால் புறச்சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டி எல்லோருக்கும் பயன்படுகிற மாதிரி உபயோகத்திற்குக் கொண்டுவருவதன் மூலமாகத்தான் மானிட சமுதாயம் முன்னேற முடியும் என்பதை, சோவியத் தலைவர்கள் அநுஷ்டானத்தில் காட்டியிருக்கிறார்கள்.

3. மனித சுபாவத்தைச் சட்டத்தின் மூலம், அல்லது சட்டத்தின் துணைகொண்டு மாற்ற முடியும் என்பதை சோவியத் ஆட்சி நிரூபித்திருக்கிறது.

4. மேனாட்டு நாகரிகத்தைப் பின்பற்றுகிற சமுதாய அமைப்பில், பொருளுற்பத்திக்கு முக்கிய தூண்டுகோலாயிருப்பது, லாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசை பிரதிபொரு மனிதனுக்கும் இருப்பதுதான். இந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்கு அங்கே சந்தர்ப்பங்கள் அளிக்

* "கலையினால் சில நூறு பேருக்கு அல்லது சில ஆயிரம் பேருக்கு என்ன நன்மை உண்டாகிறது, எவ்வளவு நன்மை உண்டாகிறது என்பது நமக்கு முக்கியமல்ல. கலையென்பது ஜனங்களுக்குச் சொந்தமானது. அதனுடைய ஆழமான வேர்கள், உழைப்பாளிகளின் மத்தியில் நன்றாக ஊன்றிப் பரவவேண்டும். சமுதாயத்தில் பெரும்பாலோராயுள்ள அவர்கள், அந்த உழைப்பாளிகள், கலையை அறிந்து அதனை நேசிக்க வேண்டும். அவர்களுடைய உணர்ச்சி, எண்ணம், ஆவல் இவைகளோடு ஒட்டினாற்போல் இருந்துகொண்டு அந்தக் கலை வளரவேண்டும்." —லெனின்.

கப்படுகின்றன. குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்கிறவர்கள் சாமர்த்திய சாலிகள் என்றும் வியாபாரத் திறமையுடையவர்கள் என்றும் பாராட்டப் படுகிறார்கள். ஆனால் சோவியத் ருஷ்யாவில் இப்படிப்பட்டவர்கள் குற்ற வாளிகளாகக் கருதப்பட்டுத் தண்டிக்கப்படுகிறார்கள். மற்ற வர்களைக் கூலிக்கமர்த்தி அவர்களுடைய உழைப்பினின்று ஊதியம் பெறுகிறவர்களை, மேனாட்டு நாகரிகம் கௌரவிக் கிறது; சன்மானிக்கிறது. ஆனால் சோவியத் நாகரிகம் இவர்களைச் சுரண்டுகிற குற்றத்திற்கு உட்படுத்தித் தண்டிக் கிறது.

5. சோவியத் ருஷ்யாவில் ஒரு திட்டம் வகுத்துக் கொண்டு அதன்படியே பொருளுற்பத்தி செய்கிறார்கள். தனிப்பட்ட முதலாளிகள், தங்களுக்கு இஷ்டப்பட்டது எதுவோ அல்லது லாபம் தரக்கூடியது எதுவோ அந்தமாதிரி யான பொருள்களை உற்பத்திசெய்வதற்கு அங்கே இடம் கிடையாது. இதனால் பெரும்பாலோர், இல்லாமைக் குறை யினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்க, ஒரு சிலர் மட்டும் தங்களுடைய ஆசையைப் பூர்த்தி செய்து கொள்வதற்குச் சந்தர்ப்பமே இல்லாமற் போய் விடுகிறது.

6. சமுதாயத்திற்கு நன்மை தரக்கூடிய ஏதோ ஒரு வேலையை, திடகாத்திரமுள்ள ஒவ்வொருவரும் அவரவ ருடைய திறமைக்குத் தகுந்தபடி செய்ய வேண்டுமென்பது சோவியத் ராஜ்யத்தில் கட்டாய விதி. பணம் படைத்தவர்க ளென்றோ, புத்திசாலிகளென்றோ, பெரிய பதவியில் இருக் கிறோமென்றோ சொல்லிக்கொண்டு, யாரும் ஒரு வேலையும் செய்யாமல் சும்மா இருக்கக்கூடாது. ஓய்வு எடுத்துக் கொள்ள எல்லாருக்கும் எப்படி உரிமை உண்டோ அப் படியே வேலை செய்வது எல்லோருடைய கடமையுமாகும். இந்த உரிமையை அநுபவிக்கிற விஷயத்தில், கடமையைச் செய்கிற விஷயத்தில், ஜாதி, சமய, பால், வகுப்பு, நிற வேற் றுமை ஒன்றுமே கிடையாது. சுரண்டுகிறவர்களும் இல்லை; சுரண்டப்படுகிறவர்களும் இல்லை. பிச்சை எடுப்போரும்

இல்லை; பிச்சை கொடுப்போரும் இல்லை. சிகரங்களோடு கூடிய மாளிகைகளும் இல்லை; கூரையில்லாக் குடிசைகளும் இல்லை. எல்லோருக்கும் ஒரே அந்தஸ்துதான்; ஒரே மாதிரியான உரிமைகள்தான். இதைத்தான் வர்க்கப் பிரிவினைகள் இல்லாத சமுதாயம் என்று சொல்வது. இதுவே சோவியத் நாகரிகத்தின் லட்சியம்.

7. மற்ற நாடுகளில் ஜன விருப்பத்தின்படி ஆட்சி நடை பெறவேண்டும் என்பது ஒரு சம்பிரதாயமாகவே அநுஷ்டிக்கப்படுகிறது; ஓட்டுரிமைக்குச் சில நிர்ப்பந்தங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ருஷ்யாவில் இந்த ஓட்டுரிமை என்பது வெறும் சம்பிரதாயமாக மட்டும் இல்லை; சட்டப் புத்தகத்தின் அலங்காரப் பொருளாக மட்டும் இல்லை. வயது வந்த எல்லாரும் எவ்வித அந்தஸ்து வித்தியாசமோ, பொருளாதார வித்தியாசமோ இல்லாமல் ஓட்டுக் கொடுக்கவும் தேர்தலில் நேர்முகமாகக் கலந்து கொள்ளவும் உரிமை உடையவர்கள். ஒரு நாகரிகத்தின் விசேஷமாக இதை ஏன் எடுத்துக் காட்டுகிறோம் என்றால், சோவியத் ருஷ்யாவில் ஓட்டர்களின் கடமை ஓட்டுக் கொடுப்பதோடு முடிந்துவிட வில்லை என்பதை வலியுறுத்திக் காட்டுவதற்குத்தான். இந்த ஓட்டர்கள், யாரைத் தங்கள் பிரதிநிதியாகத் தெரிந்தெடுத்தார்களோ அவர்கள், தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்கிறார்களா என்று அடிக்கடி கூட்டம் போட்டுப் பரிசீலனை செய்கிறார்கள்; பிரதிநிதிகளுக்கு யோசனை சொல்கிறார்கள். ஓட்டர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும், பிரதிநிதிகளின் மூலமாக ஜனங்களுக்கும் அரசாங்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு, நேர்முகமான தொடர்பு இருப்பது சோவியத் ருஷ்யா ஒன்றிலேதான்.

8. அரசியல் பரிபாஷையில் கட்சி அரசாங்கம் என்ற ஒரு சொற்றொடர் உண்டு. அதாவது, கொள்கைகளில் வித்தியாசமுடைய பல அரசியல் கட்சிகள் தேசத்திலே இருக்கின்றன என்பதையும், இந்தக் கட்சிகளிலே பெரும்பான்மையான ஒரு கட்சி, அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக்

கொண்டு நடத்துகிறது என்பதையும் இது குறிக்கிறது. ஆனால், ருஷ்யாவில் ஒரே கட்சிதான் உண்டு; வேறு கட்சி களுக்கு இடமே கிடையாது. இந்த ஒரு கட்சி - சமதர்மக் கட்சி-சூத்திரதாரிபோல் இருந்து அரசாங்கத்தை நடத்துகிறது. ஆனால், அரசாங்கம் வேறே; கட்சி வேறே. இந்தக் கட்சி, ஜனங்களுடைய ஆரவாரத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற கட்சி யல்ல; ஜனங்களோடு ஒன்றுபட்ட, ஜனங்களுக்கு வழிகாட்டுகிற கட்சி. இந்தக் கட்சியினர் அரசியலைப் பொழுது போக்காகக் கொள்பவர்கள் அல்லர்; தினசரி வாழ்க்கையோடு ஒட்டியதுதான் அரசியல் என்பதை நிரு பித்துக் காட்டுகிறவர்கள்.

9. விஞ்ஞானத்திற்கு சோவியத் அரசாங்கம் கொடுத் திருக்கிற முக்கியத்துவமும் மதிப்பும் மாதிரி வேறெந்த நாக ரிக அரசாங்கமும் கொடுக்கவில்லை. பொதுவாக, முதலாளித் துவ நாடுகளில் லாபம் சம்பாதிப்பதற்கு இடையூறில்லாத வரையில், விஞ்ஞான ஆராய்ச்சிக்கு அதிகமான ஆதரவு காட்டப் படுகிறது. அப்படி இடையூறு ஏற்படு மென்று தெரிந்தால், அந்த ஆராய்ச்சி அலட்சியம் செய்யப்படுகிறது; அதிகாரபலத்தின் துணைகொண்டு மறைமுகமாக எதிர்க்க வும் படுகிறது. சோவியத் ருஷ்யாவிலோ பொதுஜனங்க ளுக்கு எது தேவை, எதனால் அதிகமான சாதகம் உண்டா கும் என்ற பொது நோக்கத்தைக் கொண்டுதான் விஞ்ஞான ஆராய்ச்சி நடைபெறுகிறது. இதற்காக, அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து ஏராளமான பணம் செலவழிக்கப் படுகிறது. விஞ்ஞானத்தின் புதுமைகளைக் காண்பதிலே எல்லா ஜனங்களும் ஒரே மாதிரியான உற்சாகங் காட்டு கிறார்கள்.

10. விஞ்ஞான ஆராய்ச்சிக்கு எட்டாத ஒரு சக்தி — அந்தச் சக்தியை அமானுஷ்ய சக்தியென்று சொன்னாலும் சரி, கடவுள் என்று அழைத்தாலும் சரி - இருக்கிறதென்று சொல்லப்படுவதை சோவியத் தலைவர்கள் நிராகரிக்கிறார்கள். உலகத்தில், சிறப்பாகக் கிறிஸ்துவ ஐரோப்பாவில், ருஷ்யா

வைப்பற்றி ஒரு தப்பபிப்பிராயம் ஏற்பட்டிருப்பதற்கு இஃதொரு முக்கிய காரணமாயிருக்கிறது. ஆனால், சோவியத் தலைவர்களுடைய நோக்கம் என்ன வென்றால், மதம் என்னும் கவசத்தை அணிந்துகொண்டு, மனிதனை மனிதன் சுரண்டுவதும், மனிதனை மனிதன் அடிமைப் படுத்துவதும் கூடாது என்பதுதான். கடவுள்மீது நம்பிக்கையைப் போட்டு விட்டு, மனிதர்கள் தன்னம்பிக்கை இழந்து கிடப்பதை, சோவியத் தலைவர்கள் விரும்பவில்லை. மனிதனுடைய அறிவைக்கொண்டு செய்யவேண்டிய காரியங்களுக்கு, மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நிறைவேற்ற வேண்டிய கடமைகளுக்கு, காணாத கடவுளைக் கைகொட்டி அழைப்பானேன்? பாவத்தைச் செய்துவிட்டு, பாவமன்னிப்புக் கேட்பதைக் காட்டிலும், பாவமே செய்யாதிருந்துவிட்டால் நல்லதல்லவா? இந்த மாதிரியாகத்தான் சோவியத் தலைவர்கள் கேட்கிறார்கள். பொதுவாகச் சொல்லப்போனால், முதலாளித்துவ நாடுகளில் எப்படி நாஸ்திகத்திற்குச் செல்வாக்கில்லையோ அப்படியே, சோவியத் ருஷ்யாவில் ஆஸ்திகத்திற்குச் செல்வாக்கில்லை. இதற்காக, தனிப்பட்டவர்களுடைய மத உரிமைகளில் அரசாங்கம் தலையிடுகிற தென்பது இல்லை. மதம் என்பது அவரவருடைய சொந்த விஷயம். அதைக் கொண்டு அரசியலிலோ சமுதாயத்திலோ செல்வாக்குப் பெறக்கூடாது; உரிமையைக் கோரக்கூடாது என்பதுதான் சோவியத் தலைவர்களின் கருத்து. அந்தந்த மதத்தினருக்கும் உரித்தான தொழுகை ஸ்தலங்கள் எங்கும் இருக்கின்றன. யாரும் தங்கள் வீட்டுக்குள் தங்கள் பிள்ளைகளுக்கு மத உண்மைகளைச் சொல்லிக் கொடுக்கலாம். ஆனால், பள்ளிக்கூடங்களில் மதபோதனை கிடையாது. பாதிரி மார்கள், எல்லோரையும் போல் உழைத்துப் பிழைக்க வேண்டியவர்களே தவிர, வேறு எவ்வித விசேஷ சலுகைகளையும் எதிர்பார்க்கக் கூடாது. இவர்கள் பகிரங்கமாக மதப் பிரசாரம் செய்வதற்கு அநுமதிக்கப்படுவ தில்லை. சுருக்கமாகச் சொல்லப்போனால், சோவியத் அரசாங்கத்தார், மத உரிமை அளித்திருப்பதோடு, மதத்தினின்று விலகவும்உரிமை அளித்திருக்கின்றனர்.

11. சோவியத் நாகரிகத்தின் கீழ் வளர்கிற பிரதியொரு பிரஜையும் புதிய மனப்பான்மை கொண்டவனுகி விடுகிருன்; அதாவது புதிய மனிதனுகிருன். இப்படிப்பட்ட மனிதர்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்பதுவே தங்கள் நோக்கம் என்பதை சோவியத் தலைவர்கள் அடிக்கடி வெளிப் படுத்தி யிருக்கிருர்கள். இந்தப் புதிய மனிதனுடைய புதிய மனப்பான்மை என்ன? எந்த ஒரு மனிதனும், தான் எந்தச் சமுதாயத்தில் பிறக்கிருனே அந்தச் சமுதாயத்தினுடைய உதவியையும் ஆதரவையும் பெற்றே வளர்கிருன். அந்த விஷயத்தில் அவன் சமுதாயத்திற்குக் கடன் பட்டவனுகிருன். இந்தக் கடனை அவன், நன்ருக வளர்ச்சியடைந்த பிறகு, சமுதாயத்திற்குத் திருப்பிக் கொடுக்க வேண்டியவனுகிருன். எப்படி? சமுதாயத்திற்குச் சேவை செய்வதன் மூலமாக. சமுதாயத் தொண்டனுக இருந்து எவனொருவன் தன் சக்திக்குத் தகுந்தபடி இந்தச் சேவையைச் செய்யவில்லையோ அல்லது செய்ய மறுக்கிருனே, அவன் ஒரு திருடன்; கடனைத் தீர்க்காத குற்றவாளி. அவன் ஒரு திருடனைப் போலவே, குற்றவாளியைப் போலவே நடத்தப்பட வேண்டும். சமுதாயத்திலே அவனுக்கு அந்தஸ்தோ மதிப்போ கிடையாது. அப்படி அவன் அந்தஸ்தோ மதிப்போ பெறவேண்டுமானுல், சக்திக்குத் தகுந்தபடி, திறமைக்கேற்ற வண்ணம் உழைக்கவேண்டும். இப்படிப்பட்ட ஒரு மனப்பான்மை, பிரதியொரு பிரஜைக்கும் ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான், தாயின் கர்ப்பத்திலிருந்தே, குழந்தைப் பாதுகாப்புப் பொறுப்பை அரசாங்கத்தார் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். *

* "உன்னுடைய சகோதரர்கள் அவசியமான பொருள்கள் கூட இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்க, நீ உன்னுடைய தேவைக்கு மிஞ்சின பொருள்களை வைத்துக் கொண்டிருப்பாயானுல், மற்றவர்களுடைய பொருள்களை நீ அபகரித்து வைத்துக்கொண்டிருக்கிருய் என்பதுதான் அர்த்தம்" என்ற ஒரு பழைய கிறிஸ்துவ வாசகத்தையும், "யாரொருவர், தாங்கள் நியாயமாகச் செய்ய வேண்டிய வேலையைக் காட்டிலும் குறைவாகச் செய்துவிட்டு, அதே சமயத்தில் மற்றவர்களுடைய உழைப்பினின்று உண்டாகிற செல்

12. மற்ற நாகரிக அரசாங்கங்கள், பொருளைச் சம்பாதிப்பதிலும், சம்பாதித்த பொருளை ஜனங்களுடைய விருப்பு வெறுப்பையோ, நன்மை தீமையையோ அதிகமாகக் கவனியாமல் செலவழிப்பதிலுமே முனைந்திருக்கின்றன. ஆனால், சோவியத் அரசாங்கம், பொருளை உற்பத்தி செய்து அதனைச் சரியான முறையில் எல்லா ஜனங்களுக்கும் ஒரேமாதிரியான நன்மை உண்டாகக் கூடிய மாதிரி விநியோகிப்பதில் அதிகமாகக் கவனம் செலுத்துகிறது. *

13. மனிதனுடைய சுபாவம் எப்படிப்பட்டதென்றால், எப்பொழுதுமே உயர்ந்த விஷயங்களில் நம்பிக்கை கொள்ளும் தன்மையது. ஆனால், அப்படி உயர்ந்த விஷயங்கள் ஒன்றும் இல்லாத காலத்தில், பயனற்ற விஷயங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுகிறது. எனவே, சிறந்ததொரு சூழ்நிலையில் மனிதன் வைக்கப்படுவானாகில், அந்தச் சூழ் நிலையிலிருந்து அவன் சிறந்த பாடங்கள் கற்றுக் கொள்வதற்குப் போதிய சாதனங்களும் சந்தர்ப்பங்களும் அளிக்கப்படுவானாகில், பிரதியொரு மனிதனும் நிச்சயமாக வளர்ச்சியடையக் கூடும். இப்படிப்பட்ட சாதனங்களும் சந்தர்ப்பங்களும் இல்லாத காலத்தில்தான், அவன் மனித நிலையிலிருந்து மிருக நிலைக்கு இறங்கிவிடுகிறான். முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட நாகரிக நாடுகளில், சிறந்த சூழ் நிலையோ, சாதனமோ, சந்தர்ப்பமோ எல்லா மனிதர்களுக்கும் கிடைப்பதில்லை. இதனால் பெரும்பாலோர் போலி வாழ்க்கையில் பிரியமுடையவர்களாகவும், கீழான சந்தோஷத்தை அநுபவிக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள்.

---

வத்தில் தங்களுடைய முழுப்பங்கையும் கேட்கிறார்களோ அவர்கள் திருடர்கள்: அவர்களைத் திருடர்கள் போலவே நடத்தவேண்டும்" என்ற ஆங்கில அறிஞனாகிய பெர்னார்ட் ஷாவினுடைய வாக்கையும் இங்கு ஒப்புநோக்குக.

* "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

—குறள், அதி. 39.

ஆனால் சோவியத் நாகரிகத்தின் கீழ், பிரதியொரு மனிதனும் சிறந்ததொரு சூழ் நிலையிலேயே வசிக்குமாறு செய்யப்படு கிறான். போலி வாழ்க்கையை நடத்துவதற்கு அவனுக்குச் சந்தர்ப்பமே கிடையாது. உதாரணமாக, தேவையான பொருள்களைக் காட்டிலும் அதிகமான பொருள்களை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு அங்கு அதிகமான மதிப்புக் கிடையாது; அவைகளைக்கொண்டு மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் பாராட்டப்படுவதும் கிடையாது. சிறந்த பொருள்களை அநுபவிக்க வேண்டுமானால், அதற்காக நிறையப் பணம் செலவழிக்க வேண்டும் என்ற கருத்துக்கு அங்கு இடமே இல்லை. வாழ்க்கைஇன்பம் என்பதனை, சோவியத் பிரஜைகள் பார்க்கிற பார்வையே வேறானது: முதலாளித்துவ நாட்டினரால் எளிதில் பாராட்ட முடியாதது; ஏன், சுலபமாகப் புரிந்து கொள்ளவும் முடியாதது.

14. இன்றைய நாகரிகங்கள், லட்சியத்தை மறந்து விட்டுச் சாதனங்களின் மீது ஆதிக்கம் கொண்டிருக்கின்றன. இதனால்தான், எது நித்தியம், எது அநித்தியம், எது தேவை, எது தேவையல்லாதது என்பவைகளின் விஷயத்தில் பாகு படுத்திக் கொள்ளத் தெரியாமல், சுய அழிவைத் தேடிக் கொள்கின்றன. சோவியத் நாகரிகமோ லட்சியத்தையும் சாதனங்களையும் ஐக்கியப் படுத்திக்கொண்டு செல்கிறது. இந்த லட்சியந்தான் என்ன? எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்பது. எல்லோரும் என்று சொல்கிறபோது சுய ஜாதியாரை மட்டும், சுய நாட்டாரை மட்டும், சோவியத் தலைவர்கள் கருத்தில் கொள்வதேயில்லை. உலக மக்களை ஒரு தொகுப்பாகவே, ஒரு குடும்பமாகவே, அவர்கள் நோக்கு கிறார்கள். "சேர வாரும், செகத்தீரே!" என்பதுதான் அவர்களுடைய சங்கநாதம்.

15. முதலாளித்துவ நாகரிகங்கள் ஒற்றுமையி லிருந்து வேற்றுமையைக் காண்கின்றன. அதாவது ஒரே பாஷை, ஒரே மதம், ஒரே கலாசாரம் இவைகளையுடைய சமுதாயத் தினரை, பல்வேறு அங்கத்தினராகவும் பல்வேறு வகுப்பின

ராகவும் வேற்றுமைப் படுத்திப் பார்க்கின்றன. அந்த வேற்றுமைகளையே ஆதாரமாகக்கொண்டு சமுதாயத்தின் மீது ஆதிக்கம் செலுத்துகின்றன. சோவியத் நாகரிகமோ, வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்கிறது. பல்வேறு பாஷையினர், பல்வேறு மதத்தினர், பல்வேறு நாகரிக பரம்பரையினர் முதலியவர்களை, ஒரே சமுதாயத்தினராக்கி யிருக்கிறது; உரிமை, கடமை என்கிற விஷயங்களில், ஒரே தரத்தினராக்கி யிருக்கிறது. ஆனால், அதே சமயத்தில் அந்தந்த பாஷை, மதம், நாகரிகம் முதலியவற்றின் தனிமையை அங்கீகரித் திருக்கிறது; அவற்றின் வளர்ச்சிக்குத் துணை செய்கிறது.

சோவியத் ஆட்சிமுறை, சர்வாதிகார முறையைத் தழுவியதா யிருக்கிற தென்று சொல்லப் படுவதைப் பற்றிச் சில வார்த்தைகள். ருஷ்யாவில் யாருக்கும் எந்த விதமான அபிப்பிராயம் கொள்ளவும், கொண்ட அபிப்பிராயத்தைச் சொல்லவும் பரிபூர்ண உரிமையுண்டு. இங்ஙனம் சொல்லப்படுகிற அபிப்பிராயங்களை, அரசாங்கத்தார் புறக்கணிப்பதில்லை; அவைகளுக்கு உரிய மதிப்புக் கொடுக்கிறார்கள். உதாரணமாக, 1937-ஆம் வருஷம் ஒரு புதிய அரசியல் திட்டம் அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரப் பட்டதல்லவா? இந்தத் திட்டத்தின் நகலொன்றை முதன் முதலாகச் சமதர்மக் கட்சியினரும், சோவியத் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் சிலரும் சேர்ந்து தயாரித்து, பொது ஜன அபிப்பிராயத்திற்கு வெளியிட்டார்கள். எல்லோரும் இதனை நன்றாகப் படித்து ஒவ்வொரு பிரிவையும் அலசிப் பார்த்து அபிப்பிராயம் சொல்ல வேண்டு மென்பதற்காக, சுமார் ஆறுகோடிப் பிரதிகள் அச்சிடப் பெற்று விநியோகிக்கப் பெற்றன. இங்ஙனம் தனிப்பிரதிகளாக வழங்கப்பட்டது தவிர, சுமார் 370 லட்சம் சந்தாதார்களையுடைய ஆயிரம் பத்திரிகைகளில் இந்த அரசியல் திட்டம் முழுவதும் வெளியிடப் பட்டது.

பின்னர் இதைப்பற்றி ஒவ்வொரு தொழில் ஸ்தாபனத்திலும், ஒவ்வொரு கூட்டுப் பண்ணையிலும், நான்கு பேர் கூடுகிற ஒவ்வோர் இடத்திலும் வாதங்கள் நடைபெற்றன. இந்தத் திட்டத்தைப் பற்றி ஒவ்வொருவரும் நன்ருகத் தெரிந்துகொள்ள வேண்டு மென்பதற்காக, அரசியல் பண்டிதர்கள் வகுப்புகள் நடத்திஞர்கள். இந்தமாதிரியாக, மொத்தம் 5,27,000 கூட்டங்கள் நடைபெற்றன. இந்தக் கூட்டங்களில் ஏறக்குறைய 365 லட்சம் பேர் ஆஜரா யிருந்தார்கள். இப்படி ஆஜராயிருந்த ஒவ்வொருவரும் தங்களுக்குத் தோன்றிய அபிப்பிராயங்களேயும் திருத்தப் பிரேரணைகளேயும் எழுத்து மூலமாகத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருப்பதாக நினைத்து அப்படியே செய்தார்கள். மொத்தம் இந்தத் திட்டத்திற்கு 1,34,000 திருத்தப் பிரேரணைகள் அரசாங்கத்திற்குக் கிடைத்தன. இந்தத் திருத்தப் பிரேரணைகள் அனைத்தையும் அரசாங்கத்தார் பொறுமையாகப் பரிசிலனை செய்து, கொள்ளவேண்டியன வற்றைக் கொண்டும் தள்ளவேண்டியன வற்றைத் தள்ளியும், இறுதியாக மேற்படி திட்டத்தை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தனர்.

இங்ஙனமே ஐந்து வருஷத் திட்டங்கள் தயாரிக்கப் படுவதற்கு முந்தி, திட்டத்தில் சம்பந்தப்பட்ட அனைவருடைய அபிப்பிராயமும் கேட்கப்படுகிறது. அந்த அபிப்பிராயங்களைக் கொண்டுதான், மேற்படி திட்டங்கள் எந்தெந்த வகையில் சீர்திருத்தியமைக்கப்பட வேண்டுமோ அந்தந்த வகையில் சீர் திருத்தி யமைக்கப்பட்டு, பின்னரே நடை முறையில் கொணரப்படுகின்றன. இவை தவிர, எந்த ஸ்தாபனத்தில் என்ன விதமான குற்றங் குறைகள் இருந்தாலும், அவை உடனே அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன; பத்திரிகைகளில் பகிரங்கமாகப் பிரசுரிக்கப் படுகின்றன. இதற்காக யாரும் சங்கோஜப்படுவதோ வருத்தப்படுவதோ கிடையாது.

அவரவரும் தங்களுடைய குறைகளை உணர்ந்து சீர்திருத்திக்கொள்ள வேண்டுமென்பதற்காகவே, அரசாங்கத்தார் இந்த மாதிரியான பரிசீலனை முறைகளுக்கு ஆதரவு காட்டுகிறார்கள். யாராவது சமதர்மக் கொள்கையைப் பின்பற்றுவதாகச் சொல்லிக்கொண்டு அதற்கு நேர் விரோதமாக நடந்தாலும் சரி, அல்லது தங்களுடைய நியாயமான கடமையைச் செய்யாததன் காரணமாக அவர்களுடைய தொழில் ஸ்தாபனத்தில் முட்டுப்பாடு ஏற்பட்டாலும் சரி, இவை யெல்லாம் பத்திரிகைகளில் பகிரங்கமாக வெளி வந்து விடுகின்றன. சம்பந்தப்பட்டவர்கள், உடனே தங்களைச் சீர்திருத்திக் கொள்கிறார்கள்.

ஹிட்லரையும் முஸோலினியையும் எந்த அர்த்தத்தில் சர்வாதிகாரிகள் என்று அழைத்தார்களோ அந்த அர்த்தத்தில், ஸ்டாலினையோ அல்லது அவனுடைய ஸ்தானத்தில் வந்து அமரக்கூடிய வேறுயாரையுமோ ஒரு சர்வாதிகாரி யென்று அழைக்க முடியாது. ஸ்டாலின் தன் இஷ்டப்படிக்கு எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. அதற்கு சோவியத் அரசியல் சட்டத்தில் இடமேயில்லை. பொது ஜன அபிப்பிராயத்தைத் தழுவியும், அரசாங்கத்திலுள்ள தன் சகபாடிகளின் ஆலோசனையை அநுசரித்தும், அவன் காரியங்களைச் செய்கிறான். அதாவது மற்றவர்களுடைய விருப்பத்தை நடை முறையில் கொணர்வதற்கு, அவன் ஒரு கருவியாக இருக்கிறான். அவ்வளவுதான். எமில் லட்விக் என்ற ஒரு பிரபல ஆசிரியன், ஒரு சமயம் ஸ்டாலினைப் பார்த்து "சோவியத் ராஜ்யத்தில் அரசாங்கக் காரியங்கள் சுயேச்சாதிகார முறையிலேயே நடைபெறுகின்றன என்பது உண்மைதானா" என்று கேட்டதற்கு, ஸ்டாலின் கூறிய பதில் இங்குக் குறிப்பிடத் தக்கது: "அப்படியில்லை. தனிப்பட்ட நபர்கள் எந்த ஒரு தீர்மானத்திற்கும் வர முடியாது. அப்படி அவர்கள் செய்கிற தீர்மானங்கள் ஒருதலைச் சார்புடையனவாகவே இருக்கின்றன.

யாருடைய அபிப்பிராயங்களுக்கு நாங்கள் மதிப்புக் கொடுக்கவேண்டுமோ அப்படிப் பட்டவர்கள் எங்களுடைய ஒவ்வொரு ஸ்தாபனத்திலும் இருக்கிறார்கள். எங்களுடைய சமதர்மக் கட்சியின் நிருவாகக் கமிட்டியில் மொத்தம் சுமார் எழுபது அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் வல்லுநர். இதனால் எங்களுடைய கட்சியின் அறிவெல்லாம் இந்த நிருவாகக் கமிட்டியினிடத்தில் ஏகோபித்துத் தங்கியிருக்கிறதென்று சொல்லவேண்டும். இவர்கள் எந்த ஒரு விஷயத்தையும் நன்றாகப் பரிசீலனை செய்து பார்த்த பிறகுதான், அஃது அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப் படுகிறது.''

இவைகளை யெல்லாம் தெரிந்துகொண் டிருக்கிறவர்கள், ருஷ்யாவில் சர்வாதிகார ஆட்சிமுறை நடைபெறுகிறதென்று எப்படித் துணிந்து கூறுவார்கள்? ஆனால், இங்கே ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். அதாவது ருஷ்யாவில் எந்த ஒரு திட்டமோ சட்டமோ அமுலுக்கு வந்துவிட்ட பிறகு, அதைப்பற்றி விரோதமான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கோ, விரோதமான காரியங்களைச் செய்வதற்கோ யாருக்கும் உரிமை யில்லை. அதைப்பற்றி ஜனங்களிடத்தில் ஒருவிதத் தோல்வி மனப்பான்மையை யாரும் உண்டுபண்ணக்கூடாது. வெற்றிகரமாக ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமானால், மத்தியில் முணு முணுப்புகள், உட் பூசல்கள், கருத்து வேற்றுமைகள் முதலியன ஒன்றுமே இருக்கக்கூடாதென்பது சோவியத் தலைவர்களின் உறுதியான அபிப்பிராயம்.

சோவியத் ராஜ்யத்தில், சம்மட்டி யடிக்கிறவனுக்கும், மின்சார யந்திரத்தை இயக்குகிறவனுக்கும், பத்திரிகாசிரியனுக்கும், எல்லோருக்கும் ஒரேமாதிரியான கூலி விகிதம் என்றும், இதனால் மனிதனுடைய செயலாற்றுந் திறனுக்குச் சந்தர்ப்பமே இல்லாமற்போய்விடுகிற

தென்றும் சில இடங்களில் பிரசாரம் செய்யப்படுகிறது. இது முற்றிலும் தவறு. அவரவருடைய உழைப்புக்கும் திறமைக்கும் தகுந்தவாறுதான், கூலி விகிதமோ சம்பள விகிதமோ நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பிறக்கிறபோது எல்லா மனிதர்களும் ஒரே மாதிரியான உரிமையோடு பிறந்தார்களாதலினால், எல்லோருக்கும் ஒரே மாதிரியான ஊதியமே கிடைக்கவேண்டுமென்பது மார்க்ஸின் கோட்பாட்டுக்கே விரோதம். ஸ்டாலின் இதனை ஓரிடத்தில் பின்வருமாறு விளக்கப்படுத்திச் சொல்கிறான்:—

"சமுதாயத்தைச் சேர்ந்த எல்லா அங்கத்தினர்களுடைய தேவைகளையும் அவர்களுடைய சொந்த வாழ்க்கையையும் ஒரே மட்டத்திற்கு உட்படுத்தி விடுவதுதான் அபேதவாதம் என்று சிலர் நினைக்கிறார்கள். இந்த மாதிரியான அபிப்பிராயத்திற்கும், மார்க்ஸீயம், லெனினிஸம் என்று சொல்லப்படுகிற சித்தாந்தங்களுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. சமத்துவம் என்று சொன்னால், எல்லோருடைய சொந்தத் தேவைகளையும் சொந்த வாழ்க்கையையும் ஒரே மாதிரியாக்கி விடுவதல்ல; சமுதாயத்தில் வர்க்கப் பிரிவினைகள் என்று சொல்லப் படுகிற ஏற்றத் தாழ்வுகள் இல்லாமற் செய்துவிடுதல் என்பதே அர்த்தம். அதாவது (அ) சுரண்டப் படுவதினின்று எல்லா உழைப்பாளிகளையும் ஒரே மாதிரியாக விடுதலை செய்வித்தல்; (ஆ) பொருளுற்பத்திக்கான சாதனங்களை எல்லாருக்கும் ஒரே மாதிரியாக உபயோகப் படக்கூடிய வண்ணம் தேசிய சொத்தாக்கி விடுதல்; (இ) திறமைக்குத் தகுந்தபடி உழைப்பது என்பது எல்லோருக்கும் ஒரே மாதிரியான கடமையாயிருத்தல்; அப்படியே உழைப்புக்குத் தகுந்த கூலி பெறுவதென்பது எல்லோருக்கும் ஒரே மாதிரியான உரிமையாயிருத்தல் - (இதுவே அபேதவாத சமுதாயம்); (ஈ) திறமைக்குத் தகுந்தபடி உழைத்து தேவைக்குத் தகுந்தபடி கூலி பெறும் விஷயத்தில், எல்லோருக்கும் ஒரே மாதிரியான உரிமை இருத்தல். (இதுவே சமதர்ம சமுதாயம்). சமுதாயமானது அபேதவாத நிலையிலிருக்கிற

பொழுதாகட்டும், சமதர்ம நிலையிலிருக்கிற பொழுதாகட்டும், ஜனங்களுடைய திறமைகளும் தேவைகளும், தன்மையிலோ எண்ணிக்கையிலோ ஒரே மாதிரியாக இருக்க முடியாது என்கிற அடிப்படையான தத்துவத்திலிருந்துதான் மார்க்ஸீயம் தொடங்குகிறது.''

எனவே, ருஷ்யாவில் கூலி வித்தியாசம், சம்பள வித்தியாசம் முதலிய எல்லாம் உண்டு. உழைப்புக்கும் திறமைக்கும் தகுந்தபடியே அங்கு ஒவ்வொருவரும் சம்பாதிக்கிறார்கள்.

மேலே எடுத்துக் காட்டப்பட்ட மேற்கோளில், அபேதவாத சமுதாயம் என்றும் சமதர்ம சமுதாயம் என்றும் இரண்டுவித சமுதாய அமைப்புகள் கூறப்பட்டிருக்கின்றன அல்லவா? அதாவது அபேதவாதம் என்பது சோஷலிஸம்; சமதர்மம் என்பது கம்யூனிஸம். இந்த சோஷலிஸத்திற்கும் கம்யூனிஸத்திற்கும் உள்ள வித்தியாசத்தைத் தெளிவுபடத் தெரிந்துகொள்ளுதல் நல்லது. உழைப்புக்குத் தக்கபடி ஊதியம் பெறுவது சோஷலிஸம்; தேவைக்குத் தகுந்தபடி ஊதியம் பெறுவது கம்யூனிஸம். இரண்டிலும் உழைப்பு ஒன்று தான். ஆனல், முன்னதில் உழைப்பு முக்கியத்துவம் பெறுகிறது; பின்னதில் தேவை முக்கியத்துவம் பெறுகிறது. கம்யூனிஸம் என்பது மேல்படி; சோஷலிஸம் என்பது கீழ்ப்படி. ஸ்டாலினுடைய அபிப்பிராயத்தில் ருஷ்யாவில் இப்பொழுது சோஷலிஸமே நிலவுகிறது. அதாவது உழைப்புக்கும் திறமைக்கும் தகுந்தபடிதான் அங்கு ஊதியம் கிடைக்கிறது. தேவைக்குத் தகுந்தபடி சம்பாதித்துக்கொண்டு திருப்தி யடைவது என்ற நிலை இன்னும் அங்கு வரவில்லை.

சோவியத் ராஜ்யத்தில் தனிச் சொத்துரிமை கிடையாது என்று சொல்வது சரியில்லை. அங்கே யாரும் தங்களுடைய உழைப்பைக்கொண்டு சம்பாதித்து ஆஸ்தி பாஸ்திகள் சேர்க்கலாம்; நில புலங்கள் வாங்கலாம்.

இந்த உரிமை, சட்ட பூர்வகமாக அங்கீகரிக்கப்பட் டிருக் கிறது.

> "வேலை செய்து சம்பாதிக்கிற பணம், அந்தப் பணத்தி லிருந்து பிடிக்கிற மிச்சம், வசிக்கிற வீடு, வேளாண்மைக்கு வேண்டியிருக்கிற கருவிகள், குடும்பச் சாமான்கள், சொந்த உபயோகத்திற்காகவும் சௌகரியத்திற்காகவும் தேவையா யிருக்கிற பொருள்கள், இந்தச் சொத்துக்களை அநுபவிக்கிற விஷயத்தில் வாரிசு பாத்தியம் முதலியவை சம்பந்தமான உரிமைகள்—அதாவது தனிச் சொத்துரிமை—சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்படுகிறது." —10-ஆவது பிரிவு.

இந்தத் தனிச் சொத்துரிமையைக் கொண்டு யாரும் யாரையும் சுரண்டவோ அடிமைப்படுத்தி வேலை வாங்கவோ கூடாது; யாரும் இந்தப் பாத்தியதையைக் கொண்டு சமுதாயத்திற்கு விரோதமாக நடந்துகொள்ளக் கூடாது. இந்தக் கண்டிப்பான நிபந்தனைகளுடன், தனிச் சொத்துரிமையானது சோவியத் ருஷ்யாவில் பரி பூரணமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

சோவியத் ராஜ்யத்தில், சட்டத்திற்கு அஞ்சி ஒரு காரியத்தைச் செய்வது என்பது கிடையாது. ஒழுங்காக நடந்து கொள்வதும், ஒழுக்கமாக வாழ்வதும், அவரவர்க ளுடைய சுபாவத்திலேயே அமைந்திருக்கின்றன. பிறர் மீது வைத்த கருணையினாலோ அல்லது நான்கு பேருடைய வற்புறுத்தலுக்காகவோ, அங்கு யாரும் தொண்டு செய்வ தில்லை. சேவை யென்பது அன்றாட வாழ்க்கையோடு ஒட்டி வளர்கிற ஒரு பண்பு; ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய இன்றியமையாத கடமை. "ஒரு நாளைக்கு ஒரு நன்மையைச் செய்ய வேண்டும்" என்கிற வாசகம் அங்கு ஏட்டளவோடு நிற்கவில்லை; நித்தியக் கடன்களில் ஒன்றாகவே அது நிலைத்து நிற்கிறது. தவிர, பிரதியொரு சோவியத் பிரஜையும் சமுதாயத்திற்காகவே தான் வாழ்வ

தாக நினைக்கிறான். தான் உண்பது, உடுப்பது, உழைப்பது முதலியன, சமுதாயத்தை எவ்வளவு தூரம் பாதிக்கும் அல்லது அதற்கு எவ்வளவு தூரம் நன்மை உண்டாக்கும் என்பதை அடிக்கடி யோசிக்கிறான். எப்படிப் பிரதியொரு தாயும், பிள்ளைகளைப் பெறுவது சமுதாய நலனுக்காக என்று கருதுகிறாளோ அதைப்போலவே பிரதியோர் ஆண்மகனும், சுத்தமான வாழ்க்கையை நடத்துவதும், தினசரி விவகாரங்களில் நாணயமாகவும், கண்ணியத்துடனும் நடந்துகொள்வதும் சமுதாய நலனுக்காக என்று கருதுகிறான். தனி மனிதர்களுடைய நடவடிக்கைகளைக் கொண்டுதானே ஒரு சமுதாயம் மதிப்பிடப் படுகிறது?

உதாரணமாக, மாஸ்கோ நகரத்தில் இருக்கும் பூமிக்குக் கீழோடும் ரெயில் பாதை (இதற்கு மெட்ரோ என்று பெயர்) எப்படி நிர்மாணிக்கப்பட்டது என்பதை நாம் சிறிது ஆராய்ச்சி செய்து பார்த்தோமானால், பெரிதும் ஆச்சரியப்பட்டுப் போவோம். இந்த மெட்ரோவைப் பற்றி ஒவ்வொரு ருஷ்யனும் பெருமையோடு பேசுவான். ஏனென்றால், பிரதியொரு ருஷ்யனுடைய உழைப்பும் இதில் கலந்திருக்கிறது. அவரவரும் தங்கள் காரியாலயங்களில் உழைத்துவிட்டு, சாயந்திர வேளைகளில் தினசரி இரண்டுமணி நேரமோ மூன்றுமணி நேரமோ இந்த மெட்ரோ கட்டப்படும் இடத்திற்கு வந்து உழைப்பார்கள். இதற்குக் கூலியோ சன்மானமோ கிடையாது. "இந்த மெட்ரோவைக் கட்டிமுடித்தால், போக்குவரத்துக்குச் சௌகரியமாயிருக்கும்; பொதுவாக ருஷ்யாவுக்கு, சிறப்பாக மாஸ்கோ நகரத்திற்கு, இஃதொரு புதுமை; பெருமை. இந்தப் புதிய, பெருமையுள்ள தொண்டில் நாம் ஈடுபட்டுப் பெருமையடைய வேண்டும்." இந்த மாதிரியான எண்ணத்தோடுதான், மாஸ்கோ வாசிகள் இந்த மெட்ரோவைக் கட்டும் வேலையிலே ஈடுபட்டார்கள்.

பொதுவாக, ருஷ்யாவில் சுதேசிய உணர்ச்சி நன்ருக வேரூன்றி யிருக்கிறது. "இதோ பார்த்தீர்களா, எங்கள் ருஷ்யாவில் செய்த மோட்டார்; எங்கள் லெனின்கிராட் நகரத்தில் நெய்யப்பட்ட துணி" என்று ஒருவித சந்தோஷத்தோடு, தற்பெருமையோடு எல்லோரும் சொல்லிக் காட்டுவார்கள். "இப்பொழுது நாங்கள் ஆகாய விமானங்களை வெளிநாடுகளிலிருந்து வரவழைப்பதில்லையே; எல்லாவற்றையும் இப்பொழுது எங்கள் நாட்டிலேயே தயார் செய்து கொள்கிருேம்" என்று ருஷ்யர்கள் எவ்வளவு திருப்தியோடு சொல்லிக் கொள்கிருர்கள்!

சோவியத் ருஷ்யாவில் காணப்படுகிற ஒரு முக்கியமான விசேஷம் என்னவென்ருல், ஜனங்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் உள்ள நெருங்கிய தொடர்புதான். மந்திரிமார்கள், "ஜனங்களுடைய காரியங்களைச் செய்கிறவர்கள்" என்று தங்களைச் சொல்லிக்கொள்வதற்கு இயைந்தாற் போலவே நடந்து கொள்கிருர்கள். காட்சிக் கெளியராய், கடுஞ்சொல் அல்லராய், மக்களின் குறைகளை நேரில் விசாரித் தறிந்து வேண்டுவன செய்வது தங்கள் கடமை யென்று அவர்கள் கருதுகிருர்கள். தற்போதைய சோவியத் அரசாங்கத்தின் தலைவனை காலினின், ஜனங்களோடு எப்படி நெருங்கிப் பழகுகிருன் என்பதைப்பற்றி ஒருவன் பின்வருமாறு குறிப்பிடுகிருன் :—

"சோவியத் ஆட்சி முறையின் விசேஷ அமிசம் என்னவென்ருல், அரசாங்கத்தை ஜனங்களுக்குச் சமீபத்தில் கொண்டு வைப்பதுதான். காலினின் எல்லா விவகாரங்களையும் தானே நேரில் கவனிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிருன். அவன் ஒரு விவசாயியாக இருந்தவன். இதனுல், ஜனங்களை, தானே கண்டு பேசுவதில் திருப்தியடைகிருன். விசாலமான சோவியத் ராஜ்யத்திலுள்ள ஒவ்வொருவனும், தனக்கு ஏதாவது குறையிருந்தால், காலினினை நேரில்போய்ப்

பார்த்தால் போதும், பரிகாரம் கிடைத்துவிடும் என்று கருது கிருன்."

சுருக்கமாகச் சொல்லப்போனல், ருஷ்யாவில், அரசாங்கம் ஜனங்களை நாடி வருகிறது; ஜனங்கள் அரசாங்கத்தை நாடிச் செல்வதில்லை.

சோவியத் தலைவர்கள், இங்ஙனம் காட்சிக்கெளியராய் இருப்பதோடல்லாமல், எளியவாழ்க்கையை, அதாவது ஆடம்பரமற்ற, சாதாரண வாழ்க்கையை நடத்துகிருர்கள்; அப்படி நடத்துவதிலே சந்தோஷமும் பெருமையும் அடைகிருர்கள். ஓர் அமெரிக்க ஆசிரியன் கூறுவதைக் கேளுங்கள் :—

"ராஜ்யத்தின் தலைவர்களா யிருக்கிறவர்கள் ஏழைகளாகவே இருக்கிருர்கள். அவர்கள் இறந்து போகிறபோது, எந்த விதமான ஆஸ்தியையும் வைத்து விட்டுப் போக முடியாது. அவர்கள் நாணயஸ்தர்கள்; உலக சுகங்களை அநுபவிக்க வேண்டும் என்ற ஆசை இல்லாதவர்கள்......தலைவர்களில் பெரும்பாலோர் இரண்டு அல்லது மூன்று அறைகளுள்ள சிறிய வீட்டில்தான் வசிக்கிருர்கள். எந்த உத்தியோகஸ்தருக்கும் சுமார் இருநூற்றைம்பது ரூபாய்க்கு மேல் சம்பளம் கிடையாது."

சாதாரணமாக, எல்லாத் தலைவர்களும் சொந்த சௌகரியத்திற்காக ஒரே ஒரு வேலையாளை மட்டும் வைத்துக் கொண்டிருக்கிருர்கள். இவர்களுடைய மனைவிமார்கள், தங்களுடைய கணவன்மாருடைய அதிகார பதவியைச் சாதகமாகக்கொண்டு, வீட்டிலேயே சோம்பேறித் தனமாக உட்கார்ந்திருக்க முடியாது; எல்லோரையும் போல் இவர்களும் ஏதேனும் ஒரு தொழிலில் ஈடுபட்டு வேலை செய்யவேண்டும். இதில் எவ்விதச் சலுகையும் கிடையாது.

சோவியத் தலைவர்கள் பொதுவாக எதிலும் ஒரு தீவிரத்தை விரும்புவதில்லை; அநுஷ்டிப்பதுமில்லை. அப்

படியே, ஆபத்து வந்த பிறகு சமாளிப்பதைக் காட்டிலும் அது வராமலிருக்க என்ன வழி யென்பதை யோசித்து அதற்கான தடுப்பு முறைகளைக் கையாள்கிறார்கள். கடுமையான துறவு அல்லது கேவலமான சிற்றின்பம், அஜீர்ணம் அல்லது பட்டினி, மூர்க்கத்தனம் அல்லது கோழைத்தனம் ஆகிய இப்படிப்பட்ட நேர்மாறான தீவிர நிலைமைகள் உண்டாகாதவாறு பொது விவகாரங்களை நடத்தி வருகிறார்கள். வியாதிக்கு மருந்து சாப்பிடுவதைக் காட்டிலும் வியாதி வராமலிருக்குமாறு நடந்துகொள்ளுதல் நல்லது; கர்ப்பத்தடை முறையைக் காட்டிலும் புலனடக்கம் சிறந்தது. இப்படிப்பட்ட கோட்பாடுகளையே, சமுதாய வாழ்வில் கொண்டு புகுத்தி யிருக்கிறார்கள். ஆக, சோவியத் தலைவர்கள், தங்களுடைய அதிகார பதவிகளை, சிறந்த முறையில் சேவை செய்வதற்கான ஒரு பீடமாகவே கொண்டிருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

சோவியத் ருஷ்யாவில் காணமுடியாத அமிசங்கள் பல: (1) விபசார வழக்குகள், விவாக ரத்துகள் முதலியவைகளைப் பற்றின பத்திரிகைச் செய்திகள்; (2) போலி மருந்துகள், சிற்றின்பக் கருவிகள், சிற்றின்ப நூல்கள் முதலியவைகளைப் பற்றின விளம்பரங்கள்; (3) கலப்படமுள்ள சரக்குகளின் விற்பனை; (4) வியாபாரத்தில் பேரம்; (5) வியாபாரச் செழிப்பு அல்லது வியாபார மந்தம்; (6) குதிரைப் பந்தயம், போட்டிப் பந்தயம் முதலிய ஆசையை வளர்க்கும் தூண்டுகோல்கள்; (7) தரகர்கள், வேலையில்லாதவர்கள், சோம்பேறிப் பணக்காரர்கள், திக்கற்ற பரதேசிகள் முதலியோரின் கோஷ்டிகள் ஆகிய இவைகளை ருஷ்யாவில் பார்க்க முடியாது.

பொதுஜன சேவை செய்கிறவர்களை மேன் மேலும் உற்சாகப்படுத்தும் பொருட்டு, கௌரவப் பட்டங்கள் வழங்குவதை எல்லா நாட்டினரும் தொன்றுதொட்டு

அநுசரித்து வருகிறார்கள். இந்த வழக்கத்தை, சோவியத் அரசாங்கத்தாரும் பின்பற்றி வருகின்றனர்; சமுதாயத் தொண்டர்களைப் பலவிதமாகக் கௌரவப்படுத்தியும் ஊக்கியும் வருகின்றனர். இந்தக் கௌரவப் பட்டங்களில் முக்கியமானவை மூன்று: (1) ஆர்டர் ஆப் லெனின், (Order of Lenin) (2) தி ரெட்பான்னர் ஆப் டாயில், (The Red Banner of Toil) (3) ஆர்டர் ஆப் தி ரெட் ஸ்டார் (Order of the Red Star). இந்தக் கௌரவப் பட்டங்கள் பெற்றவர்கள், உபகாரச் சம்பளமாக ஒரு சிறு தொகையை வருஷந்தோறும் பெறுவதற்கும், சில இடங்களுக்கு இலவசமாகப் பிரயாணம் செய்வதற்கும், இவை போன்ற வேறு சில சௌகரியங்களைப் பெறுவதற்கும் உரியவர்கள்.

## 14. நீதியின் தீர்ப்பு

சுதந்திரத்தோடிருப்பது என்பது சுலபமல்ல; அதனைச் சம்பாதிப்பதற்காக எவ்வளவு தியாகங்களைச் செய்ய வேண்டியிருக்கிறதோ அவ்வளவு தியாகங்களை அதனைக் காப்பாற்றுகிற வகையிலும் செய்து கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. அடிமைத் தனத்தின் நிழலிலே நாம் தூங்கிக்கொண்டிருக்கலாம்; நம்மைச் சீந்துவார் யாரும் இருக்கமாட்டார்கள். ஆனல் சுதந்திரத்தின் நிழலிலே நாம் எப்பொழுதும் விழிப்புடன் இருக்கவேண்டும். நாம் தூங்கிவிட்டோமா என்று நம்மை எல்லோரும் அடிக்கடி எச்சரிக்கை செய்துகொண் டிருப்பார்கள். ஒரு சந்தர்ப்பத்திலே தொட்டுப்பார்ப்பார்கள்; இன்னெரு சந்தர்ப்பத்திலே தட்டியும் கொடுப்பார்கள். இவை யனைத்திற்கும் வசப்படாமல் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதாகிற காரியத்திலேயே நாம் கண்ணு யிருக்கவேண்டும். அப்பொழுதுதான் அந்தச் சுதந்திரம் நம்மைவிட்டு அகலாமல் இருக்கும்.

இந்த உண்மையை ருஷ்ய மக்களுக்கு நன்ருக வலியுறுத்திச் சொல்லிவிட்டுப்போ யிருக்கிருன் மகா புருஷனை லெனின். சோவியத் ஆட்சி ஏற்பட்டபிறகு, ருஷ்யா எந்தப் போர் முகத்திலும் புறமுதுகு காட்டியது கிடையாது. அதனை எதிர்த்து வந்த சக்திகளோ அனந்தம். ஆனல் அவையனைத்தையும் அது மலையாகத் தடுத்து நின்றிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? அது விழிப்புடன் இருந்துகொண்டிருந்ததுதான்.

ருஷ்யாவின்மீது ஜெர்மனி போர் தொடுத்த காலத்தில், ஜெர்மனியின் ராணுவ சக்தியைக் கண்டு உலகம் பிரமித்துப் போயிருந்தது. அப்படிப் பிரமித்துப் போகக்கூடிய மாதிரி ஜெர்மனியின் பிரசார முறைகள் இருந்தன. ஆனல்

ருஷ்யாவின் படை பலத்தைப் பற்றி, அதன் எதிர்ப்புச் சக்தியைப் பற்றி, உலகத்திற்கு அதிகமாகத் தெரியவில்லை. சோவியத் அரசாங்கத்தார், தங்களைப் பற்றிப் படாடோபமாக விளம்பரப் படுத்திக் கொள்ளவும் விரும்ப வில்லை. எந்த விதமான ஆபத்தையும் எதிர்த்து நிற்கக் கூடிய மாதிரியாகத் தங்கள் நாட்டைத் தயார்ப் படுத்திக்கொண்டிருந்தார்களாயினும், அதைப் பற்றி அதிகமாக வெளியிலே பிரஸ்தாபிக்க வில்லை. எனவே ஜெர்மனி, ருஷ்யாவின் மீது படையெடுத்தபோது, மூன்றே வாரத்திற்குள் ருஷ்யா விழுந்து விடும் என்றுதான் ராணுவ நிபுணர்கள் உள்ளிட்ட பெரும்பாலோர் எதிர் பார்த்தார்கள். "வெண்ணெய்க் குள்ளே எப்படி ஒரு கத்தியானது சுலபமாகப் பிரவேசிக்கிறதோ அதைப்போல் ருஷ்யாவுக்குள் ஜெர்மன் சேனை பிரவேசிக்கும்" என்று வேடிக்கையாகப் பேசிக் கொண்டவர் பலர். ஆனால் ருஷ்யாவின் பூகோள அமைப்பு, அதன் சரித்திரம், ருஷ்யர்களுடைய சுபாவம், அவர்களுடைய தேசீய உணர்ச்சி, தாய் நாட்டு மண்ணின் மீது அவர்கள் கொண்டிருக்கும் குன்றாத பக்தி முதலியவைகளை யெல்லாம் அறிந்தவர்கள், ருஷ்யா சுலபமாகத் தலை வணங்கிக் கொடுத்துவிடுமா என்று கேட்டார்கள்; கொடுத்து விடாது என்று நிச்சயமாக நம்பினார்கள். இவர்களுடைய நம்பிக்கைதான் கடைசியில் நிறைவேறியது. ஆனால் இப்படி நம்பியவர், யுத்த ஆரம்ப காலத்தில் ஒரு சிலராகவே இருந்தனர்.

போர் தொடுப்பதற்கு முன்னர் அநுசரிக்க வேண்டிய எந்த நியமங்களையும் ஜெர்மனி, ருஷ்யா விஷயத்தில் அநுசரிக்க வில்லை. எவ்வித முன்னறிவிப்பும் இல்லை; முன்னெச்சரிக்கையும் செய்ய வில்லை; ருஷ்யாவின் மீது தனக்குக் குறைகள் இருப்பதாகச் சொல்லி அந்தக் குறைகளுக்குப் பரிகாரம் தேடித் தர வேண்டுமென்று கேட்கவுமில்லை. 1941-ஆம் வருஷம் ஜூன் மாதம் இருபத்திரண்

டாங்தேதி யுத்தம் தொடங்கப் பட்டதல்லவா, இதற்கு இரண்டு நாள் முன்னர்தான்—ஜூன் மாதம் இருபதாந் தேதி—ருஷ்யாவிலுள்ள ஜெர்மன் தூதரான கவுண்ட் வான் ஷூலென் பெர்க்கும், ருஷ்யாவின் அந்நிய நாட்டு மந்திரியாகிய மோலோடோவும் மாஸ்கோ நகரத்தில் நடை பெற்ற ஒரு விருந்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள். பரஸ்பரப் புகழுரைகள், கைகுலுக்குகள் எல்லாம் இந்த விருந்தில் நடைபெற்றன. ஆனால், நாளை நின்று மறுநாள் ஒரு கோர யுத்தம் இரண்டு நாடுக்குமிடையே ஏற்படப் போகிற தென்பதற்கான எவ்வித சூசகமும் இந்த விருந்தில் தென்பட வில்லை!

இதனால், ஜெர்மனி, ருஷ்யாவின் மீது படை யெடுத்ததைக் கேட்டு உலகம் ஆச்சரியப் பட்டுப் போய்விட்டது. இரண்டு நாடுகளும் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்து கொண்டு இன்னும் இரண்டு வருஷங்கள் கூட ஆகவில்லை யல்லவா?* ருஷ்யா, விழிப்புட னிருந்ததாயினும், ஜெர்மனி இந்த மாதிரி திடீரென்று போர் தொடுக்கும் என்று எதிர் பார்க்க வில்லை. உலகம் ஆச்சரியப் பட்டதைப்போல், ருஷ்யா, ஆரம்பத்தில் சிறிது அதிர்ச்சி யடைந்தது என்றே சொல்ல வேண்டும்; ஆனால் சில நாட்களுக்குள் தன்னைச் சமாளித்துக் கொண்டு விட்டது.

ஜெர்மனி, ருஷ்யா மீது போர் தொடுத்த காலத்தில், ஐரோப்பாவின் பெரும்பகுதி, ஜெர்மனியின் அதிகார பலத்திற்குத் தலை வணங்கி விட்ட தென்று ஏற்கனவே சொல்லி யிருக்கிறோம்.† பிரிட்டன் மட்டும் தலை வணங்க வில்லை. இதற்காக ஹிட்லர் கவலை கொள்ளவு மில்லை. பிரிட்டனுடைய எதிர்ப்புச் சக்தியை அவன் மிகவும் அலட்சியமாகவே கருதினான். பிரிட்டனைத் தலை தூக்க முடியாமல் வெடி குண்டுகளால் அடித்து விட்டோ

* 217-219-ஆம் பக்கங்கள் பார்க்க.
† 222-ஆம் பக்கம் பார்க்க.

மென்றும், அப்படித் தலைதூக்கித் தனக்கு உயிர் இருக்கிற தென்று அது காட்டிக் கொள்ளுமானல், அதற்கு எவ்வித உணவுப் பொருள்களும் வெளி நாடுகளிலிருந்து செல்ல வொட்டாமல் தடுத்து விட்டால், அதாவது அதற்கு உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லும் கப்பல்களை, தன்னுடைய நீர் மூழ்கிக் கப்பல்களினல் தாக்கி மூழ்கடித்து விட்டால், பசிக்கொடுமையைத் தாங்க மாட்டாமல் அது, தானகச் சரணடைந்து விடுகிறதென்றும் எண்ணினன். ருஷ்யாவின்மீது போர் தொடுக்கிறபோது, பிரிட்டனை ஒரு வலுவுள்ள சத்துருவாக அவன் கருதவில்லை. இதனல் தான் ருஷ்யாவின் மீது துணிந்து போர் தொடுத்தான். உலக ஆதிக்கத்தின் மீதே அவனுடைய திருஷ்டியெல்லாம் சென்றிருந்தது. ஐரோப்பாவின் மீது தான் கொண்டிருந்த ஆதிக்கம், நிச்சயமாக உலக ஆதிக்கத்திற்குத் தன்னைக் கொண்டு போய்விடும் என்று நம்பினன். பேராசை பெரு நஷ்டமாக முடிந்தது அவனுக்கு.

இங்ஙனம் பிரிட்டனுடைய ராணுவ சக்தியில் ஹிட்லர் அலட்சிய பாவமே கொண்டிருந்தா னென்ருலும், ருஷ்யாவின் மீது தான் படையெடுத்தால் அது, தனக்குச் சாதகமாக இருக்குமென்று எண்ணினன் என்றும், இந்த எண்ணத்துடனேயே, யுத்தம் தொடங்குவதற்குச் சுமார் ஆறுவாரங்களுக்கு முந்தி—1941-ஆம் வருஷம் மே மாதம் பத்தாந்தேதி—தன்னுடைய பிரதிநிதியாக ருடால்ப் ஹெஸ்* என்பவனை இங்கிலாந்துக்குத் தூது விடுத்து அதனுடைய நோக்கத்தை அறிய விரும்பினன் என்றும், ஆனல் ஹெஸ்ஸை ஏற்றிக்கொண்டு வந்த ஆகாய விமானம் தவருன இடத்தில் சென்று இறங்கும்படியாக நேரிட்டு விட்டதால், ஹிட்லர் எதிர்பார்த்தது நிறைவேறவில்லை யென்றும் சிலர் கூறுகின்றனர். இதில் எவ்வளவு

* Rudolph Hess.

உண்மை இருக்குமென்று சொல்ல முடியவில்லை. காலந்தான் உண்மையை வெளிப்படுத்த வேண்டும்.

ஆனால் பிரிட்டன், தனக்குச் சாதகமாக இருக்கும் என்று ஹிட்லர் எதிர்பார்த்திருந்தால் அதில் அவன் ஏமாற்றமே அடைந்திருப்பான். ஏனென்றால் ருஷ்யாவின்மீது அவன் போர்தொடுத்த அன்றைய மாலையிலேயே, பிரிட்டன், தான் ருஷ்யாவுக்குத் துணையாக நிற்கும் என்றும், ருஷ்யாவின் பலத்திலும் வீரத்திலும் தனக்குப் பூரண நம்பிக்கை இருப்பதாகவும், அப்பொழுது பிரிட்டனின் பிரதம மந்திரியாக இருந்த வின்ஸ்ட்டன் சர்ச்சில் பிரகடனம் செய்தான். ருஷ்யாமீது பிரிட்டனுக்கு ஏற்பட்ட இந்தப் புதிய அன்பைக்கண்டு அமெரிக்கர் பலரும், ஏன், பிரிட்டிஷார் பலருங்கூட ஆச்சரியப் பட்டனர். ஆனால் சந்தர்ப்பத்தை உத்தேசித்தும், அவசியத்தை முன்னிட்டுமே இந்த அன்பு ஏற்பட்டிருக்கிறதென்றே பொதுவாக எல்லோரும் அபிப்பிராயப் பட்டனர்.

பொதுவான அபிப்பிராயம் இப்படி இருந்தபோதிலும், பிரிட்டன், ருஷ்யாமீது தனக்கேற்பட்ட புதிய அன்பை பல ஒப்பந்தங்களின் மூலம் ஊர்ஜிதம் செய்து காட்டியது. ருஷ்ய—ஜெர்மானிய யுத்தம் துவங்கின மறுமாதம்—1941-ஆம் வருஷம் ஜுலைமாதம் பதின்மூன்றுந்தேதி—ருஷ்யாவும் பிரிட்டனும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன. ஹிட்லரின் ஜெர்மனிக்கு விரோதமாக நடைபெறும் இந்த யுத்தத்தில் இரண்டு நாடுகளும் பரஸ்பர உதவியாயிருக்க வேண்டு மென்பதும், இந்த யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காலத்தில், இரண்டு நாடுகளும் பரஸ்பர சம்மதமின்றி ஜெர்மனியோடு யுத்த நிறுத்த ஒப்பந்தமோ, சமாதான ஒப்பந்தமோ செய்து கொள்ளக் கூடாதென்பதும் மேற்படி ஒப்பந்தத்தின் ஷரத்துகள். இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்தாற்போல் 1941-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் பதினாறுந்தேதி இரண்டு

நாடுகளுக்கும் ஒரு வியாபார ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி பிரிட்டன் ருஷ்யாவுக்கு வேண்டிய சாமான்களைக் கடனுக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டது; மற்றும், ஐந்து வருஷதவணையில் ஒருகோடி பவுன் கடன் கொடுப்பதற்குச் சம்மதித்தது; இந்தத்தொகை செலவழிந்து விட்டபிறகு மேலும் கடன் கொடுப்பதைப் பற்றி யோசிப்பதாகவும் கூறியது. இதற்குப் பின்னர் 1942-ஆம் வருஷம் மேமாதம் இருபத்தாருந்தேதி இரண்டு நாடுகளும் ஒரு சிநேக ஒப்பந்தம் செய்துகொண்டன. இந்த ஒப்பந்தம் குறைந்த பட்சம் இருபது வருஷத்திற்கு அமுலில் இருக்கும் என்று சொல்லப்பட்டது.

இங்ஙனம் ருஷ்யாவினிடம் அன்பு செலுத்துகிற விஷயத்தில் பிரிட்டன் மட்டும் தனித்திருக்க வில்லை; அமெரிக்காவும் சேர்ந்து கொண்டது. பாராட்டுரைகளென்ன, தூதுகோஷ்டிகளென்ன, ராணுவத்திற்கும் பொதுஜனங்களுக்கும் தேவையான சாமான்களென்ன, இவையெல்லாம் ஒன்றன்பின் னொன்ருக அமெரிக்காவிடமிருந்து வந்துகொண்டிருந்தன. ருஷ்யாவின் வீரத்தை, சோவியத் அரசாங்கத்தாரின் நிருவாகத் திறமையை, ஸ்டாலினின் தலைமையின் தகுதியை, பிரிட்டிஷ்-அமெரிக்க ராஜதந்திரிகள் வானளாவப் புகழ்ந்தார்கள். முதலாளித்துவத்தின் ஒலிக்கருவிகளா யிருக்கும் பத்திரிகைகள் ஸ்டாலின்-சர்ச்சில்-ரூஸ்வெல்ட் கோஷ்டி ஒற்றுமையைப் பற்றிச் சதா முழக்கிக் கொண்டிருந்தன.

இதைப்பற்றி ஏன் இங்கே பிரஸ்தாபிக்க வேண்டியிருக்கிற தென்ருல், யுத்தம் முடிந்த பிறகு, அதாவது ஜெர்மனியும் ஜப்பானும் முறையே சரணுகதியடைந்த பிறகு, பிரிட்டனும் அமெரிக்காவும் ருஷ்யா விஷயத்தில் நடந்துகொள்கிற விதத்தோடு வாசகர்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டு மென்பதற்குத் தான். ஜப்பானின் சரணுகதிக்கு எந்த அணுகுண்டு காரணமாயிருந்ததோ

அந்த அணுகுண்டு சம்பந்தப்பட்ட சகல ரகசியங்களையும் தாங்களே வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று பிரிட்டனும் அமெரிக்காவும் சேர்ந்து முடிவுகட்டி யிருக்கின்றன. அதுமட்டுமல்ல, ருஷ்யாவுக்கு இதைப்பற்றி ஒன்றுஞ் சொல்லக் கூடாதென்றும் அபிப்பிராயப்பட்டிருக்கின்றன. ருஷ்யாவுக்கு ஏதோ நாட்டாசை பிடித்து விட்டதாகவும், அதனைத் தடுக்க வேண்டியது உலக சமாதானத்திற்கு அவசியமான தென்கிற மாதிரியாகவும் பிரிட்டிஷ்-அமெரிக்க ராஜதந்திரிகள் பேசத் தலைப்பட்டு விட்டார்கள். 1945-ஆம் வருஷக் கடைசியிலிருந்த நிலைமை இது. இந்த நிலைமையிலிருந்து பார்க்கிறபோது, மறுபடியும் ஓர் உலக யுத்தம் ஏற்படுமா என்று சந்தேகப் படவேண்டியிருக்கிறது. ஆனால் அப்படி ஏற்படாதவரை, உலகத்தில் எப்பொழுதும் அமைதி நிலைத்திருக்க வேண்டுமென்று அனைவரும் பிரார்த்தனை செய்து கொண்டிருப்போமாக!

இனி ருஷ்ய-ஜெர்மானிய யுத்தத்தைப்பற்றிக் கவனிப்போம். இந்த யுத்தத்தின் போக்கைப்பற்றி நாம் விஸ்தரித்துச் சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால் உலகத்தின் எதிர்கால சமாதான வாழ்க்கைக்கு அஃது எந்த விதத்திலும் பிரயோஜனமா யிருக்கப்போவதில்லை. ஆனால் ருஷ்யா, இந்த யுத்தத்தை எப்படிச் சமாளித்தது, தன்னுடைய வெற்றிக்காக அஃது என்னென்ன தியாகங்களைச்செய்தது முதலியவைகளைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம். ஏனென்றால் அப்படித் தெரிந்துகொள்வது சுதந்திர வாழ்க்கையின் லட்சணத்தைத் தெரிந்து கொள்வதுபோல ஆகும்.

அப்படித் தெரிந்து கொள்வதற்கு முன்னர், யுத்தத்தைப்பற்றி வாசகர்கள் மனதில் பதியவேண்டிய சில முக்கியமான அமிசங்களைப் பற்றிச் சுருக்கமாகத் தெரிவிக்க விரும்புகிறோம்.

ருஷ்ய - ஜெர்மானிய யுத்தமானது 1941-ஆம் வருஷம் ஜூன் மாதம் இருபத்திரண்டாந்தேதி ஞாயிற்றுக்கிழமை விடியற் காலை மூன்று மணிக்குத் துவங்கியது. 1945-ஆம் வருஷம் மே மாதம் ஏழாந்தேதி நின்றது. யுத்தத் துவக்கத்தின்போது எதிருக் கெதிராக இருதரப்பிலும் நின்ற படை வீரர்கள் மொத்தம் சுமார் எண்பது லட்சம் பேர். இவர்களுக்குத் துணையாகக் குவிக்கப்பட்டிருந்த யுத்த தளவாடங்கள் வேறே. போர் முகத்தின் நீளம் சுமார் 1,800 மைல். இந்தப் போர் முகத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்துத் தங்கள் படைகளை நிறுத்தினர் ஜெர்மானியர். மூன்று பகுதிகளுக்கும் முறையே வான் லீப், வான் பாக், வான் ருண்ட்ஸ்டெட் ஆகியோர் தலைவர்கள். * இங்ஙனமே ருஷ்யர்களும் தங்கள் படைகளை மூன்று பகுதிகளாகப் பிரித்தனர். இவைகளின் தலைவர்கள் முறையே வோரோஷிலோவ், டிமோஷென்கோ, புடியோன்னி. †

போர்த் தொடக்கத்தில் ஜெர்மானியர்களுக்கே அதிகமான வெற்றி கிடைத்தது. ருஷ்யாவின் மேற்கெல்லைப் பக்கத்திலுள்ள பல முக்கியமான நகரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அவர்கள் வசப்பட்டு வந்தன. யுத்தம் ஆரம்பித்த நான்காவது மாதத்திலேயே ருஷ்யாவின் தலை நகரமான மாஸ்கோவுக்கு ஆபத்து வந்துவிட்டது. 1941-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் பதினேழாந் தேதி சோவியத் அரசாங்கத்தார், தங்கள் தலை நகரத்தை குயிபிஷேவ் ‡ என்ற கிழக்குப் பக்கத்தில் வெகு தொலைவிலுள்ள ஊருக்கு மாற்றி விட்டனர். பெரும்பாலோரான ஜனங்களை ஜெர்மானியர்களுடைய கைக்கு அகப்பட விடாமல் தப்புவித்தனர். இங்ஙனமே முக்கியமான தொழிற்சாலைகளைக் கிழக்குப் பகுதியிலுள்ள பிரதேசங்களுக்குப் பெயர்த்

* Von Leeb, von Bock, von Rundstet.

† Voroshilov, Timoshenko, Budyonny.

‡ Kuibyshev.

தெடுத்துக் கொண்டு போயினர். அப்படிப் பெயர்த் தெடுத்துக் கொண்டுபோக முடியாதவைகளை, ஜெர்மானியர் வசம் அகப்பட விடாமல் நாசமாக்கினர். இருந்தாலும் ஜெர்மானியர்களுக்குக் கிடைத்த நிலமும் பொருளும் ஏராளம். யுத்தம் துவங்கின சுமார் ஒரு வருஷ காலத்திற்குள் "ஹிட்லர், சுமார் ஆறுகோடி முதல் ஏழுகோடி வரை ஜனத்தொகையுடைய பிரதேசத்தை ஆக்கிரமித்துக் கொண்டான். இப்படி அவன் ஆக்கிரமித்துக் கொண்ட பிரதேசம், ருஷ்யாவின் மொத்த விஸ்தீரணத்தில் பத்தில் ஒரு பகுதிதான் இருக்கு மாயினும் இஃது எல்லா விதத்திலும் மிகவும் விருத்தியடைந்திருந்த பிரதேசமாயிருந்தது. ருஷ்யாவின் மொத்த நிலக்கரிச் சுரங்கங்களில் பாதி இங்கு இருந்தது. ருஷ்யாவில் உற்பத்தியான மொத்த இரும்பு, காரீயம் இவைகளில் ஐந்தில் ஒரு பகுதி இங்கே கிடைத்தது. மொத்த இயந்திர வகைகளில் பாதி இங்கு வேலை செய்து கொண்டிருந்தன. மொத்த மகசூலில் மூன்றில் ஒரு பகுதி இங்கே கிடைத்தது. இவை யெல்லாம் ஜெர்மானியர் வசப்பட்டு விட்டதன் விளைவாக, ருஷ்யா தனது மின்சார உற்பத்தி சக்தியில் பாதியையும், மொத்த ரெயில்வே மைல் நீளத்தில் நூற்றில் முப்பது பங்கு நீளத்தையும் இழந்து விட்டது. மிகச் செழிப்புள்ள மாகாணங்களின் தலை நகர்களும், அழகான பல பட்டணங்களும் விழுந்து விட்டன."

இங்ஙனம் ஆரம்பத்தில் ஜெர்மானியர்களுக்கு வெற்றியும், வெற்றிப் பொருள்களும் கிடைத்தனவானாலும் இதற்காக அவர்கள் பலி கொடுத்த உயிர்கள் ஏராளம். முதல் பதினெட்டு நாள் போர் மிகவும் உக்கிரமா யிருந்தது. ஜெர்மானியர்கள் வெகு துரிதமாக முன்னேறினர். இந்த முன்னேற்றத்திற்காக இவர்கள் எழுபதினாயிரம் போர் வீரர்களைப் பலி கொடுக்க வேண்டி யிருந்தது. இதற்குப் பிறகு இவர்கள் முன்னேற்றத்தின் வேகம் சிறிது தணிந்

தது. இதற்குப் பிரதியாக இவர்களடைந்த உயிர்ச் சேதம் அதிகப்பட்டது. யுத்தம் தொடங்கின அறுபதாவது நாளன்று—1941-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் இருபத்து மூன்றாந் தேதி—ருஷ்யர்களின் எதிர்ப்புச் சக்தியைப் பாராட்டி சர்ச்சில் பின்வருமாறு பேசினன் :—

"ருஷ்யப் படைகளும், ருஷ்ய மகா ஜனங்களும், தங்களுடைய வீடு வாசல்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒன்று திரண்டு விட்டார்கள். முதன் முதல் நாஜிகளின் ரத்தம், பயங்கர வெள்ளமாக ஓடுகிறது. ருஷ்யாவின் விசாலமான மைதானங்களில், சுமார் பதினைந்து அல்லது இருபது லட்சம் நாஜிகள், ருஷ்ய பீரங்கிகளுக்கு இரையானார்கள். சுமார் இரண்டாயிரம் மைல் நீளமுள்ள போர் முனையில் கோர யுத்தம் நடை பெறுகிறது. ருஷ்யர்கள் மகா தீரத்துடன் போர் புரிகின்றனர். அது மட்டுமல்ல, போர் முனைக்குச் சென்று வந்த நமது (பிரிட்டிஷ்) தளபதிகள், ருஷ்ய ராணுவ அமைப்பின் திறமையைப் பற்றியும், அவர்களுடைய யுத்த தளவாடங்களின் மேன்மையைப் பற்றியும் மிகவும் பாராட்டிப் பேசுகின்றனர்."

இப்படி ஜெர்மானியர்களுக்கு மட்டுந்தான் நஷ்டம் ஏற்பட்டதா, ருஷ்யர்களுக்கு ஏற்பட வில்லையா என்று வாசகர்கள் கேட்கலாம். அப்படி யில்லை. ருஷ்யர்களுக்குச் சேதம் ஏற்படாம லிருக்குமா? ருஷ்யர்கள், ஜெர்மானியர்களின் உக்கிரமான ஆரம்பத் தாக்குதல்களினால் சிறிது அதிர்ச்சி யடைந்து பின்வாங்கியபோது சும்மா ஓடிவந்து விடவில்லை. சத்துருக்களுக்கு எவ்வளவு சேதத்தை உண்டுபண்ண முடியுமோ அவ்வளவு சேதத்தை உண்டு பண்ணினர். அப்படிச் சேதம் உண்டு பண்ணியபோது தாங்களும் பல வகையில் சேத மடைந்தார்கள். யுத்தம் துவங்கிய மூன்று மாதத்தில் ருஷ்யர்கள் சுமார் பத்து லட்சம் போர் வீரர்களைப் பலி கொடுத்தார்கள்.

ருஷ்ய - ஜெர்மானிய யுத்தம் சுமார் நான்கு வருஷ காலம் நடை பெற்றது. இதில் முதல் இரண்டு வருஷ காலம் ஜெர்மானியர்களுக்கு நம்பிக்கையைத் தந்த காலம்; பிந்திய இரண்டு வருஷகாலம் ருஷ்யர்களுக்கு நம்பிக்கையைத் தந்த காலம். முதல் இரண்டு வருஷத்தில் ஜெர்மானியர்கள் பக்கம் உண்டான சேதம் வருமாறு: 64 லட்சம் பேர் கொல்லப் பட்டும் சிறைப்பட்டும் போயினர்; 56,500 பீரங்கிகளும், 42,400 டாங்கிகளும், 43,000 ஆகாய விமானங்களும் நாச மடைந்தும், ருஷ்யர்கள் வசப்பட்டும் போயின. இதே இரண்டு வருஷ காலத்தில் ருஷ்யர்களுக்கு ஏற்பட்ட சேதம் வருமாறு: 42 லட்சம் பேர் இறந்தும், காணமலும் போயினர்; 35,000 பீரங்கிகளும், 30,000 டாங்கிகளும், 23,000 ஆகாய விமானங்களும் நாசமடைந்தன. 1944-ஆம் வருஷம் மேமாதம் வரையில் எடுத்த ஒரு கணக்குப்படி செம்படையினரில் சுமார் 60 லட்சம் பேர் இறந்தும் மறைந்தும் போயினர்; 30 லட்சம் பேர் அங்கஹீனர்களாகி எவ்வித வேலைக்கும் தகுதி யற்றவர்களாகி விட்டார்கள்; 60 லட்சம் முதல் 70 லட்சம் பேர் வரையில் காய மடைந்தனர்.

1945-ஆம் வருஷம் மேமாதம் ஏழாந்தேதி யுத்தம் முடிவு பெற்றதல்லவா? அதுவரையில் ருஷ்யர்கள் பக்கம் காயமடைந்தவர், காணமற்போனவர், இறந்துபோனவர் எல்லோரும் சேர்ந்து, குறைந்த பட்சம் 210 லட்சம்பேர். மொத்தம் 1,416 நாட்கள் யுத்தம் நடைபெற்றது. இந்த யுத்தத்தில் ஜெர்மானியர்களால் ருஷ்யாவுக்கு உண்டு பண்ணப்பட்ட பொருள் சேதத்தை ரூபாய் கணக்கில் மதிப்பிட்டுப் பார்க்கிறபோது மொத்தம் 11,034 கோடியாகிறது. ஒரு தேசத்திலே ஏற்பட்டிருக்கிற பொருட் சேதம் மட்டும் இவ்வளவு என்ருல், மற்ற எல்லாத்தேசங்களும் சேர்ந்து எவ்வளவு நஷ்டத்தை யடைந்திருக்கக்

கூடுமென்பதை வாசகர்களுடைய கணக்குப்போடும் சக்திக்கே விட்டுவிடுகிறோம்.

1941-ஆம் வருஷம் மத்தியில் ஹிட்லர் போர் துவங்கிய போது, இன்னும் நான்கு மாதத்திற்குள் மாஸ்கோ நகரத்தில் வெற்றிக் கோலத்துடன் பிரவேசிக்கப் போவதாகக் கற்பனை செய்துகொண் டிருந்தான். ஆனால் யுத்தம் துவங்கி நான்காவது வருஷம் முடிவதற்குள், ருஷ்யப் படையினர், பெர்லின் நகரத்தில் பிரவேசித்துச் செங்கொடியைப் பறக்கவிட்டார்கள். ஹிட்லர் இருந்த இடமே தெரியவில்லை.

ருஷ்ய—ஜெர்மானிய யுத்தத்தில் முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய கட்டங்கள் இரண்டு. ஒன்று லெனின் கிராட் யுத்தம்; மற்றொன்று ஸ்டாலின் கிராட் யுத்தம். இந்த இரண்டு இடங்களையும் ஜெர்மானியர்கள் மாதக் கணக்கில் முற்றுகையிட்டுச் சரணடையுமாறு செய்ய முயற்சி செய்தார்கள்; முடியவில்லை. ருஷ்ய—ஜெர்மானிய யுத்தத்தின் போக்கை ருஷ்யர்களுக்குச் சாதகமாகத் திருப்பிவிட்டது இந்த இரண்டு இடத்து யுத்தங்களுந்தான் என்று சொல்லவேண்டும்.

லெனின்கிராட் முற்றுகை 1941-ஆம் வருஷம் செப்டம்பர் முதல் 1941-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் வரை சுமார் இருபத்தொன்பது மாதகாலம் நடைபெற்றது. மாஸ்கோவுக்கு அடுத்த படி முக்கியமான நகரம் என்று இதனை ருஷ்யர்கள் கருதுகிறார்கள். தவிர, இந்த நகரத்திற்கு ஒரு புனிதத்தன்மையும் கொடுத்துப் பேசுகிறார்கள். ஏனென்றால் முடியாட்சி முடிந்து சோவியத் ஆட்சி ஏற்படுவதற்குக் காரணமான புரட்சி தொடங்கியது இங்குதானல்லவா? அப்பொழுது இதற்கு பீட்ரோகிராட் என்ற பெயர். பீட்ரோகிராட் சோவியத்துதான், எல்லா சோவியத்துகளைக் காட்டிலும் நிருவாகத்திறமையுடையதாகவும், கட்டுப்பாட்டோடு கூடிய ஒழுங்கான

ஸ்தாபனமாகவும் இருந்ததென்று ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். *

இப்படிப்பட்ட புனிதமான நகரத்தை ருஷ்யர்கள் எளிதிலே ஜெர்மானியர்களுக்கு விட்டுக் கொடுத்து விடுவார்களா? ஜெர்மானியர்கள் சுமார் நான்கு லட்சம் துருப்புகளைக் கொண்டுவந்து இதனைத் தாக்கினார்கள். மாதக்கணக்கில் முற்றுகைபோட்டு நகரத்திற்குள் எவ்வித சாமான்களும் வரவொட்டாதபடி தடுத்து ஜனங்களைப் பட்டினியால் சாக அடித்தார்கள். 'குண்டுமாரி பெய்தது' என்ற சொற்றொடர் இந்த நகரத்தைப் பொறுத்த மட்டில் வெறும் கற்பனையல்ல; மிகவும் உண்மை. உதாரணமாக 1943-ஆம் வருஷம் ஒருநாள் காலை எட்டே முக்கால் மணியிலிருந்து மாலை ஆறுமணிவரை தொடர்ந்தாற்போல் நகரத்தின்மீது குண்டுகள் பொழியப் பட்டன. மொத்தம் 1,564 குண்டுகள் போடப்பட்டதாக ஒரு கணக்கு கூறுகிறது. சேதத்திற்குக் கேட்கவா வேண்டும்? அநேக வீடுகள் இடிந்துபோயின; தண்ணீர்க் குழாய்கள் உடைந்துபோயின; டிராம் லைன்கள் இடம்விட்டுப் பெயர்ந்து போயின. இவைகளுக் கெல்லாம் ஜனங்கள் மனமொடிந்து போகாமல் புன்னகையோடு சகித்துக் கொண்டிருந்தார்கள் என்பதில் ஆச்சரியமில்லை. ஆனல் இரவு எட்டுமணிக்குள், அதாவது குண்டு பொழிவது நின்ற இரண்டுமணி நேரத்திற்குள், இடம் பெயர்ந்த டிராம் லைன்களில் முக்கால்வாசி பழுது பார்க்கப்பட்டு பழைய மாதிரி டிராம்கள் ஓட ஆரம்பித்து விட்டனவே அதுதான் ஆச்சரியம்.

இன்னொர் ஆச்சரியமான விஷயத்தையும் நேயர்களுக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறோம். உலகத்திலேயே மிகப்பெரிய புத்தகசாலை லெனின்கிராடில் இருக்

---

* 39-ஆம் பக்கம் பார்க்க.

கிறது. சுமார் தொண்ணூறு லட்சம் புத்தகங்கள் இங்கு உண்டு. லெனின்கிராட் முற்றுகையிடப் பட்டிருந்த காலத்தில், ஜெர்மன் பீரங்கிகளும், ஆகாய விமானங்களும் இந்தப் புத்தகசாலைக் கட்டிடத்தைப் பலமுறை தாக்கின. மூன்றுமுறை கட்டிடத்தின் தலைமேலேயே ஆகாய விமானக் குண்டுகள் விழுந்தன. மேல்தளம், கூரை, எல்லாம் சுக்கு நூறுகிவிட்டன. ஆனல் ஒருபுத்தகம்கூட சேதமடையவில்லை; புத்தகசாலைச் சிப்பந்திகளில் ஒருவருக்குக்கூட பிராண ஆபத்து ஏற்படவில்லை. புத்தக சாலைச் சிப்பந்திகள், தங்களுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்வதில் எவ்வளவு கண்ணுங்கருத்துமா யிருந்தார் களோ அதைவிடப் பன்மடங்கு கண்ணுங்கருத்து முடையவர்களா யிருந்தார்கள் புத்தகங்களைக் காப்பாற்றுகிற விஷயத்தில். ஆனல் இப்படி இவர்கள் புத்தகங்களைக் காப்பாற்றியது ஆச்சரியமில்லை. முற்றுகை நடைபெற்ற இருபத்தொன்பது மாதகாலத்தில் ஒருநாள்கூட இவர்கள் புத்தக சாலையை மூடிவைக்க வில்லை; புத்தகசாலையோடு இணைக்கப் பட்டிருந்த வாசக சாலையையும் மூடிவைக்க வில்லை. புத்தகங்களை இரவல் கொடுப்பதும் வாங்குவதும், வாசக சாலையில் ஜனங்கள் வந்து படிப்பதும் எப்பொழுதும் போல் ஒழுங்காக நடைபெற்றுக்கொண்டு வந்தன. இதுதான் ஆச்சரியம்.

இங்ஙனமே தொழிற்சாலைகள் தாக்கப்பட்டன; பள்ளிக்கூடங்கள் நாசமாக்கப் பட்டன. ஆயினும் தொழிற்சாலைகளின் கதவுகளோ, பள்ளிக்கூடங்களின் கதவுகளோ மூடப்படவேயில்லை. பத்துப்பேர் இருக்க வேண்டிய இடத்தில் ஒருவர் இருந்தபோதிலும் அந்தந்த ஸ்தாபனமும் ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டு வர வேண்டுமென்ற ஒரே உறுதியுடன் இருந்தார்கள் லெனின் கிராட் வாசிகள்.

முற்றுகை நடைபெற்ற காலத்தில் லெனின்கிராட்

வாசிகளுக்குச் சரியான நித்திரையில்லை; போதிய ஆகாரம் இல்லை. பட்டினியால் பலர் மாண்டார்கள். ஆனால் நித்திரையின்மையினலோ, குண்டு வீச்சினல் ஏற்படக்கூடிய அதிர்ச்சியினலோ யாருக்கும் மூளை குழம்பவில்லை; மனக் கலக்கம் உண்டாக வில்லை. அப்படியானல் ஜனங்களுடைய மனே உறுதி எவ்வளவு மகத்தானதா யிருக்க வேண்டும்?

இனி ஸ்டாலின் கிராட்டிற்குள் பிரவேசிப்போம். இந்த நகரத்திற்கு, முன்னர் ஜாரிட்ஸின் * என்றுபெயர் 1914-ஆம் வருஷ மகாயுத்தத்திற்குப் பிறகு, மேற்கு ஐரோப்பிய வல்லரசுகளின் தூண்டுதலின் பேரில் சோவியத் அரசாங்கத்திற்கு விரோதமாக உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டதல்லவா? அப்பொழுது ஸ்டாலின், வோரோஷிலோவ், இவர்களுடைய தலைமையில் செம்படையானது வெண்படையினரை † எதிர்த்துப் போராடி முறியடித்தது இந்த ஜாரிட்ஸின் நகரத்தில்தான். இதற்குப் பிறகே இதன் பெயர் ஸ்டாலின் கிராட் என்று மாற்றி வழங்கப்பட்டது. தங்களுடைய தலைவன் பெயர் சம்பந்தப்பட்டிருப்பதால் ருஷ்யர்கள் இந்த நகரத்திற்குப் பெரிய மதிப்பு வைத்திருக்கிருர்கள். பெரிய தொழிற் சாலைகள் பல இங்கே இருக்கின்றன. முக்கியமான வியாபாரஸ்தலம் இது. இதன் அருகே பிரசித்திபெற்ற வால்கா நதி ஓடுகிறது.

இந்த நகரத்தைக் கைப்பற்ற ஜெர்மானியர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்தார்கள். தங்களுடைய சேனபலத்தையும், ஆயுத பலத்தையும் ஒன்று திரட்டிக் கொண்டு வந்து இந்த நகரத்தைத் தாக்கினர்கள். இந்த நகரத்தைக் கைப்பற்றிக்கொண்டு இதன் வழியாக, சோவியத் அரசாங்கத்தின் தற்காலிகத் தலைநகரான

---

* Tsarytsin.

† 61-ஆம் பக்கம் பார்க்க.

குயிபிஷேவையும், யூரல் மலைப்பிரதேசங்களையும் கைப் பற்றிக்கொண்டுவிட வேண்டுமென்றும், இதற்கேற்றாற் போல் வடக்கே மாஸ்கோவிலிருந்து ஒரு பகுதி சேனைவந்து ருஷ்யச் சேனையைக் கவிந்துகொண்டு தாக்கி முறியடித்து மேற்படி யூரல் பிரதேசத்தின் வடபாகத்தைக் கைப்பற் றிக் கொள்வதென்றும், இப்படி என்னென்ன வெல் லாமோ பிரமாத திட்டங்கள் போட்டிருந்தனர் ஜெர்மா னியர். ஆனால் ஸ்டாலின் கிராடில் ருஷ்யர்கள் காட்டிய எதிர்ப்பு, இவர்களுடைய திட்டத்தைச் சிதற அடித்து விட்டது.

1942-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் இருபத்து மூன்றாந் தேதியிலிருந்து ஜெர்மானியத் துருப்புகள் கூட்டம் கூட்ட மாக வந்து ஸ்டாலின் கிராடைத்தாக்கின; ஜெர்மானிய விமானங்கள் அலை அலையாக வந்து குண்டுகள் போட்டன. ஆயினும் செம்படையினர் சளைக்கவில்லை. முதல் நான்கு நாள் யுத்தத்தில் ஜெர்மானியர்கள் ஐம்பதினாயிரம் பேரை இழந்து விட்டனரென்றால், யுத்தம் எவ்வளவு உக்கிரமாக நடந்திருக்க வேண்டுமென்பதை நாம் ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாமல்லவா? இந்தச் சேதத்தை ஜெர்மானியர் கள் பொருட்படுத்தாமல் மேலும் மேலும் தங்கள் ஆயுத பலத்தைக் கொண்டுவந்து பிரயோகித்தனர். முதல் ஐம்பது நாட்களில் ஜெர்மானியர்களில் 180 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்; 1,300 ஆகாய விமானங்கள் நாசமாயின. இவ்வளவு சேதத்துடன் ஜெர்மானியர்கள் ஸ்டாலின் கிராட் நகரத்திற்குள் பிரவேசித்தனர். ஆயினும் அவர் களால் வெற்றிக்கொடி நாட்ட முடியவில்லை. ருஷ்யர்கள் விட்டுக் கொடுத்தால்தானே? அங்குலத்திற்கு அங்குலம் சண்டை நடைபெற்றது. வீட்டுக்கு வீடு, இல்லை, இல்லை, ஒவ்வொரு வீட்டிலுமுள்ள அறைக்கு அறை சண்டை நடைபெற்றது. இதுதவிர நகரத்திற்குள்ளே ஆங்காங்கு முகாம் போட்டுக்கொண்டிருந்த ஜெர்மானியப் படை

களை, ருஷ்யர்கள், நகரத்திற்கு வெளியிலிருந்து தாக்கினார்கள். கடைசியில் 1943-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் இரண்டாந்தேதி ஜெர்மானியர்கள்—91,000 படை வீரர்கள், 250 ராணுவ உத்தியோகஸ்தர்கள், 24 தளகர்த்தர்கள், வான் பாவ்லஸ் என்ற சேனாதிபதி ஆகிய இத்தனை பேரும்—சரணடைந்தார்கள். இவர்கள் தவிர 1,482 பெரிய பீரங்கிகளும், 750 டாங்கிகளும், 1,550 ஆகாய விமானங்களும் ருஷ்யர்கள் வசமாயின. ஸ்டாலின் கிராட் யுத்தம் மொத்தம் சுமார் 160 நாட்கள் நடைபெற்றது; 2,40,000 ஜெர்மன் போர் வீரர்கள் உயிர் துறந்தார்கள்.

ருஷ்யர்களுக்கு நஷ்ட மேற்படவில்லையென்று சொல்ல முடியுமா? மகத்தான நஷ்டத்தை அடைந்தார்கள்; சொல்லொணாத கஷ்டங்களை அனுபவித்தார்கள். எல்லாம் தாய் நாட்டிற்காக! அதன் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காக!

ஸ்டாலின் கிராட், தொழிற்சாலைகள் பல நிறைந்த நகரம் என்று மேலே சொல்லியிருக்கிறோமல்லவா? இந்தத் தொழிற்சாலைகள், பெரும்பாலும் நகரத்தின் ஒரு பகுதியில் இருந்தன. உலகத்திலேயே மிகப்பெரிய உலோக உருக்குத் தொழிற்சாலை இங்குதான் இருந்தது. இதற்கு "சிவப்பு அக்டோபர் தொழிற்சாலை" என்று பெயர். இங்ஙனம் தொழிற்சாலைகள் நிறைந்த இந்தப் பகுதியின் மீது ஜெர்மானியர்கள் 1942-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் பன்னிரண்டாந்தேதி தங்கள் திருஷ்டியைச் செலுத்தினார்கள். இந்த ஒருநாளில் இந்த ஒரு பகுதியைச் சுமார் எழுபதினாயிரத்துக்கு மேற்பட்ட காலாட்படைகளும், நூற்றுக்கு மேற்பட்ட டாங்கிகளும் சேர்ந்து தாக்கின. இது தவிர, தனித்தனியாக இருபத்து மூன்று தடவை ஆகாய விமானங்கள் வந்து தாக்கின. எத்தனை குண்டுகள் விழுந்திருக்குமென்று எண்ணிச்

சொல்ல முடியுமோ? ஐந்தாறு கஜத்திற்கு முன்னால் என்ன இருக்கிறதென்று தெரியாது. அவ்வளவு புகை, அவ்வளவு தூசி அந்தத் தொழிற்சாலைப் பிரதேசத்தை நிரப்பி விட்டது.

இவ்வளவு உக்கிரமாகத் தாக்கியும் ஜெர்மானியர்கள் அடைந்த சாதகம் என்ன? ஒரு ருஷ்யப்படைத் தலைவன் கூறுகிறான்:— "ஜெர்மானியர்கள் ஒருமைல் தூரமே முன்னேற முடிந்தது. நாங்கள் பின்வாங்கியதால் அவர்கள் முன்னேறவில்லை. பதிலுக்கு ஆட்களைக்கொண்டு நிரப்புவதற்குள், அவ்வளவு சீக்கிரம் சீக்கிரமாக எங்கள் படைவீரர்கள் கொல்லப்பட்டுப் போனதால்தான் ஜெர்மானியர்கள் முன்னேற முடிந்தது. முன்னேறினார்கள் என்று சொன்னால் எங்களுடைய பிணத்தின் மீதுதான். சுமார் அரைமைலுள்ள பிரதேசத்தில் ஜெர்மானியர்கள் பதினாயிரக் கணக்கில் உயிரிழந்தார்கள். புதிய வீரர்களைக் கொண்டு தங்கள் படையை நிரப்பிக்கொள்வதற்கு முன்னர், நாங்கள் ஸ்டாலின் கிராட் நகரத்தைச் சுற்றிவளைத்துக்கொண்டு விட்டோம்."

ஸ்டாலின் கிராடின் ஜனத்தொகை இந்த யுத்தத்திற்கு முன்னர் சுமார் ஆறுலட்சத்திற்கு மேற்பட்டது. ஆனால் ஜெர்மானியர்களுடைய பிடியினின்று விடுவிக்கப்பட்ட போது இதிலிருந்த ஜனங்களை நூற்றுக்கணக்கில் தான் எண்ண வேண்டியிருந்தது. இங்ஙனம் ஜனச்சேதம் ஏற்பட்டதோடு மட்டுமல்ல, நகரமே இருந்த இடம் தெரியாமலாகி விட்டது. ஓர் அறிஞன் பின்வருமாறு கூறுகிறான்: "மற்ற இடங்களில் யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளை நான் பார்த்திருக்கிறேன். ஸ்டாலின் கிராடைப் பார்க்கிறபோது அவையெல்லாம் மிகச்சாதாரண மென்றே சொல்லவேண்டும். இந்த யுத்தம் பூராவும் நடந்து முடிந்தால் ஐரோப்பா முழுவதுமே ஸ்டாலின் கிராட் மாதிரியாகி விடுமோ என்னவோ! ஷாங்காய் நகரத்தின் ஒருபகுதி

யான சாப்பை பிரதேசத்தில் ஏற்பட்ட சேதத்தை இரு பது மடங்கு பெருக்கினல் அதுதான் ஸ்டாலின் கிராட். ஆகாய விமானக் குண்டுகளினல் தாக்கப்பட்டு சேத மடைந்துபோன லண்டனிலுள்ள பகுதிகள், ஸ்டாலின் கிராடில் ஒரு மூலைதான். 1914-ஆம் வருஷம் தொடங் கிய மகா யுத்தத்தில் ஐப்ரஸ்* என்ற நகரம், மூன்று வருஷம் தொடர்ந்தாற்போல் வெடி குண்டுகளினல் தாக் கப்பட்டது. அப்படித் தாக்கப்பட்ட பிறகு அந்த நகரம் இருந்த ஸ்திதியானது, ஸ்டாலின் கிராடை உத்தேசிக் கையில் மிகமிகச் சாதாரணம், அந்த நகரத்திலே ஏற் பட்ட சேதம் மிகமிகச் சொற்பம் என்றுதான் சொல்ல வேண்டும்.''

லெனின் கிராடைப்போல், ஸ்டாலின் கிராடைப் போல், இன்னும் எத்தனையோ ஊர்களில், சிறப்பாக ஸ்மோலென்ஸ்க் என்ன, ஸெபாஸ்ட்டபூல் என்ன,† மாஸ்கோ என்ன, இப்படி முக்கியமான பல ஊர்களில் சண்டைகள் நடைபெற்றன; பனித்தரை செந்தரையான மைதானங்கள் பல. இந்தச் சண்டைகள் நாட்கள் கணக் கில் அல்ல, மாதக்கணக்கிலே நடைபெற்றிருக்கின்றன. ஐயோ, துடிதுடித்த உயிர்கள் தான் எத்தனை? போர் வீரர்களின் உடலத்திலே புழுக்கள் நெளிந்த புண்கள் தான் எத்தனை? இடிந்த சுவர்களுக்கு அடியிலே மடிந்து கிடந்த குழந்தைகளும் பெண்களுந்தான் எத்தனை பேர்? எத்தனை நகரங்கள் சாம்பல் மேடுகளாயின? எத்தனை தெருக்களில் ரத்தம் ஆறுக ஓடியது? எத்தனை இடங்களில் பிணங்கள் மலைமலையாகக் குவிந்து கிடந்தன? ஜெர்மானி யர்களுடைய சித்திரவதைகளுக்கு ஆளாகி உயிர்துறந்த உத்தம ஆத்மாக்கள்தான் எத்தனை? இவ்வளவு அவதிகள் பட்டும் ருஷ்யர்கள் தோல்வியடைய மறுத்துவிட்டார்

* Ypres.

† Smolensk, Sebastapool.

கள். ஊர்கள் அழிந்தும், உயிர்கள் இழந்தும் அவர்கள் உறுதி குலையவே யில்லை. "ஒரு தேசத்தினுடைய சரித்திரம் பொன்னெழுத்துக்களால் எழுதப்பட வேண்டுமானால் அது முதலில் ரத்த ஸ்நானம் செய்தாகவேண்டும்" என்ற நியதி, ருஷ்யர்களைப் பொறுத்தமட்டில் முற்றிலும் நிஜம். இதற்கு முன்னரும் அவர்கள் இந்த நியதிப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள்; இப்பொழுதும் நடந்து காட்டியிருக்கிறார்கள். இனி, அவர்களுடைய சரித்திரம், பொன்னுக்கு மேற்பட்ட ஓர் உலோகம் இருந்தால் அதனால் தான் எழுதப்பட வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட உலோகம் எங்கே யிருக்கிறது என்று நேயர்கள் கேட்கலாம். இருக்கிறது; நிச்சயமாக இருக்கிறது; எல்லோரும் வாழ உழைக்கிற விவசாயிகளின், தொழிலாளிகளின் சுத்தமான இருதய ஆழத்திலே, உலகத்தில் சாசுவதமான சமாதானம் நிலவ வேண்டுமென்று சதா பிரார்த்தித்துக் கொண்டும், அதற்காக ஓயாது வேலை செய்துகொண்டும் வருகிற மகாத்மாக்களின் உள்ளக் கோயிலிலே இருக்கிறது. உழைப்பாளிகளின் சரித்திரந்தான், மகாத்மாக்களின் சரித்திரந்தான் ருஷ்யாவின் வருங்கால சரித்திரம். இது நிச்சயம்.

யுத்தத்தின் இடைக்காலத்தில், அதாவது 1942-ஆம் வருஷம் அக்டோபர் மாதம், ருஷ்ய மகாஜனங்கள், சோவியத் ஆட்சி ஏற்பட்ட இருபத்தைந்தாவது வருஷக் கொண்டாட்டத்தைக் கொண்டாடினார்கள். இந்தக் கொண்டாட்டத்தை அவர்கள் உற்சாகத்தோடு கொண்டாடவில்லை; ஆனால் உறுதியோடு கொண்டாடினார்கள். ஏன்? அவர்களுடைய புனிதமான வாழ்க்கையை, சுதந்திர வாழ்க்கையை, பலாத்கார சக்திகள் தாக்கிக்கொண்டிருந்தன. அந்தச் சக்திகளை அவர்கள் எதிர்த்துக்கொண்டிருந்தார்கள். தங்கள் சுதந்திர வாழ்க்கையைக் காப்பாற்றிக்கொள்ள அவர்கள் மகத்தான தியாகங்களைச் செய்து

கொண்டிருந்தார்கள். யுத்த களத்திலே அணிவகுத்து நின்ற போர்வீரர்கள், தங்கள் கைக்குத் துப்பாக்கி தூக்கும் சக்தி இருக்கிறவரையில், கால்களுக்கு நடக்கும் சக்தி இருக்கிறவரையில், தேகத்திற்கு மூச்சுவிடும் சக்தி இருக்கிறவரையில் போரிடுவதாகப் பிரதிக்ஞை செய்துகொண்டார்கள். அவர்களைச் செங்கொடியின் நிழல்காத்தது; லெனினுடைய ஆத்மா ஆசீர்வதித்தது. ருஷ்ய மகா ஜனங்கள் அத்தனைபேரும் ஒன்றுசேர்ந்து ஒரே குரலில் "எங்களுக்குத் தோல்வி ஏற்படுமா? நீதியே, நீ கூறு" என்று நீதியை நோக்கிக் கேட்டார்கள். யாரையும் இரங்கிக் கேட்கவில்லை; யாரிடமும் பிரார்த்தனை செய்துகொள்ளவில்லை. சுமார் முப்பது மாதங்கழித்து, நீதி, அவர்கள் பட்சம் தீர்ப்புக் கூறிவிட்டது. வெற்றி! வெற்றி!!

இந்த வெற்றி ருஷ்யர்களுக்கு எப்படிக் கிடைத்தது? ஜெர்மானியர்கள், விசாலமான போர் முகத்தை வகுத்துக் கொண்டு அதனைச் சமாளிக்க முடியாமல் திணறிப் போனார்கள்; ருஷ்யாவின் சீதோஷ்ண ஸ்திதி ஜெர்மானியர்களுக்குப் பெரிய விரோதியா யிருந்தது; ஜெர்மானியர்களுக்கு, அவர்களுடைய ஆக்கிரமிப்புக் குட்பட்டிருந்த நாடுகளிலிருந்து கிடைத்த உதவியைக் காட்டிலும் ருஷ்யர்களுக்கு பிரிட்டன், அமெரிக்கா முதலிய சிநேக நாடுகளிலிருந்து கிடைத்த உதவி அதிகமா யிருந்தது; * ருஷ்யப் போர் முனையில் ருஷ்யர்கள் காட்டிவந்த பலமான எதிர்ப்பினால் ஜெர்மானியர்கள் மிகவும் சங்கடப்பட்டுக்கொண்டிருந்த காலத்தில், பிரிட்டிஷ் - அமெரிக்க ஆகாய விமா

---

* இந்த உதவி, ருஷ்யர்களுக்குத் தேவையான அளவுக்குத் தேவையான காலத்தில் கிடைக்கவில்லை யென்பதும், தாங்கள் எதிர்பார்த்த காலத்தில் அமெரிக்காவும் பிரிட்டனும் மேற்கு ஐரோப்பாவில் இரண்டாவது போர் முனையை ஏற்படுத்தி ஜெர்மானியர்களுடைய படைபலத்தையும் கவனத்தையும் திருப்பவில்லையென்ற குறை ருஷ்யர்களுக்கு இருந்து வந்ததென்பதும் எல்லோரும் அறிந்த விஷயங்கள் தானே?

னப் படைகள் ஜெர்மனியின் பல பாகங்களை, சிறப்பாகத் தொழிற் பிரதேசங்களைத் தாக்கி அதிகமான சேதத்தை உண்டுபண்ணி வந்தன; இந்தமாதிரியான காரணங்களி ஞல்தான் ருஷ்யர்களுக்கு வெற்றி கிடைத்தது; அதாவது ஜெர்மானியர்களுடைய பலவீனந்தான் ருஷ்யர்களுடைய வெற்றிக்குக் காரணம் என்று சிலர் கருதுகின்றனர். இங்ஙனம் கருதுகின்றவர், ருஷ்யாவைத் தங்கள் முதுகுப் பக்கம், வேண்டுமென்றே வைத்துப் பார்க்கிறவர்கள்; ருஷ்யாவைப் பாராட்டி விட்டால் எங்கே தாங்கள் சுரண்டிக்கொண்டு வருவது அநியாயம் என்று உலகத்தின் பெரும்பான்மையோராயுள்ள ஜன சமூகத்தார் கருதி விடுவரோ என்று அஞ்சுகிறவர்கள். ஆதலின் இவர்களுடைய கருத்துக்கு நாம் ஒரு மதிப்பு வைக்க வேண்டியதில்லை.

இன்னுஞ் சிலர் நினைக்கலாம், ருஷ்யர்கள் அதிகமான தேசபக்தி யுடையவர்கள், அவர்களுடைய தேச பக்தியே அவர்களுக்கு வெற்றியை வாங்கிக் கொடுத்தது என்று. அப்படியானல், ஜெர்மானியர்களுடைய தேச பக்தி, ஜப்பானியர்களுடைய தேச பக்தி, ருஷ்யர்களுடைய தேச பக்தியைக் காட்டிலும் எந்த விதத்தில் குறைவு? தங்களைக் காட்டிலும் மிஞ்சின படை பலத்திற்குத் தலை வணங்கிக்கொடுத்த ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் முதலிய நாடுகள் தேச பக்தி இல்லாதவை யென்று சொல்ல முடியுமா? எனவே ருஷ்யர்களுடைய தேச பக்தியே அவர்களுடைய வெற்றிக்கு முக்கிய காரணம் என்று சொல்ல முடியாது. ஆனல், ஒன்றைமட்டும் கூறவேண்டும். யுத்தத்தின் தொடக்கத்தில் ருஷ்யர்களுக்கு ஏராளமான பொருட்சேதமும், லட்சக் கணக்கில் உயிர்ச்சேதமும் * ஏற்பட்டபோதிலும் அவர்களில் ஒரு தேசத்

* முதல் மூன்றுமாத யுத்தத்தில் சுமார் பத்து லட்சம் ருஷ்யர்கள் உயிர் துறந்தார்கள் என்று ஒரு கணக்கு கூறுகிறது.

துரோகிகூட, தக்க சமயத்தில் சத்துருக்களுக்கு நாட்டைக் காட்டிக் கொடுத்து விடுகிற ஒரு மகா பாபிகூட தோன்றவேயில்லை. இதற்கு ருஷ்யாவின் அரசியல் அமைப்பும், சமுதாய வாழ்க்கையுமே காரணம். ஜனங்களுடைய பொருளாதார நிலைமையும், அவர்களிடத்திலேயுள்ள மனிதத் தன்மையும் வளம் பெறுவதற்கும் வளர்ச்சியடைவதற்கும் எந்த அரசியலமைப்பு உதவியாயிருக்கிறதோ அந்த அரசியலமைப்பின் கீழ்வாழும் பிரஜைகளிடத்திலே கோழைத்தனமோ, துரோக சிந்தனையோ காணவே முடியாது.

அப்படியானல் ருஷ்ய வெற்றியின் ரகசியங்களென்ன? ருஷ்யாவை நல்ல கண்ணுடன் பார்க்கும் ஓர் அறிஞன் பின் வரும் காரணங்களைக் கூறுகிறான் :—

1. ருஷ்யாவில் ஒரு தலைமையின்கீழ் ஒரு கட்சிதான் இருக்கிறது. அரசாங்கத்திலும் ராணுவத்திலும் உள்ள எல்லா உயர்தர உத்தியோகஸ்தர்களும் இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள். ருஷ்ய ராணுவம் ஒரே நோக்கமுடைய ராணுவம். அதனுடைய அரசியல் நோக்கங்களுக்கும் ராணுவ நோக்கங்களுக்கும் முரண்பாடு கிடையாது.

2. ருஷ்ய ராணுவத்தில் சேர எல்லாருக்கும் இடமுண்டு. ராணுவத்தில் மேலும் மேலும் உயர் பதவிகள் அடைய எல்லாருக்கும் வசதியுண்டு. ருஷ்ய ராணுவம் ஒரு ஜனநாயக ராணுவம். அதன் அடிப்படையில் எவ்வித ஏற்றத்தாழ்வுகளும் கிடையாது. தளகர்த்தர்களில் பலர், கல்வி வாசனையில்லாத பெற்றோர்களின் பிள்ளைகள். அவர்களுக்கு இப்பொழுது தெரிந்திருப்பவையெல்லாம் செம்படையிலிருந்து அவர்கள் கற்றுக் கொண்டது. செம்படைத் தலைவர்கள் ஏறக்குறைய எல்லோரும் தொழிலாளர் வர்க்கத்தில் உதித்தவர்கள்.

3. ராணுவத் தலைவர்களுக்கோ, அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கோ, தொழில் ஸ்தாபனங்கள் முதலியவை

களில் போட்டுவைக்கக் கூடிய மாதிரியான மூலதனம் அல்லது பங்குகள் எதுவும் கிடையாது. இதனால் அவர்களுடைய சொந்தப் பொருளாதார நிலைமைக்கும், தேசத்தின் பொது நலனுக்கும் முரண்பாடு ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு இல்லை. சத்துருக்கள், நிச்சயமாக ஓர் இடத்தைக் கைப்பற்றிக் கொள்வார்களென்று தெரிந்தால், அந்த இடத்தில் சத்துருக்களுக்கு உபயோகமாகக்கூடிய பொருள்களை எல்லாம் அழித்து விடுவதென்ற முறையை ருஷ்யர்கள் கையாண்டார்கள். இந்த முறையை அநுஷ்டிப்பதனால் தங்களுடைய சொந்த சொத்துக்கள் நஷ்டமாகி விடப்போகிறதே யென்ற கவலை இந்த ராணுவத் தலைவர்களுக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் இல்லை. பொருள்களைப் பதுக்கி வைத்தல், பொருள்களின் விலையை உயர்த்திக்கொண்டு போதல், அதிக லாபம் சம்பாதித்தல் இப்படிப்பட்டவைகளை யெல்லாம் சட்ட மூலமாகத் தடுத்து விடுவதனால் மேற்படி ராணுவத் தலைவர்களோ, அரசாங்க உத்தியோகஸ்தர்களோ எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை.

4. ருஷ்ய ராணுவத்தை ஒரு சர்வதேச ராணுவம் என்று சொல்லவேண்டும். ருஷ்யர், உக்ரேனியர், உஸ்பெக்கர், மங்கோலியர், யூதர், ஜார்ஜியர் இப்படிப் பல ஜாதியினர் இந்த ராணுவத்தில் உயர்தர உத்தியோகஸ்தர்களா யிருக்கிறார்கள். ஜாதி வேற்றுமை காரணமாகத் தனிப்பட்டவருடைய முன்னேற்றம் எந்த விதத்திலும் தடைப்படுவதில்லை. இதே மாதிரி சோவியத் சமுதாயத்திலும் இருப்பதால், ராணுவத்தில் சேர்கிறவர்கள் படித்தவர்களாகவும் புத்திசாலிகளாகவும் இருக்கிறார்கள்.

இவை தவிர, ருஷ்யர்களுடைய வெற்றிக்கு இன்னும் சில காரணங்களையும் கூறலாம். மற்ற நாடுகளில் படைக்கு ஆள் திரட்டுவ தென்பதுண்டு. ஆனால் ருஷ்யாவில் படைக்கு ஆட்கள் வந்துசேர்ந்தார்கள். இந்த இரண்டுக்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கிற தல்லவா?

ருஷ்யர்களுக்குத் தங்களுடைய அரசாங்கத்தினிடத்திலே பரிபூரண நம்பிக்கை இருந்தது. தங்களுடைய சொந்த நம்பிக்கைதான், அதாவது தன்னம்பிக்கைதான் திரண்டு அரசாங்கமாக இயங்குகிறது என்று அவர்கள் உணர்ந்திருந்தார்கள். தங்களுடைய வாழ்க்கையின் லட்சியமென்ன என்பதை அவர்கள் நன்குதெரிந்து கொண்டிருந்தார்கள். அந்த லட்சியத்தை யடைவதற்கான திட்டங்களையும் வகுத்துக் கொண்டிருந்தார்கள். சுருக்கமாகத் தங்களைப்பற்றியும், தங்களுடைய சொந்த வாழ்க்கையைப் பற்றியும், சமுதாய வாழ்க்கையைப் பற்றியும் நன்கு அறிந்து கொண்டிருந்தார்கள். இதனால் வெற்றி தோல்விகளைச் சமநோக்குடனேயே பார்த்தார்கள். 'அஞ்சுவது யாதொன்றுமில்லை' என்ற ஒரே உறுதியுடன்தான் அவர்கள் போர்க்களத்தில் பிரவேசித்தார்கள். அவர்களுடைய அஞ்சாமைக்கு ஒரு சிறிய உதாரணம். ஒரு சமயம் போர்முனையின் ஒருபகுதியில் ஜெர்மானியர்களுடைய டாங்கிப்படைகள் மலைக்கூட்டங்கள் மாதிரி வந்துகொண்டிருந்தன. இந்தப் பகுதியில் ருஷ்ய காலாட்படைகளின் தலைவனாயிருந்தவன் ஸெலியனவ் என்பவன். மேற்படி டாங்கிப் படைகள் வருவதைப்பார்த்து, இவனுடைய காலாட்படையினர் பயந்துவிட்டனர்; நாலாபக்கங்களிலும் சிதறி ஓட ஆரம்பித்தனர். ஒரே குழப்பமாயிருந்தது. ஸெலியனவ் என்னசெய்தான்? கையிலே ஒரு சிறிய சாட்டையை எடுத்துக்கொண்டான்; ஜெர்மானிய டாங்கிகள் வருகின்ற திக்கை நோக்கி நடந்தான். அந்த டாங்கிகளுக்குப் பயந்து ஓடிவருகிற ருஷ்யப் போர்வீரர்களை ஒவ்வொருவராக நிறுத்தி, கொஞ்சங்கூட நிதானங்குலையாமல் "எங்கே போகிறாய் அப்பனே? இந்த டாங்கிகள் என்ன, மனிதர்கள் செய்ததுதானே? மனிதர்கள் செய்ததை மனிதர்களால் அழிக்க முடியாதா? நிச்சயமாக அழிக்கமுடி

யும்" என்று சொல்லிவந்தான். அவர்களுக்கு வெட்கம் வந்துவிட்டது. முதுகுக்குப்பதில் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள் டாங்கிகள் பக்கம். அவ்வளவுதான். டாங்கிப்படைகள் பின்வாங்கும்படியாக ருஷ்ய காலாட் படையினர் போரிட்டனர். அஞ்சாமை வெற்றியை அளித்தது.

இங்ஙனம் அஞ்சாத நெஞ்சம் படைத்த வீரர்களாகத் திகழ்ந்ததோடல்லாமல், தங்கள் நாட்டுக்காகத் தங்கள் சர்வத்தையும் சமர்ப்பணம் செய்யக்கூடிய தியாகிகளாகவும் விளங்கினர்கள் ருஷ்யர்கள். போர்க்களத்தில் வீரர்கள் உற்சாகம் குன்ருமல் போர்புரிய வேண்டுமென்பதற்காக, அவர்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்து கொடுப்பதற்காக, போரில் கலவாத மற்றவர்கள் தங்களுடைய தேவைகளைக் குறைத்துக் கொண்டார்கள்; இரவு பகலென்று பாராமல் உழைத்தார்கள்; சமுதாய வாழ்க்கை ஒழுங்காக நடைபெற்றுக்கொண்டு வருவதற்கு உதவியாயிருந்தார்கள். சில உதாரணங்களைக் கேளுங்கள்:

மிரோல் சிஸெல்யாட்டின் என்ற ஒரு கிழவன். அறுபத்திரண்டு வயது. இரும்பு வேலை செய்துகொண்டிருந்தான். அவனுக்கு மூன்று பிள்ளைகள், இரண்டு மாப்பிள்ளைகள், பதினேழு பேரப் பிள்ளைகள். அத்தனை பேரையும் போர்க்களத்திற்கு அனுப்பி விட்டான். தன்னுடைய பட்டரையில், இரண்டுபேர் செய்யவேண்டிய வேலையைத் தான் ஒருவனே செய்துகொண்டிருந்தான்.

செல்யா பின்ஸ்க் என்ற இடத்தில் யுத்த தளவாட உற்பத்திசாலை யொன்று உண்டு. அதில் வீரா ஐவனேவா என்ற பெண் வேலை செய்துகொண் டிருந்தாள். வயது பதினறுகூட ஆகவில்லை. பல தலைமுறையினர் ஒன்று சேர்ந்து சுமார் நூறு வருஷகாலம் தொடர்ச்சியாக எவ்வளவு துன்பங்களை அநுபவிக்கலாமோ அவ்வளவு துன்பங்களை இவள் ஒருத்தி, இந்த யுத்தத்தில் அநு

பலித்திருக்கிருள். சகோதர சகோதரிகள், அத்தை, மாமன், பாட்டன், பாட்டி முதலிய எல்லோரும் சேர்ந்து மொத்தம் முப்பத்தாறு பேர் இவள் குடும்பத்தினர். இந்த முப்பத்தாறு பேரில் இவள் ஒருத்தியே—இந்தச் சிறு பெண்ணே—உயிரோடு தப்பினுள். மற்றவர் அத்தனைபேரும் யுத்தத்திற்கு, ஜெர்மானியர்களுடைய கொடுமைகளுக்குப் பலியாகி விட்டனர். அத்தனை பேரை இழந்துவிட்டும் இவள் மேற்படி தொழிற் சாலையில் உற்சாகத்துடன் உழைத்துக்கொண் டிருந்தாள்.

இந்த மாதிரி எத்தனைபேர் தியாக மூர்த்திகளாயிருக்கிருர்கள்! எத்தனைபேருடைய செந்நீர் வீர சொர்க்கத்தை வளப்படுத்தி யிருக்கிறது! ஆனுல் ருஷ்யத் தாய்மார்கள் கண்ணீர் விடவேயில்லை. ஏனென்ருல் தங்களுடைய வயிறு புலிக்குகையல்ல என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது. அது, வீரத்தின் விளைநிலம், தேசத்தின் மானத்தைக் காப்பாற்றும் கோயில் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள்.

* * *

யுத்தம் முடிந்துவிட்டது. ருஷ்யர்கள், பழைய அடிப்படையின் மீது புதிய வாழ்க்கையைத் தொடங்கி விட்டார்கள். யுத்தத்தினுல் ஏற்பட்ட அழிவுகளைப்பற்றி அவர்கள் சிந்தித்துக்கொண் டிருக்கவில்லை. வருங் காலத்தை நிர்மாணம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அப்படி நிர்மாணம் செய்வதென்பது லேசான காரியமா? ஜெர்மானியர்கள் உண்டுபண்ணி யிருக்கிற பொருட் சேதத்தைப் பார்க்கிறபோது, இந்தப் புனர் நிர்மாண வேலை எவ்வளவு கடினமானதென்பது புலப்படும். உதாரணமாக ஜெர்மானியர்கள் 6,000 ஆஸ்பத்திரிகளையும், 33,000 பரிசோதனை சாலைகளையும், மருந்துச் சாமான்களையும் வைத்திய ஆயுதங்களையும் உற்பத்தி செய்கிற 60 தொழிற்சாலைகளையும், 976 ஆரோக்கிய ஸ்தலங்களை

யும், 656 ஓய்வுச் சாலைகளையும் நாசஞ் செய்திருக்கிறார்கள். அழிவின் இந்த ஓர் அமிசம் மட்டும் ருஷ்ய சமுதாயத்தின் சுகாதாரத்தை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதை நாம் சொல்லவேண்டுவதில்லை. இவையனைத்தையும் புனர் நிர்மாணம் செய்வதென்றால், பழையமாதிரி கொண்டுவருவ தென்றால், அது மிகவும் கடினமான காரியம் என்பதை நாம் சொல்ல வேண்டுவதில்லை. ஆயினும் சோவியத் அரசாங்கத்தார் இதனைச் சுலபமாகச் செய்து முடிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். 1941-ஆம் வருஷம் அரசாங்கத்தார், ஜனங்களின் சுகாதாரத்திற்கென்று சுமார் 1,950 கோடி ரூபாய் செலவழித்தனர்; 1945-ஆம் வருஷம் சுமார் 2,400 கோடி ரூபாய் செலவழிக்கின்றனர். 1944-ஆம் வருஷத்தைக் காட்டிலும் 1945-ஆம் வருஷத்தில், ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலும், மத்தியதரப் பள்ளிக்கூடங்களிலும் 28 லட்சம் புதிய பிள்ளைகள் படிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

இதேமாதிரி ஒவ்வொரு துறையிலும் செய்து வருகின்றனர். யுத்தங் காரணமாக ஜனங்களுடைய சுகாதாரம், கல்வி வசதி முதலிய எதுவும் பாதிக்கப்படக் கூடாதென்பது சோவியத் அரசாங்கத்தாரின் விருப்பம். இந்த விருப்பத்தைச் செய்து காட்டுகின்றனர்.

யுத்தத்தின் இடைக்காலத்தில் மூன்றாவது ஐந்து வருஷத்திட்டம் (1936-ஆம் வருஷத்திலிருந்து 1942-ஆம் வருஷம் வரை) பூரணமாக நிறை வேற்றப் படாமலேயே போய்விட்டதல்லவா? இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்துகிற மாதிரியில் நான்காவது ஐந்து வருஷத்திட்டமொன்றை வகுத்திருக்கின்றனர் சோவியத் அரசாங்கத்தார். 1946-ஆம் வருஷத்திலிருந்து 1950-ஆம் வருஷத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டிய இந்தத் திட்டப்படி, யுத்தத்திற்கு முன்னர் தேசத்தின் நிலைமை எப்படி இருந்ததோ அதைக் காட்டிலும் பல துறைகளிலும் அபிவிருத்

தியைக் காட்டக்கூடிய நிலைமைக்குக் கொண்டுவரத் தீர்மானித்திருக்கின்றனர். யுத்தம் முடிந்த ஆறு மாதத்திற்குள் இந்த நான்காவது ஐந்து வருஷத் திட்டம் தயாராகிவிட்ட தென்றால், சோவியத் தலைவர்கள், தேசத்தின் வருங்கால நல் வாழ்வில் எவ்வளவு தீவிர சிந்தனை யுடையவர்களா யிருக்கிறார்கள் என்பது தெரிய வரும். யுத்த காலத்தில் ராணுவத்திற்குத் தேவையான ஆயுதங்கள் முதலியவற்றை உற்பத்தி செய்துகொண் டிருந்த தொழிற்சாலைகள், இப்பொழுது 1945-ஆம் வருஷக் கடைசியில், சமாதான காலத்தில் ஜனங்களுக்கு அவசியமாக என்னென்ன தேவையோ அவைகளை யெல்லாம் உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டன.

சோவியத் அரசாங்கத்தின்கீழ் விஞ்ஞான ஆராய்ச்சியானது ருஷ்யாவில் மிகவும் முன்னேற்ற மடைந்து வந்தது என்பதைப்பற்றி ஏற்கனவே கூறியுள்ளோம். இந்த யுத்தமானது மேற்படி விஞ்ஞான முன்னேற்றத்தை இன்னமும் துரிதப் படுத்தி விட்டது. இப்பொழுது ருஷ்யாவில் ஆராய்ச்சி செய்யப்படாத விஷயங்களே இல்லை யென்று கூடச் சொல்லி விடலாம். "செத்தவனைப் பிழைக்க வைக்க முடியுமா?" என்று சாதாரணமாகக் கேட்பதுண்டு. ஆனால் இது சாத்தியம் என்று ருஷ்ய விஞ்ஞானிகள் இப்பொழுது நிரூபித்துக் காட்டி யிருக்கிறார்கள். டாக்டர் வி. ஏ. நெகோவ்ஸ்கி * என்ற நிபுணனுடைய தலைமையில் 'செத்தவனைப் பிழைக்கவைக்க முடியுமா' என்ற ஆராய்ச்சி 1944-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் தீவிரமாகத் தொடங்கி, அந்த வருஷ முடிவுக்குள் வெற்றியும் கண்டுவிட்டார்கள். ரத்தப் போக்கின் காரணமாகவும், திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியினாலும் இறந்து போகிறவர்களைப் பிழைக்க வைக்க முடியும்; ஆனால் அதிக வயதான

* Dr. V. A. Negovsky. இது சம்பந்தமான ஆராய்ச்சி விவரங்களுக்கு Vorks Bulletin 1944 No. 7 பார்க்க.

வர்கள், வியாதியஸ்தர்கள், முக்கியமான பாகங்களில் காயமடைந்தவர்கள் ஆகிய இப்படிப்பட்டவர்கள் இறந்து போனல் அவர்களைப் பிழைக்கவைக்க முடியாது. இது முடியா விட்டாலும், அறியாமையாலும், கவனக்குறைவாலும், சரியான சிகிச்சையின்மையாலும் ஏற்படுகிற அகால மரணங்களை இந்த ஆராய்ச்சியினல் நிறுத்திவிட முடியுமல்லவா? சில நாடுகளில், நடமாடிக் கொண்டிருக்கிற மனிதனை சாம்பல் குவியலாக்கிவிட சுலபமான வழியென்ன என்பதைப்பற்றி விஞ்ஞான நிபுணர்கள் ஆராய்ச்சிசெய்து வெற்றியும் கண்டுவிட்டார்கள். ஆனல் ருஷ்யாவில், இறந்துபோக வேண்டியவர்களைப் பிழைக்க வைக்கிருர்கள். மனிதனுடைய அறிவு நல்லதுக்குத்தான் உபயோகப்பட வேண்டும், அப்படி உபயோகப்படுகிற அறிவுக்குத்தான் அறிவு என்று பெயர் என்ற உண்மையை சோவியத் விஞ்ஞானிகள் செயலிலே கொண்டு வந்து காட்டியிருக்கிருர்கள். இந்த ஆராய்ச்சியின் விளைவாக ருஷ்யாவின் ஜனத்தொகை, அடுத்த தலைமுறைக்குள், மற்ற நாடுகளைக் காட்டிலும் அதிகப்பட்டிருக்கும் என்று அறிஞர்கள் கருதுகிருர்கள்.

இந்த மகா யுத்தத்தில் வெற்றி பெற்றதன் காரணமாக சோவியத் ருஷ்யா, உலக வல்லரசுகளின் மத்தியில் ஒரு மேலான ஸ்தானத்தை யடைந்திருக்கிறது. 1938-ஆம் வருஷம் ம்யூனிக் ஒப்பந்தம் நிறைவேற்றப்படுகிற காலத்தில் எந்த ருஷ்யா புறக்கணிக்கப் பட்டதோ அதே ருஷ்யா 1945-ஆம் வருஷம் மற்ற வல்லரசுகளால் கௌரவிக்கப் படுகிறது; ஏன்? அஞ்சவும் படுகிறது.

பொதுவாக, சோவியத் ருஷ்யா எல்லாத்துறைகளிலும் அடைந்திருக்கிற முன்னேற்றத்தைப் பார்க்கிற போது, ஓர் அறிஞன் கூறுகிற மாதிரி "இஃது உண்மையாயிருக்கமுடியாது; ஆனல் உண்மையாகவே இருக்கிறது" என்றே நாமும் சொல்லவேண்டி யிருக்கிறது.

# சோவியத் சமதர்மக் குடியரசு நாடுகளின் ஐக்கிய ராஜ்யம்



# அநுபந்தம் 1

## ருஷ்ய சமஷ்டியில் சேர்ந்துள்ள குடியரசு நாடுகளின் விவரம்

சோவியத் சமதர்மக் குடியரசு நாடுகளின் ஐக்கிய ராஜ்யத்தில், சம அந்தஸ்தும், சம உரிமையும், பூரணப் பொறுப்பாட்சியும் பெற்ற தனித்தனியான பதினாறு குடியரசு நாடுகள் சமஷ்டியாகச் சேர்ந்திருக்கின்றன. ஏறக்குறைய இந்த ஒவ்வொரு குடியரசு நாட்டிலும், மேற்சொன்ன விதமாகச் சம அந்தஸ்தும் சம உரிமையும் பூரணப் பொறுப்பாட்சியு முடைய அநேக சிறிய பிரதேசங்கள் அல்லது ஜில்லாக்கள் சமஷ்டியாக இணைந்திருக்கின்றன. ருஷ்ய அரசியல் அமைப்பு, பொதுவாக, ஒன்றுக்குள் ஒன்று பின்னிக்கொண்டிருக்கிற சங்கிலி இணைப்பு மாதிரி இருக்கிறதென்று சொல்லலாம். சமஷ்டியாகச் சேர்ந்திருக்கிற பதினாறு நாடுகள் அல்லது மாகாணங்கள், அவைகளின் ஜனத்தொகை முதலிய விவரங்கள் வருமாறு:—

| | பெயர் | தலைநகரம் | ஜனத்தொகை |
|---|---|---|---|
| * 1 | ருஷ்யக் குடியரசு நாடு Russian Soviet Federated Socialist Re-public | மாஸ்கோ | 10,92,78,614 |
| * 2 | உக்ரேன் | கிவ் | 3,09,60,221 |
| * 3 | பைலோ ருஷ்யா | மின்ஸ்க் | 55,67,976 |
| 4 | ஜார்ஜியா | டிப்ளிஸி | 35,42,289 |
| 5 | அர்மீனியா | எரிவான் | 12,81,599 |
| 6 | அஸெர்பைஜான் | பாக்கூ | 32,09,727 |
| 7 | உஸ்பெக்ஸ்தான் | டாஷ்கெண்ட் | 62,82,446 |
| 8 | தாஜிக்ஸ்தான் | ஸ்டாலினாபாட் | 14,85,091 |
| 9 | துர்கமேனியா | அஷ்காபாத் | 12,53,985 |
| 10 | கிர்கிஸ்தான் | ப்ருன்ஸே | 14,59,301 |
| 11 | காஜக்ஸ்தான் | அல்மா ஆட்டா | 61,45,937 |
| *†12 | மோல்டேவியா | கிஷனேவ் | 22,00,000 |
| 13 | கரேலியா - பின்லாந்து | பெட்ரோஸாவோட்ஸ்க | 69,728 |
| *14 | எஸ்தோனியா | டாலின | 11,31,000 |
| *15 | லிதுனியா | வில்னியஸ் | 28,80,000 |
| *16 | லாட்வியா | ரிகா | 19,71,000 |

* இக்குறியிடப்பெற்ற பிரதேசங்களில் பெரும் பகுதி, ருஷ்ய - ஜெர்மானிய யுத்தத்தின்போது ஜெர்மானியர்களுடைய ஆக்கிரமிப்புக்குட் பட்டிருந்தது.

† கடைசியில் கூறப்பட்டுள்ள ஐந்து பிரதேசங்களும் 1937-ஆம் வருஷத்து அரசியல் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு சமஷ்டியில் சேர்ந்தன.

## அநுபந்தம்—2

### வருஷாந்தக் கொண்டாட்டங்கள்


பிரதி வருஷமும் கீழ்க்கண்ட வருஷாந்தக் கொண்டாட்டங்கள் ருஷ்யாவில் கொண்டாடப் படுகின்றன. இவை விடுமுறை நாட்கள்.

| | | |
|---|---|---|
| பிப்ரவரி | 23 | செம்படை தினம். |
| மார்ச்சு | 8 | சர்வதேச ஸ்திரீகள் தினம். (ஸ்திரீகளுக்கு மட்டும்.) |
| மே | 1 | தொழிலாளர் தினம். |
| ஜுலை | 16 | உடற் பயிற்சி தினம். |
| ஆகஸ்ட் | 18 | ஆகாயவிமானப் பயிற்சி தினம். |
| செப்டம்பர் | 3 | சர்வதேச இளைஞர் தினம். |
| நவம்பர் | 7 | புரட்சி தினம். |
| டிசம்பர் | 5 | அரசியல் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட தினம். |

அநுபந்தம் 3—சோவியத் அரசியல் அமைப்பு

# சோவியத் சமதர்மக் குடியரசு நாடுகளின் ஐக்கிய ராஜ்யம்

## UNION OF SOVIET SOCIALIST REPUBLICS



## அநுபந்தம்—4

### முக்கிய சம்பவங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1917 | நவம்பர் | 7 | சோவியத் அரசாங்கத்தின் ஸ்தாபிதம். |
| 1918 | ஜனவரி | 2 | பின்லாந்தின் சுதந்திரத்தை ருஷ்ய மந்திரிச் சபை அங்கீகரித்தது. |
| | ,, | 14 | பீட்ரோ கிராடில் லெனின் உயிருக்கு ஆபத்து. |
| | ,, | 16 | செம்படை அமைக்கப்பட்டது. |
| | பிப்ரவரி | 19 | விவசாய நிலங்கள் சமுதாயச் சொத்தாக்கப்பட்டு விட்டதாக அரசாங்க உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. |
| | மார்ச்சு | 3 | ப்ரெஸ்ட் - லிடோவ்ஸ்க் ஒப்பந்தம். |
| | ,, | 12 | சோவியத் அரசாங்கத்தின் தலைமை ஸ்தானம் (தலைநகரம்) பீட்ரோ கிராடிலிருந்து மாஸ்கோவுக்கு மாற்றப் பட்டது. |
| | ஏப்ரல் | 18 | சோவியத் அரசாங்கத்திற்கு விரோதமாகப் படையெடுத்து வந்த கோர்னிலோவ் கொல்லப்பட்டான்; அவனுடைய சேனைகள் முறியடிக்கப்பட்டன. |
| | ஜுலை | 17 | ஜார் குடும்பத்தினரின் மறைவு. |
| 1919 | | | 1918-ஆம் வருஷப் பிற்பகுதியிலும், 1919-ம் வருஷ முழுவதும், 1920- |

| | | |
|---|---|---|
| | | ஆம் வருஷ முற்பகுதியிலும் செம் படைகளுக்கும் வெண்படைகளுக் கும் பல இடங்களில் சண்டை. கடைசியில் செம்படையின் வெற்றி. |
| 1920 ஏப்ரல் | 25 | ருஷ்யாவின்மீது போலந்து படை யெடுத்தது. |
| மே | 31 | சோவியத் பிரதிநிதிகளும் பிரிட் டிஷ் பிரதிநிதிகளும், மறுபடியும் வியாபாரத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதைப் பற்றிப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாயின. |
| 1921 பிப்ரவரி | 25 | சோவியத் அரசாங்கம் ஆப்கானி ஸ்தானத்தோடு சிநேக ஒப்பந்தம் செய்து கொண்டது. |
| ,, | 26 | பாரசீகத்தோடு சிநேக ஒப்பந்தம். |
| மார்ச்சு | 16 | துருக்கியோடு சிநேக ஒப்பந்தம். |
| ,, | 18 | போலந்துடன் சமாதான ஒப்பந்தம். |
| நவம்பர் | 5 | மங்கோலியாவுடன் சிநேக ஒப்பந் தம். |
| 1922 ஏப்ரல் | 16 | ராபெல்லோ ஒப்பந்தம். |
| 1923 ஜுலை | 6 | ருஷ்யாவிலுள்ள எல்லா மாகாணங் களுக்கும் பூரணப் பொறுப்பாட்சி உரிமை அளிக்கப்பட்டு, எல்லா மாகாணங்களும் சேர்ந்த சமஷ்டி குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது. |
| 1924 ஜனவரி | 21 | லெனின் மரணம். |
| ,, | 26 | பீட்ரோ கிராட் நகரத்திற்கு லெனின் கிராட் என்று பெயர் மாற்றிக் கொடுக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 1928 அக்டோபர் | 1 | முதல் ஐந்து வருஷத் திட்டத்தின் ஆரம்பம். |
| 1930 ஆகஸ்ட் | 10 | கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. |
| 1934 செப் | 15 | சர்வ தேச சங்கத்தில் ருஷ்யா சேர்ந்து கொண்டது. |
| 1936 டிசம்பர் | 5 | புதிய அரசியல் திட்டம் அகில சோவியத் காங்கிரசினால் அங்கீகரிக்கப்பட்டது. |
| 1938 ஜனவரி | 12 | சோவியத்துகளின் சட்ட சபை, ஜாதிய சட்ட சபை இவைகளின் முதற் கூட்டம். |
| ,, | 17 | அரசாங்கத்தின் பிரசிடெண்டாக காலினின் தெரிந்தெடுக்கப் பட்டது. |
| 1939 மார்ச்சு | 10 | மாஸ்கோவில் சமதர்மக் கட்சியின் பதினெட்டாவது காங்கிரஸ் கூடியது. அதில் சோவியத் அரசாங்கத்தின் அந்நிய நாட்டுக் கொள்கையைப் பற்றி ஸ்டாலின் விளக்கியது. |
| ஆகஸ்ட் | 23 | ருஷ்ய - ஜெர்மானிய அனாக்கிரமிப்பு ஒப்பந்தம். |
| 1941 ஜனவரி | 10 | ருஷ்யாவும் ஜெர்மனியும் வியாபார ஒப்பந்தமும் சிநேக ஒப்பந்தமும் செய்து கொண்டன. |
| மே | 6 | அரசாங்க மந்திரிச் சபையின் தலைமைப் பதவியை ஸ்டாலின் ஏற்றுக் கொண்டது. மோலோடோவ், அந்நிய நாட்டு மந்திரிப் பதவியோடு |

| | | |
|---|---|---|
| | | உதவித் தலைவர் பதவியையும் ஏற்றுக் கொண்டது. |
| ஜூன் | 22 | ருஷ்ய-ஜெர்மானிய யுத்த ஆரம்பம். |
| ஜூலை | 13 | ஆங்கிலோ-சோவியத் ஒப்பந்தம். |
| ,, | 20 | ஸ்டாலின், பிரதம மந்திரியோடு பாதுகாப்பு மந்திரிப் பதவியையும் ஏற்றுக்கொண்டது. |
| ஆகஸ்ட் | 16 | ஆங்கிலோ-சோவியத் வியாபார ஒப்பந்தம். |
| செப்டம்பர் | 17 | ருஷ்யாவுக்கு பத்துகோடி டாலர் கடன் கொடுப்பதாக அமெரிக்கா கூறியது. |
| அக்டோபர் | 17 | யுத்த அவசியத்தை முன்னிட்டு அரசாங்கத்தின் தலைநகரம் மாஸ்கோவிலிருந்து கியுபிஷேவ் என்ற நகரத்திற்கு மாற்றப்பட்டது.* |
| 1942 மே | 26 | ஆங்கிலோ-ருஷ்ய சிநேக ஒப்பந்தம் லண்டனில் கையெழுத்திடப் பெற்றது. |
| ஜூன் | 18 | அமெரிக்கா, கடனாகக் கொடுத்த தொகையை முப்பது கோடி டாலராக அதிகப்படுத்தியது. |
| 1944 அக்டோபர் | 9 | பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலும் அந்நிய நாட்டு மந்திரி அந்தோனி ஈடனும் மாஸ்கோவில் ஸ்டாலினைச் சந்தித்தது. |

* இந்த நகரத்தின் ஜனத்தொகை 3,90,267.

| | | |
|---|---|---|
| 1944 அக்டோபர் | 23 | பிரான்சில் டி'கால் தலைமையில் ஏற்பட்ட தற்காலிக அரசாங்கத்தை சோவியத் அரசாங்கம் அங்கீகரித்தது. |
| டிசம்பர் | 10 | ருஷ்யாவுக்கும் பிரான்சுக்கும் பரஸ்பர சிநேக ஒப்பந்தம். |
| 1945 ஏப்ரல் | 22 | ருஷ்யப் படைகள் பெர்லின் நகரத்திற்குள் பிரவேசித்தன. |
| ,, | 28 | முஸோலினியின் மரணம். |
| மே | 2 | பெர்லின் நகர வீழ்ச்சி. இத்தலியிலிருந்த ஜெர்மானியப் படைகள் சரணாகதியடைந்தன. |
| ,, | 7 | ஜெர்மானியப் படைகள் யாவும் சரணாகதி யடைந்தன. சரணாகதிப் பத்திரம் ரீம்ஸ் நகரத்தில் கையெழுத்திடப்பெற்றது. |
| ,, | 8 | உலக மெங்கும் வெற்றிக் கொண்டாட்டம். |

## இந் நூல் எழுதுவதற்குத் துணையாயிருந்த

## சில நூல்கள்


1. Soviet Communism - A New Civilisation - 2 volumes
   — *Sidney and Beatrice Webb*
2. The Russian Revolution - 2 volumes
   — *W. H. Chamberlain*
3. Soviet Russia
   — *W. H. Chamberlain*
4. The Challenge of Russia
   — *Sherwood Eddy*
5. Russia Today and Yesterday
   — *E. J. Dillon*
6. Russia ...
   — *Sir Bernard Pares*
7. New Minds, New Man ?
   — *Thomas Woody*
8. The Mind and Face of Bolshevism
   — *Rene Fulop Miller*
9. Stalin's Russia and the Crisis of Socialism
   — *Max Eastman*
10. Ten Years in Soviet Moscow
    — *Alexander Wicksteed*

11. Life Under Soviets
— *Alexander Wicksteed*

12. Dreiser Looks at Russia
— *Theodore Dreiser*

13. U. S. S. R. Speaks for Itself - 4 volumes

14. U. S. S. R. — The Strength of Our Ally

15. In Russia Now
— *Sir Watler Citrine*

16. Russia Resists
— *Pat Sloan*

17. Russia in Peace and War
— *Pat Sloan*

18. Lenin's Russia
— *Louis Fischer*

19. The Russian Revolution
— *Nicholas Berdyaev*

20. The History of the Russian Revolution
— *Leon Trotsky*

21. Crucification of Liberty
— *Alexander Kerensky*

22. A History of Russia
— *G. Vernadsky*

23. Foreign Trade in the U. S. S. R.
— *J. D. Yanson*

24. The Soviet Theatre
— *P. A. Markov*

25. Lenin the Man
— *Klara Zetkin*

26. Glimpses of World History
— *Jawaharlal Nehru*

27. Soviet Sidelights
— *M. R. Masani*

28. Who is not a Communist?

29. I will not Rest
— *Romain Rolland*

30. Democracy and Socialism
— *Arthur Rosenberg*

31. Political Philosophy from Plato to Bentham
— *Geiser and Jaszi*

32. Belief and Action
— *Viscount Samuel*

33. Pictorial History of Russia
— *Alexander Howard and Ernest Newman*

34. Russia
— *Louis Segal*

35. Glory and Bondage
— *Edgar Snow*

36. U. S. S. R. Her Life and Her People
— *Maurice Dobb*

37. Soviet Russia, The secret of her success
— *K. S. Hirlekar*

38. U. S. S. R. The Story of Soviet Russia
— *Walter Duranty*

39. Stalin and eternal Russia
— *Walter Kolarz*

40. The A to Z of the Soviet Union

etc., etc.

# பொருட் குறிப்பு


அகில ஐக்கிய மகாநாடு 106
அகில ருஷ்ய சோவியத் காங்கிரஸ் 135, 136
அந்நிய நாட்டுக் கொள்கை 227, 228
அநுதாபிகள் 102
அபேட்சகர்கள் 98, 99
அபேதவாதம் 78, 249
அபேதவாத ஜனநாயகக் கட்சி 90-93
அலெக்ஸாந்தர் - இரண்டாவது 12, 14
அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் 217-19, 221, 223, 225, 258
ஆங்கிலோ - சோவியத் வியாபார ஒப்பந்தம் 63, 260, 261
ஆசிரியர்கள் அந்தஸ்து 194
ஆர்ச்-ட்யூக் பெர்டினந்து 32
ஆஸ்பத்திரிகள் 197, 199
,, பிரயாண 202
இளைஞர் இயக்கம் 112-17
உபகாரச் சம்பளம் 204-06
உமேதவாரிகள் 97
உழைப்பும் ஊதியமும் 248
எஸ்தோனியா 62, 220, 287
ஐந்து வருஷத்திட்டங்கள் 155, 283
ஐரோப்பாவின் தானியக் களஞ்சியம் 224
ஐரோப்பிய மகாயுத்தம் - 1914 32, 92, 198, 209
ஓட்டுரிமை மறுப்பு 124, 125
ஓய்வுபெற உரிமை 205
கட்சி நிருவாகக் கமிஷன் 107
கணக்குப் பரிசோதனைக் கமிஷன் 107
கம்யூனிஸம் 249
கர்ப்பச்சிதைவு 189
கர்ப்பஸ்திரீகள் 184-88
கல்வி-தாய் மொழிமூலம் 192
கல்வியின் நோக்கம் 195
கல்வி - வயது முதிர்ந்தவர்களுக்கு 191
காதரைன் 8
காபோன் பாதிரி 21
காம்ஸோமால் 112-14
கார்ல் மார்க்ஸ்-வாழ்க்கை வரலாறு 17-18
கிண்டர்கார்டன் பள்ளிக்கூடங்கள் 194
கிராமங்களின் தற்போதைய நிலை 170-71
கிராம சோவியத் 127-30, 141
குடும்ப வாழ்க்கை 188
குலாக்குகள் 71,166

குழந்தைகள்-அதிகப்
படியான 187
குழந்தைப் பாதுகாப்பு 183,194
குழந்தைகள் வளர்ச்சி 201
கூட்டுப்பண்ணை 168-70
கெரென்ஸ்கி 44-45, 47
கோமிண்டர்ன் 117, 112, 215
கௌரவப் பட்டங்கள் 255
சமதர்மக் கட்சி 88-112,122,126
சமதர்மக் கட்சியின்
மூன்று நியமங்கள் 99-101
சமதர்ம தத்துவம் 79-87, 106
சமதர்ம நாகரிகத்தின்
விசேஷ அமிசங்கள் 235-44
சமஷ்டி அரசாங்கத்தின்
அதிகாரங்கள் 139
சர்வதேச சங்கம் 211, 214, 221, 229
சிவப்புச் சதுக்கம் 75
சிறிய அக்டோபரிஸ்ட்டு
கள் 112-13, 116
சினிமா படங்கள் 195
சுகாதார நிலைமை—ஜார்
காலத்தில் 197-98
சுகாதார வசதிகள் 199, 201
சுதேசியம் 252
செம்படை 61
சோவியத் 23
சோவியத் ஆட்சி சர்வாதி
கார ஆட்சியா? 244-46
சோவியத் சட்டத்தின்
சாரம் 150-52
சோவியத் சமதர்மக் குடி
யரசு நாடுகளின் ஐக்கிய
ராஜ்யம் 2, 73, 133
சோஷலிஸம் 249
டாக்டர்கள் 201-03
டிசம்பரிஸ்ட்டுகள் 11
டூமா 26-30, 38, 39
ட்ரோட்ஸ்கி-வாழ்க்கை
வரலாறு 39
தலைவர்களின் தன்மைகள் 253
தற்காலிக அரசாங்கம் 41, 43, 46, 48, 93
தனிச் சொத்துரிமை 249-50
தெய்வத் திருத்தந்தை—
ஜார் 21, 72
தெய்வத் திருநாடு 71
தொழிற்கட்சி அரசாங்கம்—
இங்கிலாந்தில் 210
தொழிலாளர் முன்னேற்
றம் 175-76
தொழிலாளர் வேலைநேரம் 200
நகர சோவியத் 130-32
நாகரிகத்தின் தராதரம் 233-35
நாரோத்னிச்குகள் 12, 13
நிக்கோலாஸ்— இரண்டா
வது 5, 14, 21, 23, 30, 39
,, முதலாவது 10
நிலச் சுவான்தார்களும்
விவசாயிகளும் 53-56
நூல்கள் 193
நெப்போலியன் 9, 10
பகுதி சோவியத் 132
பத்திரிகைகள் 193

பயோனீர்கள் 112, 115-16
பார்க்குகள் 206-07
பாலிட்பீரோ 107-10
பால்டிக் நாடுகள் 216, 220
பிரதம சபை 102, 105-06
பிரான்ஸ் — பிரிட்டன் — ருஷ்யா ஒப்பந்தம் 29
பிரெஞ்சுப் புரட்சி 9
பிரெசிடியம் 137, 138
பின்லாந்து 221-22
புதிய ஒழுங்கு 224
புதிய பொருளாதாரத் திட்டம் 64, 65, 66, 211
புரட்சிகள் 231-32
புரட்சி-அக்டோபர் 47-48, 196
புரட்சி-மார்ச்சு 36-40
புஸ்தக சாலைகள் 193
பெண் கல்வி 190
பெண்களின் நிலைமை-சோவியத் ராஜ்யத்தில் 180-81
,, ஜார் காலத்தில் 178
பெண்களின் வீரம் 181
பெண்களுக்கு ரஜா 186
பெஸ்ஸரேபியா 223
பொது உணவுச் சாலைகள் 183
பொதுவுடைமைக் கொள்கை 57-58
பொருட்காட்சி சாலைகள் 193
பொருளாதார மந்தம் 213
போக்குவரத்து சாதனங்கள் 176
போலந்து 216, 220
போல்ஷெவிக் இயக்கம் 32
போல்ஷெவிஸம் 78, 215
ப்ரெஸ்ட்லிடோவ்ஸ்க் ஒப்பந்தம் 52-53, 59, 209
ப்யூடலிஸம் 87
மாகாண சபை 106
மாகாண மகா நாடுகள் 106
மாதிரிப்பண்ணைகள் 171, 172
மெட்ரோ 251
மென்ஷெவிக் 19
மென்ஷெவிக்கர்கள் 19, 42, 92
ம்யூனிக் 216, 285
யந்திரத் தொழில் அபிவிருத்தி 172-74
யுத்த காலப் பொதுவுடைமை 58, 64
ரத்த ஞாயிறு 22, 23
ராபெல்லோ ஒப்பந்தம் 210
ராஸ்புட்டீன் 30, 31, 35
ருமேனியா 212, 223
ருஷ்யாவில் காண முடியாத அமிசங்கள் 254
,, சிறுபான்மைச் சமூகத்தினர் 144-46, 148
,, ராணுவப்பயிற்சி 140-42
,, வக்கீல்கள் 142-44
,, ஜாதிய சம உரிமை 146-49
ருஷ்யர்களின் சுபாவம் 3
ருஷ்ய ராஜ்யத்தின் ஸ்தாபகன் 4

ருஷ்ய ஜப்பானிய யுத்தம் 20, 24, 196
ருஷ்ய - ஜெர்மானிய யுத்தம் 226, 263-66
" யுத்தத்தில் சேதம் 266
ருஷ்யப் பாட்டு 204
ருஷ்யர்களின் தியாகம் 281-82
ருஷ்யப் பஞ்சம் 64
ருஷ்ய வெற்றியின் ரகசியங்கள் 278-79
ருஷ்யாவின் எல்லை 2
,, பொருளாதாரத் திட்டம் 154-63
,, ராணுவச் செலவு 227
ரோமனுவ் பரம்பரை 5, 14, 30, 39
லாட்வியா 62, 220, 287
லிதுனியா 62, 220, 287
லெனின் — வாழ்க்கை வரலாறு 14
லெனின் கிராட் யுத்தம் 267-70
வருஷாந்தக் கொண்டாட்டங்கள் 288
வார்சேல் ஒப்பந்தம் 213, 220
விஞ்ஞான அபிவிருத்தி 159-60, 284
வியாபார ஒப்பந்தங்கள் 66
விவசாயிகளின் நிலைமை—
சோவியத் ஆட்சியில் 167-68
,, ஜார் ஆட்சியில் 165-66
விவாகம் 188-89
வெண்படை 61, 270
வைத்தியக் கல்லூரிகள் 203
ஸ்டாலின் சர்வாதிகாரியல்ல 108, 246
ஸ்டாலின் கிராட் யுத்தம் 270-74
ஜார் குடும்பத்தினர் மரணம் 59
ஜில்லா சபை 103
ஜில்லா சோவியத் 132
ஜில்லா மகாநாடுகள் 106
ஜெக்கோஸ்லோவேகியா 215-16
ஜெர்மனி-ஆஸ்திரியா-இத்தலி ஒப்பந்தம் 29
க்ஷய ரோகம் 201

✲

Printed by Shakti Press Ltd. ...dras. P. I. C. No. MS. 23
for Shakti Karyalayam, Royape... ...dras. P. I. C. No. MS. 202
7-1-1946.